dsc00161.jpg (3072x2304x24b jpeg)



# சொன்னது நீதானா...

## 1

குற்றால மலைச்சாரலை ஒட்டி அமைந்திருந்த அந்த ஊர் சற்றுப் பெரிய கிராமமாக அமைந்திருந்தது... பூஞ்சோலை என்ற அந்த ஊரின் பெயருக்கு ஏற்றபடி எங்கு பார்த்தாலும் இயற்கையின் வனப்பு பூத்துக் குலுங்கியது. குற்றால மலையை ஒட்டிய கிராமம் என்பதால் அழகிய ஆறு ஒன்று அவர்களது கிராமத்தை ஒட்டி ஓடியது. ஆற்றுப் பாசனத்தில் செழித்த வயல்களையுடைய ஊர் என்பது முதல் பார்வையிலேயே தெரிந்தது. மலைகள் அடர்ந்த குற்றாலப் பகுதியில்... அந்தக் கிராமத்தை ஒட்டி சிறு குன்று ஒன்று இருந்தது... அந்தக் குன்றிலும் சிறிய அருவி ஒன்று கொட்டி பெரிய ஓடை நீராக ஊரின் மறுபக்கம் ஓடியது, இரண்டு

பக்கமும் நீர் சூழ்ந்த கிராமம் என்பதால் எந்நேரமும் ஈரப்பசையுடன் கூடிய குளிர்ந்த காற்று ஊருக்குள் வீசிக் கொண்டிருந்தது.

ஊரின் பிரதான வீதியில் அமைந்திருந்தது அந்தப் பெரிய வீடு... சுற்றிலும் தோட்டத்துடன்... வீட்டின் முன்புறம் குழலூதும் கண்ணன் சிலையுடன் கூடிய செயற்கை நீருற்றுடன்... ஒரு சிறு அரண்மனையைப் போல் இருந்தது அந்த வீடு... வீட்டின் முன்பக்கம்... இருபக்கமும் நீண்ட வளவளப்பான தரையுடன் கூடிய பெரிய வராண்டாவைப் போன்ற திண்ணைகள்... திண்ணைகளின் நடுவே அகன்று நீண்ட நடைபாதை... அதன் முடிவில் நீண்ட பெரிய படிகள்... திண்ணைகளின் நடுவே ஒவ்வொரு பக்கமும் மூன்று தூண்களாகப் பிரிந்து காணப்பட்ட ஆறு பெரிய தூண்கள்... அந்தத் தூண்களின் கரிய நிற வளவளப்பான வெளிப்பகுதி... என்று வீட்டின் வெளிப்புறத் தோற்றமே... நம் மூதாதையர்களின் கட்டடக் கலைத் திறமையையும்... ரசனையையும் நமக்குத் தெரியப்படுத்தியது.

வீட்டின் உள்புறம் அகன்ற பெரிய ஹாலுடன் ஆரம்பித்தது... வீட்டின் மேல்புறக் கூரையிலிருந்து தொங்கிய அலங்கார ரஸ்தர் விளக்குகள் ... அந்த வீட்டின் பரம்பரைப் பெருமையையும்... பணச் செழுமையையும் பறை சாற்றின. ஹாலின் முடிவில்.. சிகப்புக் கம்பளம் பதிக்கப்பட்ட அகன்ற மாடிப்படிகள்... நடுவில் இரண்டாகப் பிரிந்து... இருபக்கமும் ஏறிச்செல்லும் வகையில் கட்டப்பட்டிருந்தன... ஹாலை அடுத்து நீண்ட சாப்பாட்டு அறை... சாப்பாட்டு அறையின் முடிவில் பூஜை அறை... அதனுள் இருந்த தெய்வச் சிலைகள்... சாப்பாட்டு அறையிலிருந்து பின் பக்கமாகச் சென்றால் பெரிய சமையலறை... அதில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட அலமாரிகள்... ஹாலின் இரு புறமும் ஆறு... ஆறு... அறைகளாக பனிரெண்டு படுக்கை அறைகள் காணப்பட்டன.



மாடியில் ஏறியவுடன் கீழே இருந்தது போல் பெரிய ஹால்... அதன் இருபுறமும்... இங்கு ஆறு... அங்கு ஆறு... அறைகளாக பனிரெண்டு படுக்கை அறைகள் இருந்தன. ஹாலின் கடைசிப் பகுதியில் பெரிய நூலக அறை தென்பட்டது... அதில் வரிசையாய் அமர நாற்காலிகளும்... மேஜைகளும் போடப்பட்டிருந்தன... சுவர் பகுதிகள் எல்லாம் மரத்தால் அமைக்கப்பட்ட அலமாரிகள்... அதில் வரிசைப்படுத்தி அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள்... அவற்றின் வரிசைக்கு நேர் மேலே... எழுத்தாளர்களின் பெயர்கள்... மற்றும் புத்தகங்களின் விவரங்கள் டைப் பண்ணப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன.

ஹாலின் முன்பக்கம் பெரிய பால்கனி... ஹாலின் பின்பக்கம்... திறந்த வெளியில் அமைக்கப்பட்ட மாடிப் பூந்தோட்டம்... தொட்டிச் செடிகள்... அவற்றில் மலர்ந்த பூக்களின் நறுமணம்... தொட்டிச் செடியில் வளர்ந்த கொடி முல்லைச் செடியை மொட்டை மாடியின் கைப்பிடிச்சுவரில் படரவிட்டிருந்ததால்... கைப்பிடிச் சுவரே மறைந்து... அடர்த்தியான இலைகளுடன் தென்பட்ட வெந்நிற முல்லை மலர்கள்... அது சுவரல்ல... பூந்தோட்டத்தின் ஓர் அங்கம் என்று காட்டும் வகையில் அழகுற அமைந்த அந்தப் பசுமைச் சுவர்... இவையெல்லாம் சேர்ந்து அந்த இடத்திற்கே ஓர் இனிமையான சூழலைத் தந்து கொண்டிருந்தன.

அந்த மாடிப் பூந்தோட்டத்தின் நடுவே... மேலே அகன்ற நிழல் குடையுடன்... இருபக்கமும் தாங்கு கம்பிகளுடன்... அமைக்கப்பட்ட ஊஞ்சல் போன்ற... தொங்கும் சோபா.

இவ்வளவு அழகினையும் தன்னுள்ளே கொண்ட அந்த வீட்டின் சொந்தக்காரரான சோமசுந்தரம்... தன் தர்மபத்தினி சுந்தராம்பாளுடன்... வீட்டுக் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார்.

“அப்பா எங்கே... சுந்தரி”

"அவர் எப்படி வீடு தங்குவார்? காலையில் தெற்கு வயலைச் சுற்றிப் பார்க்க போனார்... மதியம் வந்து சாப்பிட்டதும் கொஞ்ச நேரம் ஒரு கோழித் தூக்கம் போட்டார்... சாயங்காலம் எழுந்து காபி... பலகாரம் சாப்பிட்டு விட்டு கிழக்குத் தோட்டத்தைப் பார்க்கப் போய் விட்டார்..."

"அந்தக் காலத்தில் இருந்தே அப்பா இப்படித்தான்... மண்ணையும் அவரையும் பிரிக்க முடியாது... விவசாயத்தோடு பின்னிப் பிணைந்தவர்... எங்காவது வெளியூர் போகும் போது கூட அந்த ஊரில் என்ன பயிர் நன்றாக விளைகின்றது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வருவார்..."

"நீங்கள் ஜவுளிக் கடையோடு பின்னிப் பிணைந்திருப்பது போல் உங்கள் அப்பா... வயல் வரப்போடு பின்னிப் பிணைந்திருக்கிறார்..."

"அப்பனுக்கேற்ற மகன் என்கிறாயா?"

"இல்லை என்கிறீர்களா?"

"அதை எப்படிடீ இல்லையென்று சொல்வேன்... ஆமாம் அம்மா எங்கே...?"

"பாட்டியும்... பேத்தியும் கோவிலுக்குப் போயிருக்கிறார்கள்..."

"நம் பெண் அடங்கி ... ஒடுங்கி கோவிலுக்குப் போகிறாளா? ஆச்சர்யமாய் இருக்கிறதே..."

"அவள் எங்கே தானாய் போகிறாள்? உங்கள் அம்மாவிற்கு பெருமாள் என்றால் இஷ்டம். உங்கள் மகளுக்கு பாட்டி என்றால் இஷ்டம்... அதனால் பாட்டிக்கு துணையாக பேத்தியும் கோவிலுக்குப் போயிருக்கிறாள்..."

"அப்படியா விசயம்? எங்கே உன் அருமைப் புதல்வன் ரகு



"உங்க பரம்பரை எப்படி இருக்கும்? உங்களைப் போல்தானே இருக்கும்? தாத்தாவுக்கு தோட்டம்... அப்பாவுக்கு ஜவுளிக் கடைன்னு நீங்க ஆளுக்கொரு திசையில் போனால் உங்க பிள்ளை எங்கே போவான்? அவனுடைய டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்குப் போவான்... காலையில் சாப்பிட்டு விட்டுப் போனவன்தான்... மதியம் சாப்பிட வர முடியாதுன்னு போன் பண்ணிட்டான். இனி நைட்தான் வருவான்... ஆமாம்... வீட்டில் இருக்கும் எல்லோரையும் எங்கே... எங்கேயென்று தேடுகிறீர்களே... என்ன விசயம்?"

"எல்லாம் முக்கியமான விசயம் ஒன்றைச் சொல்லத்தான் கேட்கிறேன்... அதைப் பேசத்தான் அவசரமாய் வீட்டுக்கு வந்தேன்... வந்து பார்த்தால் உன்னைத் தவிர ஒருத்தரையும் வீட்டில் காணோம்."

"ஏன் என்னையும் எங்காவது உலா போய்விட்டு வரச் சொல்கிறீர்களா? எனக்குத்தான் கால்கட்டு போட்டு வீட்டோடு அடக்கி வைத்திருக்கிறீர்களே... அப்புறம் என்ன?"

"ஏண்டி அலுத்துக் கொள்கிற? நீ இந்த வீட்டின் மகாலட்சுமி, இல்லத்தரசி. நீதானே எல்லோரையும் பொறுப்பாய் பார்த்துக் கொள்ள வேண்டும்..."

"ஆமாமாம்... நான்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்... மாமனார் மாமியாரிடம் பணிவுடன் அன்பாய்... மரியாதையாய் நடந்து கொள்ள வேண்டும்... புருசனிடம் காதலாய் நடந்து கொள்ள வேண்டும். பெற்ற பிள்ளைகளிடம் பாசமாய் நடந்து கொள்ள வேண்டும்."

"ஏண்டி சுந்தரி ... இத்தனை நடையாய் நீ நடக்கிற? நீ சொல்லும்போதே எனக்குக் கால் வலிக்கிறதேடி... ச்ச்ச்...

"கிண்டலா ?"

"நான்தானே கிண்டல் பண்ணுகிறேன்... ?"

"கிண்டல் பண்ணியது போதும் விசயத்துக்கு வாங்க... என்ன விசயமாய் பேசனும்னு எல்லோரையும் தேடுகிறீர்களாம்..."

"உனக்கு நம்ம வையாபுரியை நினைவு இருக்கிறதா ?"

"என்னங்க கேள்வி இது... உங்களுடைய நெருங்கிய சிநேகிதர்... அவரைப் போய் மறப்பேனா ?"

"பரவாயில்லையே... உனக்குக் கூட இவ்வளவு ஞாபக சக்தியா ?"

"ரொம்பப் புகழாதீர்கள்... உங்களுக்கு இருப்பது ஒன்னே ஒன்னு... கண்ணே கண்ணுன்னு ஒரே ஒரு சிநேகிதர்... அவரைப் போய் எப்படி மறப்பேன் ?"

"அதுதானே பார்த்தேன்... என் காலை வாராவிட்டால் என் பெண்டாட்டிக்கு எப்படித் தூக்கம் வரும் ?"

"என்னைத் தூங்க வைப்பது இருக்கட்டும். இப்போது உங்கள் சிநேகிதரைப் பற்றி ஏன் கேட்டீர்கள் ? அதைச் சொல்லுங்கள்..."

"சுந்தரி... வையாபுரியின் பெண்டாட்டி ரொம்ப வருசங்களுக்கு முன்னாடியே இறந்து விட்டாள்... நினைவிருக்கா ?"

"பாவம்... அவளுடைய பெண்குழந்தை சிறு வயதாய் இருக்கும் போதே இறந்து விட்டாள்..."

"மீரா... அதுதான் நம்ம வையாபுரியோட பொண்ணு டிகிரி படிச்சு முடிச்சுட்டாளாம்... அவள் மேலே படிக்க ஆசைப் படுகிறாளாம்"



"படிக்கவைக்க வேண்டியது தானே... ஒத்தைப் பொண்ணு... அது கேட்கிறதை செய்து கொடுக்க வேண்டியதுதானே..."

"செய்ய வேண்டும்தான்... ஆனால் இப்போது பார்த்து வையாபுரி வெளிநாட்டிற்கு போக வேண்டியதிருக்கிறதாம்... திரும்பிவர ஆறு மாதங்களாவது ஆகிவிடுமாம்..."

"வெளிநாட்டில் உங்கள் சிநேகிதருக்கு என்ன வேலை ?"

"ஏண்டி... ? எனக்கு சிநேகிதனா இருந்தால் அவன் குண்டுச்சட்டியிலேயே குதிரை ஓட்ட வேண்டுமா ?"

"இல்லை... நீங்கள் குற்றாலத்தில் வைத்த ஜவுளிக்கடையை விரிவுபடுத்தக் கூட யோசிப்பவராயிற்றே... உங்கள் சிநேகிதர் எப்படி உலகம் சுற்றுகிறார் என்ற சந்தேகம்தான்..."

"என்னவோ... என் சிநேகிதனாக இருந்தும் என் பெயரைக் காப்பாற்றாமல் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் நடத்தினான்... இப்போது அந்தத் தொழிலில் கொடி கட்டிப் பறக்கிறான்... அவனுடைய பிஸினெஸ் விசயமாய் அடிக்கடி அவன் வெளிநாடு போய் வருவது சகஜம்தானாம்... ஆனால் இவ்வளவு நாள் வெளிநாட்டில் தங்கி இருந்தது இல்லையாம்... அத்தோடு... மீராவுக்கு துணையாய் வையாபுரியுடைய தூரத்து சொந்தமான அக்கா ஒருத்தங்க வீட்டோட இருந்தாங்களாம்... இப்போது திடீர்னு அந்தம்மாவோட மகன் வந்து கூப்பிடவும் கூடப் போயிட்டாங்களாம்..."

"அடப்பாவமே... கோடி கோடியாய் பணமிருந்தும்... அந்தப் பெண்ணுக்கு துணையாய் இருக்க ஒரு சொந்தம் கூட இல்லையா ?"

"இல்லையாமே... அதுதான் வையாபுரி சொல்லி வேதனைப்பட்டான்... அடுத்த வருடம் மேற்படிப்பை படிக்கட்டும் இந்த ஆறு மாதம் உன் வீட்டில் என் பெண்

பாதுகாப்பாய் தங்கியிருக்கட்டும்னு கேட்டுக்கிட்டான்... நீ என்ன சொல்றே சுந்தரி ?"

"இதில் நான் சொல்வதற்கு என்ன இருக்குதுங்க... பாவம் தாயில்லாத பெண்... ஒற்றைக் குழந்தையாய் வளர்ந்தது... நம் வீட்டில் வந்து தான் கொஞ்ச நாள் தங்கியிருக்கட்டுமே... நான் என்ன வேண்டாமென்றா சொல்லப் போகிறேன் ?"

"நீ உத்தரவு கொடுத்து விட்டாய்... இன்னும் வீட்டிலுள்ள மற்றவர்களின் உத்தரவும் வேண்டுமே... அதற்காகத்தான் எல்லோரையும் எங்கே... எங்கே... என்று தேடினேன்..."

"மத்தவங்க என்ன சொல்லப்போகிறாங்க... சரின்னுதான் சொல்லுவாங்க... நீங்க மனசைப் போட்டு உழப்பிக்காம இருங்கள்..."

சுந்தராம்பாள் சொல்லிக் கொண்டிருக்கும்போது ...

"எதுக்கு என் மகன் மனசைப் போட்டு உழப்பிக்கிட்டு இருக்கான் ?" என்று வினவியபடி ராமசாமி உள்ளே வந்தார்.

"அப்பா வந்து விட்டார்..." சோமசுந்தரம் மரியாதையுடன் சோபாவில் நிமிர்ந்து உட்கார்ந்தார். சுந்தராம்பாள் மரியாதையுடன் முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு எழுந்து நின்றாள். ராமசாமி சோமசுந்தரத்தின் அருகே அமர்ந்து கொண்டு

"உஷ்... அப்பாடா... அதுசரி... நான் வரும்போது மருமகள்கிட்ட என்னவோ சொல்லிக் கொண்டிருந்தாயே... என்ன அது ?" என்று வினவினார்.

சோமசுந்தரம் தயங்கியபடி விசயத்தைச் சொல்ல ராமசாமி தாடையைத் தடவியபடி யோசித்தார். சோமசுந்தரமும் சுந்தராம்பாளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.



## 2

சோமசுந்தரம் அந்த ஊருக்கு பெரிய மனிதர்தான். ஆனால் தகப்பனுக்கு அடங்கினவர். சுந்தராம்பாள் கூட அவரை அடிக்கடி கேலி செய்வாள்.

"ம் ஹூம்... இப்படி ராமன் மாதிரி ஒரு புருசன் எனக்கு வந்து வாய்சிருக்காரே... எல்லாம் என் தலையில் எழுதின எழுத்து..."

"அதுக்கு ஏண்டி இப்படி அலுத்துக்கிற ? ராமன் ஏகபத்தினி விரதனாச்சே... உன் புருசனும் அப்படியிருந்தால் உனக்கு சந்தோசம்தானே"

"வயித்தெரிச்சலைக் கிளப்பாம போய்விடுங்க சொல்லிட்டேன் இவர் ஏகபத்தினி விரதராம்... நான் அதைச் சொல்லவில்லை. தகப்பன் பேச்சைத் தட்டாத தங்கக் கம்பின்னு சொல்ல வந்தேன்."

"தகப்பன் பேச்சை மட்டுமில்லடி... நான் தாயின் சொல்லையும் தட்ட மாட்டேன் தெரிந்து கொள்...

"இதைப் புதிதாய் தெரிந்து கொள்ள வேண்டுமா ? 'தாயிற் சிறந்த கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லைன்னு' நான் சின்ன வயசில் படிச்சவள் தான்... ம்ஹூம்..."

"அதுக்கு ஏண்டி என்னைச் சுட்டெரிக்கிற மாதிரி பார்த்துக்கிட்டு... அனலாய் பெருமூச்சு விடறே... சுந்தரி... எனக்கு எங்க அம்மா கோவில்தான்... அப்பாவின் வாக்கு தெய்வ வாக்குத்தான். ஆனால் என் பெண்டாட்டியும் எனக்கு தெய்வமாச்சே..."

"தெய்வம்ன்னு சொல்லி பெண்களை வீட்டுக்குள் அடைத்து சூடம்... சாம்பிராணி காட்டி மடக்கி விடுவீங்களே..."

கேலியாய் பேசுவது போல் பேசினாலும்... தன் புருசன் தன்னையும் கொண்டாடுபவர் என்பதில் சுந்தராம்பாளுக்கு பெருமைதான்.

·இப்போ தகப்பன் யோசிக்கவும் சோமசுந்தரம் கலங்கிப்போனார். மனைவியிடம் விழி ஜாடை காட்டிக் கேட்க... அவளோ 'பொறு' என்பது போல் விழிகளால் பதிலுரைத்தாள்.

"சுந்தரம்... எனக்கு என்னவோ இது சரிப்பட்டு வராதுன்னு தோணுது. ஊரில் ஆயிரம் ஹாஸ்டல் இருக்கு... உன் சிநேகிதன்... அதில் ஏதாவது ஒரு ஹாஸ்டலில் மகளைச் சேர்த்து விட்டுப் போகலாமே... அந்தப் பெண்ணும் மேலே படிக்கனும்னு ஆசைப்படுதுன்னு சொல்றே... பேசாமல் அந்தப் பெண்ணை ஏதாவது ஒரு காலேஜில் மேல்படிப்புக்கு சேர்த்து விட்டு அந்த காலேஜ் ஹாஸ்டலிலேயே விட்டு விட்டுப் போனால் என்ன...?"

ராமசாமி ஆலோசனை மேல் ஆலோசனைக் கூற சோமசுந்தரம் தவித்துப் போய் மனைவியைப் பார்த்தார். அவள் கணவனுக்கு ஆதரவாய் மாமனாரிடம் பேசினாள்.

"மாமா... அந்தப் பெண்ணுக்கு ஹாஸ்டல் எல்லாம் பிடிக்காதாம்..."

"அதுக்காக... நம்ம வீட்டுக்கு அனுப்பி வைக்கனுமா என்ன? அவங்க சொந்தக்காரங்களில் ஒருத்தர் வீட்டுக்கு அனுப்பி வைக்கட்டுமே..."

"சொந்தக்காரங்களை விட உங்கள் மகனின் நட்பை அவர் உயர்வாய் மதிக்கிறார் மாமா... அதனால்தான் அவருடைய ஒற்றைப் பெண்ணை நம்மை நம்பி இங்கே அனுப்பி வைக்கிறேன் என்கிறார்."



"அது சரிம்மா... வயதுக்கு வந்த பெண்ணின் பொறுப்பை நாம் ஏற்றுக் கொள்வது சரி வருமா?"

"அது தாயில்லாத பெண் மாமா... நம்ம வீட்டில் கொஞ்ச நாள் கலகலப்பான சூழலில் இருந்து விட்டுப் போகட்டுமே..."

மருமகளின் பேச்சை மதிக்கும் மாமனார் அவர்... எனவே மௌனம் சாதித்தார். வாசலில் சப்தம் கேட்டது. கலகலவென்ற சிரிப்பொலி காற்றில் மிதந்து வந்தது. ராமசாமியின் முகத்தில் மலர்ச்சியுடன் கூடிய புன்முறுவல் உதயமானது.

"என் பேத்தி வருகிறாள் போல... யானைவரும் பின்னே... மணியோசை வரும் முன்னே என்பது மாதிரி... என் பேத்தி வருவதற்கு முன்னாலேயே அவளோட சிரிப்புச் சத்தம் வந்துருச்சே... அவள் சிரிப்புக்குக் கூட அத்தனை வேகம் இருக்கு... வெறும் வேகம் இல்லை... புயல் வேகம்..."

அவர் சொல்லி வாய் மூடுமுன்

"தாத்தா..." என்றபடி ஓடிவந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் சுபாங்கினி.

"ஏய் ஒரு வயசுப் பெண்ணாய் லட்சணமாய் இருக்கத் தெரியாதாடி உனக்கு? இந்த வயதில் தாத்தாவின் கழுத்தை கட்டிக்கிட்டு தொங்கிறாயே..." சுந்தராம்பாள் குரலை உயர்த்தாமல் பதவிசாய் மகளை அதட்டினாள்.

"ஒரு வயசுப் பொண்ணுன்னா எப்படி இருக்கனும் அம்மா... இப்படியா?" சுபாங்கிணி வாயில் கட்டை விரலை வைத்துக் கொண்டு சிறுகுழந்தை போல் விழித்துக் காண்பித்தாள்.

அவளது செயலை ரசித்துக் கொண்டே வந்த ஆவுடையம்மாள் பார்வைக்கு அச்சு அசலாய் எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மாளை நினைபடுத்தும் தோற்றத்தில் மங்களகரமாய் இருந்தாள்... மருமகளிடம் பூஜைக் கூடையை நீட்டியவாறு

“உன் கண்ணுக்குத்தான் அவ வயசுப் பொண்ணு... எங்க கண்ணுக்கு பச்சை மண்ணு... அவ இஷ்டத்துக்கு கன்றுக் குட்டிபோல் துள்ளி விளையாடட்டுமே... நமக்கு அவள்தானே கடைக்குட்டி... இந்த வீட்டின் செல்லப் பேத்தி...” என்று கூறினாள்.

மாமியார் கொடுத்த பூஜைக் கூடையிலிருந்து பெருமாள் கோவில் குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டாள் சுந்தராம்பாள். பேத்தியின் அருகே அமர்ந்து தலையை பிரியத்துடன் தடவிக் கொடுத்தாள் ஆவுடையம்மாள்.

“என்னடா சுந்தரம்... இந்த நேரம் வீட்டில் இருக்கிற... நீ ஜவுளிக் கடைக்குள்ளேயே பொழுதைக் கழிக்கிற ஆளாச்சே.”

“ஒரு முக்கியமான விசயத்தை பேசி விட்டுப் போகலாம்ன்னு வந்தேன்ம்மா...” சோமசுந்தரம் விசயத்தைச் சொன்னார்.

ஆவுடையம்மாளின் முகம் கருணையில் கனிந்தது.

“இதுக்கா உங்க அப்பா மறுத்துப் பேசுறாரு...? ஏங்க... ஒரு தாயில்லாத பெண்ணை சொந்த பந்தத்தை நம்பாமல் நம்மை நம்பி ஒருத்தர் அனுப்பினால் நமக்கு அது பெருமைதானே? பாவம்... சின்ன வயசிலிருந்து தனியே வளர்ந்த பொண்ணுன்னு நம்ம மருமகளே சொல்கிறாள்... நம்ம சுபாங்கினியோடு கொஞ்சநாள் இருந்துவிட்டுப் போகட்டுமே... அவளுக்கும் ஆறுதலா இருக்கும்... நமக்கும் ஒரு மாறுதலாய் இருக்கும்...”

“நீ சொன்னால் சரிதான் ஆவுடை...” ராமசாமி மறுப்புச் சொல்லாமல் ஒத்துக் கொள்ள கணவனைப் பார்த்தாள் சுந்தராம்பாள். அவள் கண்களில் கேள்வி இருந்தது.

‘இந்த வயசிலும் உங்க அப்பா... எப்படி பெண்டாட்டி பேச்சுக்கு கட்டுப்படுகிறார் பார்த்திங்களா... நீங்க மட்டும் ஏன் இப்படி இருக்கீங்க?’



மனைவியின் விழி கேட்ட கேள்விக்கு மையலாய் ஓர் பார்வை பார்த்து ‘நானும் என் தகப்பனைப் போல்தான்’ என்று பார்வையிலேயே பதில் சொன்னார் சோமசுந்தரம்.

“அம்மா... அந்தப் பெண் எப்படிப்பட்ட குணம்?” சுபாங்கினி கேட்டாள்.

“யாருக்குடி தெரியும்? ஓர் முறை உங்க அப்பாவோடு சென்னைக்கு போயிருந்த போது அவர் வீட்டில் தங்கினோம்... அப்போது அந்தப் பெண் சிறு குழந்தை... அமைதியாய்... சாதுவாய் இருந்தது... நிச்சயம் உன்னைப் போல் வால் இல்லை...”

“ஐயே... சுத்தப் போர்... சாதுப் பெண்ணை நம்ம வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டு என்ன பண்ணுகிறதாம்? அட்லீஸ்ட் என்னுடன் சண்டையாவது போடுமா?”

“உன்னுடன் சண்டை போட்டு ஜெயிக்க இனிமேல்தான் ஒருத்தி பிறந்து வர வேண்டும்... இவள் ஏற்கனவே பிறந்து விட்டாள்...”

“சுத்த வேஸ்ட்டாக இருக்கும் போல இருக்கே... அம்மா அந்தப் பெண் வருவதில் அப்படியொன்றும் எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை?

“உன் இன்ட்ரெஸ்டை யார் கேட்டது?”

“அப்படியானால்... என் அண்ணனுக்கு இன்ட்ரெஸ்ட் இருக்கான்னு கேளுங்க... ஏன் அண்ணா உனக்கு இன்ட்ரெஸ்ட் இருக்கா?”

அப்போதுதான் வீட்டுக்குள் வந்து கொண்டிருந்த ரகுநந்தன் ஆறடி உயரத்தில் இருந்தான். மாநிறம்...

கம்பீரமான தோற்றம். தங்கையின் கேள்வி புரியாமல் விழித்தான்.

"எதில் எனக்கு இன்ட்ரெஸ்ட் இருக்கான்னு கேட்கிறாய் ?"

"நம் வீட்டிற்கு புதிதாய் ஒரு விருந்தாளி வரப் போகிறாளாம்,"

"வரப் போகிறாளாம்ன்னா... வரப்போவது பெண்ணா ?"

"ஆமாம்... ஆறுமாதம் நம் வீட்டில்தான் டேரா போடப் போகிறாள். நம் வீட்டு பெரியவர்கள் கூடி முடிவு எடுத்துக் விட்டார்கள்."

"யாரும்மா அது... ?"

சுந்தராம்பாள் கணவனைப் பார்க்க அவர் அலுத்துக் கொண்டார்.

"ஏண்டா... கீறல் விழுந்த ரிகார்டு போல சொன்னதையே எத்தனை முறைதான் திரும்பத் திரும்பச் சொல்வது ? உன் அம்மாவிடம் ஆரம்பித்து வரிசையாய் எல்லோரிடமும்... இப்போதுதான் ஒப்பித்து முடித்தேன் கடைசியில் நீ வந்து நிற்கிறாய்..

"எல்லோரும் இருக்கும்போது சொல்லியிருக்க வேண்டும். நீங்கள் ஏன் தனித்தனியாய் சொல்கிறீர்கள் ?"

"நன்றாகக் கேட்டாயே ஒரு கேள்வி... எல்லோரும் இந்த வீட்டில் எப்போது ஒன்றாக உட்காருகிறீர்கள்... ஆளுக்கொரு வேலை... ஆளுக்கொரு திசை... அப்பா தோட்டத்திற்கு போய் விட்டார். அம்மாவும், சுபாவும் கோவிலுக்குப் போய் விட்டார்கள்... நீ உன் டிபார்ட்மென்டல் ஸ்டோருக்குப் போய் விட்டாய்... உன் அம்மா ஒருத்திதான் வீட்டைக் காவல் காத்துக் கொண்டு வீட்டிலேயே இருந்தாள்..."

மனைவியை காதலுடன் பார்த்துக் கொண்டே சோமசுந்தரம்



"அப்போ... அம்மாதான் நம் காவல் தெய்வம்" என்று சுபாங்கிணி சான்றிதழ் வழங்கினாள்.

"அம்மாவிடம் ஆரம்பித்து எல்லோரிடமும் சொன்னதை... என்னிடம் சொல்லி முடியுங்கள்... கணக்கு சரியாகி விடும்..."

ரகுநந்தன் அமைதியாய் கூறினான்.

"டிபார்ட்மென்டல் ஸ்டோர் வைத்திருப்பதால் அண்ணனுக்கு கணக்கில்தான் எப்போதும் கவனம்..." சுபாங்கிணி முன்னால் வந்து விழுந்த தன் பின்னலை கையில் பிடித்து ஆட்டிக் கொண்டே பேசினாள்.

"ஏதாவது சேட்டை பண்ணிக்கொண்டேதான் இருப்பாயா ? ஏண்டி உன் கையும் காலும் ஒரு விநாடியாவது சும்மா இருக்காதா ? பின்னலை விட்டு கையை எடுடி" சுந்தராம்பாள் அதட்டினாள்.

"கைகாலைச் சொன்னவர்கள்... வாயைச் சொல்லாமல் விட்டு விட்டீர்களே... அது ஒரு செகண்டாவது மௌனமாய் இருந்திருக்கிறதா ?" ரகுநந்தன் கூறினான்

"அப்போ... நான் என்ன வாயாடியா ?"

"பின்னே இல்லையா ?"

"ம்ம்... தத்தா... பாட்டி... பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறீர்களே... அண்ணனை என்னென்று கேளுங்கள்..."

"ரகு... குழந்தைகிட்ட வம்பு பண்ணாதே..."

"யாரைப் பாட்டி குழந்தையென்று சொல்கிறீர்கள் ? இவளையா ? உங்களுக்கே இது நியாயமாய் இருக்கிறதா ?"

"ரகு... நீ ஏன் பெண் பிள்ளையிடம் வம்புக்கு நிற்கிறாய் ?"

"தாத்தா... இவள் என் தங்கை... யாரோ ரோட்டில் போகிறவளிடம் வம்புக்கு நிற்பது போல் சொல்கிறீர்கள்...

இவள் மட்டும்தான் உங்களுக்கு பேத்தியா? ... நான் உங்கள் செல்லப் பேரன் இல்லையா?"

"பேரன் என்று மட்டும் சொல்லு... செல்லமெல்லாம் கொஞ்சாதே... அது நான் மட்டும் தான்..."

"ஆமாண்டி செல்லம்... நீ இந்த பாட்டிக்குச் செல்லம்... உன் தாத்தாவிற்கு செல்லம்..."

ஆவுடையம்மாள் சுபாங்கினியைக் கொஞ்ச... அவள் பாட்டியின் மடியில் படுத்துக் கொண்டாள்.

"தாங்க முடியவில்லை அம்மா... இவள் அடிக்கிற லூட்டி இருக்கிறதே அப்பப்பா... அப்பா... இப்போதாவது விசயத்தை சொல்லுங்கள்."

சோமசுந்தரம் ஏற்ற இறக்கத்தோடு கூறி முடித்தார்.

"அப்படியா? இவ்வளவுதானா விசயம்... இவள் கொடுத்த பில்ட்அப்பில் நான் என்னவோ ஏதோவென்று நினைத்தேன். இது சும்மா சப்பை மேட்டர்..."

"ஹலோ... அண்ணா... இது சப்பை மேட்டரா? அந்தப் பெண்ணை இங்கே தங்க வைக்க முடிவு செய்ய ஒரு செயற்குழு கூட்டமே நடந்தது. ஆண்குலத்தின் தலை மகன்... என் தாத்தா நம் அப்பாவின் தீர்மானத்தை எதிர்த்தார். கடைசியில் தாய்குலத்தின் ஏகோபித்த ஆதரவுடன் என் அப்பா அவருடைய தீர்மானத்தை நிறைவேற்றினார்."

எல்லோருமே சிரித்து விட்டனர். சிரித்துக் கொண்டே மாடிப் படியில் கால் வைக்கப் போன ரகுநந்தன் நின்று திரும்பி அந்தக் கேள்வியைக் கேட்டான்.

"அந்தப் பெண்ணின் பெயர் என்னம்மா?"



## 3

கேள்வியை என்னவோ சாதாரணமாகத் தான் கேட்டான் ரகுநந்தன்... கிடைத்த பதிலில் அவன் முகம் மாறிவிட்டது.

"அவள் பெயர் மீராப்பா..." சுந்தராம்பாள் பதில் சொல்லியபடி உள்ளே போய் விட்டாள்.

"என்னது மீராவா?" ரகுநந்தன் முகம் பேயறைந்தது போல் மாறிப் போனது.

"ஏன்ப்பா இப்படிக் கேட்கிறாய்? உனக்கு அந்தப் பெண்ணைத் தெரியாதே... நீ அவளைப் பற்றிக் கேள்விகூட பட்டிருக்க மாட்டாய்..."

"ஒன்றும் இல்லைப்பா... சும்மா கேட்டேன்... ஆமாம்... ஆறு மாதம் இங்கே வந்து விட்டால் அந்தப் பெண் படிக்க... கிடிக்க வேண்டாமா?"

"எல்லாம் டிகிரி படித்து முடித்து விட்டாள்? ஆமாம் படிக்கன்னு சொன்னாய்... அது சரி... அது என்ன கிடிக்க...?"

"ஏன்ப்பா... நீங்கவேறு கோக்கு மாக்கா கேள்வி கேட்கறீங்க?"

"கோக்கு மாக்கா... அப்படின்னா?"

"எக்குத் தப்புன்னு அர்த்தம்பா... இப்ப அதுவா முக்கியம்? என்ஜினியரிங் படிச்ச பொண்ணு இந்தக் கிராமத்தில் ஆறுமாதம் அடங்கி இருக்குமா?"

"அந்தப் பெண் மீரா என்ஜினியரிங் படித்தவளில்லை... டிகிரி படித்தவள்ன்னு சொன்னேன். ஆனால் எந்தப் படிப்பு படித்திருந்தாலும் அந்தப் பெண் எந்த இடத்திலும் அடங்கி இருக்கும் அந்த அளவிற்க்கு அடக்கமான பெண்..."

"நீங்கள் ரொம்பத்தான் கண்டீர்கள் ? ..."

"காணாமலா சொல்கிறேன்... நான்தான் அடிக்கடி சென்னை போய் வருகிற ஆளாச்சே... சென்னை போகும்போதெல்லாம் வையாபுரி வீட்டில்தான் தங்குவேன்... மீரா... நான் பார்க்க வளர்ந்த பெண்... தங்கக் கட்டி..."

"மின்னுவதெல்லாம் பொன் அல்ல அப்பா"

"இப்போது... நீ ரொம்ப கண்டு விட்டது போல் பேசுகிறாய்"

"நேரில் கண்டால்தானா ?"

"காணாமலே நீயாய் முடிவு செய்கிறாயா ? இப்படித்தான் டிகிரி முடித்த பெண்ணை என்ஜினியரிங் படித்திருக்கிறாள் என்று சொன்னாய்"

"கிண்டியில் என்ஜினியரிங் காலேஜ் தானே இருக்கிறது ?"

"அட அசட்டு மகனே... அவள் ஸ்டெல்லா மேரிஸ் காலேஜில் படித்தவள்... கிண்டியில் இல்லை..."

"ஓஹோ..." அவன் முகம் கருக்க விறுவிறுவென்று மாடி ஏறிவிட்டான்.

"அசட்டுப் பயல்..." என்று மீண்டும் முணுமுணுத்த சோமசுந்தரத்தைப் பார்த்து சிரித்தாள் சுபாங்கினி.

"அண்ணன் அசடு இல்லை அப்பா நீங்கள்தான் அசடு"

"நானா... ?"

"நீங்கள்தான்... போட்டு வாங்குவது என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா ? அண்ணன் அதைத்தான் செய்து விட்டுப் போயிருக்கிறது. உங்கள் வாயாலேயே... அந்தப் பெண்ணின் குணம்... மனம்... படிப்பு... அவள் படித்த காலேஜின் பெயர் எல்லாவற்றையும் கேட்டு அறிந்து கொண்டு விட்டது. அது தெரியாமல் நீங்கள் அண்ணனுக்குப் போய்



அசட்டுப் பட்டம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்..."

"அட... ஆமாம்... இது எனக்குப் புரியவில்லையே..." வியப்புடன் சோமசுந்தரம் மகளைப் பார்த்தார். இந்தக் காலத்து இளசுகள் கெட்டிக்காரப் பிள்ளைகள் தான்... அண்ணன் வாயைப் பிடுங்கும் வித்தையை தங்கை எளிதாகக் கண்டு பிடிக்கிறாள்.

"என் பேத்தியின் அறிவைப் பற்றி இப்போதாவது தெரிந்ததா ?" ஆவுடையம்மாள் பேத்தியின் கன்னம் தொட்டு வழித்தாள்.

"பாட்டி... இது போதாது..."

"வேறு என்ன வேண்டும்... என் சின்னக் குட்டிக்கு"

"நீங்கள் கழுத்தில் போட்டிருக்கும் வைர அட்டிகை வேண்டும்."

"போட்டுக்கொள்"

ஆவுடையம்மாள் அதைக் கழட்டி சுபாங்கினியின் கழுத்தில் போட்டு அழகு பார்த்தாள்... அவள் மான் போல் துள்ளிக் குதித்துக் கொண்டு வாசல் பக்கம் ஓடினாள்.

"ஏம்மா... அவளுக்கென்ன நகைக்கா பஞ்சம் ? உங்கள் கழுத்தில் போட்டுக் கொண்டிருப்பதை அவிழ்த்துக் கொடுக்கணுமா ?"

"போடா... நீயும் உன் அறிவும்... குழந்தை ஆசையாய் கேட்டால் உடனே கொடுத்து விட வேண்டாமா ? அவளுக்கு மட்டுமா நகைக்கு பஞ்சமில்லை... எனக்கும் தான் பஞ்சமில்லை... எனக்கு பின்னால் இந்த நகையெல்லாம் என் பேத்திக்குத்தானே போய் சேரணும் ?"

ஆவுடையம்மாள் பேசிக் கொண்டே எழுந்து மருமகளைத் தேடிப் போய் விட்டாள். சோமசுந்தரம் மரியாதையுடன்

ராமசாமியைப் பார்த்தார்.

"என்னடா... வந்ததில் இருந்து முகம் கூடக் கழுவாமல் அப்படியே உட்கார்ந்து இருக்கிறாய்?"

"அதுதான் உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாமென்று..."

"எதற்குடா? முகம் கழுவப் போவதற்கு என்னிடம் அனுமதி வாங்கிப் போக உட்கார்ந்திருந்தாயா? நாளைக்கு ரகுநந்தனுக்கு கல்யாணமாகி பேரன் பேத்தி எடுக்கப் போகிறாய்..."

"எத்தனை வயதானாலும்... நான் உங்கள் மகன் தானேப்பா..."

"ஏன்டா... உன் மகன் உன்னிடம் எப்படி சட்டம் பேசி சரிக்குச் சமமாய் விளையாடுகிறான்... நீ மட்டும் ஏன்டா இப்படி இருக்கிறாய்..."

"அவன் தலைமுறை வேறு... என் தலை முறை வேறு அப்பா... நானாவது உங்கள் முன் உட்கார்ந்து பேசுகிறேன். நீங்கள் தாத்தாவின் முன் நின்று கூடப் பேசமாட்டீர்களே..."

சோமசுந்தரம் இயல்பாய் கூறிவிட்டு அவரது அறைக்கு போய்விட்டார்... ராமசாமி சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆவுடையம்மாள்... பகலில் ராமசாமியின் முன்னால் வந்துகூட நிற்கமாட்டார். இரவில் எல்லோரும் தூங்கியபின் அவர்களது அறையில் பார்த்துப் பேசிக் கொள்வதுதான்.

சோமசுந்தரத்திற்கு திருமணமாகி வீட்டிற்குள் மருமகளாய் காலடி எடுத்து வைத்து சுந்தராம்பாள் வரும் வரை இந்தக் கதைதான், பேரன் பேத்தி பிறந்தபின் தான் இருவரும் இணைந்து நின்று குடும்ப விழாக்களில் சிறியவர்களை ஆசிர்வாதிப்பது... சேர்ந்து உறவினர் வீட்டு விசேஷங்களுக்குப் போவது... கோவில் குளம் என்று ஊர்



சுற்றுவது... என்று பகலிலும் அருகில் அமர்ந்து பேசிக்கொள்ளும் சதிபதிகளாய் ஆனார்கள்.

சோமசுந்தரம்... சுந்தராம்பாளின் கதை வேறு... இருவரும் இணைந்து திருமணம் நடந்து முடிந்தவுடன் தேன்நிலவிற்குப் போனார்கள்... பகலிலும் அருகில் அமர்ந்து சிரித்துப்பேசிக் கொண்டார்கள்... சினிமா... கோவிலென்று சேர்ந்து வெளியில் போய் வந்தார்கள்... ஆனாலும் பெரியவர்கள் முன்னால் இருவரும் சிரித்துப் பேசிக் கொள்ள மாட்டார்கள்... ராமசாமியை கண்டவுடன் சுந்தராம்பாள் முந்தானையை இழுத்து போர்த்திக் கொண்டு மரியாதையாய் எழுந்து நிற்பாள்.

ரகுநந்தன்... சுபாங்கிணியின் காலம் வேறு... அவர்கள் இந்தக்காலத்து இளையவர்கள்... பெரியவர்கள் முன்னால் காதல் பார்வை பார்க்கக்கூட அஞ்ச மாட்டார்கள்... ரகுநந்தன் தகப்பனிடமும்... தாத்தாவிடமும் ஆயிரம் கேள்வி கேட்பான்... சில சமயம் அதட்டலாய் பேசுவான்... சுபாங்கினிக்கோ அன்பைக் காட்டத்தான் தெரியும்... மரியாதை காட்டத் தெரியாது. அவள்... சோமசுந்தரம் எதிர்த்து பேசத் தயங்கும் ராமசாமியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்குவாள்.

மாறிவரும் காலத்திற்கேற்ப மனிதரின் நடை... உடை... பாவனைகளோடு பழக்க வழக்கங்களும் மாறிவருவதை உணர்ந்தவராய் மனதிற்குள் சிரித்துக் கொண்டே ராமசாமி எழுந்து அவருடைய அறைக்குப் போனார்.

கீழ்த்தளத்தில் இருந்த பனிரெண்டு அறைகளில் பிரம்மாண்டமாய் இருந்த இரு அறைகளிலும் ராமசாமியும்... சோமசுந்தரமும்... இருந்தார்கள் மற்ற அறைகளை விட அந்த இரு அறைகளும் பல மடங்கு பெரியதாய்... முன்புறம் வரவேற்பறை... நடுவில் பெரிய படுக்கையறை... பக்கவாட்டில்

dsc00173.jpg (3072x2304x24b jpeg)



நீண்டு அகன்ற உடை மாற்றும் அறையென்ற பிரிவுகளோடு இருக்கும்... மற்ற அறைகள் விருந்தினர் வந்தால் உபயோகப்படுத்துவார்கள்... மற்ற நேரம் பூட்டியே இருக்கும் மாடியிலும்... இதேபோன்ற அமைப்புடன் இரண்டு பெரிய படுக்கையறைகள் இருந்தன... அவற்றில் ஒன்றில் ரகுநந்தனும் மற்றொன்றில் சுபாங்கினியும் இருந்தனர்... இங்கும் மற்ற அறைகள் பூட்டப்பட்டிருக்க... ஒரு அறையை மட்டும் ரகுநந்தன் உடற்பயிற்சி செய்ய பயன்படுத்திக் கொண்டிருந்தான்... கீழ்புறம் இருந்த அறைகளை விட மாடியில் இருந்த அறைகள் இன்னும் அழகுற அமைக்கப்பட்டிருந்தன... மாடியின் அந்த இரு அறைகளிலும் பிரத்யேகமாய் பெரிய பால்கனிகள் இருந்தன.

இரவு சாப்பிடும் போது ரகுநந்தன் பேச்செடுத்தான். "அப்பா... அவசியம் அந்தப் பெண் இங்கு வந்து தங்கத்தான் வேண்டுமா? யோசித்து எதையும் செய்யுங்கள்..."

சோமசுந்தரம் ஆச்சர்யமடைந்தார்.

"என்னடா இது? நீ ஏன் இந்தச் சின்ன விசயத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாய்?"

"இது சின்ன விசயமா? யாரோ... முன்பின் தெரியாத பெண்ணைக் கொண்டு வந்து நம் வீட்டில் தங்க வைப்பதா?"

எல்லோருக்கும் பரிமாறிக் கொண்டிருந்த சுந்தராம்பாள் மகனைக் கடிந்து கொண்டாள்.

"ரகு... என்ன பேச்சுப் பேசுகிறாய்? மீரா ஒன்றும் முன் பின் தெரியாத பெண்ணில்லை. உன் அப்பாவின் நெருங்கிய சிநேகிதரின் பெண். உன் அப்பா சென்னை போன போதெல்லாம் அவங்க வீட்டில்தான் தங்கியிருக்கிறார். 'வீட்டில் துணையாய் யாருமில்லை... நான் வெளிநாடு போக



வேண்டியிருக்கிறது... ஒரு ஆறுமாதம் உங்கள் வீட்டில் என் மகள் தங்கலாமா'ன்னு உன் அப்பாவின் சிநேகிதர் கேட்டிருக்கிறார்... உடனே உன் அப்பா சரின்னு சொல்லி விட்டார்... இதைப் புரிந்து கொள்ளாமல் வாய்க்கு வந்தபடி அடுத்த வீட்டுப் பெண்ணைப் பற்றி நீ பேசலாமா? எனக்கே இதைக் கேட்கப் பிடிக்கவில்லை..."

"விடுங்கம்மா... நமக்கு பிடிக்காது என்பதற்காக அண்ணன் சொல்வதை சட்டை பண்ணாமல் இருக்க முடியுமா? எனக்குக் கூடத்தான் இட்லி சாம்பார் பிடிக்கவில்லை... நான் சப்பாத்தி குருமா வேண்டுமென்று கேட்டேன்... நீங்கள் செய்து கொடுத்தீங்களா? அது என்னவோ... இட்லி மேல்தான் உங்களுக்கு இஷ்டம் அதிகம். நான் வாயை மூடிக் கொண்டு போட்டதைச் சாப்பிட வில்லை...? அதுபோல... அண்ணன் பேசுவதை கண்டு கொள்ளாமல் உங்கள் வேலைகளை நீங்கள் செய்யுங்கள் ... கண்டிக்காதீர்கள்..."

"ஏண்டி வாயாடி... உன் ஒருத்திக்காக சப்பாத்தி குருமா பண்ண முடியுமா? தாத்தாவுக்கும் பாட்டிக்கும் ராத்திரி நேரத்தில் எண்ணைப் பலகாரம் சாப்பிட்டால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது... அப்பாவும்... அண்ணனும் பகலில் வீட்டுக்கு சாப்பிட வருவதில்லை. ஹோட்டலில் ஒரு பிடி பிடிக்கிறார்கள். அவங்க வயிற்றுக்கும் ஒத்துக் கொள்ள வேண்டும்... இத்தனை பேரின் வசதியையும் பார்த்து நான் சமையல் செய்ய வேண்டும்..."

"ஆமாம்... இதை ஒன்றை அடிக்கடி சொல்லி விடுங்கள்... நான் செய்கிறேன்... நான் செய்கிறேன் என்று... நீங்களா வீட்டில் சமையல் செய்கிறீர்கள்? அம்புஜம் அத்தை தானே செய்கிறார்கள்?"

"அம்புஜம்... வீட்டில் சமையல் செய்யும் வேலைக்குத்தான் வந்தவள்டி... ஹோட்டலில் சமைக்க வரவில்லை... பேச்சை நிறுத்தி விட்டுச் சாப்பிடு..."

மகளைத் திட்டுவது போல மகனை அவள் முறைத்தாள். தாய் திட்டுவது தன்னைத்தான் என்பது புரிய ரகுநந்தன் மௌனமாகிவிட்டான்.

வரப்போகும் அந்தப் பெண்ணை நினைத்துப் பற்களைக் கடித்துக் கொண்டான், 'இவள் ஏன் இங்கு வருகிறாள்?'

## 4

புழுதி பறக்க ஆறு குதிரைகள் பூட்டிய அந்தத் தேர் பறந்து கொண்டிருந்தது... அதில் இளவரசியின் உடையுடன் அவள் அமர்ந்திருந்தாள். தேர் இப்போது மேகங்களுக்கு இடையில் வானில் பறந்தது. தேரின் இருபுறமும் தெரிந்த வெண்பஞ்சுப் பொதிகள் போன்ற மேகக் கூட்டங்களை அவள் வியப்புடன் பார்த்தாள். வான் வெளியில் ஓர் அழகிய மாளிகை தெரிந்தது. பறந்து சென்ற தேர் அந்த மாளிகையின் வாசலில் நின்றது. அவள் தேரிலிருந்து இறங்காமல் அந்த மாளிகையின் கதவுகளைப் பார்த்தாள். தங்கத்தால் செய்யப்பட்ட அந்த மாளிகை தகதகவென ஜொலிக்க அதன் பிரம்மாண்டமான வாயில் கதவுகள் விரியத் திறந்தன. அதன் உள்ளேயிருந்து அழகிய ராஜகுமாரன் ஒருவன் வெண்புரவியின் மீதேறி வெளியே வந்தான். அவளது தேர் அருகே குதிரை நின்றது. அவன் குதிரையிலிருந்து குதித்து இறங்கி... அவளது தேர் கதவைத் திறந்து... அவளது கரம் பிடித்து தேரினின்று கீழே



கம்பீரமான அழகில் மனதைப் பறிகொடுத்தாள்... விழிகளை அவன் மீதிருந்து விலக்க இயலாமல் தவித்தாள்... அவளது மயக்கம் கண்ட அவன் மையலுடன் நகைத்து அவள் கரம் பற்றி அணைத்துக் கொண்டான்... அவர்கள் மேல் பூமழை பெய்தது... பூமாரி பொழிவின் இடையே அவள் கரம் பற்றி அந்த மாளிகைக்கு அவன் அழைத்துச் சென்றான்...

மீரா படக்கென்று விழித்துக் கொண்டாள்... அறையில் ஏஸியின் இதமான சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது... சிறிதளது வெளிச்சம் பரவியிருந்தது. எழுந்து வால்கிளாக்கில் மணி பார்த்தாள்... அதிகாலை ஆறுமணி... விடியலில் கண்ட கனவு பலிக்கும் என்பார்களே... இந்தக் கனவு அவளுக்கு என்ன கூற விழைகிறது...?

மீரா படுக்கையில் இருந்து எழுந்து கொண்டாள். ஏஸியை அணைத்து விட்டு... அறையின் ஜன்னல் திரைகளை விலக்கி ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள். தோட்டம் அழகாக இருந்தது. அதிகாலையின் அற்புதத்தை அனுபவிக்க விரும்பியவள் அறையைவிட்டு வெளியேறி மாடிப்படிகளில் இறங்கினாள்... ஹாலைக் கடந்து வீட்டின் போர்டிகோவில் இறங்கித் தோட்டத்திற்குள் சென்றாள்... 'கீச்... கீச்' என்ற இரு குருவிகள் ஒன்றோடு ஒன்று கொஞ்சியபடி பூச்செடியில் அமர்ந்திருந்தன. இவளது வரவைக் கண்டதும் பறந்து தள்ளியிருந்த மற்றொரு பூச்செடியில் அமர்ந்தன...

'நான் இதுகளை என்ன செய்யப் போகிறேனாம்...'

அவைகளை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டே தோட்டத்தில் போடப்பட்டிருந்த கூடை நாற்காலியில் அமர்ந்தாள் மீரா. குருவிகளைப் போலவே "கீச்..கீச்.." சப்தமெழுப்பி விட்டு அவற்றைப் பார்த்துச் சிரித்தாள்.

"என்னம்மா... குருவிகளுடன் பேசிக் கொண்டிருக்கிறாயா ?" தந்தையின் குரல் கேட்டு அவசரமாய் திரும்பிப் பார்த்தாள் மீரா... வையாபுரி இரவு உடையுடன் நின்று கொண்டிருந்தார் அவர் பின்னாலே ஒரு பணியாள் காபிக் கோப்பைகள் இருந்த டிரேயை ஏந்திக் கொண்டு நின்றான்.

"எழுந்து விட்டீர்களாப்பா..."

"ம்ம்... எழுந்ததும் என் மகளுடன் பெட் காபி குடிக்கலாம் என்று நினைத்து உன் ரூமிற்கு வந்தேன் ... நீ குருவிகளுடன் பேச இங்கே வந்து விட்டாய்..." என்றவாறு மகளிடம் ஒரு காபிக் கோப்பையைக் கொடுத்தவர்... தானும் ஒன்றை எடுத்துப் பருக ஆரம்பித்தார்.

"காலையிலேயே கனவு கண்டு விழிப்பு வந்து விட்டது அப்பா. எழுந்ததும்... தோட்டத்திற்கு வரவேண்டும் என்று தோன்றியது... வந்து விட்டேன்... அந்தக் குருவிகளைப் பாருங்களேன்... எவ்வளவு அழகாய் இருக்கின்றன... அவைகள் 'கீச்கீச்' சென்று பேசிக் கொள்கின்றன அப்பா..." விழிகள் மின்ன மீரா கூறினாள்.

" ஊஹூம் ...? அந்தக் குருவிகள் உன்னிடம் என்னம்மா சொல்லின..." வையாபுரி சிரித்துக் கொண்டே கேட்டார்.

" என்னுடைய அப்பா ஸோ கிரேட்டுன்னு சொல்லின அப்பா..." மீரா தந்தையின் தோள் மேல் சாய்ந்து சிரித்தாள்.

மகளின் தலையைப் பாசமுடன் தடவிய வையாபுரியின் கண்கள் பனித்தன. இந்த மகளை ஆறு மாத காலம் பிரிந்திருக்க வேண்டும்... அவரது வியாபாரத்தின் முக்கியமான அம்சம்... இந்த வெளிநாட்டு டூர்... இதை தவிர்க்க இயலாது.



பேசவேண்டும் அம்மா... "

" என்னப்பா... ?"

" அப்பா... பிஸினெஸ் விசயமாய் வெளிநாடு போக வேண்டியதிருக்கிறது இல்லையா... ?"

" ஆமாம்பா... இந்த ஆறுமாதமும் நீங்கள் இல்லாமல் நான் எப்படித் தனியாக இருப்பேன் ?"

" அதைச் சொல்லத்தான் வந்தேன்ம்மா..."

" எதைச் சொல்லப்பா ?"

" உனக்கு என் குளோஸ் அண்ட் பெஸ்ட் பிரண்டு சோம சுந்தரத்தை தெரியுமில்லையா ?"

" இது என்ன அப்பா இப்படிக் கேட்டு விட்டீர்கள் ? அவரைத்தான் நான் அடிக்கடி பார்த்து இருக்கிறேனே... லாஸ்ட் மன்த் கூட நம் வீட்டில் வந்து தங்கியிருந்து விட்டுப் போனாரே..."

" அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய் ?"

" ம்ம்... அவர் தமிழ் பண்பாட்டில் ஊறியவர் என்று நினைக்கிறேன் அப்பா... சிறு வயதில் இருந்தே அவரை 'அங்கிள்' என்று நான் அழைப்பதை அவர் விரும்பமாட்டார்... 'மாமா' என்று கூப்பிட வேண்டும் என்று சொல்வார்..."

" யு ஆர் கரெக்ட் மீரா... அவனுடைய ஊர் குற்றாலம் பக்கத்தில் இருக்கும் பூஞ்சோலை என்ற கிராமம்... ஊருக்கு பெரிய மனிதன்... அம்மா... அப்பா... மனைவி... மகன்... மகள்... வீடு நிறைய வேலையாள்கள் என்று கலகலப்பான கூட்டுக் குடும்பத்தில் வாழ்பவன்... அவன் வீடு எப்போதும் ஜீவனுடன் இருக்கும். நான் குற்றாலம் போனால் அவன் வீட்டில்தான் தங்குவேன். அங்கே இருக்கும்போது அவ்வளவு ஆனந்தமாக இருக்கும்..."

" ஓ... ஜஸி... நீங்கள் சொல்வதைக் கேட்கும் போது
னக்குக்கூட அந்த ஊருக்கு ஓர் முறை போய் வர
வண்டுமென்று ஆசையாக இருக்கிறது..."

"நான் சொல்வதைக் கேட்கும்போது உனக்கு அந்த
ஊரைப் பிடித்திருக்கிறதா மீரா..."

" பிடித்திருக்கிறது அப்பா... ?"

" அந்தக் குடும்பத்தை... ?"

" ம்ம்... அந்தக் குடும்பதையும் பிடித்திருக்கிறது..."

" அங்கே போய் தங்குவதில் உனக்கு எந்த
ஆட்சேபனையும் இல்லையே..."

" இல்லை அப்பா..."

" அப்படியென்றால்... அந்த ஊரில்... அந்த வீட்டில்... அந்தக்
குடும்பத்தாரோடு... ஆறு மாத காலம் தங்கியிருப்பாயா ?"

" அப்பா..." மீரா திகைத்தாள்.

இது என்ன அப்பா இப்படிச் சொல்கிறார் ? முன்பின்
தெரியாத மனிதர்களிடம் அறியாத ஓர் ஊரில் ஆறு
மாதங்கள் அவள் தங்க வேண்டுமா ? இது எப்படிச் சரி வரும்

" அப்பா... நான் அடுத்தவர்கள் வீட்டில் தங்கின
தில்லையே..."

" சோமசுந்தரம் அடுத்தவன் அல்ல அம்மா... என்னை
போல் அவன் உன்னை கண்ணுக்குள் வைத்துப் பார்த்து
கொள்வான்..."

" ஆனால் அப்பா... அந்த வீட்டில் அவர் மட்டு
மில்லையே..."

" அவனுடைய குடும்பத்தார்தானே இருக்கிறார்கள் ?"



" இருந்தால் என்னம்மா ? ஆறு மாதங்கள் அவர்கள் வீட்டில் ஒரு விருந்தாளியாகத்தானே தங்கப் போகிறாய் ?"

" விருந்தும், மருந்தும் மூன்று நாள்கள் தானே அப்பா..."

"அது மற்றவர்களுக்கு இடையில் மீரா... எனக்கும் சோமசுந்தரத்திற்கும் இடையே... விருந்தும்... மருந்தும் வருடக் கணக்கில் இருக்கும்... எங்கள் நட்பு அப்படிப் பட்டது..."

"இருந்தாலும் அப்பா... "

" எனக்காக இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொள் மீரா... உன்னை பாதுகாப்பான குடும்பச் சூழலில் விட்டு வைத்தால் தான் நான் நிம்மதியாக ப்ளைட்டில் ஏற முடியும்... அப்பாவிற்காக... ப்ளீஸ்..."

வையாபுரி கெஞ்சுதலான தொனியில் கூறியதும் மீராவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஆறு மாதங்கள் ஒரு கிராமத்தில் அறிமுகமில்லாத மனிதர்களின் வீட்டில் விருந்தாளியாய் இருப்பதா ? ஆனால் அப்பா கெஞ்சுகிறாரே... மீரா பிறந்ததில் இருந்து சென்னையில் வசிப்பவள். அவள் எப்படி ஒரு கிராமத்தில் போய் இருப்பது

வையாபுரியின் மனநிலையை உணர்ந்த மீராவிற்கு இதை எப்படி அவரிடம் கூறுவது என்றிருந்தது... வசதிகளைவிட தந்தையின் மன நிம்மதி அவளுக்கு முக்கியமாய் பட,

"சரிப்பா..." என்றாள்.

"நிஜமாகவா மீரா... நீ அங்கே போக ஒத்து கொள்கிறாயா ?"

"ஆமாம் அப்பா... உங்களது பயணம் மன நிம்மதியுடன் இருக்க வேண்டும்... நான் அவர்கள் வீட்டில் போய் தங்கினால் தான் நீங்கள் மன நிம்மதியுடன் கிளம்புவீர்கள்... எனவே உங்களுக்காக நான் அங்கே போகிறேன்..."

வையாபுரி... மகிழ்வுடன் மகளின் தலையை வருடிக் கொடுத்து விட்டு செல்போனை எடுத்து உயிர்ப்பித்தார்.

"சோமு... வையாபுரி பேசுகிறேண்டா"

"சொல்லுடா... எப்போது நீயும் மீராவும் இங்கு வருகிறீர்கள்?"

"நானும்... மீராவும் நாளைக்கே கிளம்பி அங்கே வருகிறோம்..."

சிறுவனைப் போன்ற குதூகலத்துடன் வீட்டிற்குள் விரைந்த தந்தையைப் பார்த்துக் கொண்டிருந்த மீராவின் மனம் நெகிழ்ந்தது. எவ்வளவு அருமையான தகப்பனை இறைவன் அவளுக்குக் கொடுத்து இருக்கிறான். அவளுடைய தோழிகள் எல்லோரும் அவளது வசதிகளைக் கண்டு பொறாமையாய் கூறுவார்கள்.

'யு ஆர் ஸோ லக்கி மீரா...'

'நான் லக்கிதான்...' மீரா மனதிற்குள் கூறிக் கொள்வாள்.

'என்னை தாய்க்குத் தாயாக... தந்தைக்குத் தந்தையாக உயிரைக் கொடுத்து வளர்க்கும் இவ்வளவு அருமையான அப்பாவைப் பெற்ற நான் லக்கி கேர்ள் இல்லாமல் வேறு என்னவாம்...?'

மீரா குளித்து விட்டுப் பூஜையறைக்குள் சென்று தெய்வங்களின் படங்களுக்கு இடையே மாட்டப்பட்டிருந்த தாயின் படத்தின் முன் விளக்கை ஏற்றிக் கை கூப்பி நின்றாள்.

'அம்மா... அப்பா...என்னை அவருடைய சிநேகிதர் வீட்டிற்கு போய் ஆறு மாதங்கள் இரு என்கிறார். அவருக்கு என் பாதுகாப்பைப் பற்றிய கவலை இருக்கக் கூடாது என்பதற்காக நானும் சரி என்று சொல்லி விட்டேன்... அறியாதவர்கள் மத்தியில் நான் இருக்கப் போகும் நாள்களில் என் துணைக்கு நீயும் இருப்பாய் என்ற நம்பிக்கையில்தான் அங்கே போகிறேன்... துணைக்கு வாம்மா...'



அலுவலகம் செல்லக் கிளம்பி வந்த வையாபுரி மனைவியின் படத்தின் முன் கரம் கூப்பி நின்ற மகளைப் பார்த்தார். அவரது புருவங்கள் முடிச்சிட்டன... மகள் மனதில் என்ன வேதனை? மனைவியின் படத்தைப் பார்த்தார். அவள் சட்டங்களுக்கு இடையில் புகைப்படமாய் அடங்கி அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

சிரிக்கிறாயா ஈஸ்வரி? இவளை என் கையில் கொடுத்து விட்டு நீ நிம்மதியாய் போய்விட்டாய்... இவளை நல்லவன் ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டிய கடமைக்காக நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் நினைப்பது நிறைவேற நீயும் துணை செய்...

மகளின் வேண்டுதலும்... கணவரின் வேண்டுதலும்... அந்த மகராசியின் செவியை எட்டியதோ... என்னவோ... புகைப்படத்திலிருந்து மாலையில் இருந்து ஒரு மலர் உதிர்ந்து மீராவின் கையில் விழுந்தது.

## 5

தன் கைகளில் விழுந்த மலரை உணர்ந்த மீரா கண் திறந்து கையைப் பார்த்தாள். அதே நேரம் வையாபுரியும் மகளின் அருகில் வந்தார். தந்தையிடம் கைவிரித்துக் காண்பித்தாள் மீரா.

"அம்மாவின் படத்திற்கு போட்டிருந்த மாலையிலிருந்து பூ விழுந்திருக்குப்பா..."

" அம்மாகிட்ட நீ என்ன கேட்டாயோ எனக்குத் தெரியாது,

அம்மா அதற்கு ஓகே சொல்லியிருக்கிறாள்..."

" அம்மா..." மீரா கண்களில் கண்ணீர் வழிய கையிலிருந்த பூவிற்கு முத்தம் கொடுத்தாள்.

வையாபுரிக்கும் கண் கலங்கியது. மலரென சிரித்துக் கொண்டு மகளுக்கு மலர் கொடுத்திருக்கும் மனைவியின் புகைப்படத்தைப் பார்த்தார்.

' நீ வேறு... நான் வேறா ஈஸ்வரி... என் மனதிலிருப்பதை நீ அறிவாயே... அதை அறிந்து கொண்டுதான் எனக்குச் செய்தி சொல்லியிருக்கிறாயா ? நான் நினைப்பது நடக்கும் என்று எனக்கு அறிவுறுத்துகிறாயா ? உனக்கும் இதில் சம்மதம் என்பதை எனக்குத் தெரியப்படுத்துகிறாயா ? நம் மகளின் வாழ்வு நன்றாக இருக்கும் என்று இப்போது எனக்கு நம்பிக்கை வந்து விட்டது ஈஸ்வரி...'

" வாம்மா சாப்பிடப் போகலாம்..."

தகப்பனாருடன் டைனிங் டேபிளை நோக்கிப் போனபோது மீராவின் மனம் அமைதியடைந்திருந்தது. இந்த உலகின் எந்த மூலைக்குப் போனாலும் துணையாய் அன்னை காற்றோடு கலந்து வருவாள் என்ற நிம்மதியுடன் சாப்பிட உட்கார்ந்தாள்.

" உனக்கு வேண்டிய நகைகளை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியை பேங்க் லாக்கரில் கொண்டு போய் வைத்து விடு மீரா..."

"சரிப்பா..."

"தேவையானவற்றை பெட்டிகளில் இன்றைக்கே அடுக்கி வைத்து விடு"

"சரிப்பா..."

"நாம் நாளைக்கு காலையில் கிளம்பலாம்..."

"சரிப்பா..."



" உனக்குத் தேவையான பணத்தை எடுத்துக் கொள். மறக்காமல் கிரெடிட் கார்டையும் எடுத்துக் கொள். எது தேவைப்பட்டாலும் நீ உன் விருப்பம் போல் வாங்கிக் கொள்..."

"சரிப்பா..."

"அப்பா எது சொன்னாலும் சரியென்றுதான் சொல் ாயா ?" மகளை கனிவுடன் பார்த்தபடி கேட்டார் வையாபுரி.

" நீங்கள் சரியாகவே சொல்லும் போது நான் 'சரி' சொல்லாமல் வேறு என்ன சொல்வதாம்..." மீரா தலை சாய்த்துச் சிரித்தாள்.

வையாபுரிக்கு மகளைப் பார்க்கப் பார்க்கப் பெருமையாய் இருந்தது. மற்றவரின் மனம் புண்பட நடந்து கொள்ள மாட்டாள் மீரா. பிறர் மனமறிந்து நடந்து கொள்வதில் கெட்டிக்காரி... சென்னையில் பிறந்து வளர்ந்தவள்... ஆனால் பழமையை நேசிக்கும் தகப்பனாருக்காக சென்னையின் நாகரிகப் பூச்சுகள் தன்னை அண்ட விடாமல் பார்த்துக் கொண்டாள்.

"என்னப்பா யோசனை ?"

"ஒன்றுமில்லை மீரா... நாளை நாம் ஊருக்குப் போக வேண்டுமே அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக் கிறேன்..."

"அப்பா...! வெளிநாட்டிற்கு போகப் போவதைப் பற்றி யோசிக்காமல்... இதோ இங்கே குற்றாலத்திற்கு பக்கத்தி லிருக்கும் ஒரு கிராமத்திற்குப் போக இவ்வளவு தூரம் யோசிக்க வேண்டுமா ?"

"வெளிநாட்டிற்குப் போகப்போவது நான். குற்றாலத் திற்குப் போகப் போவது நீ... யோசனை வராதா ? "

" நீங்களே... அவர்கள் எல்லோரும் மிகவும் நல்லவர்கள்

என்று சொல்லியிருக்கிறீர்கள்... அப்புறம் ஏன் யோசிக்க வேண்டும்?"

" நான் உனக்காக ஒரு காரை அங்கே நிறுத்தி விட்டு வரவா?"

" வேண்டாம் அப்பா. அங்கே இருக்கும்போது அவர்களில் ஒருத்தியாக இருக்கப் பழகிக் கொள்கிறேன். அதுதான் முறை..."

இதுதான் மீரா...! கோடிக்கணக்கில் பணம் இருந்தாலும் அத்தனைக்கும் ஒரே வாரிசாய் அவளிருந்தாலும் தற்பெருமை துளியும் இல்லாதவள். மற்றவர்களிடமிருந்து தன்னை விலக்கிக் கொள்ளாமல் எல்லோருடனும் கலந்து பழகுபவள். ஈஸ்வரியின் வயிற்றில் பிறந்த பெண் வேறு எப்படி இருப்பாள்? வையாபுரி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

வையாபுரி அலுவலகம் சென்ற பின்பு மீரா சுறுசுறுப்பாய் இயங்கினாள். தேவைப்படும் நகைகளை மட்டும் நகைப்பெட்டி யில் வைத்துக் கொண்டு மற்றவற்றை எடுத்துச் சென்று பேங்க் லாக்கரில் வைத்து விட்டுத் திரும்பினாள். வீட்டுக்கு வரும் வழியில் கன்னிமாரா லைப்ரரிக்கு காரை ஓட்டினாள்.. இன்னும் அறுமாத காலங்கள் அவள் சென்னையில் இருக்கப் போவதில்லை... எனவே கையிலிருக்கும் புத்தகத்தை லைப்ரரியில் ஒப்படைப்பதுதான் முறை... புத்தகத்தை கொடுத்து விட்டு சற்றுநேரம் லைப்ரரியில் செலவிட்டவள்.. லைப்ரரியை விட்டு வெளியே வந்து காரை நோக்கி நடந்தாள்.

அவளது காரின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்தான் அவன், ... தினேஷ்...! எரிச்சலுடன் மனதில்

'இவனா...? இவன் இங்கு ஏன் வந்தான்? வந்ததும் இல்லாமல் என் காரில் சாய்ந்து கொண்டு நிற்கிறானே...



"ஹாய் மீரா..." என்றான் அவன் ஆர்ப்பாட்டமாய்...

" ம்ம்ம்?" என்றபடி அவனை முறைத்தாள் மீரா.

"ஹாய் சொன்னால் பதிலுக்கு ஹாய் சொல்ல மாட்டீர்களா?"

" எனக்கு அதை விட முக்கியமான வேலைகள் நிறைய இருக்கின்றன. காரை விட்டு நகருங்கள்..." என்று கடுமையாகக் கூறினாள் மீரா.

"நானும் உங்களுக்கு முக்கியமானவன்தான மீரா ..."

"எனக்கு யார் முக்கியம்... யார் முக்கியமில்லையென்று நான் தீர்மானிக்க வேண்டும்... நீங்கள் தீர்மானிக்கக் கூடாது ..."

"நீங்கள்தான் தீர்மானிக்க மாட்டேன் என்கிறீர்களே..."

" எதைத் தீர்மானிக்கச் சொல்கிறீர்கள்?"

" என் காதலை ஏற்றுக் கொள்வதைப் பற்றி..."

"காதலா...? நீங்களா...? என்னையா...? ...ஹா..." அலட்சியமாய் உதட்டைச் சுழித்தாள் மீரா.

தினேஷின் சிவந்த முகம் கருத்தது...? 'எவ்வளவு அலட்சியமாய் பேசுகிறாள்...?' பல்லைக் கடித்துக் கொண்டான்.

"ஏன் இவ்வளவு அலட்சியம் மீரா? எனக்கு என்ன குறை எனக்கு அழகில்லையா?"

கேட்டவனை ஏற இறங்கப் பார்த்தாள் மீரா.

அவன் ஸ்டைலாய் ஒரு கூலிங்கிளாஸை மாட்டிக் கொண்டு போஸ் கொடுத்தபடிதான் காரின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்தான். மடிப்புக் கலையாத ஜீன்ஸ்... அழகான காட்டன் சர்ட்... டிரிம் செய்யப்பட்ட மீசை... கவனமாய் பராமரிக்கப்படும் சிகை... என்று அழகாகத்தான் தோற்றமளித்தான்.

ஆனால்... அவள் எதிர்பார்க்கும் அழகு இது இல்லையே. இது செயற்கையான அழகு ஆயிற்றே... தினமும் ஷேவ் செய்து... வாரம் இருமுறை பியூட்டி பார்லருக்குப் போய்... வெயில் படாமல் மேனியை பாதுகாத்து... மடிப்புக் கலையாத உடையணிந்து யார் வந்தாலும் அவர்கள் அழகாகத்தானே இருப்பார்கள்... இவன் ஏற்கனவே நல்ல முகத்தோற்றம் உள்ளவன்... சிவந்த நிறமுடையவன்... அவன் உலக மகா அழகன் என்று பீற்றிக் கொள்ளக் காரணம் இல்லாமல் இல்லை... அவனிடம் எப்போதுமே பெண்கள் விரும்பி வந்து தானாய் பேசுவார்கள்... அந்த அழகான தோற்றம் தந்த நம்பிக்கையில்தான் அவன் மீராவிடம் காதல் சொன்னான்.

ஆனால் அவனை மீராவிற்கு சுத்தமாய் பிடிக்கவே இல்லை. ஏனோ... அவன் பீற்றிக் கொள்ளும் இந்த அழகான தோற்றம் அவளை வசீகரிக்கவே இல்லை. அவனது குண இயல்பு அவனது வார்த்தைகளிலேயே வெளிப்பட்டது. அது அவளுக்கு அருவெறுப்பைத்தான் ஏற்படுத்தியது.

“ஹலோ... மீரா ஐ ஆம் தினேஷ்...”

அஷ்டலட்சுமி கோவிலுக்குச் சென்று விட்டு பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் சர்ச்சின் முன்னால் நிறுத்தப் பட்டிருந்த தன் காரை எடுக்க மீரா போனபோது இன்று போலவே அன்றும் அவன் காரின் மேல் சாய்ந்து நின்று கொண்டு பேசினான்.

தூரத்தில் வரும்போதே அவன் அந்த வெளிநாட்டுக் காரை ஆசையாய் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்து விட்டிருந்த மீரா புருவம் தூக்கினாள்.

“ஹு ஆர் யு ? என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும் ?”

“உங்கள் பெயர் மட்டுமல்ல... உங்களுடைய புல்



பயோடேட்டாவே எனக்குத் தெரியும்... கோடீஸ்வர அப்பாவின் அத்தனை சொத்துக்களுக்கும் ஒரே வாரிசு நீங்கள்தான்... ஆம் ஐ கரெக்ட் ?”

ஒரு வினாடி... இவன் தன்னைக் கடத்திப் போக வந்த பிளாக் மெயிலரோ என்று மீரா பயந்தே போனாள். எதற்கும் இருக்கட்டுமென்று கையிலிருந்த செல்போனில் அவசர போலிஸின் நம்பரை அழுத்தி வைத்துக் கொண்டாள்... தேவைப்பட்டால் உடனே கால் பண்ணி விட வசதியாய் கட்டைவிரலை செல்போனில் அழைக்கும் பகுதியில் வைத்தவாறு பேசினாள்.

“இதையெல்லாம் என்னிடம் ஏன் கேட்கிறீர்கள் மிஸ்டர்... ?”

“தினேஷ் தினேஷ்... என்பதுதான் என் பெயர்.”

“இருந்து விட்டுப் போகட்டும் எனக்கு என்ன ?”

“உங்களுக்கு என்ன... என்று உதறிவிட்டுப் போக முடியாது மீரா நான் உங்களைக் காதலிக்கிறேன்...”

‘காதலா... ? அதுசரி... கடத்திக் போனால் குறிப்பிட்ட தொகையைத்தான் கேட்க முடியும் காதல் என்று வளைத்துப் போட்டுக் கல்யாணம் செய்து கொண்டால் முழுச் சொத்திற்கும் அதிபதி ஆகிவிடலாமே... என்ன ஓர் கணக்கு ?’ மீராவிற்கு சிரிப்பு வந்தது.

கடைசியில் தன்னுடைய தகுதியும் அடையாளமும்... பணக்கார அப்பாவின் ஒரே மகள் என்பது மட்டும்தானா ?

“வழியை விடுங்கள் மிஸ்டர்...”

“நான் எவ்வளவு முக்கியமாய் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இருக்கிறேன்... நீ கிளம்புவதில் குறியாய் இருக்கிறாயே...”

"'நீ ...'யா? மரியாதை தேவை மிஸ்டர் தினேஷ்... என்னிடம் 'நீ, வா, போ' என்று பேசுவதை தவிர்த்து விடுவது நல்லது- இல்லா விட்டால் விளைவு விபரீதமாக இருக்கும்..."

அவன் முகம் மாறியது- மனதிற்குள் என்ன நினைத்தானோ- வெளியில் அவசரமாக...

"வெயிட்... வெயிட்... எதற்கு இவ்வளவு கோபம் மீரா... நாம் ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னால் 'நீ வா போ' என்று நானும் பேசக்கூடாதுதான்... வாங்களேன்... அப்படிக் கடலோரமாய் உட்கார்ந்து பேசலாம்..."

மீராவின் முகம் கோபத்தில் சிவந்து விட்டது...

"என்னது உங்களுடன் நான் பீச்சில் உட்கார்ந்து பேசுவதா? நீங்கள் யார்? நான் யார்? எனக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? எவ்வளவு தைரியம் இருந்தால் என்னிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பீர்கள்? என்னைப் பற்றி உங்களுக்கு சரிவரத் தெரியாது மிஸ்டர்... தெரிந்தால் இப்படி அபத்தமாய் என்னிடம் காதல் சொல்ல மாட்டீர்கள்..."

அவள் எரிச்சலுடன் செல்போனை எடுத்துப் பேச முயன்ற போது அவசரமாய் அவன் குறுக்கிட்டான்.

"யாருக்குப் போன் போடுகிறீர்கள்?"

"வேறு யாருக்குப் போடுவேன்...? போலிஸிற்குத்தான்"

"கோபப்பட வேண்டாம் மீரா... நான் என் காதலைச் சொன்னேன். ஏற்றுக் கொள்வதும்... மறுப்பதும்... உங்கள் விருப்பம்... அதை விட்டுவிட்டு ஏன் இப்படி நாகரிகமில்லாமல் நடந்து கொள்கிறீர்கள்?"

"யார் நாகரிகமில்லாமல் நடந்து கொள்வது... நானா? முன்பின் தெரியாத பெண்ணிடம் வந்து முறையில்லாமல்



பேசும் நீங்கள் நாகரிகமாய் நடந்து கொள்பவரா?"

"நீங்கள் ஒன்றும் எனக்கு முன்பின் தெரியாத பெண்ணில்லை. உங்கள் கிளாஸ்மேட் அனிதாவின் அண்ணன்தான் நான்..."

"வாட்...?"

இவன் அனிதாவின் அண்ணனா?

அனிதா அவளின் வகுப்புத் தோழிதான். ஆனால் அவளிடம் மீரா சரியாகப் பேச மாட்டாள்... அவளிடம் தெரியும் கர்வமும்... வசதியில்லாதவர்களை உதாசீனப்படுத்தும் போக்கும்... நாகரிகம் என்ற பெயரில் அரைகுறையாய் ஆபாசமாய் உடையணிவதும்... மீராவிற்குப் பிடிக்காது. ஆனால் அனிதா மீராவிடம் வலிய... வலிய வந்து பேசுவாள். அவள் மீராவிடம் இருக்கும் பணத்திற்காகத்தான் மீராவைச் சுற்றி வருகிறாள்... மீராவை மதித்து அல்ல என்பது எல்லோருக்குமே தெரியும்... மீராவிற்கும் அது நன்கு தெரியுமாதலால் அனிதாவிடம் பேசமாட்டாள். அந்த அனிதாவின் அண்ணன் இப்படியில்லாமல் எப்படியிருப்பான்?

## 6

"நீங்கள் அனிதாவின் அண்ணனாகவே இருந்தாலும் எனக்கு நீங்கள் அறிமுகமில்லாதவர் தானே...?"

"எங்கே...? அறிமுகம் செய்து வைக்கத்தான் நீ இடம் கொடுக்க மாட்டேன் என்கிறயாமே... என் தங்கை அவளுடைய பர்த்டே பார்ட்டிற்கு உன்னைக் கூப்பிட்டாளாம்... நீ வரமாட்டேன் என்று சொல்லி விட்டாயாம்... எங்கள் வீட்டில் நடந்த நிறைய பங்கஷன்களுக்கு உன்னை இன்வைட்

பண்ணியிருக்கிறாள்... நீ வருவதே இல்லை... ஒசே அண்ணா... காலேஜ் ஃபைனல் இயர் வந்து விட்டோம்... காலேஜ் டேக்கு வா ... நான் உன்னை மீராவிடம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன் என்று சொன்னாள். நானும் காலேஜ் டேக்கு வந்தேன்... உன்னையும் பார்த்தேன்... அனிதா உன்னிடம் பேச வரும்போதெல்லாம் நீ அவாய்ட் பண்ணிவிட்டாய்... நான்தான் சரி போனால் போகிறது... என்னை நானே அறிமுகப்படுத்திக் கொள்கிறேன் என்று அவளிடம் சொல்லிவிட்டேன்... இந்த ஒரு வாரமாய் உன்னை பாலோ பண்ணி இன்று உன்னைப் பிடித்து விட்டேன்..."

அவளைப் பிடித்த கதையை விலாவாரியாய் அவன் விவரிக்க மீரா பொறுமையிழந்து வெடித்தாள்.

"ஷட் அப் மிஸ்டர் தினேஷ்... வா போவென்று பேசாதீர்கள் என்று சொல்லச் சொல்ல அதேபோல் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்..."

"ஒரு உரிமையில் பேசிவிட்டேன் மீரா..."

"உரிமையை நீங்களாய் எடுத்துக் கொள்ளாதீர்கள்..."

"ஒ.கே...ஒ.கே... நாம் ஒரு முடிவுக்கு வருகிறவரை நான் வாங்க... போங்க என்றே பேசுகிறேன் போதுமா... ?"

"திருந்தாத ஜென்மம் என்று ஒன்று இருந்தால் அது நீங்கள்தான்... ஆமாம்... தெரியாமல்தான் கேட்கிறேன்... நீங்கள் எதற்கு என்னை அறிமுகப்படுத்தி வைக்கச் சொல்லி அனிதாவிடம் கேட்டீர்கள்..."

"உங்களிடம் காதல் சொல்லத்தான்..."

"என்னை காலேஜ்டே அன்றுதான் பார்த்தேன் என்கிறீர்கள்- அப்புறம் எப்படி என்னிடம் காதல் சொல்ல அலைந்தீர்கள்?"



தெரியவில்லை.

'இவன் சரியான சுரணை கெட்ட எருமைமாடு...' அவள் எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள்.

"காணாமலே உங்கள் மேல் காதல் கொண்டு விட்டேன்..."

"ஈஸிட்... ?"

"ஆமாம் மீரா... அனிதா உங்களைப் பற்றித்தான் எப்போது பார்த்தாலும் வீட்டில் பேசிக் கொண்டிருப்பாள்... அதைக் கேட்டுக் கேட்டு உங்கள் மேல் எனக்குக் காதல் வந்து விட்டது..."

"என்னைப்பற்றி அனிதா அவ்வளவு புகழ்ந்தா பேசினாள் ?"

"ஊஹீம், இகழ்ந்து பேசினாள்... அவளுக்கு உங்கள் மேல் அவ்வளவு பொறாமை..."

"அதைக் கேட்டுமா உங்களுக்கு என்மேல் காதல் வந்தது ?"

"வராமல் எப்படி இருக்கும்... அனிதா உங்களை திட்டிக் கொண்டே இருப்பாள்... உங்களுக்கு பணத்திமிர்... கோடிஸ்வரி என்ற மண்டைக் கனம்... அப்படி... இப்படியென்று..."

"ஸோ... நான் பணக்காரி என்பதால் உங்களுக்கு என்மேல் காதல் வந்து விட்டது..."

"யெஸ்... உங்களைப் போன்ற பெண் எதிர்பார்க்கும் அத்தனை தகுதிகளும் எனக்கு இருக்கின்றபோது நான் எப்படி உங்களைக் காதலிக்காமல் இருக்க முடியும் ?"

"இது புது பாயிண்டாக இருக்கிறதே..."

"ஆமாம் மீரா... நான் எம்.பி.ஏ படித்தவன்... உங்களது அப்பாவின் கம்பெனியை தாராளமாய் என் பொறுப்பில் விட்டுவிடலாம் பார்க்க மிகவும் அழகானவன்... உங்களுக்கு

ஏற்ற கணவனாக பார்ட்டிகளில் கலந்து கொண்டா
உங்களுக்கும் பெருமையாக இருக்கும்..."

'ஐயோ...' என்றிருந்தது மீராவிற்கு,

'இவன் எங்கிருந்து முளைத்தான்...!'

கோபத்துடன் அவனை முறைத்தவாறு காரில் ஏறி வந்
விட்டாள் மீரா... மறுநாள் கல்லூரியில் அனிதாவை ஒரு பி
பிடித்து விட நினைத்து அவளிடம் போய் பேசினாள்.

"அனிதா... ஒரு நிமிடம் நில் ... உன்னிடம் பேச வேண்டும்..."

"என்னிடம் பேசக்கூடமாட்டாயே... இன்று என்ன புதிதா
அக்கறை காட்டுகிறாய்... என் அண்ணனின் அழகில் மயங்
விட்டாயா? நான் அவனிடம் சொன்னது சரிதான்..."

"நீ உன் அண்ணனிடம் என்ன சொன்னாய்?"

"ஓர் முறை நீ நேரில் பார்த்துப் பேசு... மீரா உன் பின்னா
நாய்குட்டி போல் சுற்றி வருவாள் என்று சொன்னேன்..."

"பல்லைக் கழட்டி விடுவேன். ஒழுங்காய் பேசு, உ
அண்ணன் பெரிய மன்மதன்... நான் அவன் அழகில் மயங்கி
அவன் பின்னால் சுற்றுவேன்... எப்பேர்பட்ட கன
காண்கிறீர்கள்... நீங்கள் இரண்டு பேரும்"

"இதோ பார் மீரா... நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலு
என் அண்ணன் மன்மதன்தான். அவன் அழகை நீ
பார்த்திருப்பாயே..."

"ஆண்களுக்கு அழகு தரும் விசயங்களே வேறு... அதை
பற்றி உன்னைப் போன்ற ஆள்களுக்கு எங்கே தெரிய
போகிறது..."

"இப்போது நீ என்னதான் சொல்ல வருகிறாய்?"



சொல்லிவை, என் அப்பாவிடம் மட்டும் நான் இந்த விசயத்தை சொன்னேன் என்று வை... அவர் இதை டீல் பண்ணுகிற விதமே வேறு மாதிரியாக இருக்கும் மைன்ட் இட்..."

அனிதாவின் முகம் மாறிப் போனது... அவள் என்ன சொன்னாளோ... அடுத்து கொஞ்ச நாள்கள் தினேஷ் மீராவின் கண்களில் தென்படவில்லை. மீரா நிம்மதியாய் தானுண்டு... படிப்புண்டு என்று இருந்தபோது... ஓர் நாள் மீரா இதே கன்னிமாரா லைப்ரரிக்கு வந்திருந்தபோது அவள் எதிரே வந்தான்.

"ஹாய் மீரா... லைப்ரரிக்கு வந்தீர்களா?"

"இல்லை... மீன் மார்க்கெட்டிற்கு வந்தேன்..."

"ஜோக்கடிக்கிறீர்கள்... ஹா...ஹா..."

"இவ்வளவு பலமாய் சிரிக்கும் அளவிற்கு நான் ஜோக்கடிக்கவில்லை"

"என்ன மீரா... நான் எவ்வளவு நாகரிகமாய் உங்களிடம் என் காதலைச் சொன்னேன். நீங்கள் அனிதாவை மிரட்டியிருக்கிறீர்களே"

"ஆமாம்... நான் மிரட்டினால் அடங்கி விடுகிற குடும்பமா... உங்கள் குடும்பம்?"

"பயம் என்றால் என்னவென்று தெரியாத பரம்பரை எங்கள் பரம்பரை மீரா..."

"அப்படியா... செக் பண்ணிவிடலாமா?"

"எப்படி...?"

"நீங்கள் என்னை வழி மறித்து தகராறு பண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று என் அப்பாவிற்கு ஒரு போன் போட்டால் போதும் உங்களது வீரப் பரம்பரையின் லட்சணம் தெரிந்து விடும்..."

"ஹி...ஹி... என்ன மீரா நீங்கள் இப்போதும்
ஜோக்கடிக்கிறீர்கள்..."

அவன் அவசரமாய் அகன்று விட மீரா கொதிப்புடன் வந்து
விட்டாள். அடுத்த சில நாட்களில் அவள் ஸ்பென்ஸர்
பிளாசாவிற்கு ஷாப்பிங் போயிருந்தபோது அவன் தற்செயலாய்
வருவது போல் அவள் எதிரே வந்து நின்றான்.

"ஹாய் மீரா... உங்களை இங்கே பார்ப்பேன் என்று
எதிர்பார்க்கவே இல்லை..."

"பொய் சொல்லாதீர்கள்... என் வீட்டு வாசலில் இருந்
என் காரை பைக்கில் நீங்கள் பாலோ பண்ணிவந்ததை நா
பார்த்து விட்டேன."

"எனக்கு முன்னால் காரில் வந்தது நீங்களா...?"

"அது உங்களுக்குத் தெரியாதா? எனக்கு காது குத்
இவ்வளவு பெரிய ஸ்டட் போட்டிருக்கிறேன்... உங்க
பொய்களையெல்லாம் வேறு யாரிடமாவது அவிழ்த்
விடுங்கள்..."

"கோபத்தில் கூட உங்கள் முகம் அழகாக இருக்கிற
மீரா..."

"இது ஓல்டு டயலாக் மிஸ்டர் தினேஷ்..."

'என்ன சொன்னாலும் கண்டுபிடித்து விடுகிறாளே
வழிக்கு வரவே மாட்டேன் என்கிறாளே... இவளை எப்ப
யாவது படிய வைத்து விட்டால் கங்கு கரையில்லா
பணத்திற்கு அதிபதி ஆகிவிடலாம் என்று பார்த்தால் மசிய
மாட்டேன் என்கிறாளே...' தினேஷ் மனதிற்குள் பொறுமி
கொண்டிருக்கும் போதே மீரா நகன்று விட்டாள்.

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்த
போல் தினேஷ் முயற்சியை தொடர்ந்தான்... புத்தகக் க
காட்சியில் மீரா புத்தகங்களை வாங்கிக் கொண்டிருந்தபே



அவனும் அருகே வந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். மீரா அவனை அறிமுகமில்லாத ஒரு பார்வை பார்த்து விட்டு பணத்தை கொடுத்துக் கொண்டிருந்தாள்.

'எவ்வளவு திமிராய் பார்க்கிறாள்... அனிதா சொல்வது போல் இவள் மகா அகங்காரம் பிடித்தவள்தான்... அதில் சந்தேகமேயில்லை... இவள் மட்டும் பணக்கார அப்பனுக்கு ஒரே வாரிசாக இருந்து தொலைத்திருக்காவிட்டால் இவள் பின்னால் நான் அலைந்திருக்கவே மாட்டேனே...'

"மீரா... நீங்களா..." என்றான்.

"நானேதான்... என்ன இப்ப..."

"புத்தகம் வாங்க வந்தீர்களா?"

"இல்லை... காய்கறி வாங்க வந்தேன்..."

"என்ன சொன்னாலும் ஜோக்கடிக்கிறீர்கள்"

"ஜோக்கரிடம் வேறு என்ன சொல்வது?"

தினேஷின் கர்வத்தில் இடிவிழுந்து விட்டது... அவனைப் போய் 'ஜோக்கர்' என்று சொல்லிவிட்டாளே... அவனது அழகைக் கண்டு மயங்கிப்போய் விடுவாள் என்று நினைத்தால்... அவளோ மகா மட்டமாய் அவனை விமர்சிக்கிறாளே...

அவன் மீராவின் பின்னாலேயே தொடர்ந்து வந்தான் கண்காட்சியின் வாசலுக்கு வந்தபோது

"மீரா... நில்லுங்கள்..." என்றான்.

"எதற்கு நிற்கச் சொல்கிறீர்கள்..."

"எனக்கொரு முடிவைச் சொல்லுங்கள்..."

"அன்றே என் முடிவை சொல்லி விட்டேன்... உங்களைப் பார்த்தால் எனக்கு காதல் வரவில்லை தினேஷ். வீணாய் என்பின்னே அலைந்து டயத்தை வேஸ்ட் பண்ணாதீர்கள் எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை..."

"இதைவிட ஒரு பெண் தன் மறுப்பை எப்படிக் கூ
முடியும்? அப்படி முகத்தில் அடித்தாற்போல் கூறி விட்
பின்னும் இன்று எதிரே வந்து நின்று கொண்டு பேசுகிறவனை
என்னவென்று எடுத்துக் கொள்வது?"

பலமுறை தன் மனதை எடுத்துக் கூறியும் விடமாட்டே
னென்று முற்றுகை இடுபவனின் கண்களில் படாம
எங்காவது போய் விடுவதும் ஒருவகையில் நல்லதுதான்
தகப்பனாரின் மனநிம்மதிக்காக பூஞ்சோலைக்கு போ
சரியென்று சொன்னவள்... இப்போது தன் மன நிம்மதிக்கு
அங்கே போய் விடுவதே சரியென்று முடிவெடுத்தாள்.

'அப்பா கூட இல்லாத நாள்களில் இவனைப் போன்
அயோக்கியன்கள் பார்வையில் படாமல் பாதுகாப்பா
குடும்பச் சூழலில் இருப்பதுதான் சரி'

"என்ன மீரா யோசிக்கிறீர்கள்?"

"எவ்வளவு சொன்னாலும் உறைக்காத உங்கள் புத்திக்
உறைக்கிற மாதிரி என்ன பதிலைச் சொல்வது என்
யோசித்துக் கொண்டிருக்கிறேன்"

"காதலிப்பது தவறா மீரா?"

"காதலிக்காதவளை... காதலிப்பது தவறு... அதுவ
உங்களிடம் இருப்பது காதலென்று சொல்லிக் காதலை
கேவலப்படுத்தாதீர்கள்..."

மீரா அவனிடம் தாட்சண்யமே காட்டாமல் பதிலை
சொல்லி விட்டுக் காரில் ஏறி காரைக் கிளப்பினாள்...

தன் கண்களில் இருந்து கார் மறையும் வரை பார்த்து
கொண்டு இருந்த தினேஷ் கோபத்துடன் தரையை
உதைத்தான்.

அவனிடமிருந்து விலகி வந்து விட்ட நிம்மதியுடன் கா
ஓட்டிக் கொண்டிருந்த மீரா அறிய மாட்டாள்... மனம் முழுவது



வெறுப்புடன் ஒருவன் பூஞ்சோலையில் காத்துக் கொண்டிருப்பதை... தினேஷின் துன்புறுத்தலைப் பற்றி அவளுடைய தந்தையிடம் ஆலோசித்து இருந்தால் அவர் அதற்கு ஒரு முடிவு கட்டியிருப்பார். ஆனால் இரக்கமனமுள்ள மீரா... அதைச் செய்யாமல் விட்டுவிட்டாள். அதனால் அவள் அறியாத ஓர் பழி அவள் மேல் விழுந்தது... ஒரு குற்றமும் செய்யாத மீரா... குற்றவாளி போல் ரகுநந்தனிடம் சித்தரிக்கப்பட்டிருந்தாள்... தினேஷ் தெரியாமல் செய்தாலும் மிகப்பெரிய இடைஞ்சலையும்... துன்பத்தையும் மீராவிற்கு தந்திருந்தான்.

## 7

மீராவுக்கு ரகுநந்தன் யாரென்று தெரியாது... ரகுநந்தனிற்கோ மீரா தன் தந்தையின் நண்பர் மகளென்று தெரியாது. அவன் தன் டிபார்மென்டல் ஸ்டோருக்கு சில பொருள்கள் வாங்குவதற்காக சென்னை சென்றிருந்தான். கிளம்பும் போது சோமசுந்தரம் தன் நண்பனைப் பற்றிக் கூறத்தான் செய்தார்.

"ரகு..நீ ஏன் ஹோட்டலில் போய் தங்க வேண்டும் என் நண்பன் வையாபுரி வீட்டில் போய் தங்கிக் கொள்ளலாமே..."

"அவர் உங்களுக்கு நண்பர்... எனக்கு இல்லை... அடுத்தவர் வீட்டில் தங்குவது எனக்கு தோதுப்படாது"

பட்டுக் கத்தரித்தாற் போல் பதில் சொல்லி விட்டான் ரகுநந்தன். சென்னையில் ஓர் ஹோட்டலில் ரூம் போட்டுத் தங்கி விட்டு, வந்த வேலைகளை முடித்தவுடன் அவனுடைய நண்பன் தினேஷிற்கு போன் போட்டான். தினேஷும்...

அவனும் ஒன்றாக எம்பிஏ படித்தவர்கள்.
"ரகு... எங்கேயிருக்கிறாய்... நான் உடனே வந்
பார்க்கிறேன்..."
தினேஷ் பறந்து கொண்டு ரகுநந்தனைப் பார்க்க ஓடிவந்தத
நண்பன் மேலிருந்த அன்பினால் அல்ல... ரகுநந்தனின் பின்
புலம் தெரிந்தவன் தினேஷ்... அனிதாவை அவன் தலையில்
கட்டிவிடும் நோக்கம் அவனுக்கு இருந்தது. சமயம் கிடைக்கு
போதெல்லாம் தன் தங்கையைப் பற்றி அளந்து விட்டு
கொண்டிருப்பான்
"ரகு... கிளம்பு... கிளம்பு..."
"எங்கேடா?"
"என் வீட்டிற்கு... நீ டின்னர் சாப்பிட வருவாய் என்று எ
வீட்டில் சொல்லி விட்டேன்... அவர்கள் உனக்கு விருந்
சமைத்துக் கொண்டிருக்கிறார்கள்..."
"நான் நைட்டே கிளம்ப வேண்டும் தினேஷ்..."
"டின்னரை முடித்து விட்டுக் கிளம்பு..."
"நீ சொன்னால் கேட்கமாட்டாய்..."
தினேஷுடன் அவன் காரில் ஏறிக் கொண்டா
ரகுநந்தன். இருவரும் பேசிக் கொண்டே சென்றார்கள்
தினேஷ் ஸ்டெல்லா மேரிஸ் காலேஜ் வாசலில் கா
நிறுத்தினான்.
"எதுக்குடா லேடிஸ் காலேஜ் வாசலில் வந்து வண்டி
நிறுத்தியிருக்கிறாய்?"
"நாம் போகும் போது அனிதாவை அழைத்துக் கொண்
போய்விடலாம்..."
தினேஷ் என்னவோ தினமும் தங்கையை காலேஜில் விட்
விட்டு திரும்பவும் அழைத்துப் போகும் பொறுப்புள்
அண்ணன் போல் வேடம் போட்டுக் கொண்டு கூறினான்.



"இதோபார் அனிதா... ரகு கிராமத்தில் இருக்கும் கோடிஸ்வரன். இன்றைக்கு சென்னை வந்திருக்கிறான். நான் உன்னை காலேஜில் பிக் அப் பண்ண வருவது போல் அவனையும் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன். எப்படியாவது அவனை நீ கரெக்ட் பண்ணிக் கொள். அது உன் பியூச்சருக்கு நல்லது."

இப்பேர்ப்பட்ட அண்ணனுடன் பிறந்த தங்கை எப்படியிருப்பாள்?

"சொல்லி விட்டாயில்லையா? நான் பார்த்துக் கொள்கிறேன்..." என்றாள் அவள்.

அந்த அருமைத் தங்கையை அழைத்துப் போக அவர்கள் காத்திருக்கும் போதுதான் மீரா தன் தோழிகளிடம் பேசியபடி கல்லூரியில் இருந்து வெளியே வந்தாள்.

"அதோ... அந்த பிங்க் கலர் சுடிதாரில் போகிறாள் பார் ஒருத்தி..."

"அது யார் தினேஷ்? அது தான் உன் தங்கையா? பார்க்க வெகு அழகாய் இருக்கிறார்களே..." ரகுநந்தன் ரசனையாய் மீராவைப் பார்க்கவும், தினேஷ் பதறிப் போனான்.

'என்னடா இது... பிள்ளையார் பிடிக்கப் போனால் அஞ்சநேயர் வந்து நிற்கிறார்... இவனிடம் அவள்தான் என் காதலி என்று காட்டப் போனால்... இவன் அவளது அழகில் மயங்குகிறானே... இவனோ கோடிஸ்வரன்... பணம் பணத்தோடு சேரட்டும் என்று அவளை இவன் கணக்குப் பண்ணிவிட்டால்... இவன் கதியும்... அனிதாவின் கதியும் என்ன ஆவது? ஆளுக்கொரு பணக்கார இடத்தில் செட்டில் ஆவதுதானே அண்ணன்...தங்கை இருவரின் வாழ்க்கை லட்சியம்...!'

"கதையை மாற்றுகிறாயே ரகு... அவள் என் காதலி... என் தங்கையில்லை..." தினேஷ் அவசரமாய் கூறவும் சுவாரஸ்யமாய் மீராவைப் பார்த்தான் ரகுநந்தன்.

"வாவ்... சூப்பர் பிகர்டா உன் ஆள்... கூப்பிட்டு என்னிடம் இன்ட்ரடியூஸ் பண்ணி வைக்கமாட்டாயா ?"

"இல்லையில்லை... அதெல்லாம் வேண்டாம்..."

"ஏன்... நான் வேண்டுமானால் கூப்பிடட்டுமா ?"

ரகுநந்தன் காரை விட்டு இறங்கப் போக தினேஷ் பதறிப் போனான். இவன் போய் கூப்பிட்டுத் தொலைத்தால்... அவள் வந்து வாங்கு வாங்கென்று வாங்கி விடுவாளே... தினேஷின் குட்டு வெடித்து விடுமே... அதன்பின் ரகுநந்தன் தினேஷை மதிப்பானா...?

"ரொம்ப நேரமாய் காத்துக் கொண்டிருக்கிறீர்களா அண்ணா ?" மரியாதையுடன் கேட்டபடி அடக்க ஒடுக்கமாய் மஞ்சள் கலர் சுடிதாரில் வந்து நின்றாள் அனிதா.

'இவள் காலையில் ஜீன்ஸும்... டிசர்ட்டும் தானே போட்டுக் கொண்டு வந்தாள் ? எப்போது சல்வாருக்கு மாறினாள் ?'

தினேஷ் குழம்பிப் போனான். அவனுக்கு என்ன தெரியும் ? அவனது போன் வந்தவுடன் அவசரமாய் காலேஜை கட் அடித்து விட்டு வீட்டிற்குப் போய் உடை மாற்றி... ஒரு மணி நேரமாய் ஒப்பனையும் பண்ணிக் கொண்டு... மீண்டும் காலேஜிற்கு வந்து பதவிசாய் அவள் கேள்வி கேட்பதை அறியாதவனாய் அவன் பேந்த பேந்த விழித்தான்.

"ஆமாம் அம்மா... ஏன் லேட் ?" அவன் பாசமலர் சிவாஜி போல் வினவ... அவள் நடிகையர் திலகம் சாவித்திரி போல் உருகிப் பதில் சொன்னாள்.

"காலேஜ் முடிந்தவுடன் லெக்சரர் ரூமிற்கு போய் அவங்களிடம் பாடத்தில் சந்தேகம் கேட்டு விட்டு வந்தேன் அண்ணா..."

சாதாரணமாய் இருவரும் வாடி... போடா... என்று தான் ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்வார்கள்,



இன்று இருவரின் பேச்சிலும் போலி மரியாதையும்... பண்பாடும் கொடி கட்டிப் பறப்பதை அறியாத ரகுநந்தனைப் பார்த்த அனிதா இமைகளை பட படவென்று அடித்துக் கொண்டாள்.

அறிமுகமில்லாத ஆணைப் பார்த்து விட்டு அச்சமும்... நாணமும் கொள்கிறாளாம். அவளது அலட்டலைக் கண்டு தினேஷே அதிசயப்பட்டுப் போனான்.

'தேவலையே... என் தங்கையென்பதை புரூவ் பண்ணுகிறாளே...'

"அண்ணா... இவர்... ?"

"பயப்படாதே அனிதா... இவன் என் பிரண்ட் ரகுநந்தன்... ரகு... இவள்தான் என் தங்கை அனிதா..."

"அப்படியா... ? " ரகுநந்தன் மரியாதையின் நிமித்தம் புன்முறுவல் செய்தான். அனிதாவோ கரம் குவித்தாள். அவனோ அதைக் கவனிக்காமல் மீராவையே கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா... உன் தங்கைக்கு உன் காதலியை தெரிந்திருக்குமே..."

"இரண்டு பேரும் கிளாஸ் மேட்ஸ்தான்..."

"நல்லதாகப் போயிற்று... உன் தங்கையிடம் உன் காதலியை கூப்பிட்டு வரச் சொல்லலாமா ?"

"காதலியா... யார் மீராவையா சொல்கிறீர்கள் ?" அனிதா பதறிப் போனாள்... அவள் கண்கள் தினேஷை சுட்டெரித்தன.

'என்ன சொல்லித் தொலைத்தாய்... ?' அவள் விழிகள் வினவ தினேஷ் பார்வையால் 'என்னைக் காப்பாற்று' என்று இறைஞ்சினான்.

சமயோசிதப் புத்தி படைத்த அனிதா ரகுநந்தனைப் பார்த்து . "அவள் அண்ணாவின் முந்நாள் காதலி..." என்றாள்.

"எனக்குப் புரியவில்லையே..."

"போகும்போது விவரமாய் சொல்கிறேன்..."

அனிதா படக்கென்று காரில் ஏறிக் கொள்ள ரகுநந்தன் விடாமல் விவரம் கேட்டான்.

'ம்ம்... இவனை மடக்க இவ்வளவு நேரம் மெனக்கெட்டு மேக்கப் போட்டுக் கொண்டு வந்து நின்றால் இவன் எவளோ ஒருத்தியைப் பற்றி என்னிடமே விவரம் கேட்கிறானே...'

எரிச்சலுடன் கதை பிணைந்தாள் அனிதா.

"அவள் அண்ணனின் முந்நாள் காதலியென்று சொன்னது தப்பு. அண்ணன்தான் அவளின் முந்நாள் காதலர்."

"புரியவில்லையே..."

"அவள் பெரிய பணக்காரி... ஆடையை மாற்றுவது போ காதலர்களை மாற்றிக் கொண்டிருப்பாள்... அது புரியாம அண்ணன் அவளை உண்மையாய் காதலித்து விட் இப்போது அவஸ்தைப்படுகிறார். அவளுக்கு இவரைப் பற்றி நினைவே இல்லை... இவர்தான் அவளை இன்னமும் எ காதலி... என் காதலியென்று பினாத்திக் கொண்டிருக்கிறார்..

தினேஷ் பேச வழியில்லாமல் வாயை மூடிக் கொண்டிரு தான். அனிதா சொல்வது பொய்யென்று சொன்னால்... அவ சொன்ன பொய் வெளிப்பட்டு விடும். எனவே மௌன சாதித்தான். அதை அவனது மனவேதனை என்று தவறா புரிந்து கொண்ட ரகுநந்தன் ஆத்திரமடைந்தான்.

"நீ போய் எப்படிடா அவளின் காதல் வலையில் மாட்டினாய்?

"நானா போய் மாட்டினேன்...?"

தினேஷ் அலுத்துக் கொள்ள அனிதாவே பதில் சொன்னா

"அவள் ஒரு முறை என்னுடைய பர்த்டே பார்ட்டிக் வந்திருந்தாள்... உங்களுக்குத்தான்... அண்ணனும்... நானு நல்ல அழகு என்று தெரியுமே..."



சந்தடி சாக்கில் அவள் தன் புகழ்பாடி அவன் அவள் சொல்வது உண்மையா என்று பரிசோதிக்கக்கூட அவள் பக்கம் திரும்பிப் பார்க்காமல் யதார்த்தமாய் கூறினான்.

"தினேஷ் அழகுதான்... ஆனால் அந்தப் பெண் இன்னும் நல்ல அழகு..."

அனிதாவின் முகம் பயங்கரமாய் மாறிவிட்டது... இவன் இவளிடமே மீராவை அழகு என்று சொல்வதா?

"என்ன அழகு... எல்லாம் வெறும் ஒப்பனைதான். ஒப்பனையைக் கலைத்து விட்டால் ஒன்றும் இல்லை..."

ரகுநந்தன் இப்போது திரும்பி அனிதாவின் ஒப்பனையை கூர்ந்து பார்த்தான். அனிதா முகத்தை அமைதியாய் வைத்துக் கொண்டாள்.

"ம்ம்...அந்தப் பெண் உங்கள் பர்த்டே பார்ட்டிற்கு வந்தது...அப்புறம்?"

"என் அண்ணனின் அழகில் மயங்கி விட்டாள். உடனே அண்ணாவிடம் காதல் சொல்லி விட்டாளாம்..."

"கண்டதும் காதலா...?"

"அப்படித்தான் அவள் சொன்னாளாம்... அண்ணா உடனே ஏற்று கொள்ளவில்லை... அவள் அண்ணனின் பின்னாலேயே அலைந்து மயக்கி விட்டாள்... அண்ணன் அவளை உயிருக்குயிராய் காதலிக்கத் தொடங்கி விட்டார். கொஞ்ச நாள் போனதும்... அவளுக்கு வேறு ஒரு ஹேண்ட்சம்மான ஆணுடன் காதல் ஏற்பட்டு விட்டது... அண்ணனை கழட்டி விட்டு விட்டாள். இவர் அது தெரிந்ததும் தூக்க மாத்திரையை சாப்பிட்டு விட்டார்..." அனிதா விட்ட சரடை அப்படியே நம்பி விட்ட ரகுநந்தன்.

"அடடா... எப்போது இது நடந்தது?" என்று தினேஷை பார்த்துக் கேட்டான்.

எப்போது என்று அவன் சொல்வான்? அனிதாவே சொன்னாள்.

"இப்போதுதான்... இரண்டு மூன்று மாதங்கள் இருக்கும் அண்ணன் உயிர் பிழைத்தது அதிசயம். அவள் அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல்... நிம்மதியாய் இருக்கிறாள். இவர்தான் அவளைப் பார்க்கும் போதெல்லாம் என் காதலி என் காதலி என்று பிதற்றிக் கொண்டிருக்கிறார்."

ரகுநந்தனுக்கு மீராவின் மேல் அளவு கடந்த கோபம் ஏற்பட்டது. அவளை நினைக்கும் போதே வெறுப்பாக இருந்தது. இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? என்றிருந்தது அவனுக்கு.

பாவம் மீரா... தானுண்டு... தன்வேலையுண்டு என்று இருந்த சாதுப்பெண் அவள்... அவளைப் பெண்ணல்ல... பேய் என்று நினைக்க வைத்து விட்டார்கள் தினேஷூம்... அனிதாவும்... மீரா என்ற பெயரைக் கேட்டாலே ரகுநந்தனுக்கு அருவெறுப்பு ஏற்பட்டு விட்டது.

## 8

"எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாயா மீரா..." மீராவின் பெட்டிகளை காரில் டிரைவர் அடுக்கி முடித்ததும் வையாபுரி மகளைப் பார்த்து வினவினார்.

"ஆறு மாதங்களுக்குத் தேவையானதை அடுக்கி வைத்து விட்டேன் அப்பா... வேறு பெட்டி இல்லை..." என்றாள் மீரா.

வையாபுரி வேலையாள்களிடம் பேச வேண்டியதைப் பேசி விட்டுக்காரில் ஏறிக் கொண்டார். மீராவும் அருகில் அமர்ந்தாள் கார் கிளம்பியது.



"செக்யூரிடி கேட்டிருக்கிறீர்கள் போல..."

"யெஸ் மீரா... போலிஸில் செக்யூரிடி கேட்டிருக்கிறேன். பிரைவேட் செக்யூரிடியும் ஏற்பாடு பண்ணி விட்டேன்..."

"நம் வீட்டில் வருசக்கணக்காய் வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள்... அவர்கள் பார்த்துக் கொள்ள மாட்டார்களா?"

"செக்யூரிட்டி ஏற்பாடு பண்ணியிருப்பது அவர்களது பாதுகாப்பையும் நினைவில் கொண்டுதான்..."

"அப்பா... உங்களிடம் என் கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் இருக்கிறது..."

மீரா சிரித்துக் கொண்டே காரில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். இரவு நெருங்கும் நேரத்தில் அவர்களது கார் குற்றாலத்தை தொட்டது. சாலையின் இருபுறமும் தெரிந்த பசுமையை ரசித்துக் கொண்டே வந்த மீரா,

"இந்தப் பக்கம் இவ்வளவு அழகாய் இருக்குமென்று நீங்கள் சொல்லவே இல்லையே அப்பா..." என்றாள்.

"குற்றால மலைச்சாரலில் அமைந்த கிராமம் அழகாகத்தானே இருக்கும் மீரா... இந்தப் பக்கம் சிற்றருவிகள் நிறைய உண்டு... இன்னும் பகல் நேரத்தில் நீ பார்த்திருக்க வேண்டும்... ஊரின் இரண்டு பக்கமும் ஆறு ஓடும். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத இயற்கை காட்சிகள் இங்கே நிறைய இருக்கின்றன. நாளைக்கு காலையில் நான் அழைத்துக் கொண்டு போய் காட்டுகிறேன்..." என்றார் வையாபுரி.

இப்போது மையிருட்டு கவிழ்ந்து விட்டது... சோமசுந்தரத்தின் வீட்டுக் காம்புவுண்டிற்குள் கார் ஓடிச் சென்று நின்றது. சோமசுந்தரம் வாசலுக்கு வந்து வரவேற்றார்.

"வாடா... வையாபுரி வா...வா..." நண்பனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"ஏம்மா... இன்னும் காரை விட்டு இறங்காமல் உள்ளேயே

உட்கார்ந்திருக்கிற? இறங்கி வா... சுந்தரி...சுந்தரி... இங்கே வா... நம்ம மீரா வந்திருக்கு பாரு...” என்று உள்நோக்கி குரல் கொடுத்தார்.

சுந்தராம்பாள் அவசரமாய் வாசலுக்கு வந்தாள். மீராவை கைபிடித்து அழைத்து அணைத்துக் கொண்டாள்.

“பெண் வளர்த்தி... பீர்க்கங்காய் வளர்த்தி என்பார்கள்... என்னமாய் வளர்ந்துட்டம்மா... உன்னை சின்ன வயசில் நான் பார்த்தது... வாம்மா... உள்ளே வா... நீங்களும் வாங்க...”, மீராவை கைபிடித்து அழைத்துக் கொண்டு வையாபுரியிடமும் மரியாதை நிமித்தம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றாள் சுந்தராம்பாள்.

“எலே... வீரய்யா... நீயும் சின்னப்பனும் இந்தப் பெட்டிகளை வீட்டுக்குள் எடுத்துக்கிட்டு வாங்க...” என்று வேலையாள்களுக்கு உத்தரவிட்ட சோமசுந்தரம்.

“ஏண்டா... சாயங்காலமே வந்து விடுவாய்ன்னு நான் காத்துக் கிடக்கிறேன்... நீ இருட்டினப்புறம் ஆடி அசைஞ்சு வந்து சேருகிறாயே... வயதுப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வருகிறவன் இருட்டுவதற்கு முன் காலகாலத்தில் வீடு வந்து சேரவேண்டாமா?” என்று வையாபுரியை கடிந்து கொண்டார்.

அவரது அக்கரை மனதிற்கு இதத்தைத் தருவதை உணர்ந்தார் வையாபுரி. அவர் பெற்ற மகளை காலாகாலத்தில் கொண்டு வந்து சேர்க்கவில்லையென்று அவரையே கடிந்து கொள்ளும் மனிதர்கள் இருக்கும் வீடு இது. இங்கு அவர் மகள் பாதுகாப்பாய் இருப்பாள். நிம்மதியுடன் நண்பனுக்கு பதில் சொன்னார் வையாபுரி.

“நானா ஆடி அசைந்து வந்தேன்... கார் அப்படி வந்து சேர்ந்திருக்கிறது...”

“வெளிநாட்டுக்கார் என்றாயே...”



“வெளிநாட்டுக் கார் என்றாலும்... உள் நாட்டுக் கார் என்றாலும் உன் ஊரின் அழகைப் பார்த்தால் மயங்கி வேகம் குறைந்து விடுகிறதே...”

“பட்டணத்து பகட்டுப் பேச்சை என்னிடமே காட்டுகிறாயா? நான் குற்றாலத்துக்காரன்டா... இயற்கையோடு இணைந்து வாழ்கிறவன்... உன் பேச்சிற்கு எல்லாம் மயங்க மாட்டேன்...”

“அதுதான் என் தங்கை சுந்தரியிடம் மயங்கிப் போய் விட்டாயே... அப்புறம் எப்படி மற்றவர்களைப் பார்த்து மயங்குவாய்?”

இருவரும் சிறுவர்கள் போல் ஒருவர் தோள்மேல் ஒருவர் கைபோட்டுக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தனர்... அதற்குள் வீட்டுக்குள் மீராவை அழைத்துக் கொண்டு சென்று விட்டாள் சுந்தராம்பாள். உள்ளே நுழைந்தவர்களைக் கண்டதும் சுபாங்கிணிக்கு சிரிப்பு வந்து விட்டது. வாய் பொத்திச் சிரித்தாள் அவள்.

“உஷ்... பெரியவர்களைப் பார்த்து என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு...” மகளைக் கண்டித்தார் சுந்தராம்பாள்.

“அம்மா... அப்பா அவருடைய பள்ளிக்கூட நாள்களுக்கு போய் விட்டார் போலத் தோன்றுகிறது. பாருங்களேன்... மாமாவின் தோள் மேல் கைபோட்டுக் கொண்டு வருவதை...” மீண்டும் அடக்க மாட்டாமல் சிரித்தாள் அவள்

அவர்கள் இருவரையும் பார்த்த சுந்தராம்பாளுக்கும் சிரிப்பு வந்தது... ஆனால் மாமனார்... மாமியார் முன்னிலையில் சிரிக்கக் கூடாதென்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

“ஏய்... வாலு... இவன் என் பள்ளிக்கூட காலத்து சிநேகிதன். இவனைப் பார்த்தால் நான் இப்படித்தான் இருப்பேன்.” என்றார் சோமசுந்தரம் உற்சாகமாய்.

“வாப்பா... வையாபுரி சௌக்கியமா...?” ராமசாமி நலம் விசாரித்தார்.

"சௌக்கியம்தான் ஐயா... உங்களுக்கு உடம்பு நன்றா
இருக்கிறதா ?" பதிலுக்கு நலம் விசாரித்தார் வையாபுரி.

"அவருக்கென்ன குறைச்சல்... காலையில் தோட்டத்து
பக்கம் கிளம்பினால் சாயங்காலம் தான் வந்து சேருகிறா
நடந்து... நடந்து குற்றாலக் காற்றில் குளித்து முடித்
வீட்டுக்கு வந்தால் நோய் நொடி கிட்ட அண்டுமா?
ஆவுடையம்மாள் சிரித்தாள்.

"நல்லாச் சொன்னீர்கள் அம்மா... நீங்கள் சொல்வ
நூற்றில் ஒரு வார்த்தை இயற்கைக்கு மிஞ்சின வைத்தி
இல்லையே..." ஆவுடையம்மாளின் வார்த்தைக
ஆமோதித்தார் வையாபுரி.

"இதுதான் உன் மகளாப்பா..." ஆவுடையம்மாள் கண்ண
யை சரி செய்தவாறு எதிரே நின்ற இளம் பெண்ணை
இறங்கப் பார்த்தார்.

கிராமத்துக்கு வருவதாக இருந்ததால் சேலை உடுத்
வந்திருந்தாள் மீரா. சந்தனத்தை அரைத்துப் பூசியது போ
நிறத்துடன் ஒல்லியாய் உயரமாய் நின்றிருந்த பெண்ணி
முகத்தில் தெரிந்த அமைதியும் அடக்கமும்தான் ஆவுடையம்
ளின் கண்களில் முதலில் பட்டது. அதற்குள் மீரா பெரிய
களின் கால்களில் பணிந்தாள்.

"அடடே... சென்னையில் பிறந்து வளர்ந்த பெண் மாதி
இல்லையே... பெரியவர்களிடம் இவ்வளவு மரியாதைய
சும்மா சொல்லக்கூடாது வையாபுரி... பெண்ணை நல்
முறையில் வளர்த்திருக்கிறாய்..." ராமசாமி ஆச்சர்யப்பட்
போனார்.

"தீர்க்காயுளாய்... தீர்க்க சுமங்கலியாய் இரம்மா
எழுந்திரு..." என்று மீராவை மனமார ஆசிர்வதித்தா
ஆவுடையம்மாள்.



நிமிர்ந்து எழுந்து நின்ற மீராவின் முழங்கால்களைத் தொடும் பின்னல் அடுத்து ஆவுடையம்மாளின் கவனத்தில் பட்டது.

"ஏம்மா... இது உன் சொந்த முடியா ?" சிரித்துக் கொண்டே ஆவுடையம்மாள் வினவிய பாணி மீராவுக்கு பிடித்திருந்தது.

'சின்னப் பெண்ணின் மனதை புண்படுத்தாமல் கேள்வி கேட்கிறார்கள்' என்று வியந்தபடி பதில் சொன்னாள் அவள்.

"ஆமாம் பாட்டி... அம்மாவுக்கு முடி நீளமாய் இருக்குமாம்... எனக்கும் அதே போல் நீளமாய் முடி வளர்ந்து விட்டது... அப்பாவிற்கு நான் நீண்ட பின்னலுடன் இருப்பதுதான் பிடிக்கும்... அதனால் நான் முடியை குறைத்துக் கொள்ளவில்லை..."

ஆவுடையம்மாளின் விழிகளில் தெரிந்த பாராட்டைப் பார்க்கும் போது வையாபுரிக்கு பெருமையாய் இருந்தது. மீராவைப் போன்ற பெற்றவர்களுக்கு பெருமை தேடித்தரும் பெண்ணைப் பெற்ற அவருக்கு என்ன குறை ?

மீராவின் அழகில் கவரப்பட்டிருந்தாள் சுபாங்கினி. அவளது ஒவ்வொரு அசைவிலும் தெரியும்... நளினமும்... நாகரிகமும் சுபாங்கினியை மீராவின் பக்கம் ஈர்த்தது.

"இங்கே பாரு சுந்தரி... மீராவைப் பார்த்ததும் நமது பெண் அடக்க ஒடுக்கமாய் உட்கார்ந்து இருக்கிறதை..." சோமசுந்தரம் மகளைக் கேலி பண்ணிச் சிரித்தார்.

"பாட்டி... அப்பா என்னைக் கேலி செய்கிறார்..." ஆவுடையம்மாளிடம் புகார் சொன்னாள் சுபாங்கினி.

"ஏண்டா... என் பேத்தியை கேலி செய்கிறாய்... நீ பாட்டிகிட்ட வாடி செல்லம்..." பேத்தியை அரவணைத்துக் கொண்டாள் ஆவுடையம்மாள்.

மீராவிற்கு அந்தக் குடும்பச் சூழ்நிலை மிகவும் பிடித்து விட்டது. தனிமையில் வளர்ந்தவளுக்கு... அந்த வீட்டின்

dsc00192.jpg (3072x2304x24b jpeg)



உறவினர்கள் ஒருவரிடம் ஒருவர் காட்டிக் கொள்ளு அன்யோன்யம் கலந்த பிரியம் ஆச்சர்யத்தைக் கொடுத்தது விழியகல அவர்கள் கொஞ்சிக் கொள்வதைப் பார்த்துக் கொண்டிருந்த மகளைப் பார்த்த வையபுரியின் கண்கள் பனித்தன.

இப்படி ஒரு குடும்பச் சூழலை அவளுக்கு அறிமுகப்படுத் விரும்பித்தானே இங்கே அவளை அவர் அழைத்து வந்தார்.

"ஏங்க... அவங்க எல்லோரையும் முகம் கழுவிட்டு சாப்பி வரச் சொல்லுங்க..." சுந்தராம்பாள் கணவரிடம் கூறினாள்.

"ஆமாண்டா... டிரைவரை முன்னறையில் தங்கி கொள்ளச் சொல்... நீ எங்கள் ரூமிற்கு பக்கத்து ரூமில் தங்கி கொள்... இரண்டு நாள்களாவது இருந்து விட்டு போவாயில்லையா?"

"இல்லைடா... காலையில் கிளம்பவேண்டும்..."

"அடித்துப் பல்லைப் பேர்த்து விடுவேன்... ஒழுங்கா இரண்டு நாள்கள் இங்கே தங்கிவிட்டுப் போ..."

சோமசுந்தரம் அதட்டுவதைக் கேட்ட மீரா

'என்ன ஓர் வன்முறையான அன்பு...' என்று நினைத்து கொண்டாள்.

"ஒகே...ஒகே... நீ சொல்வதற்காக நாளைக்கு ஒரு நா இருந்து விட்டுப் போகிறேன். பட் நாளைக்கு நைட் கிளம் விடுவேன்..."

"சரிதாண்டா... படவா... ஒரே ஒரு நாள் கால்சீ கொடுக்கிறாயாக்கும்... சுந்தரி... நம் மீராவை எந்த ரூமி தங்கச் சொல்லலாம்?"

சோமசுந்தரம் மனைவியிடம் 'நம் மீரா...' என்று குறிப்பிட் வினவ... அந்தக் குடும்பத்தில் தன்னையும் ஒருத்திய சேர்த்துக் கொண்டார்களே என்று நெகிழ்ந்து போனாள் மீ



"அப்பா... அப்பா... அவங்க என் ரூமில் என்னுடன் தங்கிக் கொள்ளட்டும் அப்பா..." சுபாங்கிணி தந்தையிடம் கெஞ்சினாள்.

"இதைப் பாருடா... இந்தச் சின்னக்குட்டி மீரா வந்தவுடன்... அவளிடம் ஒட்டுப்புல் போல ஒட்டிக் கொள்கிறாளே,... இவள் லேசில் யாரிடமும் ஒட்ட மாட்டாளே..." ஆவுடையம்மாள் தன் முகவாயில் கை வைத்து வியந்து போனாள்.

"மீராவுக்கு அது சௌகரியக் குறைவாய் இருக்கும் சுபா... உன் ரூமிற்கு பக்கத்து ரூமை அவளுக்காக நேற்றிலிருந்து உன் அம்மா ரெடி பண்ணி வைத்திருக்கிறாளாம்... அவள் அங்கே தங்கிக் கொள்ளட்டும்..." மனைவியிடம் பேசிவிட்டு சோமசுந்தரம் சுபாங்கினியின் கோரிக்கையை மறுத்துப் பேசினார்.

"வேண்டாம் மாமா... நான் சுபாவுடனே தங்கிக் கொள்கிறேன். எனக்கு இவளுடன் தங்குவதில் சந்தோசம்தான்... சௌகர்யக் குறைவு இல்லை... எனக்கு இவளை மிகவும் பிடித்திருக்கிறது...", என்று மீரா சொல்லவும் சுபாங்கினியின் முகம் மலர்ந்து விட்டது.

வையாபுரி மகளின் வார்த்தைகளில் மனம் நிறைந்தார். எங்கே போனாலும் அங்கே ஓர் அங்கம் ஆகிவிடுகிற மகளின் தன்மை உணர்ந்தவர் அவர்.

ஆனால் வீட்டின் பெரியவர்களுக்கு மீராவின் குணம் தெரியாதே... வீட்டின் கடைக்குட்டி செல்லப்பெண் சுபாங்கனி... வந்தவுடனே அவளது மனம் கோணாமல் அவளிடம் மீரா பாசம் காட்டிய விதத்தைக் கண்டு ராமசாமிக்கும்... ஆவுடையம்மாளுக்கும் மீராவை பிடித்து விட்டது.

"சின்னவர்கள் ஒன்று சேர்ந்து விட்டார்கள் சுந்தரி... இனி நம் பேச்சு இங்கே எடுபடாது... சுபா... மீராவைத்தான் வசியம்

பண்ணி விட்டாயே... உன் ரூமிற்கு கூட்டிக் கொண்டு போ
சோமசுந்தரம் கூறியதும் சுபாங்கினி மீராவின் கை
பிடித்துக் கொண்டாள்.

## 9

ரகுநந்தன் அப்போது வீட்டில்தான் இருந்தான்... கீழே
வந்து நிற்கவும்... பால்கனியில் வந்து எட்டிப் பார்த்தா
வையாபுரியையும் மீராவையும் பெற்றோர் பலத்த வரவேற்பு
உள்ளே அழைத்துப் போவதைப் பார்த்துக் கொண்டுதா
இருந்தான்... வீட்டின் உள்புறமாய் ஹாலை மாடிப்படிகளி
வளைவில் இருந்து பார்க்க முடியும். அங்கிருந்து ஹா
நடந்தவற்றை கண்காணித்துக் கொண்டிருந்தான்.

சென்னையில் கல்லூரி வாசலில் தூர வைத்
பார்த்தபோதே அவளது அழகைக் கண்டு அயர்ந்து விட்டவ
அவன். இன்று அதே மீரா நீண்ட பின்னலாட சேலை க
தேவதை போல் வீட்டுக்குள் வந்து பெரியவர்களின் கா
விழுந்து ஆசி வாங்கியபோது அவனுக்கு உடம்பெல்லா
யாரோ மிளகாயை அரைத்து அப்பிவிட்டாற்போல எரிந்த

'என்னமாய் நடிக்கிறாள்... முகத்தைப் பாரேன்... இ
அடக்கத்தின் வடிவாம்... அமைதியின் இருப்பிடமாம்...
குடியைக் கெடுக்க இங்கே வந்தாள்...'

ஏன் அவன் அவளை இந்த அளவுக்கு வெறுக்கிறா
என்பதை அவனது ஆழ்மனம் நன்கு அறியும். இதுவரை எந்
பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்காத அவனை ஒ
பார்வையிலேயே வசீகரித்தவள் அவள். தன் காதலி என்
சொன்ன தினேஷிடமே 'அவளை



வை...' என்று கேட்க வைத்த தேவதை அவள்.

ஆனால் அவள் நல்லவள் இல்லையாமே... அவளால் தினேஷ் ஏமாற்றப்பட்டானாமே... விஷம் குடித்து சாக இருந்தவனை காப்பாற்றினார்களாமே... இவ்வளவு மோசமானவளைப் போய் இந்த மனம் நினைத்துப் பார்த்ததே... இதுதான் அவள் மேல் அவன் கொண்டுள்ள துவேசத்தின் அடிப்படை.

"பொன்னம்மா... மீராவின் பெட்டிகளை சுபாங்கிணியின் ரூமில் கொண்டுபோய் வை..." சுந்தராம்பாள் கட்டளையிடுவது கேட்டது. அதைத் தொடர்ந்து சுபாங்கினியின் கலகலத்த சிரிப்பொலியுடன் கூடிய பேச்சுச் சத்தம் கேட்டது.

"சென்னையில் இருந்து யாரோ ஒரு பெண் வருவதாகச் சொன்னவுடன்... ஜீன்ஸ் போட்டுக்கிட்டு தலையை விரியப்போட்டு கூலிங் கிளாஸுடன் குதிரை மாதிரி ஒரு பெண் வருவாளென்று நினைத்தேன்... எனக்கு சுத்தமாகவே பிடிக்கவில்லை தெரியுமா? இப்போது பார்த்தால் நீங்கள் வந்திருக்கிறீர்கள்... ஐய்யோ... என்னமாய் அழகாய் இருக்கிறீர்கள்... அழகாய் சிரிக்கிறீர்கள்... அழகாய் பேசுகிறீர்கள்... நீங்கள் செய்வது எல்லாமே அழகாய் இருக்கிறது..."

"ஊஹீம்...? ஏன் நீயும் அழகாய்தானே இருக்கிறாய்? உன்னை விடவா நான் அழகு? இன்றுதான் பூத்த பூவைப் போல் எவ்வளவு உற்சாகமாய் இருக்கிறாய் தெரியுமா? எனக்கும் உன்னை மிகவும் பிடித்திருக்கிறது..."

"நிஜமாய்...?"

"நிஜமாய்...?"

இருவரும் மாடிப்படிகளில் பேசிக் கொண்டே ஏறி வர சட்டென்று ரகுநந்தன் அவனது அறைக்குள் போய் மறைந்து நின்று கொண்டான். வெளியே பேச்சொலி சமீபித்தது.

“ஆமாம்... குதிரை போல் ஒரு பெண் வருவாளென்று எதி
பார்த்து ஏமாந்து விட்டாயே... என்னைப் பார்த்தால் எலியை
போல் இருக்கிறதா?”

“நீங்களா எலி...? நீங்கள் ஏஞ்சல்...”

“ஏஞ்சல்...? யுமீன் தேவதை...? ... சரிதான்போ... நான்
சாதாரண மனுஷி சுபா... என்னை மண்ணிலிருந்
விண்ணிற்கு உயர்த்தாதே...” மீரா சிரித்தாள்.

‘எவ்வளவு இயல்பாய் பேசுகிறாள் பார்... ராட்சஸி
வந்தவுடனே என் சின்னஞ்சிறு தங்கையை வசியம் பண்ண
விட்டாளே... வசியம் பண்ண இவளுக்குச் சொல்லியா த
வேண்டும்? இவள்தான் கைதேர்ந்த வசியக்காரி ஆயிற்றே
தினேஷை வசியம் பண்ணினாள்... என்னை வசிய
பண்ணினாள்... இப்போது என் குடும்பத்தையே வசிய
பண்ண வந்திருக்கிறாள்...’

ரகுநந்தன் கோபத்துடன் முஷ்டியை மடக்கி
கொண்டான். அவன் உள்ளே நிற்பதை அறியாத சுபாங்கி
அவனது அறைக் கதவைக் காட்டி,

“இதுதான் எங்க அண்ணாவோட ரூம்... இப்ப அ
இல்லை. டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு போயிருக்கு...” என்
கூறினாள்.

“அப்படியா? உன் அண்ணன் நடத்தும் டிபார்ட்மெண்
ஸ்டோர் எங்கே இருக்கு?”

“குற்றாலத்தில்தான்... அங்கே கிடைக்காத சாமன்க
இல்லை தெரியுமா? அங்கேயே சின்ன ரெஸ்ட்டாரெண்ட் கூ
உண்டு... ஷாப்பிங் வந்தவர்கள் சாப்பிட்டு விட்டு வீட்டுக்
பார்சல் வாங்கிப் போவார்கள். அவ்வளவு டேஸ்ட்... அங்
ஸ்பெசல் அயிட்டம் என்ன தெரியுமா?”



“என்ன...?”

“மீன்... குற்றால அருவியில் ஓடும் ஆற்று நீரில் வலைபோட்டு உடனுக்குடன் பிடித்து வந்து பிரை பண்ணித் தருவார்கள்... நாம் ஒருநாள் அங்கே போகலாம்...”

“ஓ...கே...”

‘என் டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு வருவாயா? வந்து பார்... உன்னை காய்ச்சுகிற காய்ச்சலில் நீ இந்தப் பூஞ்சோலையை விட்டே ஓடிப் போவாய்’ ரகுநந்தன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

“அண்ணன் நிறையப் படிச்சிருக்கு...”

“என்ன படித்திருக்கிறார்...”

“எம்பிஏ... சென்னையில்தான் படித்தார்...”

சுபாங்கினி பெருமையாய் கூறிக் கொண்டிருக்க உள்ளே நின்றிருந்த ரகுநந்தனின் மனம் இதிலும் மீராவிடமே குற்றம் கண்டுபிடித்தது.

‘என்னைப் பற்றிய ஆராய்ச்சி இவளுக்கு எதற்கு? நான் என்ன படித்திருந்தால் இவளுக்கு என்ன? எங்கே படித்தால் இவளுக்கு என்ன? ... எப்படி என்னைப் பற்றித் தூண்டித் துருவி விசாரிக்கிறாள்’

பாவம் மீரா... சுபாங்கினி சொல்கிறாளே என்று ‘ஊம்’ போட்டுக் கேட்டு விட்டு... தானும் ஊடே பேசி வைத்தாள். அவளைப் போய் ஒரு ஆராய்ச்சியாளர் என்று பட்டம் கொடுத்துக் கொண்டிருந்தான் ரகுநந்தன்.

“அண்ணனுடைய ரூமிற்கு எதிர் ரூம்தான்... நம்ம ரூம்...”

கீழே அவள் வந்து இறங்கியவுடன் ‘நம்ம மீரா வந்திருக்கு’ என்று சோமசுந்தரம் சொல்கிறார். மாடியில் சுபாங்கிணி தனது அறையைக் காண்பித்து

‘நம்ம ரூம்...’ என்கிறாள்...

கிராமத்து மனிதர்கள்தான் எவ்வளவு இனியவர்கள் அவர்களது பாசத்தில் மூழ்கித் திளைத்த மீராவிற்கு இது பு அனுபவமாய் இருந்தது. இதுவரை அவள் மேல் பாசம் காட் வையாபுரியை விட்டால் வேறு ஆள் இல்லை. இங்கே எத்தனை மனிதர்கள் அவள் மேல் பாசம் காட்டுகிறார்கள்.

'தேங்க்யு அப்பா... இப்படியொரு குடும்பச் சூழலை எனக் அறிமுகப்படுத்தி வைத்ததற்கு லாட் ஆப் தேங்க்ஸ் டு யு மனதிற்குள் வையாபுரிக்கு நன்றி சொல்லிக் கொண்டா மீரா.

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே வாங்க..." சுபாங்கினி கூறவும் மீராவிற்கு சிரிப்பு வந்து விட்டது.

"என்ன சுபா... சினிமாவில் சொல்வதுபோ சொல்கிறாயே..." என்று கேட்டபடி அறைக்குள் நுழைந்தவ

"வாவ்..." என்று ஆச்சரியப்பட்டாள்,

"எவ்வளவு அழகாகவும் பெரிதாகவும் இந்த ரூ இருக்கிறது... முன்னால் ரிசப்ஷன் ரூம்... உள்ளே பெட்ரூம் சைடில் டிரஸ்ஸிங் ரூம் வித் அட்டாச் பாத்ரூம்... இதை நா எதிர் பார்க்கவே இல்லை சுபா... ரூமில் ஏஸி கூ இருக்கிறதே..."

"அதனால்தான் நான் என்னுடன் உங்களைத் தங்க சொன்னேன். இங்கே நம் வீட்டில் ஐந்து பெட்ரூம்களி மட்டும்தான் ஏஸியும்... பாத்ரூமில் ஹீட்டர் வசதியும் உண்டு அம்மா... அப்பாவின் ரூம்... தாத்தா பாட்டியின் ரூம்... மாடியி என் ரூம்... அண்ணனின் ரூம்... போக கீழே இருக்கி ரூம்களில் ஒன்றில் தான் ஏஸி வசதி உண்டு. அதில்தா உங்க அப்பா தங்கியிருக்கிறார். உங்கள் அப்பா போகும் வ நீங்கள் மாடியில் ஒரு ரூமில் இருக்க வேண்டுமாம். அவ போனவுடன் கீழே இருக்கிற அந்த ரூமிற்கு மாறிவி



வேண்டுமாம்... நானாவது உங்களை கீழே விடுவதாவது... இது மாடி ... நம்ம ராஜ்யம்... இளையவர்களின் கூடாரம்... அண்ணனும் நானும் இங்கே அடிக்கும் கொட்டமெல்லாம் கீழே இருக்கிற பெரிசுகளுக்கு தெரியாது."

சுபாங்கிணி பேசிக்கொண்டே பொன்னம்மா கொண்டு வந்து வைத்த பெட்டிகளை எண்ணினாள்.

"ஒன்னு...இரண்டு...ஆறு... ஆறு பெட்டிகள் போதுமா ?"

"ஆறு மாதங்கள் தானே இருக்கப் போகிறேன்... ஆறு மாதங்களுக்கு ஆறு பெட்டி... கணக்கு சரிதானே..."

"ஆறுமாதங்கள் முடிந்தவுடன் உங்கள் ஊருக்கு போய் விடுவீர்களா ?" சுபாங்கிணி ஏக்கத்துடன் கேட்கவும் மீராவிற்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

என்ன மாதிரியான பாசம் இது ? பிரியம் காட்ட மனிதர்கள் இல்லாமல் தவித்துக் கிடந்தவளுக்கு ஒரே நாளில் இவ்வளவு மனிதர்களின் நேசமும் பாசமும் கிடைத்து இருக்கிறதே...

அவள் சுபாங்கிணியைப் பார்த்து பிரியமுடன் சிரித்தாள்.

"ஊருக்குக் கிளம்புவதைப் பற்றி இப்போது எதற்கு பேச்சு சுபா ? நான் இப்போதுதானே வந்திருக்கிறேன்..."

"ஆமாம்... ஆமாம்... நீங்கள் முதலில் குளித்து விட்டு வருகிறீர்களா ? எங்களுக்கு இரவில் குளிக்கும் பழக்கம் உண்டு..."

"எனக்கும் அது உண்டு சுபா... ஆனால் பெட்டிகளைப் பிரித்து அடுக்க வேண்டுமே..."

"காலையில் அடுக்கிக் கொள்ளலாம்..."

"எல்லாவற்றையும் ஈஸியாய் சால்வ் பண்ணுகிறாயே... என்ன படித்துக் கொண்டிருக்கிறாய்... ?"

"பி.எஸ்ஸி பர்ஸ்ட் இயர்... குற்றாலத்தில் தான் படிக்கிறேன்..."

"எப்படி போய் வருவாய்?"
"காரில் தான் -- அண்ணனும் அப்பாவும் குற்றாலத்தில்
தானே குப்பை கொட்டுகிறார்கள்... இரண்டுபேருமே
ஆளுக்கு ஒரு கார் வைத்திருக்கிறார்கள்... எனக்கு யார்
காரில் ஏறிக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறதோ
அவர்களின் காரில் ஏறிக் கொள்வேன்... சாயங்காலமும்
இரண்டு பேரில் யாராவது ஒருவர் வந்து அழைத்துக்
கொண்டு வருவார்கள்... சும்மா சொல்லக்கூடாது... இரண்டு
பேருமே... நல்ல டிரைவர்கள்... இந்த மலைப் பாதையில்
லாவகமாய் கார் ஓட்டுவார்கள்."
"சுபா உண்மையிலேயே உனக்கு வாய் ஜாஸ்திதான்... உ
அண்ணனையும்... அப்பாவையும் டிரைவர் ஆக்கிவிட்டாயே
ஆமாம் பி.எஸ்ஸியில் என்ன மேஜர் எடுத்திருக்கிறாய்?"
"கம்யூட்டர் சயின்ஸ்...! மேலே எம்.ஸி.ஏ படித்து விட்டு எ
அப்பாவிற்கும்... அண்ணனுக்கும் போட்டியாய் ஒரு கம்பூட்
சென்டர் ஆரம்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளுட
இருக்கிறேன்... ஆனால் என் பாட்டியும் அம்மாவும் வேறு ஒ
குறிக்கோளுடன் இருக்கிறார்கள்"
"அப்படியா... அது என்ன குறிக்கோள்...?"
"வேறு என்ன...? ஏதாவது ஒரு மாப்பிள்ளையி
தலையில் என்னைக் கட்டி விட்டு இந்த வீட்டை விட்
துரத்திவிடும் குறிக்கோள்தான்..."
"உன்னைப் போன்ற பெண்ணைத் திருமணம் செய்
கொள்ள எந்த மாப்பிள்ளையும் கொடுத்து வைத்திருக்
வேண்டும்... அதை விட்டு விட்டு தலையில் கட்டி விடுவ
என்கிறாயே... என்ன சுபா நீ...?"
"சும்ம்ம்மா... விளையாட்டுக்குச் சொன்னேன். நீங்க
எப்போதுமே சேலைதான் கட்டுவீங்களா..."



"ஊஹீம்... எப்போதாவதுதான் கட்டுவேன்... மற்ற நேரம்... சுடிதாரும் சல்வாரும்தான்... ஆனால் இங்கே சேலைகளைத்தான் கொண்டு வந்திருக்கிறேன். மாடர்ன் டிரஸ் என்றால் நைட்டி மட்டும்தான்... அப்பா கிராமத்தில் சேலை கட்டுவதுதான் சரி வரும் என்றார்..."

"நல்ல வேலை செய்தீர்கள்... இது பழைய பஞ்சாங்கங்களாய் இருக்கிற வீடு... நானே இதுவரை ஒருமுறை கூட சுடிதார் போட்டுக் கொண்டதில்லை... எப்போதுமே பாவாடை தாவணிதான் இப்போது புதிதாய் விஷேச நாள்களில் சேலை கட்டச் சொல்கிறார்கள்... பார்க்க அம்மன் போலவே இருக்கிறேனாம்... எல்லா நகைகளையும் என்மேல் சாத்தினால் அம்மன் போல்தானே தெரிவேன்..." சுபாங்கிணி பேசப் பேச மீரா மனம் விட்டுச் சிரித்தாள்.

## 10

'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பார்கள்... ஆனால் வாய்விட்டு... மனம் விட்டுச் சிரிக்கவும் கொடுத்து வைத்திருக்கவேண்டும் அல்லவா? சிரிப்பு இயல்பாய் வர வேண்டும். செயற்கையாய் சிரிப்பது ஒரு சிரிப்பா?

மீரா இப்படி ஒரு சிரிப்பை இதுவரை சிரித்ததே இல்லை... கண்களில் நீர் வரும் அளவுக்குச் சிரித்தவள்.

"போதும் சுபாங்கிணி... இனிமேல் சிரித்தால் வயிறு வலித்து விடும்... நான் குளித்து விட்டால் நைட்டிக்கு மாறிவிடுவேன்... நீ சொல்வதைப் பார்த்தால்... நான் சாப்பிடப் போகும் போதும்... மற்ற நேரங்களிலும் இங்கே நைட்டி போட

முடியாது என்று தோன்றுகிறதே..."

"கரெக்ட்டாய் சொன்னீர்கள்... நானும் படுக்கப் போகும் முன் குளித்து விட்டு நைட்டிக்கு மாறித்தூங்கி விடுவேன்_ காலையில் சாதுப் பெண் போல் குளித்து முடித்து பாவாடை தாவணியில் கீழே போவேன். நீங்களும் அதையே பாலோ பண்ணி விடுங்களேன்..."

"காபி...?"

"அது ரூமிற்கே வந்து விடும்... பொன்னம்மா கொண்டு வரும்..."

"ஒகே... நான் முகம் கழுவி விட்டு வருகிறேன். சாப்பிடப் போகலாம்."

"ஒ.கே... சரியாய் சொல்லிவிட்டேனா..." மீரா மாதிரியே பேசிக் காட்டி விட்டுச் சிரித்தாள் சுபாங்கிணி.

இருவரும் சளசளத்தபடி சாப்பிட இறங்கிப் போனார்கள்.

"பாரேன்... இப்பத்தான் இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டதுகள்... என்னவோ பலகாலம் பழகினதுகள் போல் ஒன்னை ஒன்னு ஈஷிக்கிட்டு வருதுகளே...", ஆவுடையம்மாள் ஆதிசயித்தாள்.

"பாட்டி உங்களுக்கு பொறாமை..." சுபாங்கினி ஆவுடையம்மாளின் தோளைக் கட்டிக் கொண்டு கூறினாள்.

"எதுக்குடி பொறாமைப்படறேன்?"

"நான் இது நாள் வரை உங்க பிரண்டா இருந்தேனா... இப் அவங்களுக்கு பிரண்டா ஆகிட்டேனா... அதுதான் பொறாமை..."

"ஆமாண்டிக்கண்ணே... நீதானே என் தோழிப்பொண்ணு... நீ இன்னொருத்திக்கு தோழிப்பொண்ணா ஆகிவிட்டா இந்தப் பாட்டிக்கு பொறாமை வரத்தானே செய்யும்?" ஆவுடையம்மாள் பேத்தியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"பாட்டியிடம் செல்லம் கொஞ்சியது போதும்... மீ



உனக்காக நின்று கொண்டிருக்கிறாள் பார். இரண்டுபேரும் பாட்டி பக்கத்தில் உட்காருங்கள்." சுந்தராம்பாள் அதட்டினாள்.

"ஏண்டா வையாபுரி... நம்ம கூடப் படிச்சானே கோவிந்தன்... அவன் இப்போது எங்கே இருப்பான்னு நினைக்கிற...?" சோமசுந்தரம் வையாபுரியிடம் வினவியவாறு அங்கு வர,

"எல்லாம் கீழ் திருப்பதியில் தலைக்கு தங்க மரக்காலை அணை கொடுத்து தூங்கிக்கிட்டு இருப்பார்... நீங்கள் அண்ணனை சாப்பிட உட்கார வையுங்க..." என்று கணவனை அதட்டினாள் சுந்தராம்பாள்.

"உட்காந்துருடா... இல்லைன்னா இவள் சண்டைக்கு வந்து விடுவாள்..." என்றபடி வையாபுரியுடன் அமர்ந்த சோமசுந்தரம்...

"ஆமாம் இவள் ஏன் கீழ்திருப்பதியை இழுக்கிறாள்" என்று புரியாமல் வினவினார்.

"ஏண்டா சோமு... என் மருமகள் கோவிந்தராஜப் பெருமாளைச் சொல்கிறாள்டா... இதுகூடத் தெரியாமல் இருக்கிற பார்..." என்று மகனைக் கடிந்து கொண்டே ராமசாமி வந்து அமர்ந்தார்.

"ஏன் தாத்தா... அது என்ன தங்க மரக்காலை தலைக்கு வைத்து தூங்கும் கதை?" சுபாங்கிணி சுவாரஸ்யமாய் வினவினாள்.

"அது தெரியாதாம்மா... சீனிவாசப்பெருமாளுக்கும்... பத்மாவதி தாயாருக்கும் கல்யாணம் நிச்சயம் ஆகிடுச்சாம்... கல்யாண வேலைகளை சீனிவாசப் பெருமாளின் அண்ணன் கோவிந்தராஜப் பெருமாள் பார்த்துகிட்டாராம்... கல்யாணத்திற்கு ஆகும் செலவிற்கு தங்க மரக்காலில் பணத்தை அளந்து கொடுத்துக்கிட்டு இருந்தாராம்..."

"மரக்கால் என்றால் என்ன தாத்தா?" மீரா வினவினாள்.

"அது அளக்க உதவும் படி கணக்கும்மா... ஒரு லிட்டர் அளவில் அளவைப் பாத்திரம் இருப்பது போல் எட்டு லிட்டர் அளவைக் கொண்ட பாத்திர வடிவில் இருப்பது மரக்கால்..."

"மரக்காலைப் பற்றிய விளக்கத்தை விட்டு விட்டு தங்க மரக்காலைப் பற்றிய கதையைச் சொல்லுங்க தாத்தா...", சுபாங்கிணி சிணுங்கினாள்.

"கோவிந்தராஜப் பெருமாள் தங்க மரக்காலில் எடுக்க எடுக்க பணம் பெருகிக் கொண்டே இருந்ததாம்... அளந்து அளந்து ஓய்ந்து போன கோவிந்தராஜப் பெருமாள்... சீனிவாசப் பெருமாள்... பத்மாவதி தாயாரின் கல்யாணம் முடிந்தவுடன்... இனி ஓய்வெடுத்துக்கிறேன்னு வெங்கடாஜலபதி பெருமாள் கிட்டக் கேட்டாராம்... அதுக்கு அவர் சரிண்ணா... நீ படியளந்து தூங்குன்னு உத்தரவு கொடுத்துட்டாராம்... படியளந்து களைத்துப் போயிருந்த கோவிந்த ராஜப் பெருமாள்... அப்படியே தங்க மரக்காலை தலைக்கு வைத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்து விட்டாராம்..."

மீராவிற்கு இது புதிது... கதை மட்டுமல்ல... கதை பேசிக் கொண்டு கல்யாண வீட்டின் கலகலப்போடு சாப்பிடும் இந்த சூழலும் தான்...

"ஆமாம் ரகுநந்தன் எங்கே...? அவன் சாப்பிட வரவில்லையா?" சோமசுந்தரம் வினவியபோது மீரா இயல்பாக அதைக் கண்டு கொள்ளாமல் சுபாங்கிணியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

"இதோ வந்து விட்டானே..." என்று சுந்தராம்பாள் கூறிய போதும் மீரா தலைநிமிர்ந்து அவனைப் பார்க்கவில்லை,

சேரை இழுத்துப் போடும் சப்தத்திலிருந்து... அவன் தங்களுக்கு எதிரேதான் அமர்கிறான் என்பது தெரிந்தபோது



"இன்னும் ஒரு ஆப்பம் போட்டுக்கம்மா..." என்று சுந்தராம்பாள் உபசரித்தபோது

"வேண்டாம் அத்தை... இதுவே அதிகம்..." என்று வலது கையை நீட்டி தட்டை மறைத்தவாறு நிமிர்ந்தவளின் பார்வையில் அவளுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த ரகுநந்தன் தென்பட்டான்.

சாதாரணமாய் பார்த்தவள்... பிரமித்து விட்டாள்... இவன்... இவனது முகம்... அவளுக்குப் பரிச்சயமான முகம் அல்லவா... இந்த முகம் ... அவளது கனவில் வந்த ராஜகுமாரனின் முகம் அல்லவா...

'மீரா விழியகல அவனை நன்றாகப் பார்த்தாள்... அவளுக்கு சுற்றுப்புறம் மறைந்து போனது... சுற்றிலும் அமர்ந்திருந்த உறவினர்கள் நினைவில் இல்லை... அவள் கண்முன் அவனது ஆண்மை நிறைந்த கம்பீரமுகம் மட்டுமே தெரிந்தது.'

"என்ன மீரா... அப்படிப் பார்க்கிற? இவன்தான் என் மூத்த மகன் ரகுநந்தன்...", என்று சுந்தராம்பாள் கூறியதும் தண்ணுணர்வு வரப் பெற்ற மீரா வெட்கிப் போனாள்.

'முன்பின் அறிமுகமில்லாத ஒருவனைப் போய் இப்படி ஓர் பார்வை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோமே... அப்பா இதைப் பார்த்தால் என்ன நினைப்பார்...'

வையாபுரி மகளைக் கவனிக்கவில்லை. சிநேகிதனுடன் பேசிக் கொண்டிருந்தார். ஆவுடையம்மாள் சுபாங்கினியிடம் கொஞ்சிக் கொண்டிருக்க ராமசாமி சாப்பாட்டில் கவனமாக இருந்தார். சுந்தராம்பாள் மட்டும்தான் மீராவின் பார்வையை கவனித்தார்... அவளும் அதைத் தவறாய் எடுத்துக் கொள்ளாமல் மகனை அறிமுகப்படுத்தி வைத்தாள்... மகனிடமும் மீராவை அறிமுகம் செய்து வைத்தாள்.

"ரகு... இதுதான் நம்ம வையாபுரி அண்ணனின் மகள். மீரா..."

அவன் மரியாதைக்குக்கூட தலையை ஆட்டாமல் அவன் சாப்பாட்டில் கவனமாக இருந்தான்... அவன் ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்த மீரா ஏமாற்றத்துடன் தலை குனிந்து சாப்பிட ஆரம்பித்தாள். ஆனாலும் அவளால் அவளைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியவில்லை.

அவளது விழிகள் அடிக்கடி ஆர்வமாய் அவனை ஏறிட்டு நோக்கின. அவனின் அடங்க மறுத்த அலைபாயும் சிகையை... பிடிவாதத்தை உணர்த்தும் சீரான நாசியை...கடுகடுப்பான முகபாவத்தை ...அடர்ந்த மீசையை... ஆஜானுபாகுவான கம்பீரமான தோற்றத்தையே அள்ளிப் பருகுவதுபோல் மீண்டும் மீண்டும் பார்த்தாள் மீரா.

அவளது பார்வையை அவனும் உணர்ந்தே இருந்தான்... அவளது பார்வையின் தவிப்பை... வீச்சை... அவன் தவறாய் புரிந்து கொண்டு மனதிற்குள் அவளைத் திட்டிக் கொண்டிருந்தான்.

'அந்த அனிதா சொன்னது உண்மைதான் போல... அறிமுகமில்லாத என்னையே இவள் இந்தப் பார்வை பார்க்கிறாளே... தினேஷ் சென்னைவாசி... இவளது கிளாஸ்மேட் அனிதாவின் அண்ணன்... நன்கு அறிமுகமானவன். அவனை இவள் துரத்தி... துரத்திக் காதலித்தாள் என்பது பொய்யாய் இருக்காது... அவனை மரணத்தின் விளிம்பிற்கு துரத்தி விட்டு இவள் என்னிடம் வந்து இந்தப் பார்வை பார்க்கிறாளே... எவ்வளவு நெஞ்சழுத்தக்காரியாய் இவள் இருக்க வேண்டும்... எல்லோரையும் மயக்கி வைத்திருக்கும் மாயக்காரி... நல்லவள் போல் வேசம் போடும் மோசக்காரி...'

ஒரு கட்டத்தில் சட்டென மீராவின் பார்வையைச் சந்தித்த ரகுநந்தனின் பார்வை கனலைக் கக்கியது.



மீரா ஸ்தம்பித்து விட்டாள். முதன் முதலாய் அவளது மனதைக் கவர்ந்த ஆண்மகன் அவளை ஏன் இவ்வாறு நோக்குகிறான். அவள் பார்வையைத் தாழ்த்தி கொண்டாள்.

'ஏனிந்த வெறுப்பு...?' மீராவின் மனம் தவித்தது. அவனது புறக்கணிப்பை தாங்க இயலாமல் துடித்தது. அவள் விழியோரம் நீர் துளிர்த்தது.

"எம்மா... சட்னியில் காரம் அதிகமா?" ஆவுடையம்மாள் பரிவாய் வினவினாள்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை பாட்டி... காரில் வரும்போது கண்ணில் தூசி விழுந்து விட்டது..." சமாளித்துக் கொண்டு பதில் சொன்னாள் மீரா..

சாப்பிட்டு முடித்தவுடன் கை கழுவ எழுந்து செல்ல மனமின்றி எழுந்து சென்றாள் மீரா... கை கழுவும் இடத்திலிருந்து கண்ணாடியின் வழி அவனைப் பார்த்தபடி கை கழுவி முடித்தாள்.

அவனைப் பார்ப்பதில் இப்படி ஓர் சுகமா? இதைப் போன்ற இதமான உணர்வை இதற்கு முன் அனுபவித்திராதவள் அவள்... இப்போது அலைபோல் எழுந்த அந்த உணர்வில் திளைத்துப் போனாள்.

"போகலாமா?" சுபாங்கிணி வினவவும் அரைமனதுடன் "ம்ம்..." என்று தலையசைத்தாள் மீரா..

வையாபுரியைப் பார்த்து "குட்நைட் அப்பா" என்று சொல்லும்போதே அவனை அவளது கண்கள் தேடின... அவன் அங்கே இல்லை.

'எப்போது சாப்பிட்டு முடித்து எழுந்து போனான்...?' ஏமாற்றத்துடன் மாடியேறினாள் மீரா. சற்று முன் சாப்பிட இறங்கி வந்தபோது இருந்த உற்சாகம் தொலைந்து விட பேசா மடந்தையாய் படி ஏறியவளைப் பார்த்து,

"ஏன்... என்னவோ போல் ஆகிவிட்டீங்க?" என்
வினவினாள் சுபாங்கிணி.
"நத்திங்...சுபா..." என்று மழுப்பிவிட்டு அவர்களின்
அறைக்குள் சென்றபோது அவளையறியாமல் எதிரேயிருந்த
அறையை அவளது விழிகள் ஆவலுடன் பார்த்தன.
ஆச்சர்யம் அளிக்கும் வகையில் அவன் அங்கே
நின்றிருந்தான்... இவளது பார்வையைக் கண்டதும்... அதை
எதிர்பார்த்தவன் போல் ஓர் ஏளனச் சிரிப்பு அவன் முகத்தில்
உதித்தது.
மீராவின் பார்வையைக் கண்ட சுபாங்கினி திரும்பி
பார்த்தாள். ரகுநந்தனைக் கண்டதும் அவனருகில் சென்றாள்
"ஏண்ணா... நானும் கீழே டைனிங் டேபிளிலில் நீ சாப்பிடு
போதிருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்... அவங்க
கிட்ட ஒரு வார்த்தை பேச மாட்டேன் என்கிறாயே..."
சுபாங்கிணியின் வார்த்தைகளைக் கேட்டதும் மீராவின்
மனம் சிறகடித்தது. 'பேசுவானா?' ஆசையுடன் அவன் முக
பார்த்தாள் மீரா.
அவளது ஆசைப் பார்வையைக் கண்டதும் அவனது முக
மேலும் கடுத்துப் போனது.
"அவங்க என்ன வானத்தில் இருந்து குதிச்
வந்திருக்காங்களா? என்னவோ... பெரிய எலிஸபெ
மகராணியைத் தாங்குவது போல் நீயும் இந்த வீட்டாரு
தாங்குவது போதாதா? நான் வேறு தனியாய் தாங்க
வேண்டுமா? ஏன்... நான் பேசாவிட்டால் அவங்க இந்
வீட்டில் தங்க மாட்டாங்களா? அதுதான் வந்துட்டாங்கள்
இருந்து விட்டுப் போகிற வழியைப் பார்க்கச் சொல்... இப்ப
பேச வைக்க தூது அனுப்புகிற வேலையையெல்லா
என்னிடம் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொ
நான் ஒன்றும் மாங்கா மடையனில்லை..."



மீரா திக்பிரமை அடைந்து நின்று விட்டாள்... எப்பேர்பட்ட வார்த்தைகளைப் பேசிவிட்டான் அவன்... அவளா தூது அனுப்பினாள்? தொண்டைக் குழிக்குள் பந்து போல் துயரம் அடைத்துக் கொள்ள மீரா கண்களை இறுக மூடிக் கொண்டாள். இதைச் சொன்னது அவன்தானா?

## 11

ஏதோ பேச வாயெடுத்த சுபாங்கிணி கீழேயிருந்து சுந்தராம்பாள் அழைக்கும் சத்தம் கேட்டதும் ஓடிவிட்டாள். மீரா மெதுவாய் அவன் அறைவாசலில் சென்று நின்று அவனைப் பார்த்தாள்... கடுமையாய் பேசப் போன ரகுநந்தன் துயரம் அப்பிய அவளது முகத்தைப் பார்த்ததும் மௌனமாகிப் போனான்.

"என்னைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னீர்கள்? உங்களைப் பேசச் சொல்லி நான் தூது அனுப்பினேனா? நான் ஏன் உங்களுக்கு தூது அனுப்பவேண்டும்? உங்களை இதற்கு முன் நான் பார்த்தது கூட இல்லையே..."

இப்போது ரகுநந்தன் மௌனம் கலைத்தான்.

"இதற்கு முன் பார்த்தது இல்லையா?... அப்படியென்றால் கீழே டைனிங் டேபிளில் பார்த்தது யார்..."

மீராவின் மென்மையான உணர்வுகள் காயமடைந்தன... முதன் முதலாய் அவள் முகம் பார்க்கத் துடித்த ஆண்மகன் கேட்கும் கேள்வி இது...

"மிஸ்டர் ரகுநந்தன்... நான் ஏதோ கொலைக் குற்றம் செய்தது போல் நீங்கள் பேசுகிறீர்கள்..."

"கொலை செய்தால்தான் அவர்கள் குற்றவாளிகளா
தற்கொலைக்கு தூண்டினாலும் அவர்கள் குற்றவாளிக
தான்..."

"நான் யாரையும் அவ்வாறு தூண்டியதில்லை..."

"சென்னையில் நடந்தது பூஞ்சோலையில் இரு
வனுக்குத் தெரியாது என்ற இறுமாப்பில் பேசுகிறாய்..."

"நான் எதுவும் செய்யவில்லை என்பது என்னைத் தெரி
எல்லோருக்கும் தெரியும். என் மனசாட்சிக்குத் தெரியு
அந்தக் கடவுளுக்கு தெரியும்... நீங்கள் எதை மனத்
வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட வார்த்தைகளை
சொன்னீர்கள் என்பது எனக்குத் தெரியாது... ஆனால் நீங்க
சொன்ன வார்த்தைகளுக்காக நிச்சயம் ஒருநா
வேதனைப்படுவீர்கள்... என்பது மட்டும் எனக்குத் தெரியு

சுபாங்கிணி வரும் சத்தம் கேட்கவும் மீரா அவர்க
அறைக்குள் சென்று மறைந்து விட்டாள்.

வேகமாய் வந்த சுபாங்கிணி ரகுநந்தனை முறைத்
கொண்டே அவனருகில் வந்து நின்றாள். திரும்பி த
அறையைப் பார்த்தாள். மீராவைக் காணவில்லை.

'உள்ளே போயிட்டாங்கபோல... இப்படிப் பேசுப
முன்னால் எப்படி நிற்பாங்க...' மனதிற்குள் கோப
நினைத்துக் கொண்டாள்.

"ஏன் அப்படிப் பேசின?"

"எப்படிப் பேசினேன்?"

"இங்கேபார் அண்ணா... என் கோபத்தைக் கிளரா
அறிமுகமில்லாத பெண்ணிடம் பேசும் வார்த்தை
அவை? உனக்கும் நான் ஒருத்தி தங்கையென்று இருப்ப
மறந்து விடாதே..."



"சுபா... என்னைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக இப்படி பேசாதே... நீயும் அவளும் ஒன்றா?"

"அண்ணா... நீயா இப்படியெல்லாம் பேசுகிறாய்? தன்னைப் போல் பிறரையும் நினைக்க வேண்டும்... என்று எனக்குச் சொல்லிக் கொடுத்தவன் நீ... உனக்கு உன் தங்கை பெரிதாய் போய் விட்டாள். மற்றவர் வீட்டுப் பெண் தாழ்வாய் போய்விட்டாளா? உன்னிடமிருந்து இதை நான் எதிர்பார்க்க வில்லை அண்ணா..."

"சுபா... நான் என்ன சொல்ல வருகிறேனென்றால்..."

"நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்... சொன்னவரை போதும். என் காதும் அவர்கள் மனமும் குளிர்ந்து விட்டது. என்னுடன் பேசாதே..."

"யாரோ ஒருத்திக்காக நீ என்னுடன் சண்டை போடுகிறாயா?"

"அவங்க யாரோ ஒருத்தியில்லை... நம் விருந்தாளி..."

"விருந்தாளிதானே... வீட்டில் ஒருத்தி இல்லையே..."

"விருந்தாளியை வீட்டில் ஒருத்தராய் நடத்தித்தான் நம் குடும்பத்திற்குப் பழக்கம். நேற்றுவரை நீயும் அப்படித்தான் இருந்திருக்கிறாய்... இன்றுதான் உனக்கு பேய் பிடித்து விட்டது..."

"அந்தப் பேய் வேறு யாருமில்லை... உன் ரூமிற்குள் தான் போயிருக்கிறது..."

"போதும் அண்ணா நிறுத்து... அவங்க வருவதற்கு முன்னாடியே நீ அவங்களுடைய வரவை வெறுத்தாய்... அவங்க பெயரைக் கேட்கக்கூட உனக்குப் பிடிக்கவில்லை. இப்போது நேரில் பார்த்ததும் ஆசிட்டில் முக்கியெடுத்த வார்த்தைகளை அவங்க மீது வீசுகிறாய்..."

"உனக்கு அவள் மீது அப்படியென்ன அக்கறை வேண்டி
கிடக்கு?"

"உனக்கு அவங்க மீது அப்படியென்ன வெறுப்
வேண்டிக் கிடக்கு...?"

"சுபா போதும்... என் பொறுமையை சோதிக்காமல் போ
விடு..."

"போகாமல் உன்னுடன் பேசிக் கொண்டா நிற்க
போகிறேன்..."

சுபாங்கிணி அவளது அறைக்குள் சென்று கதவை
அறைந்து மூடினாள். அதுவரை கதவோரமாய் நின்
அண்ணனும் தங்கையும் பேசிக் கொள்வதை கேட்டு
கொண்டிருந்த மீரா... அவசரமாய் உடை மாற்றும் அறைக்கு
சென்று பெட்டியிலிருந்த நைட்டியை உருவிக் கொண்
குளியலறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டா

அறையின் உள்ளே வந்ததும் மீராவைத் தேடிய சுபாங்கி
குளியலறையின் கதவு அடைத்திருப்பதைக் கண்டது
நிம்மதியுற்றாள்.

'நல்ல வேளையாக ... நானும் அண்ணனும் பேசிய
இவங்க கேட்கவில்லை...'

குளியலறைக் கதவின் மேல் சாய்ந்து நின்ற மீராவி
கண்களில் கண்ணீர் வழிந்தது... அவள் வருவத
முன்னாடியே அவளது வரவை ரகுநந்தன் வெறுத்தானா
ஏன்...? அவளது பெயரைக் கேட்கக் கூட அவனுக்
பிடிக்கவில்லையாமே... எதற்காக? அவளைப் பெண்ணா
கூட அவன் நினைக்கவில்லையே... பேய் என்கிறானே...

யாரோ ஒருவன் பேசிய பேச்சு என்று ஒதுக்கித் த
முடியாமல் அவனது உதாசீனத்தை நினைத்து நினை



அவளது நெஞ்சம் தவித்தது.

அவள் மனக் கண்ணில் முதல் நாள் காலையில் அவள் கண்ட கனவு தோன்றியது. வெண்புரவியின் மீது அமர்ந்து அவளை நோக்கி வந்த ராஜகுமாரனின் முகம் நினைவில் ஆடியது... அவன்.

....இவன் அல்லவா... கனவில் அவன் கரம் தொட்டு அவனது அணைப்பில் அடங்கியபோது உண்டான சிலிர்ப்பு இப்போதும் உடம்பில் ஓட....அவள் மனம் ரகுநந்தனிடமே ஓடியது.

'எப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி விட்டாய்... இதையெல்லாம் 'சொன்னது நீதானா' என்று இப்போது கூட என் மனம் நம்ப மறுக்கிறது... என்னை உதாசீனப்படுத்தும் உன் பின் என் மனம் ஓடிவருவதை நிறுத்த என்னால் முடியவில்லையே... கடலுக்கு அணைபோடுவது எப்படி...? என் காதலுக்கு தடைபோடுவது எப்படி? இத்தனை வார்த்தைகளையும் சொன்ன நீ... இதையும் எனக்குச் சொல்...' குளித்து விட்டு நைட்டிக்கு மாறி முகம் வாட பாத்ரூமை விட்டு வெளியில் வந்தாள் மீரா... ஏதோ பேச வாயெடுத்த சுபாங்கிணி அவளது வாடிய முகத்தைக் கண்டதும் பேச்சை நிறுத்திவிட்டு குளிக்கப் போய்விட்டாள்.

அறையின் இதமான ஏஸியின் குளிரால்கூட மீராவின் மன வெக்கையைத் தணிக்க முடியவில்லை. அருகில் படுத்திருந்த சுபாங்கிணி மெல்லிய குரலில், "தூங்கி விட்டீங்களா...?" என்று கேட்டாள்.

"இல்லை சுபா... தூக்கம் வரவில்லை..."

"ஏன்...? இது புது இடம் என்பதாலா?"

"இது புது இடம் போல் எனக்குத் தோன்றவில்லை..."

மீராவின் பதிலில் நெகிழ்ந்து போன சுபாங்கிணி மீராவின்
பக்கம் திரும்பிப் படுத்தாள்.

"அண்ணன் பேசியதை மனதில் வைத்துக் கொள்ள
தீங்க... அண்ணன் பொதுவாய் இப்படிப் பேசுகிற ஆள்
இல்லை... அதுவும் பெண்களிடம் சுத்தமாய் பேசாது
இன்றைக்கு என்னவோ இப்படியெல்லாம் பேசுகிறது..."

"ம்ம்..." என்றாள் மீரா சிந்தனையுடன்.

'அவளிடம் மட்டும்தான் இப்படிப் பேசுகிறானா? ஏன்...?

"அண்ணனுக்கு அதனுடைய டிபார்ட்மென்டல் ஸ்டோ
தான் உலகம்... அதில் நிறைய புதுமைகளை செய்திருக்கிறது
வெறும் வீட்டுக்குத் தேவையான சாமான்கள் மட்டு
இல்லாமல்... ஒரு பக்கம் காய்... இன்னொரு பக்கம் பழங்கள்
இது போக சின்னதாய் ரெடிமேட்ஸ்... ஹேண்ட்லூம் ஸா
சென்டர்... இதெல்லாம் உண்டு... அப்பாகூட என் ஜவுளி
கடைக்கு போட்டியாக நீ வைக்கிறாயான்னு கிண்ட
பண்ணுவார்..."

ஏனோ அவளை அவமதித்தவனின் சாதனைகளை
கேட்க அவள் மிகவும் விரும்பினாள்.

"நீ சொல்வதைக் கேட்கும் போது எனக்குக்கூட உ
அண்ணனின் ஸ்டோரைப் பார்க்க வேண்டும் என்
ஆசையாக இருக்கிறது சுபா..."

"நான் கூட உங்களை அங்கு அழைத்துக் கொண்டு போ
காட்ட வேண்டும் என்று ஆசையாகத்தான் நினைத்தேன்.
ஆனால் இதுதான் இன்றைக்கென்று இப்படி ஒரு முகட்
முகமூடியைப் போட்டுக் கொண்டு இருக்கிறதே... அங்
உங்களைக் கூட்டிக் கொண்டு போய் உங்கள் மன
வேதனைப்படுத்த வேண்டாம் என்று நினைக்கிறேன்..



சுபாங்கிணி அவளது இயல்பான கலகலப்பை விட்டு ஆழமான குரலில் பேசினாள்.

தனக்காக இந்தச் சிறு பெண் இவ்வளவு கவலை கொள்வதைக் கண்ட மீரா அவளது பாசத்தைக் கண்டு வியந்தாள். இவளையும் சற்று முன்னர்தான் சந்தித்தாள். இவளது அண்ணனையும் சற்று முன்னர்தான் சந்தித்தாள்... ஒரு கொடியில் பூத்த இரு மலர்களில் ஒன்று வாசம் பரப்பி வரவேற்கிறது... மற்றொன்றோ வேம்பாய் கசந்து வெறுக்கிறது... இதுவும் வாழ்க்கை அறிமுகப்படுத்தும் எண்ணற்ற விசித்திரங்களில் ஒன்று போலும்.

மீரா நாள் முழுவதும் பயணம் செய்த களைப்பில் அயர்ந்து உறங்கி விட்டாள். எப்பொழுதும் போல் அதிகாலையில் கண் விழித்தவள்... படுக்கையை விட்டு எழுந்து கொண்டாள். பல்துலக்கி முகம் கழுவிவிட்டு... சப்தம் எழுப்பாமல் அறைக்கதவைத் திறந்து கொண்டு மாடிப் பால்கனிக்கு சென்றாள். அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்து ஆடிய வண்ணம் அந்த வீட்டின் முன்புற அழகை ரசித்துக் கொண்டிருந்தாள்.

"மகாராணி வெறும் ஊஞ்சல் பலகையில் உட்காரமாட்டீர்களோ... பேப்பரை பரப்பி அதன் மீதுதான் உட்காருவீர்களோ..." என்ற கடுமையான குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். ரகுநந்தன் நின்று கொண்டிருந்தான்.

அவசரமாய் எழுந்து நின்றாள் மீரா. அரக்குச் சிகப்பு நைட்டி அவளது சிவந்த மேனிக்கு மிகப் பொருத்தமாக இருந்தது. நீண்ட பின்னல் அவள் எழுந்த வேகத்தில் விசிறி ஆடி முன்னால் விழுந்தது. தூங்கி எழுந்தவுடன் வந்ததால் முடி கலைந்திருந்த தோற்றம் கூட அவளது அழகைப் பன்மடங்கு கூட்டிக் காட்டியது...

'எந்த வித ஒப்பனையுமின்றி இயல்பான உடை கசங்கி தலை கலைந்த தோற்றத்திலும் எப்படி இவள் இத்தனை அழகுடன் இருக்கிறாள்...' அவன் மனம் அவளது அழகில் லயித்தது.

"ஐ ஆம் ஸாரி... நான் பேப்பரைக் கவனிக்கவில்லை..." அவள் முகம் அவமானத்தில் கன்றிவிட்டது.

அவளது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தவனின் மனம் வலித்தது. இவளிடம் தன்மையாக பேசமுடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைக்கும்போதே... தினேஷின் முகம் மனதில் தோன்றியது. அவன் மனம் மீண்டும் கடினமுற்றது...

"பார்க்க வேண்டியதை பார்க்க மாட்டீர்கள்... பார்க்க கூடாததை பார்ப்பீர்கள்... என்ன குணம்... உங்கள் குணம்..." நையாண்டியாய் கூறியபடி அவன் பேப்பரை எடுத்துக் கொண்டான்.

அவள் நேற்று அவனைப் பார்த்ததைக் கூறுகிறான்... அவ... உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"ஊம்... உட்கார வேண்டியதுதானே... மகாராணி... சொகுசாக ஆடிக் கொண்டிருந்தீர்கள்... நான் தொந்தரவு செய்து விட்டேன்... நீங்கள் உங்கள் வேலையை கண்டினியூ பண்ணுங்கள்... நான் வேண்டுமானால் ஊஞ்சலை ஆட்டி விடட்டுமா ?"

மீரா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். இவனுக்கு பதில் சொன்னால் தான் என்ன ? குட்டக்குட்ட ஏன் குனிய வேண்டும் ? தவறு செய்தவர்கள்தான் பொறுத்துப் போக வேண்டும். அவள் என்ன தவறு செய்தாள் ? பொறுத்துப் போக வேண்டிய அவசியம் அவளுக்கில்லையே...



"ஏன்... நான் உட்கார ... நீங்கள் ஊஞ்சலை ஆட்டி விட வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா...? அப்படியென்றால் சொல்லுங்கள்... நான் ஊஞ்சலில் உட்கார்ந்து கொள்கிறேன்... நீங்கள் ஆட்டி விடுங்கள்..."

"என்னது... ?" அவன் முகம் கோபத்தில் ரத்தமாய் சிவந்தது.

"யாரைப் பார்த்து ஊஞ்சலை ஆட்டி விடச் சொல்லுகிறாய் ?"

"ஏன் உங்களைப் பார்த்துத்தான் சொல்லுகிறேன். நீங்கள்தானே நான் வேண்டுமானால் ஊஞ்சலை ஆட்டி விடட்டுமா என்று கேட்டீர்கள் ? நான் உட்கார்ந்து விட்டேன்... ஊஞ்சலை ஆட்டி விடுகிறீர்களா ?"

மீரா ஊஞ்சலில் கம்பீரமாய் அமர்ந்து கொண்டாள்... அவனை அவள் பார்த்த பார்வையில் சவால் இருந்தது.

"ஊம்... ஆட்டி விடுங்கள்..."

அவன் முகம் பயங்கரமாய் மாறியது. பேப்பரை அருகிலிருந்த நாற்காலியில் போட்டான். அவளது ஊஞ்சலைப் பிடித்து மிக வேகமாய் ஆட்டிவிட்டான். அவன் தள்ளிய வேகத்தில் ஊஞ்சல் உயரத்தில் எழும்பி கீழே தரையைத் தொட்டு மீண்டும் உயரத்திற்கு போனது... ஊஞ்சலில் அமர்ந்து பழக்கமில்லாத மீரா அலறியவாறு தரையில் விழுந்து விட்டாள்... அவளது நெற்றியில் ஊஞ்சல் மோதியது.

## 12

நடப்பது என்ன என்று மீரா உணருமுன்னர் ஊஞ்சல் பலகை அவளது நெற்றியில் மோதிவிட்டது... உடனே ரத்தம் கொட கொடவென்று கொட்ட ஆரம்பித்து விட்டது. மீராவின்

அலறல் சத்தம் கேட்டு அறையை விட்டு வெளியே ஓடிவந்த சுபாங்கிணி ஊஞ்சலைப் பிடித்து வேகமாய் ஆட்டி விட்டவாறு ரகுநந்தன் நிற்பதைக் கண்டாள். அவள் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே ஊஞ்சலில் இருந்து மீரா கீழே விழுந்தாள்... சுபாங்கிணி பதட்டத்துடன் அவளருகே ஓடியபோது ஊஞ்சலின் விளிம்பு பட்டு மீராவின் நெற்றியில் ரத்தக்காயம் உண்டாகி விட்டது.

“என்ன காரியம் செய்து விட்டாய் அண்ணா...” பதறியவாறு சுபாங்கிணி ரகுநந்தனின் தோளில் கிடந்த டவலைப் பிடுங்கி மீராவின் நெற்றியில் இறுக்கிக் கட்டினாள்.

“ஏய்ய்... என்ன நடந்ததென்று தெரியாமல் என்மேல் பழிபோடாதே...” ரகுநந்தன் சீறினான்.

“கண்ணால் பார்த்து விட்டுத்தான் கேட்கிறேன். பழி போடவில்லை...” பதிலுக்கு சுபாங்கிணியும் சீறினாள்.

“அவள் கீழே விழுந்ததைத்தானே பார்த்தாய்... ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு என்னை வம்புக்கு இழுத்ததை நீ பார்க்க வில்லையே...”

“வம்புக்கு இழுத்தால் நீ பதில் சொல்லு... அதை விட்டு விட்டு ஊஞ்சலில் இருந்து கீழே விழ வைக்கிறாயே... இதுதான் நீ கற்றுக் கொண்ட பண்பாடா?”

“பண்பாட்டைப் பற்றி இவள் முன்னால் பேசாதே... இவள் பண்பாடு என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பாள்...”

“நீ வரம்பு மீறிப் பேசுகிறாய் அண்ணா...”

“என் வரம்பை மீற வைத்தது அவள்தான்”

“உன்னிடம் பேசவே எனக்குப் பிடிக்கவில்லை... எப்போது இப்படி ஒரு இதயமில்லாத ராட்சஸனாக நீ மாறினாய்?”



“இதயத்தைப் பற்றியெல்லாம் இவள் முன்னால் பேசாதே...”

“பேசுவது நீயும்... நானும்... இவங்களை ஏன் தேவையில்லாமல் சீண்டுகிறாய்? பார்... உன்னால் அவங்களுக்கு ஊரிலிருந்து வந்த மறுநாளே ரத்தக் காயம் உண்டாகிவிட்டது...”

“இப்போது திருப்திதானே...” என்று ரகுநந்தன் மீராவைப் பார்த்துக் கேட்டான்.

கீழே விழுந்ததில் இருந்து ஏற்பட்ட அதிர்ச்சி மாறாமல் அப்படியே தரையில் அமர்ந்திருந்த மீரா... இவன் ஏன் நம்மிடம் கோபமாய் பேசுகிறான் என்று புரியாமல் மலங்க மலங்க விழித்தாள்.

“நீயேன் அவங்களிடம் சண்டைக்குப் போகிறாய்?”

“நீ பேசாமல் இரு சுபா... நான் அவளிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். குறுக்கே நீ வராதே... அம்மாடி பரதேவதை... மீராாா... எங்கிருந்து வந்தாயோ... வந்த முதல் நாளே எனக்கும்... என் தங்கைக்கும் சண்டையை மூட்டி விட்டாய்... இப்பொழுது ஊஞ்சலில் இருந்து கீழே விழுந்து அவளிடம் கருணை ஓட்டை வாங்கிக் கொண்டாய்... இனி அடுத்து என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறாய்?” மீராவைப் பார்த்து அவன் கத்த

“நான் என்ன செய்தேன்?” என்று பலவீனமான குரலில் கேட்டாள் மீரா.

“நீ ஒன்றுமே செய்யவில்லையா? என்ன ஓர் நடிப்பு நடிக்கிறாய்? சும்மா நின்று கொண்டிருந்தவனை ‘ஊஞ்சலை ஆட்டிவிடு’ என்று வம்புக்கு இழுத்தது நீதானே...”

மறுத்துப் பேச விருப்பமில்லாமல் மௌனம் சாதித்தாள் மீரா.

"ஏன் அண்ணா... சென்னையில் இருந்தவங்களுக்கு கிராமத்து ஊஞ்சலை பார்த்துப் பழக்கமிருந்திருக்காது... அதனால் ஆட்டி விடச் சொல்லி இருப்பாங்க... அது ஒரு தப்பா ?"

"ஏய்ய்... என்ன இது... நானும் இந்த மகராசி வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததிலிருந்தே உன்னை நோட் பண்ணிக் கொண்டிருக்கிறேன். செம ஜால்ரா அடிக்கிறாயே... உன்னைப் போய் நியாயவாதி என்று நினைத்திருந்தேன் பார்... என்னைச் சொல்ல வேண்டும் ..."

"நியாயவாதி என்பதால்தான் நியாயத்தைப் பேசுகிறேன். அவங்க ஆட்டிவிடச் சொன்னால் கீழே விழ வைப்பாயா ?"

"சும்மா அவளை விழ வைத்தேன் என்று சொல்லாதே... நான் என்ன அவளை ஊஞ்சலில் இருந்து கீழே பிடித்து தள்ளினேன் ? "

அவர்கள் இருவரும் வாக்கடித்துக் கொண்டிருந்தபோது கையில் காபி டிரேயோடு மாடியேறி வந்த சுந்தராம்பாள்

"நீங்க மூன்று பேரும் இங்கேதான் நின்று அரட்டை அடிச்சுக் கிட்டு இருக்கீங்களா ?" என்று வினவியபடி பால்கனிக்கு வந்து விட்டாள். மீரா பதறிப் போய் எழுந்து நிற்க... அவளது நெற்றியில் கட்டப்பட்டிருந்த டவலைப் பார்த்ததும் சுந்தராம்பாள் பதறிவிட்டாள்.

"ஐயோ... என்னம்மா இது... தலையில் காயம் பட்டிருக்கு போல இருக்கே... என்ன ஆச்சு ?"

"ஒன்றுமில்லை அத்தை... நான் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தேன்... இறங்கத் தெரியாமல் இறங்கி ஊஞ்சலில் மோதிவிட்டேன்..." மீரா அவசரமாய் கூறினாள்.

பொய்யுரைக்கப் பிடிக்காத சுபாங்கினி தமையனை



முறைத்துப் பார்த்தாள். சுந்தராம்பாள் அவர்கள் இருவரையும் கடிந்து கொண்டார்.

"நீங்க ரெண்டு பேரும் இங்கேதானே இருந்தீங்க... மீராவைப் பத்திரமாய் பார்த்துக் கொள்ள வேண்டாமா ?

'அதுதான் என் வேலையா... ?' அலட்சியமாய் ரகுநந்தன் முகம் திருப்பிக் கொள்ள மீண்டும் மீராவே பதில் சொன்னாள்.

"இவங்க என் பக்கத்தில் இல்லை அத்தை. இப்போதான் வந்தாங்க..." 'பார்த்தாயா... ?' என்று சுபாங்கிணி ரகுநந்தனை விழிகளால் வினவினாள். அவன் அலட்சியமாய் உதட்டைச் சுழித்தான்.

'நீ திருந்தவே மாட்டாயா ?' என்று ஓர் பார்வை பார்த்து விட்டு சுந்தராம்பாளிடம் திரும்பிக் கூறினாள் சுபாங்கிணி.

"அம்மா... நான் பார்த்து விட்டேன்... சின்ன வெட்டுக் காயம்தான் என்னிடமிருக்கும் பர்ஸ்ட் எய்ட் பாக்ஸிலிருந்து மருந்து போட்டுக் கவனித்துக் கொள்கிறேன். நீங்க கவலைப்படாதீங்க... இதை மாமாவிடம் சொல்லாதீங்க..."

"எப்படி சுபா சொல்லாமல் மறைப்பது"

"வேண்டாம் அத்தை... நைட் அப்பா ஊருக்கு கிளம்பி விடுவார்... அவர் ஊருக்குப் போனால் திரும்பி வர ஆறு மாதங்களாகி விடும்... அவர் நிம்மதியில்லாமல் கிளம்பிப் போக வேண்டுமா ?"

அரை மனதாய் சிறியவர்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டாலும் சுந்தராம்பாளுக்கு தவிப்பாகவே இருந்தது.

"எங்கே காயத்தைக் காண்பி..."

"அம்மா முதலில் அவங்க காபியை குடித்து விடட்டுமே..." மீராவிற்கும்... சுபாங்கிணிக்கும் காபியை கொடுத்து விட்டு ரகுநந்தனிடம் சுந்தராம்பாள் காபிக் கோப்பையை நீட்டினாள்.

"அம்மா... அண்ணனுக்கு காபி கொடுக்காதீங்க... அதுக்கு காபி ஒன்றுதான் குறைச்சல்..."

"ஏய்... என்னடி சுபா... காலங்கார்த்தாலே அவனுடன் மல்லுக்கு நிற்கிற... என்ன விசயம்?"

"சும்மா செல்லச் சண்டை போடுவாளாயிருக்கும்... இல்லை சுபா..." மீரா மறைத்துப் பேசினாள்.

மீராவின் தலையிலிருந்து டவலை பயந்து கொண்டே கழற்றினாள் சுபாங்கிணி... நல்லவேளையாக அவள் சொன்னது போலவே மேல் காயம்தான் சிறிதளவு ஏற்பட்டிருந்தது. சுபாங்கிணிக்கு போன உற்சாகம் திரும்ப வந்து விட்டது.

"ஹை... நான் சொன்னேனில்லை... சின்னக் காயம்தான்... சரியாகிவிடும்..."

"நல்லவேளை... கடவுள் காப்பாற்றினார்..." சுந்தர நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

"ம்ஹீம்... சின்ன விசயத்திற்கு இவ்வளவு பெரிய பில்டப்பா...?" ரகுநந்தன் முணுமுணுத்தான்.

"என்னடா... சொல்கிறாய்?"

"கடவுளுக்கு வேலை வைப்பதே சிலருக்கு தொழிலாய் போய் விட்டதுன்னு சொன்னேன்..." அவன் விர்ரென்று போய் விட்டான்.

"இவன் சொல்வது ஒரு மண்ணும் விளங்கவில்லை... உனக்கு ஏதாவது புரிகிறதா?" என்று சுபாங்கிணியைப் பார்த்துக் கேட்டாள் சுந்தராம்பாள்.

"எனக்குப் புரிவது உங்களுக்குப் புரியாமல் இருப்பதுதான் நல்லது" சுபாங்கிணி மீராவைப் பார்த்துக் கொண்டாள்.



"ஏண்டி... நீயும் புதிர் போடுகிறாய்?"

"அதை ஏம்மா கேட்கிறிங்க... திறந்த மனத்துடன் இருந்ததுக எல்லாம் இப்ப புரியாத புதிராய் மாறிருச்சுகளே..."

"என்னவோ... போ... நீயும் உன் புதிரும்... காலாகாலத்தில் குளித்து விட்டு சாப்பிட வந்து சேருங்க... சுபா... மீரவின் காயத்திற்கு மருந்து போட்டு விடுவாயில்லையா? உன்னை நம்பி நான் கீழே போகலாமா?"

"சுபாவை நம்பினோர் கெடுவதில்லை... இது ஆவுடையம்மாளின் தீர்ப்பு..."

"வாயிலேயே போட்டு விடுவேன்... பாட்டியை பெயர் சொல்லிக் கேலி செய்கிறாயா? இந்த வாய்தானே... மற்றவர்கள் முன்னாலும் பேசி வைக்கும்...?"

"அதெல்லாம் உற்றவர்கள் முன்னால் மட்டும்தான் பேசி வைக்கும்..."

"ஆன்னா... ஊன்னா செந்தமிழிலில் பேசி என் வாயை அடைச்சிடு"

சுந்தராம்பாள் செல்லமாய் கோபித்துக் கொண்டே கீழே இறங்கி விட்டாள். மீராவின் காயத்தை பரிசோதித்த சுபாங்கிணி...

"முதலில்... வெந்நீரில் குளித்து விட்டு வாங்க..." என்றாள்

தலையை ஆட்டியவாறு அவளுடன் சென்ற மீராவின் கண்கள் அவளையும் மீறி ரகுநந்தனின் அறையை நோக்கின.

பெருமூச்சுடன் குளிக்கப் போய் விட்டாள்... மீரா. அவள் குளித்து விட்டு வந்ததும்... அவளது காயத்தை சுத்தம் செய்து மருந்து போட்டு விட்ட சுபாங்கிணி சின்னதாய் ஒரு பிளாஸ்திரியை காயத்தின் மேல் ஒட்டவைத்தாள்.

"அப்பா... இப்போதுதான் என் மனம் நிம்மதியானது..." அவள் குளிக்கப் போய் விட மீராவிற்கு அவளது அன்பையு[ம்] கவனிப்பையும் நினைத்துக் கண் கலங்கியது.

மீரா ஓர் முறை கீழே விழுந்து காலை உடைத்து[க்] கொண்டாள். உறவுக்கார பெண்மணி ஒருத்தியின் பாதுகா[ப்பி]லில் அவளை விட்டுவிட்டு வையாபுரி வெளிநாட்டிற்கு போ[ய்] விட்டார். கால் வலியோடு இருந்த மீராவை ஏன் என்று கேட்[க] வீட்டில் யாருமில்லை.

அநாதை போன்ற உணர்வினை அந்நாள்களி[ல்] அனுபவித்தாள் மீரா. இன்றோ... தலையில் லேசாய் அடிபட்[டு] ரத்தம் சிந்தியதற்கு சுபாங்கிணி அவளுடன் கூடப் பிறந்[த] அண்ணனிடமே சண்டை போட்டாள். அவளுடைய தா[ய்] பதறிவிட்டாள்.

மீரா... தன் தலைக் காயத்தை தடவிப் பார்த்தாள். அந்[த] வலி அவளது மனத்திற்கு இதத்தை தந்தது. இந்தக் காயத்தை ஏற்படுத்தியவனை நினைத்த போதும் அந்த இத[ம்] வந்ததுதான் ஆச்சர்யம்.

சுபாங்கிணி அழகான பிங்க் நிறப் பட்டுபாவாடை அணிந்து அதன் அரக்கு பார்டர் கலரில் தாவணி அணிந்து வந்தாள். பட்டுப்பாவாடையிலேயே வெட்டித் தைக்கப்பட்ட பொருத்தமான ஜாக்கெட் அவளை இன்னும் அழகுறக் காட்டியது... மீராவைப் பார்த்ததும் திகைத்து விட்டாள். மீராவும் அதே பிங்க் கலரில் அரக்குப் பார்டரில் ஜரிகைக் கரையோடிய காட்டன் புடவையைக் கட்டி... அரக்குக் கலரில் ஜாக்கெட் அணிந்திருந்தாள்.

"ஹை... ஷேம்...ஷேம்... ஸ்வீட் தாங்க..."

"இதோ..." மீரா அவளது கைப்பையில் இருந்த சாக்லெட்



பட்டையை நீட்டினாள்.

"எப்படி என் டிரஸ் கலரிலேயே... நீங்களும் சேலை கட்டினீங்க..."

"ரொம்ப சிம்பிள்... காலையில் உடுத்துவதற்காக நீ எடுத்து வைத்திருந்த டிரஸ்ஸின் கலரைப் பார்த்தேன்... அதே கலரில் சேலை கட்ட தீர்மானித்து விட்டேன்..."

"படே கில்லாடிதான் நீங்க..."

"ஆமாம் சுபா... ஏன் என்னை பெயர் சொல்லிக் கூப்பிடமாட்டேன் என்கிறாய்... என் பெயர் வாங்க... போங்கவா...?"

"அதெல்லாம் இல்லை... நீங்கள் வயதில் என்னைவிட மூன்று வயது பெரியவங்க... பெயர் சொல்லிக் கூப்பிட மனமில்லை..."

"அப்போ... உறவு முறை சொல்லிக் கூப்பிட வேண்டியது தானே..."

சுபாங்கிணி பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டே மீராவைப் பார்த்தாள்.

"எங்கே... உங்கள் காயத்தைக் காணோம்..."

"இதோ..." மீரா முன்னால் இறக்கி வாரியிருந்த முடியை ஒதுக்கிக் காண்பித்தாள்.

"முடியில் மறைத்து விட்டீங்களா... பட் உங்களுக்கு இந்த ஹேர் ஸ்டைல் நன்றாகவே இல்லை..."

"எனக்கும்தான் பிடிக்கவில்லை... ஆனால் வேறு வழியில்லையே... அப்பா ஊருக்குப் போகும் வரை இந்தக் காயத்தை அவர் கண்ணில் படாமல் மறைக்க வேண்டுமே..."

"நெற்றியின் மேல்பக்கம் அடிபட்டதால் மறைத்து

விட்டோம்... இல்லா விட்டால்...? இந்த அண்ணனை என்
செய்தால் தேவலை...?"

"நீ கொஞ்ச நேரம் அவரைத் திட்டாமலிருந்
தேவலை..."

சுபாங்கிணி மீராவையே இமைக்காமல் பார்த்தாள்... அ
பார்வையில் ஏதோ இருந்தது... அவளது இதழ்கள் எதை
சொல்லத் துடித்தன... அவள் என்ன சொல்ல விழைகி
என்று புரியாமல் மீரா விழித்தாள்.

## 13

"என்ன சுபா...?"

"ஒன்றுமில்லை... வாங்க சாப்பிடப் போகலாம்
சுபாங்கிணி படிகளில் குதித்து இறங்கினாள்.

"பாட்டி..." அவளது கொலுசுச் சத்தம் கேட்டுத் திரும்
ஆவுடையம்மாளின் கன்னத்தில் முத்தமிட்டாள் சுபாங்கி

"ஆமாம்... சுபா... உன் பாட்டியை விட்டு எத்தனை வ
பிரிந்து இருந்தாய்... சொல்... ஒரு ராத்திரிக்கு இந்
கொஞ்சலா...", ராமசாமி கண்ணாடியை சரிசெய்தவ
பேத்தியைப் பார்த்து வினவினார்.

"ஒரு ராத்திரின்னு எவ்வளவு ஈஸியாக சொல்லிட்டீ
தாத்தா... ஒரு ராத்திரி... பனிரெண்டு மணிநேரம்... நான்
தங்கப் பாட்டியை விட்டுப் பிரிந்து இருந்தேனாக்கும்..."

ஆவுடையம்மாளின் தோளில் தலை சாய்த்
கொண்டாள் சுபாங்கிணி... ஆவுடையம்மாளுக்குப் பெரு
பிடிபடவில்லை.



"நீங்க ஏன் எங்களைப் பார்த்து கண் வைக்கிறீர்கள்... அதோ உங்க செல்லப் பேரன் வருகிறானே... அவனை நீங்கள் கொஞ்ச வேண்டியதுதானே..."

ஆவுடையம்மாள் கூறவும் ஆவலாய் மீரா திரும்பிப் பார்த்தாள். அவளது பார்வையை எதிர்பார்த்தவன் போல் பதில் பார்வை பார்த்துக் கொண்டே இறங்கி வந்தவனின் கண்களில் மீரா முடியை இறக்கி வாரியிருப்பது தென்பட்டது... புருவங்கள் மேலேற அவளைப் பார்த்தபடி சாப்பிட போய் விட்டான் அவன்.

"அம்மா... நான் சீக்கிரம் போக வேண்டும்... டிபனை வைங்க."

"பொறுடா, அப்பா, மாமா, தாத்தா எல்லோரும் வந்து விடட்டும்..."

"எனக்கு நேரமாகிறது என்று சொன்னேன்..."

"ரகு... இது என்ன புதுப் பழக்கம்? வீட்டில் வராத விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள்... சேர்ந்து சாப்பிடாமல் பறந்தால் என்ன அர்த்தம்? உன் அவசர வேலையை மூட்டை கட்டி வைத்து விட்டு அடங்கி உட்கார்..." சுந்தராம்பாளின் குரலில் கண்டிப்பு இருந்தது.

ரகுநந்தன் 'சுள்' கொட்டினான்.

"இவனுக்கு என்ன ஆனதுன்னே தெரியலை..." என்று சாப்பிட வந்து அமர்ந்த ஆவுடையம்மாளிடம் கூறினாள் சுந்தராம்பாள்.

"ஏதாவது வேலையிருந்திருக்கும்... விட்டுத்தள்ளு..." ஆவுடையம்மாள் மருமகளை சமாதானப்படுத்தும் தொனியில் கூறினாள்.

'அவனுக்கு என்ன ஆனது' என்பதை ஓரளவிற்கு புரி மீராவும்... சுபாங்கிணியும் ஆவுடையம்மாளின் அருகே வ அமர்ந்தனர்.

"ஏண்டா லேட்டா வர்றீங்க..." ராமசாமி அப்போதுதா வீட்டிற்குள் வந்த சோமசுந்தரத்தையும்... வையாபுரியை பார்த்துக் கேட்டார்.

"இவன் காலையிலேயே அருவியைப் பார்க்கனும் ஆசைப்பட்டான். கூப்பிட்டுக் கொண்டு போனே அருவியிலேயே குளியல் போட ஆரம்பித்து விட்டான் அடக்கி கூப்பிட்டுக் கொண்டு வருவதற்குள் போதும் போதும்ன்னு ஆகிவிட்டது அப்பா..."

"சரி சரி... சாப்பிட வாங்க... ரகுவிற்கு ஏதோ முக்கியமா வேலையாம். உங்களோடு சேர்ந்து சாப்பிட காத்திரு கிறான்."

"முக்கியமான வேலையை எல்லாம் நாளைக்குப் பார்த்து கொள் ரகு. இன்றைக்கு மாமா உன் டிபார்ட்மென் ஸ்டோரைப் பார்க்க வருகிறானாம் ஸ்டோரிலேயே இரு..."

சுந்தராம்பாள் மளமளவென்று எல்லோருக்கும் பரிம ஆரம்பித்தாள்.

"வாவ்... சப்பாத்தியும்... கோழி வறுவலுமா ? அம்மா இட்டிலிக்கு டாட்டா... காட்டியாச்சா ?" சுபாங்கிணி தட் தாளம் போட்டாள்.

"ஏன் சுபா... உனக்கு சப்பாத்தி தான் பிடிக்குமா ?"

"எது அதிகம் கிடைக்காதோ... அதுதான் பிடிக்கும் அம்மா இட்லி தான் அதிகம் செய்வாங்க... சப்பாத்தி செ மாட்டாங்க..."

சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது மீரா ...



"என்ன கேட்டீங்க...?" என்றாள் சுபாங்கிணி.

"ஏண்டி... நானும் நேத்திலிருந்து பார்க்கிறேன்... ஏங்க... வாங்க... போங்கன்னே மீராவைக் கூப்பிடுகிறாயே... ஒழுங்காய் கூப்பிட மாட்டாயா ?" என்றாள் சுந்தராம்பாள்.

"எப்படிம்மா கூப்பிட...? பெயர் சொல்லிக் கூப்பிடவா ?"

"உன்னை விட வயதில் பெரியவளை பெயர் சொல்லியா கூப்பிடுவது ?"

"வேறு எப்படித்தான் கூப்பிட... நீங்களே சொல்லுங்கள்..."

"அண்ணி என்று கூப்பிடம்மா..." என்றார் வையாபுரி...

"சரியாய் சொன்னாயடா... மாமனின் மகள் அண்ணி முறை தானே... அண்ணின்னே கூப்பிடு சுபா..." என்றார் சோமசுந்தரம்.

ராமசாமியின் விழிகளும் ஆவுடையம்மாளின் விழிகளும் சந்தித்துக் கொண்டன. மீராவைப் புதிதாய் பார்ப்பவள் போல் பார்த்த ஆவுடையம்மாள்... சுந்தராம்பாளிடம் சங்கேத பாஷையில் பேசினாள். மருமகளின் முகத்தில் தெரிந்த திருப்தியான முறுவலைக் கண்டதும் கணவனின் பக்கம் பார்த்துத் தலையை அசைத்தாள் ஆவுடையம்மாள்.

இவை எவற்றையும் கண்டு கொள்ளாத ரகுநந்தன் சாப்பிட்டுக் கொண்டிருக்க... மீரா... அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்... ஊடே... ஊடே அவளது பார்வையை முறைப்பாய் சந்தித்து அவனின் பார்வை மீண்டு கொண்டிருந்தது.

"அண்ணி... கை கழுவலாமா ?" என்றாள் சுபாங்கிணி.

மீரா அவள் யாரை அழைக்கிறாள் என்பது தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"உங்களைத்தான் அண்ணி கை கழுவ வாங்க..." என்று

மீண்டும் அவள் அழைக்கவும் மீராவிற்கு தூக்கி வா
போட்டது.

அவசரமாய் ரகுநந்தனைப் பார்த்தாள். அ
எதிர்பார்த்தது போலவே அவன் முகத்தில் எள்ளும் கொள்
வெடித்தது.

"என்னையா அண்ணியென்று கூப்பிட்டாய்...?" மீ
சந்தேகமாய் கேட்டாள்.

"ஆமாம் உங்களைத்தான் அண்ணின்னு கூப்பிட்டே
உங்க அப்பாதான் அப்படிக் கூப்பிடச் சொன்னார். அதை
அப்பாவும் ஆமோதித்தார். நீங்க அதைக் கவனிக்
வில்லையா?"

"இல்லையே... நான் கவனிக்கவில்லையே..."

"அந்த அளவிற்கு என் அம்மாவின் கைச்சமைய
பிரமாதமாய் இருந்ததா? இன்றைக்கு அம்புஜம் அத்
வேலைக்கு டிமிக்கி கொடுத்து விட்டாள். அம்மா பொன்
மாவை துணைக்கு வைத்துக் கொண்டு ஜமாய்த்
விட்டாங்க... அண்ணி..."

அவள் 'அண்ணி' யென்று கூப்பிட ரகுநந்தனின் மு
கோபத்தில் 'ஜிவி ஜிவு' என்று ஆனது.

'எதற்கு வம்பு' என்று பயந்து போனவளாய் மீரா எழுந்
கை கழுவப் போனாள்.

கை கழுவிக் கொண்டிருந்த மீராவின் பின்னா
ரகுநந்தனின் தாழ்ந்த குரல் கேட்டது.

"என் தங்கையை கைக்குள் போட்டுக் கொண்டது
இல்லாமல் அவளை உன்னை அண்ணியென்று வேறு கூப்பி
வைக்கிறாயா? அவள் மூலமாய் என்னை வளைக்கத்
திட்டமா?"



காலையில் பட்ட காயத்தின் வலி விண்விண்ணென்று தெறித்து அவனின் கோபத்தின் அளவை உணர்த்திய போதும் மீரா மீண்டும் அவனோடு மோத விழைந்தாள்.

"வளைப்பதற்கு நீங்கள் என்ன புளியங்கொம்பா?" அவனைப் போலவே தாழ்ந்த குரலில் அவள் பதில் கொடுத்தாள்.

"என்ன சொல்கிறாய்?"

"புரியவில்லை...? நீங்கள் வேண்டுமானால் இந்த ஊருக்கே ராஜாவாக இருக்கலாம்... ஆனால் நான் உங்களைவிட பெரியவள்... கோடீஸ்வரி... நான் வளைக்க நினைக்கும் அளவுக்கு நீங்கள் ஒன்றும் என்னை விடப் பெரிய ஆள் இல்லை..."

மனம் வலிக்க அந்த இடத்தை விட்டுச் சரேலென்று நகர்ந்து விட்டாள் மீரா... அவள் யோசிக்கக்கூடத் தயங்கும் வார்த்தைகளை அவனிடம் தயங்காமல் பேச வேண்டிய நிர்பந்தத்தை அவன் உருவாக்கி விட்டானே...

ரகுந்தனிடம் அசைவே இல்லை... மீராவையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தவனிடம்

"என்ன அண்ணா கையைக் கூடக் கழுவாமல் பலத்த யோசனையில் இருக்கிறாய்? அண்ணியை ஏன் அப்படி முறைத்துப் பார்க்கிறாய்?" என்று கேட்டபடி கை கழுவினாள் சுபாங்கிணி.

"சுபா... அவளை ஏன் அண்ணியென்று கூப்பிடுகிறாய்? இனிமேல் அப்படிக் கூப்பிடாதே..."

"உனக்கு அதில் என்ன இப்படி ஒரு ஆட்சேபணை?"

"எனக்குப் பிடிக்கவில்லை..."

"...ப் பிடித்திருக்கிறதே..."

"உனக்குப் பிடித்திருந்தால் என்னைப் பாதிக்கும்படி பேசுவாயா?"

"உன்னை நான் ஏதாவது சொன்னேனா?"

"நீ சொல்லவில்லை... அவள் சொல்லிவிட்டுப் போகிறாள்

"என்ன சொன்னாங்க?"

"அவள் என்னவோ என்னை விட கோடிஸ்வரியாம் என்னை வளைக்க வேண்டிய அவசியம் அவளுக் இல்லையாம்... 'நீ என்ன பெரிய புளியங்கொம்பா?' என் என்னைப் பார்த்துக் கேட்டுவிட்டுப் போகிறாள்..."

"நீ சும்மா இருக்கும்போதே அப்படிச் சொன்னாங்கள அவங்க உன்னைப் பார்த்து இப்படிக் கேட்டாங்கன்னா... அவங்களை என்ன சொல்லித் திட்டினாய்?"

சுபாங்கிணி துறுதுறுப்பானவள்... சுட்டித்தனம் மிகுந்தவ அதே சமயம் நேர்மையானவள்... மிக புத்திசாலி... வீட்டி பெரியவர்களான ராமசாமியும்... ஆவுடையம்மாளும் பே யை 'குல விளக்கு' என்று கொண்டாடுவதற்கு அவ இந்தக் குணங்கள் தான் காரணம்.

மீராவை பார்த்த உடனே சுபாங்கிணிக்கு பிடித்துப் பே விட்ட காரணத்தினாலேயே... வீட்டின் பெரியவர்களுக் மீராவை பிடித்துவிட்டது. சுபாங்கிணியின் கணிப்பு எதி சரியாக இருக்கும் என்பது அவர்கள் அறிந்த உண்மை.

'இவள் ஏன் இவ்வளவு புத்திசாலியாக இரு தொலைக்கிறாள்...?' ரகுநந்தன் மனதிற்கு எரிச்சலுற்ற

"நீ என்ன என்னைக் கூண்டிலேற்றி விசாரிக்கிறாயா?

"நீ தானே என்னிடம் அண்ணியைப் பற்றிப் பு சொன்னாய்..."



"சுபா... அவளைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை..."

"அது உன் பிரச்னை... எனக்கென்ன வந்தது... எனக்கும்... இந்த வீட்டில் உள்ள மற்ற எல்லோருக்கும் அவங்களை பிடித்திருக்கிறது... உனக்குப் பிடிக்காவிட்டால் நீ அவங்களிடம் பேச்சு வைத்துக் கொள்ளாதே..."

"இது என் வீடு..."

"எனக்கும் இதுதான் வீடு..."

"நான் உன் அண்ணன்..."

"அதுதான் நான் பிறந்ததிலிருந்து எனக்குத் தெரியுமே... நீ என்ன புதிதாய் இன்று எனக்குத் தெரியப்படுத்துகிறாய்? நீ என் பாசமலர் அண்ணன்... நான் உன் அன்பிற்குரிய தங்கை... அதற்கு என்ன இப்போது?"

"சுபா... அவளுடன் அளவாய் பழகு... அவ்வளவுதான் சொல்வேன்..."

சுபாங்கிணி தமையனை ஆழமாய் பார்த்தாள்... அவனது முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை சிந்தனையில் ஆழ்த்தியது.

"ஆகட்டும்... ஆனால் அண்ணா, அண்ணி ஒன்றும் என் காலேஜ் மேட்டோ... கிளாஸ் மேட்டோ இல்லை... அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்ணும் இல்லை. நம் வையாபுரி மாமாவின் மகள்... நம் வீட்டில் ஆறுமாதங்கள் தங்கப் போகும் விருந்தாளி... நீ பயப்படுவதுபோல் அவங்க ஒன்றும் தீவிரவாதியாய் இருக்க முடியாது... நம் வீட்டில்... நம் குடும்பத்தைச் சேர்ந்தவங்க மத்தியில் தான் நான் அண்ணியிடம் பழகுகிறேன்... அதனால் நீ பயப்படவேண்டிய அவசியமில்லைன்னு நினைக்கிறேன்..."

"திரும்பத் திரும்ப அண்ணிட அண்ணியென்றே சொல்கிறாய்?

அந்த வார்த்தைக்கு அர்த்தம் என்ன தெரியுமா ?"

"நீ ஏன் எல்லாத்தையுமே குறுகின மனப்பான்மையோடே பார்க்கிறாய் அண்ணன் பெண்டாட்டியைத்தான் அண்ணின்னு கூப்பிடனுமா ? மாமன் மகளையும் அப்படிக் கூப்பிடலாம்... இப்போதானே... உன்னைப் பார்த்து நீ என்ன பெரிய புளியங்கொம்பான்னு அண்ணி ஏன் கேட்டாங்கன்னு புரியுது... நீ இதைப்பற்றி அவங்களிடம் பேசிவைத்தாயா ?"

'சரியாகக் கண்டுபிடித்து விட்டாள்...' ரகுநந்தனின் முகத்தில் கோபப் புன்முறுவல் வந்தது.

"இவ்வளவையும் கண்டுபிடித்த நீ... அவளுக்கு என்மேல் ஓர் ஈர்ப்பு இருக்கிறது என்பதை கண்டுபிடிக்க வில்லையா...?"

"அவங்க நேத்துத்தான் இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாங்க... அதற்குள் உன்னைப் பார்த்து மயங்கி விட்டாங்களா ? ஆனாலும் உனக்கு ரொம்பத்தான் நினைப்பு அண்ணா... ஆமாம் தெரியாமல்தான் கேட்கிறேன்... அங்களுக்குத்தானே உன்மேல் ஈர்ப்பு இருக்கிறது... உனக்கு ஒன்னும் அவங்கமேல் ஈர்ப்பு இல்லையே... அப்புறம் ஏன் அவங்களை நான் அண்ணின்னு கூப்பிட்டால் நீ அலறுகிறாய் ? உனக்கே உன்மேல் நம்பிக்கை இல்லையா ? உன்னையும் அறியாமல் அவங்களிடம் மயங்கி விடுவாயோன்னு பயப்படுகிறாயா ? " சுபாங்கிணியின் விழிகள் ரகுநந்தனை துளைத்தன.

## 14

ரகுநந்தனின் அடி மனத்தில் அந்தக் கேள்வி ஆழத்தைத்து நின்றது. அப்படியா...? அவளிடம் மயங்கி விடுவோமென்று அவன் அஞ்சுகிறானா ?



"பயமே... என்னைக் கண்டால் பயப்படும்... எனக்குப் போய் அவளைக் கண்டு பயமா ? ஹா...ஹா..."

"என்னவோ... சினிமா டயலாக்கையெல்லாம் உன் டயலாக் மாதிரிச் சொல்லிக் கொள்கிறாய்... நடத்து, நடத்து... ஆனால் அண்ணா... நீ பார்த்த அதே சினிமாவை நானும் பாத்திருக்கிறேன் என்பதை மட்டும் மறந்து விடாதே..." சுபாங்கிணி அலட்சியமாய் அவனைப் பார்த்துக் கூறி விட்டு மாடிக்குச் சென்றுவிட்டாள்.

அவளிடம் காட்ட முடியாத கோபத்தை காரின் மேல் காட்டிய ரகுநந்தன்... வேகமாய் காரில் ஏறிப் பறந்தான்.

கார் சென்ற வேகத்தை சுபாங்கிணியும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். யோசனையுடன் படியேறிச் சென்று பார்த்த போது மீரா பால்கனியில் நின்று ரகுநந்தனின் கார் சென்ற திக்கை வெறித்துக் கொண்டிருந்தாள். சுபாங்கிணியின் முகத்தில் கேள்விக்குறி ? உதயமானது.

'அண்ணன் சொல்வது உண்மைதானோ...'

அதற்குள் மீரா அவளைத் திரும்பப் பார்த்து விட்டாள். சுபாங்கிணி தன் சந்தேகத்தை மறைத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் மீராவை நெருங்கினாள்.

"என்ன அண்ணி இங்கே நின்றுக்கிட்டு இருக்கீங்க..."

"அப்பா... உன் அண்ணனின் டிபார்ட்மெண்டல் ஸ்டோரைச் சுற்றிப் பார்க்கப் போகிறாராம்... என்னையும் கூப்பிடுகிறார்..."

"போய் விட்டு வர வேண்டியது தானே..."

"இல்லை சுபா... எனக்கு இஷ்டமில்லை... நீயே நேற்று சொன்னாய்... மறந்து விட்டாயா ? உன் அண்ணனுக்கு ஏனோ என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை... என்னைக் கண்டால் டென்ஷன் ஆகிறவர் முன்னால் போய் நின்று அவரைக்

கடுப்பேத்த எனக்கு விருப்பமில்லை சுபா... ஏற்கனவே இன்று காலையிலிலேயே அவருடன் இரண்டு முறை மோதி விட்டேன். முதல் முறை என்னைக் காயப்படுத்தி பழி தீர்த்துக் கொண்டார். இரண்டாம் முறை அவரால் எதுவும் செய்ய முடியாத கோபத்தோடு போகிறார்..."

"அதனால் பயந்து விட்டீர்களா ?"

"பயப்பட உன் அண்ணன் என்ன சிங்கமா... புலியா ? அப்பா முன்னால் அவர் எதையாவது பேசி வைத்தால் அப்பா மனம் கஷ்டப்படுமே என்பதுதான் என் கவலை..."

சுபாங்கிணி மீராவை பரிவோடு பார்த்தாள்... 'இவள்தான் எவ்வளவு பொறுப்பான மகள்.'

வையாபுரியும் சோமசுந்தரமும் சிரித்துப் பேசியபடி மாடியேறி வருவது தெரிந்தது.

"அப்புறம் என்னடா ஆச்சு... ?"

"ஐந்து கோடி ரூபாய் ஆர்டர் ஆச்சே... வெள்ளைக் காரனுக்கு குல்லா போட்டுத்தானே ஆகணும் ?"

"குல்லா போட்டாயா ?"

"வேறுவழி ? என்னம்மா மீரா... நீ இன்னும் கிளம்ப வில்லையா ? கிளம்பி வாம்மா..."

"அப்பா... அதுவந்து... நான் வரவில்லைப்பா..."

"ஏம்மா... ?"

'என்ன சொல்வது' என்று தெரியாமல் மீரா தடுமாறி நிற்கையில் சுபாங்கிணி கைகொடுத்தாள்.

"மாமா... எனக்கோ காலேஜ் லீவ்... சம்மர் வெகேஷன் முடிந்து காலேஜ் திறக்க இன்னும் ஒரு மாதம் ஆகும். அதற்குள் அண்ணியை எல்லா இடங்களுக்கும் நான் அழைத்துக்



கொண்டு போய் காட்டுகிறேன்... இப்போது நீங்களும் அப்பாவும் போய் பார்த்து விட்டு வாங்களேன்."

"ஏம்மா எங்க கூட நீங்க இரண்டு பேரும் வந்தால் ஆகாதா ?"

"நீங்க பெரியவர்கள் பேச ஆயிரம் விசயம் இருக்கும்... நாங்கள் சின்னவர்கள் அரட்டை அடித்துக் கொண்டு வருவோம்... எதற்கு மாமா... நாம் ஒருத்தரை ஒருத்தர் டிஸ்டர்ப் பண்ணிக் கொண்டிருக்கனும்... நீங்களும் அப்பாவும் ஜாலியாய் போய் விட்டு வாங்க..."

ரகுநந்தன் மாடித்தளத்தில் விளையாட்டு சாமான்கள் விற்கும் பகுதியில் இருந்த போது பணியாள் வந்து

"உங்க அப்பாவும்... இன்னொரு ஐயாவும் வந்திருக்காங்க சார்... என்றான்."

ரகுநந்தன் கீழே இறங்கி வந்தான்.

"வாங்க மாமா... இதுதான் என் ஸ்டோர்... சுற்றிப் பாருங்கள்..."

"எல்லாம் பார்த்து விட்டோம்... பரவாயில்லையே ரகு... இந்தச் சின்ன வயதில் எவ்வளவு புத்திசாலித்தனமாய் யோசித்து அமைத்திருக்கிறீர்கள்... உங்களுடைய துடிப்பையும் வேகத்தையும் பார்த்து எனக்கு பெருமையாய் இருக்கிறது..."

மிகப்பெரிய தொழிலதிபரின் வாயிலிருந்து வந்த பாராட்டைக் கேட்டு அவன் முகம் மலர்ந்தான்.

"தேங்க்யு மாமா... என்னை நீங்கள் வா... போ என்றே கூப்பிடலாம். புதிதாய் எதற்கு மரியாதை ?"

"இது என்ன ரகு இப்படிச் சொல்கிறீர்கள். தோளுக்கு மேல்

வளர்ந்தால் தோழன் என்பார்கள்... நீங்கள் நான் அண்ணாந்து பார்க்கும் உயரத்திற்கு வளர்ந்து விட்டீர்கள். உங்களைப் போ நான் 'வா போ' என்று பேசுவதா ?"

வையாபுரியை ரகுநந்தனுக்கு மிகவும் பிடித்து விட்டது மீராவின் அப்பா என்பதால் அவரிடம் லேசான வெறுப்புடன் இருந்தவன்... அவருடைய பண்பைக் கண்டு அவர் மேல் பற் கொண்டான்.

'இப்பேர்பட்ட மனிதருக்குப் போய் அப்படிப்பட் பெண்ணா' மனதிற்குள் பொறுமியபடி அவர்களை வ அனுப்பி வைத்தான்.

"ரகு நீ மதியம் சாப்பிட வருவாயா ?"

"இல்லைப்பா... நைட்தான் வருவேன்..."

"ஏன் ரகு அப்படிச் சொல்கிறீர்கள் ? உங்கள் எல்லே ரோடும் சேர்ந்து சாப்பிட எனக்கு ஆசை இருக்காதா ? நா நைட் கிளம்பி விடுவேன். நாளையிலிருந்து உங்க வழக்கப்படி இருக்கலாமே இன்றைக்கு ஒருநாள் எனக்கா மதியம் சாப்பிட வீட்டுக்கு வரக் கூடாதா ?" வையாபு அன்புடன் வினவினார்.

அவரது அழைப்பைத் தட்ட முடியாமல் ரகுநந்த வருவதாகக் கூறினான். அவர்கள் கிளம்பிப் போ விட்டார்கள்.

'மதியமும் அவள் முகத்தில் விழிக்க வேண்டுமா மனதிற்குள் எழுந்த எண்ணம் வெறுப்பினால் வந்தத இல்லை விருப்பத்துடன் வந்ததா என்பதை அவனா கண்டுபிடிக்க முடியவில்லை ஏனென்றால் அவள நினைத்தவுடன் அவன் மனதில் இதமான தென்றல் வீசிய



காயத்தை தகப்பனாரிடம் இருந்து மறைக்க அவளது தலை முடியை இறக்கி வாரியிருந்தது அவனது மனதில் எழுந்தது.

'அவ்வளவுரத்தம்கொட்டியதே அடி பலமாய் விழுந்திருக்குமோ..'

வலியுடன் அவள் தலையைப் பிடித்துக் கொண்டது நினைவில் வந்தது... அவனுக்கு ஏனோ திடிரென்று தன் மீதே வெறுப்பு வந்தது.

'சே...! சில சமயம் நான் கிராதகனாய் மாறிவிடுகிறேன்...'

மதிய உணவிற்காக அவன் வீடு சென்றபோது வாசலில் இருந்த திண்ணையில் அமர்ந்து ஆவுடையம்மாளுடன் பேசிக் கொண்டிருந்தாள் மீரா... சுபாங்கிணியோ வாசலில் ஒரு கன்றுக்குட்டியைத் துரத்தி விளையாடிக் கொண்டிருந்தாள். பாவாடையை லேசாய் தூக்கிப் பிடித்துக் கொண்டு கன்றுக் குட்டியை துரத்திக் கொண்டிருந்த பேத்தியைப் பார்த்து ரசித்துக் கொண்ட ஆவுடையம்மாள்.

"என் பேத்தியை விடவா... அந்தக் கன்றுக்குட்டி சுறுசுறுப்பு...?" என்று மீராவிடம் கூறினாள்.

"சுபாவே ஒரு கன்றுக்குட்டிபோல் துடிப்பானவள் தானே பாட்டி"

"உனக்கு சுபாவை பிடிக்கிறதா ?"

"அவளை யாருக்குத்தான் பிடிக்காது ?"

மீராவின் மனம் திறந்த வார்த்தைகளினால் ஆவுடையம்மாள் மகிழ்ந்து போனாள்.

"நன்றாகச் சொன்னாயம்மா ? உனக்கு அம்மா வழி தாத்தா பாட்டி... அப்பா வழி தாத்தா பாட்டி இருக்கிறார்களா ?"

"தெரியவில்லை பாட்டி... என் நினைவு தெரிந்த நாளில்

இருந்து நான் சொந்தக்காரர்கள் என்று எவரையும் பார்த்ததில்லை... ஒரு தூரத்து சொந்தக்கார லேடி ஒருத்தங்க என்கூட இருந்தார்கள். அவர்களும் மாதா மாதம் சம்பளம் வாங்கிக் கொண்டுதான் எனக்குத் துணையாக என் கூட இருந்தார்கள்..."

ஆவுடையம்மாளின் மனதில் மீராவின் மேல் இரக்கம் பிறந்தது.

"அதனால் என்னம்மா... எங்களை உன் தாத்தா... பாட்டின்னு நினைத்துக் கொள்... எனக்கு சுபாவைப் போல் நீயும் பேத்திதான்..."

"சரி பாட்டி..." மீரா சந்தோசமாய் தலை ஆட்டினாள். அந்த நேரம் பார்த்து ரகுநந்தனின் கார் உள்ளே நுழைந்தது.

"அண்ணா... அந்தக் கன்றுக் குட்டியை பிடித்துத் தாயேன்..."

அவன் பக்கமாய் வந்த கன்றுக்குட்டியின் பின்னால் ஓடி வந்த சுபாங்கிணி கூறினாள். ரகுநந்தன் கன்றுகுட்டியை பிடித்துக் கொண்டான். அது அவன் கைகளில் இருந்து திமிறிக்கொண்டு விடுபட்டு ஓடிவிட்டது. அவன் தங்கை யைப் பார்த்துச் சிரித்தான்.

"கன்றுக்குட்டி கைக்குள் அடங்குமா?"

"அது அடங்குவது இருக்கட்டும்... நீயெங்கே இந்தப் பக்கம் மதிய வேளையில் வந்திருக்கிறாய்?"

"இது என்ன கேள்வி? சாப்பிட வந்தேன்..."

"மதியம் வீட்டில் சாப்பிட வரமாட்டாயே...?" சுபாங்கிணி சந்தேகத்துடன் அவனை மேலும் கீழும் பார்த்தாள்.

"இன்றைக்கு வையாபுரி மாமா ஊருக்குப் போவதா



சேர்ந்து சாப்பிட ஆசைப்பட்டுக் கூப்பிட்டார்... அவருக்காக வந்தேன்... போதுமா?"

"அவர் மேல் உனக்கு என்ன இத்தனைக் கரிசனம்?"

"அவரை எனக்குப் பிடிக்குமே..."

"அவருடைய மகளைத்தான் பிடிக்காது..."

"ஆரம்பித்து விட்டாயா?"

"எங்கே ஆரம்பிப்பது...? நீதான் பிடி கொடுக்க மாட்டேன் என்கிறாயே"

சுபாங்கிணியும் அவனும் பேசியபடி சென்றார்கள்... திண்ணையில் அமர்ந்திருந்த ஆவுடையம்மாள்,

"யார் அது? நம்ம ரகுவா? இந்த நேரத்தில் வீட்டுக்கு வரமாட்டானே," என்று ஆச்சர்யத்துடன் வினவினாள்.

"நானும் அதைத்தான் கேட்டேன் பாட்டி..." சுபாங்கிணி ஆவுடையம்மாளின் அருகில் திண்ணையில் அமர்ந்து அவளது தோள் மேல் சாய்ந்து கொண்டாள்.

"பாட்டியை அரைத்து கொண்டே இரு..." என்று கூறியபடி ரகுநந்தன் எதிரேயிருந்த திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

மீராவிற்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

'இவன் அவளிருக்கும் இடத்தில் நிற்கக் கூட மாட்டானே... எப்படி... இப்படி உட்காருகிறான்?'

அவள் சுபாங்கிணியைப் பார்த்தாள்... அதே வினாவை விழியில் எழுப்பிக் கொண்டே சுபாங்கிணி மீராவைப் பார்த்தாள். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதை ரகுநந்தனும் கவனித்தான். அதைப் பொருட் படுத்தாமல் ஆவுடையம்மாளிடம் பேச ஆரம்பித்தான்.

"இவளுக்கு நீங்க ரொம்பத்தான் செல்லம் கொடுக்கிறீங்க பாட்டி..."

"இவள் என் செல்லப் பேத்திடா... இவளுக்கு செல்லம் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுப்பேன்?"

ஆவுடையம்மாள் சுபாங்கிணியை அணைத்துக் கொள்ள... ரகுநந்தன் மீராவைப் பார்த்தான். அவள் தடுமாறினாள்.

'இவன் ஏன் என்னைப் பார்க்கிறான்...' அவளது தடுமாற்றத் தைப் பார்த்துக் கொண்டே ரகுநந்தன் ஆவுடையம்மாளிடம் பேச்சை வளர்த்தான்.

"ஏன் பாட்டி... நானும் உங்க பேரன் தானே... என்னை செல்லம் கொஞ்சக் கூடாதா?" ரகுநந்தன் ஆவுடையம்மாளிடம் சலுகையாய் வினவியபடி மீராவை மீண்டும் பார்த்தான்.

அவள் முகம் சிவந்து போனது.

"ஏண்டா உன்னைப் போய் யாராவது செல்லம் கொஞ்ச முடியுமா? நீ உன் தகப்பனையும்... தாத்தனையுமே அரட்டுகிற பேர்வழி..." ஆவுடையம்மாளின் பதிலைக் கேட்ட சுபாங்கிணி சிரித்து விட்டாள்.

"அப்படிச் சொல்லுங்க பாட்டி... ஐயா டிரில் மாஸ்டர் அவதாரம் எடுத்தவராச்சே... இவருக்கா செல்லம் கொஞ்சத் தோன்றுகிறது..."

"ஏன் பாட்டி... எல்லோருமே என்னை கோபக்காரனாகவே நினைத்தால் எப்படி...? நானும் மனிதன்தான் பாட்டி... என்னைப் பார்த்தால் உங்களுக்கு பாவமாய் தோன்ற வில்லையா?"

ரகுநந்தன் இப்போது மீராவை நன்றாகப் பார்த்தான்... அவனது பார்வை? முடி விலகியதால் தென்பட்ட அவளது



காயத்தின் மேல் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்திரியில் படிந்திருந்தது.

அவனது விழிகளில் தென்பட்ட இறைஞ்சலைக் கண்டு மீரா திகைத்துப் போனாள்... அவளது கண்கள் லேசாய் கலங்கி விட்டன.

## 15

"நாடகமெல்லாம் கண்டேன்... உந்தன் ஆடும் விழியாலே..." சுபாங்கிணி ராகம் போட்டுப் பாடவும் தன் உணர்வுக்கு மீண்ட மீரா அவசரமாய் விழிகளை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

ரகுநந்தனும் தன்னைச் சமாளித்துக் கொண்டவனாய் ஆவுடையம்மாளைப் பார்த்து நகைத்தான்.

"பாட்டி உங்கள் செல்லப் பேத்திக்கு உங்களை மட்டுமில்லை... உங்களது அம்மா காலத்து பாட்டையும் பிடித்திருக்கிறது... அந்தக் காலத்துப் பாட்டை என்னமாய் பாடுகிறாள்..."

"அப்படியா அண்ணா... நீ பாட்டை மட்டும்தான் ரசித்தாயா" சுபாங்கிணி குறும்பாக வினவினாள்.

ரகுநந்தன் மீராவை சட்டென்று ஓர் பார்வை பார்த்தான். அவளது சிவந்த முகம் இன்னும் சிவந்து விட்டது... அவள் அவனது பார்வையைத் தாங்க மாட்டாமல் உதடு கடித்துக் கொண்டாள்.

'ஒரு பார்வையைத் தாங்க முடியாத இவளா தினேஷை ஏமாற்றி இருப்பாள்?' மீண்டும் இதே சந்தேகம் ரகுநந்தனின் மனதில் எழுந்தது. 'இப்போதைக்கு அந்த எண்ணம் எதற்கு'

என்ற எண்ணம் அவன் மனதில் தலைதூக்கி நின்றது... மீராவின் சிவந்த முகத்தைப் பார்க்க அவன் மிகவும் விரும்பினான்... இந்த இதமான நினைவை பின்னுக்குத் தள்ளிவிட்டு மீராவை இப்போது நேரடியாய் பார்த்தான். அவள் தவித்துப் போய் அருகிலிருந்த சுபாங்கிணியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். அவளது தளிர் விரல்கள் நடுங்குவதை உணர்ந்தாள் சுபாங்கிணி.

'இவள்தான் எத்தனை மென்மையானவள்...' பிரியத்துடன் அவளது விரல்களை பிடித்து அழுத்தி அமைதிப்படுத்தினாள் சுபாங்கிணி.

"ரசிப்பதற்குத்தான் இன்றைக்கு நிறைய விசயங்கள் கண் எதிரே இருக்கின்றனவே..." ரகுநந்தனின் பார்வை மீராவில் நிலைத்திருந்தது.

"அப்படியா... எதை ரசிக்கிறாய் அண்ணா... இந்த சித்திரை மாதத்து கத்தரிவெயிலை ரசிக்கிறாயா? இல்லை அண்ணி யின் நெற்றியில் பட்ட காயத்தை ரசிக்கிறாயா?" கோபத்து டன் கேட்டாள் சுபாங்கிணி.

'இவனுக்கும் அண்ணியைப் பிடித்திருக்கிறது... நானும் பாட்டியும் இருக்கும் போதே... இப்படி சைட் அடிக்கிறானே... இவனைப் போய் அண்ணி மயக்க நினைக்கிறாளா? இல்லை இவன் அண்ணியிடம் மயங்கி நிற்கிறானா...?' உண்மையை மறைத்து ஏன் இந்தப் போலி நாடகம் ஆடுகிறான்...'

சுபாங்கிணி கேட்டதும் மீராவின் காயத்தைப் பார்த்த ரகுநந்தன், "வலி... அதிகமாய் இருக்கிறதா?" என்று வினவினான்.

அவன் தன்னிடம் பேசுவான் என்பதை எதிர்பார்க்கா மீரா பதில் சொல்ல மறந்து ஆச்சரியத்துடன் சுபாங்கிணியை பார்த்தாள்.



"பதில் சொல்லுங்க அண்ணி... அண்ணன் கேட்கிறா னில்லை? பதில் சொல்லுங்க... வலி அதிகமாய் இருந்தால் நீ பாதி வாங்கிக் கொள்வாயா என்று பதில் சொல்லுங்கள்..."

சுபாங்கிணியின் வார்த்தைகளில் கோபம் இருந்தது. ரகுநந்தனின் முகத்தில் குற்ற உணர்வு வந்தது.

"என்னால் உன் அண்ணியின் வலியை வாங்கி கொள்ள முடியுமானால் பாதி என்ன... முழுவதையுமே வாங்கிக் கொள்வேன் சுபா..." ரகுநந்தன் உண்மையான வருத்தத் துடன் கூறினான்.

அவனது குற்ற உணர்வையும் வருத்தத்தையும் காணச் சகிக்காத மீரா அவசரமாய் சுபாங்கிணியைப் பார்த்துக் கூறினாள்

"நடந்தது மிகச் சின்ன விஷயம் சுபா. லேசான அடிக்குப் போய் இவ்வளவு வருத்தப்படுவானேன்? எனக்கு ஒன்றும் வலிக்கவில்லை சுபா... வருந்தாதே..."

"அண்ணி... நான் உங்கள் காயத்தை மறந்தே போனேனே... என்னிடம் ஏன் இவ்வளவு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுகிறீங்க? யார் இப்போது வருத்தப்பட்டாங்களோ அவங்களிடம் சொல்லுங்க...", சுபாங்கிணி கேலியாய் கூறினாள்.

மீரா முகம் சிவக்க தன் பின்னலை முன்னால் போட்டு அதை நீவி விட ஆரம்பித்தாள்.

"சுபா... அவங்களை டிஸ்டர்ப் பண்ணாதே... பாவம்... உன்னைப் போல் அவங்க பட்டுன்னு மனதில் இருப்பதை வெளியில் சொல்லி விடமாட்டாங்க..."

"அண்ணா...இது அநியாயம்... எல்லோருமே ஒரு பேச்சுக்குத்தான்... 'நீ நேற்று வந்த ஆள்... நான் காலம்

காலமாய் இந்த வீட்டில் இருப்பவள்... இந்த வீட்டில் பிறந்த பெண் என்பார்கள்... இவங்க உண்மையிலேயே நேற்று வந்தவங்க... நான் உன் உடன் பிறந்த தங்கை... என்னைவிட அவங்களை உயர்த்தியாய் பேசுகிறாயே... போ... நான் உன்னுடன் பேசமாட்டேன்... உன் பேச்சு காய்..." சுபாங்கிணி பெருவிரலை வாய் பகுதிக்கு கொண்டு போய் 'டு' விடும் பாவனையில் ரகுநந்தனை நோக்கி ஆட்டினாள்.

"எதுக்குடா... அண்ணனும் தங்கச்சியும் சண்டை போட்டுக்கறீங்க? மீரா நம்ம வீட்டுப் பொண்ணு... அவள் என்ன அந்நியமா அசலா? அதனால் அவளை ஊஞ்சலில் இருந்து விழுக வைத்து விட்டோமென்று ரகுநந்தனும் வருத்தப் படவேண்டாம்... ஏதோ தெரியாமல் நடந்து விட்டது. அவன் மீராவைப் பற்றி நல்லதாய் நாலுவார்த்தை பேசியதற்கு சுபாவும் கோபித்துக் கொள்ள வேண்டாம்... இரண்டு பேரும் பழம் விடுங்க..." ஆவுடையம்மாள் தீர்ப்புக் கூறினாள்.

"பாட்டி... நான்தான் மீராவை ஊஞ்சலில் இருந்து தள்ளி விட்டு விட்டேனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இதை யாராவது வந்து சொல்லனுமா? மீராவுக்கு அடிபட்டிருக்குன்னு தெரியும். அவள் ஊஞ்சலில் இருந்து கீழே விழுந்து விட்டாள்ன்னு உங்க அம்மா வந்து சொன்னாள்... இப்ப நீ இவ்வளவு வருத்தப் படறேன்னா... நீ ஊஞ்சலை ஆட்டி விட்டிருக்கலாம்... மீரா ஊஞ்சலில் உட்கார்ந்து பழக்கமில்லாததால் கீழே விழுந்திருக்கலாம்... அதனால் நீ இப்போது வருத்தப்பட்டிருக்கலாம். உன் வருத்தத்தைப் பொறுக்காமல் மீரா சமாதானம் சொல்லியிருக்கலாம். இப்படி எல்லாமே யூகம்தாண்டா ரகு..."

"பாட்டி... நீங்க ரொம்பவும் புத்திசாலி பாட்டின்னு நான் சும்மா ஒன்னும் பீற்றிக்கலையாக்கும். யு ஆர் ஸோ கிளெவர்...



ஐ லவ் யு..." சுபாங்கிணி ஆவுடையம்மாளை கட்டிக் கொண்டு அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"எனக்கு முத்தம் கொடுத்து என்ன ஆகப்போகுதடி... என் கன்னம் எச்சிலானதுதான் மிச்சம்... போபோ... இருந்திருந்து இவள் பாட்டியை லவ் பண்ணுகிறாளாம்... கேட்டியா மீரா இந்தக் கதையை" ஆவுடையம்மாள் பெருமையாய் பேத்தியை அணைத்துக் கொண்டாள்.

அப்போது வாசல் பக்கம் பேச்சுக்குரல் கேட்டு அங்கே வந்த சோமசுந்தரம்.

"ம்ம... பாட்டியும் பேத்தியும் எப்பப் பார்த்தாலும் கொஞ்சிக் கொண்டே இருங்க... சித்திரை மாதத்து அக்கினி வெயிலில்... திண்ணையில் உட்கார்ந்துக்கிட்டுத்தான் பேசணுமா? எல்லோரும் உள்ளே வாங்க... சாப்பிடலாம்..." என்று அழைத்தார்.

"ஆனால் மாமா... இங்கே வெம்மையே தெரியவில்லையே... குளுகுளுவென்று ஏஸி போட்டது போல் இருக்கிறதே...", மீரா ஆச்சரியத்துடன்... திண்ணையிலிருந்த அகன்ற கரி நிற பெயிண்ட் அடித்த தூண்களை தடவிப் பார்த்துக் கொண்டே கூறினாள்.

"எல்லாமே... அந்தக் காலத்தில் கட்டியது அம்மா... என்ன கலவை சேர்த்தாங்களோ... எல்லா இடமுமே வெயில் காலத்தில் குளிர்ச்சியாய் இருக்கும். குளிர் காலத்தில் வெதுவெதுப்பாய் இருக்கும்..." சோமசுந்தரம் தம் முன்னோர்களை சிலாகித்துக் கொண்டார்.

"தரை மட்டுமில்லை... சுவரெல்லாம் பளிங்குக்கல்... அதனால் கூட சில்நெஸ் அதிகம் கிடைக்கும்..." மீரா சுவர்களைப் பார்த்தவாறே கூறினாள்.

"ஆமாம்மா... அந்தக் காலத்தில் என் தாத்தாவிற்கு தாத்தா ராஜஸ்தானில் இருந்து இவற்றையெல்லாம் வரவழைத்தாராம்... வீட்டு மர வேலைகளுக்கு பர்மாவில் இருந்து தேக்கு மரத்தைக் கொண்டு வந்தாராம்... எங்கள் காலத்தில் நாங்கள் அதிகப்படி வசதிகள் செய்து கொண்டோமே... தவிர... கட்டிடத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை..."

"கொண்டு வர அவசியமும் இல்லை மாமா... இதில் மாறுதல் செய்ய என்ன இருக்கிறது? அந்தக் காலத்தில் எப்படி யோசித்து இவ்வளவு வசதிகளுடன் கட்டினார்களோ தெரியவில்லை இந்த வீடு காலங்கள் கடந்து நிற்கும் அற்புதமான பொக்கிஷம் மாமா...", மீரா வீட்டை ரசித்தாள்.

சோமசுந்தரத்தின் மனம் கனிந்தது... அவர், ஆவுடையம்மா ளைப் பார்த்தார். அதேநேரம் அவளும் மகனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரின் பார்வைகளும் ஏதோ ஓ செய்தியைப் பரிமாறிக் கொண்டன.

"சரி... வாங்க சாப்பிடப் போகலாம்..." ஆவுடையம்மாள் திண்ணையை விட்டு இறங்கிக் கொண்டே சொன்னாள்.

சோமசுந்தரத்திடமும்... ஆவுடையம்மாளிடமும் பேசியபடி வேண்டுமென்றே மீராவை ரகுநந்தனுடன் தனியே விட்டு சென்றாள் சுபாங்கிணி.

மீரா சங்கோஜத்துடன் நிலத்தில் பார்வையைப் பதித்தப நகர முற்பட ரகுநந்தன் அவளது பாதையை மறித்தாற்போ நின்றான். மீரா பதட்டத்துடன் கைகளை பிசைந் கொண்டாள்.

"ஐ ஆம் ஸாரி மீரா. உண்மையிலேயே வருத்தப்பட்டு தான் நான் மன்னிப்புக் கேட்கிறேன்... பெண்களிட



இரக்கமில்லாமல் நடந்து கொள்பவனல்ல நான்... ஏதோ ஓர் கோபத்தில் அப்படிச் செய்து விட்டேன்...", ரகுநந்தன் அவளது முகத்தைப் பார்த்தவாறு கூறினான்.

அவன் முகம் பார்ப்பதை தவிர்த்து வேறுபக்கம் பார்த்தபடி மீரா பதில் சொன்னாள்.

"ஏதோ ஓர் கோபத்தில் நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்பது எனக்கும் தெரியும், அது என்ன கோபம் என்றுதான் புரியவில்லை பிடிபடவும் இல்லை."

ரகுநந்தனின் முகம் மாறியது.

"அது எதற்கு இப்போது...? வேண்டாம்...", என்றான்.

"அப்படியென்றால் ஏதோ இருக்கிறது என்றுதானே அர்த்தம்..."

"விட்டு விடு மீரா..."

"நீங்கள் பேசிய வார்த்தைகள் எதையும் போனால் போகிறது... விட்டு விடலாம்... என்ற வகையில் நீங்கள் பேசவில்லை... உங்கள் மனதில் என்மேல் மரியாதை இல்லை. முன்பின் பார்த்தறியாத என்மேல் உங்களுக்கு என்ன அப்படி ஒரு விரோதம்?"

"இதே கேள்வியை நானும் கேட்கலாமில்லையா?"

"எப்படிக் கேட்பீர்கள்? நான் உங்கள் மேல் விரோதத்தைக் காண்பித்தேனா? தேவையில்லாமல் மனம் புண்படப் பேசினேனா?"

"இல்லை... நீ என்மேல் விரோதத்தைக் காண்பிக்க வில்லை... ஆனால் முன்பின் பார்த்திராத என்மேல் அன்பைக் காண்பித்தாய்... அது ஏன்?"

"அது—அது— நீங்களாய் எதையாவது கற்பனை பண்ணிக் கொண்டு சொல்கிறீர்கள்... அப்படியெல்லாமில்லை..."

மீரா தடுமாற்றத்துடன் கூறினாள். அவளது கண்கள் அலைபாய்ந்தன, பதட்டத்துடன் முடியை மேல் நோக்கிக் கோதினாள்... முடியில் மறைக்கப்பட்டிருந்த அவளது காயம் தெரிந்தது.

"மீரா... நான் ஒன்று சொல்லவா?"

"சொல்லுங்கள்..."

"முடியை இறக்கி சீவாதீர்கள். அது உங்களது முகத்திற்கு நன்றாக இல்லை... உங்களது இயல்புக்கு பொருத்தமாகவும் இல்லை..." ரகுநந்தன் அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டே கூற மீரா சட்டென்று அவன் முகம் பார்த்தாள்.

"என் இயல்பு என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என் இயல்பைப் பற்றி ஏதேதோ சொன்னீர்களே..."

"சொன்னதற்கு காரணம் உண்டு மீரா..."

"இப்போது நான் முடியை இறக்கி வாரியிருப்பதற்கும் காரணம் உண்டு... அப்பாவுக்கு என் நெற்றிக் காயம் தெரியக்கூடாது. வேதனைப்படுவார்... நாளைக்கு அவர் சென்னைக்கு கிளம்பியவுடன் ஒழுங்காய் தலை வாரிக் கொள்வேன்..."

"என்னால்தானே...?" ரகுநந்தன் வேதனையுடன் கேட்டான்.

"இல்லை... என்னால்தான் இந்தக் காயம் ஏற்பட்டது. நீங்கள் வம்பிழுத்தால் நான் ஒதுங்கிப் போயிருக்க வேண்டாமா? சரிக்குசரி மல்லுக்கு நின்றதன் விளைவுதான் இந்தக் காயம்..."

மீரா அவனைக் கடந்து வீட்டுக்குள் சென்று விட்டாள்.



# 16

தென்றலாய் அவன் மனத்தை தீண்டி விட்டுச் சென்று விட்டாள் அவள். இவ்வளவு எளிதில் மன்னிக்கும் குணமுடைய இனியவளா தினேஷிற்கு துரோகம் இழைத்திருப்பாள்? ரகுநந்தன் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவித்தபடி உள்ளே சென்றான்.

"ரகு... சீக்கிரம் வா... உனக்காக எல்லோரும் காத்திருக் கிறார்கள்" சுந்தராம்பாள் அழைத்தாள். ரகுநந்தன் வையாபுரியின் அருகில் அமர்ந்தான்.

"ரகு எனக்காக மதியச் சாப்பாட்டிற்கு வீட்டுக்கு வந்திருக் கிறார்... தேங்க் யு ரகு..." வையாபுரி எல்லையற்ற வாத்சல்யத்துடன் ரகுநந்தனைப் பார்த்தார்.

"தேங்க்ஸெல்லாம் எதற்கு மாமா... அம்மா உங்களுக்கு ஆற்று மீனைப் பிடித்துக் கொண்டு வரச் சொல்லி விருந்து சமைத்திருக்காங்க... அதை ஒரு பிடி பிடிக்க சான்ஸ் கொடுத்தீங்களே... அதற்காக அண்ணன்தானே உங்களிடம் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்", சுபாங்கிணி ரகுநந்தனைப் பார்த்து சிரித்தவாறு வையாபுரியிடம் கூறினாள்.

"ஏண்டி அரட்டை... சாப்பிடும் போதும் வாயடித்துக் கொண்டுதான் இருக்கணுமா? பேசாமல் சாப்பிடு..." சுந்தராம்பாள் அதட்டியபடி பரிமாறினாள்.

"வாவ்... மீன் புலாவ்... மீன் வறுவல்... மீன் குழம்பு... அம்மா இத்தனை வெரைட்டியை உங்களால் சமைக்க முடியும்னு இன்றைக்குத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். கையை ஒளித்து வைத்திருந்தீங்களா?"

"ஆமாண்டி... என்னிடமிருக்கும் கையை ஒளித்து வைத்து கொண்டுதான் இருந்தேன். இன்றைக்கு மீராவுக்காகவும் என் அண்ணனுக்காகவும் ஒளித்து வைத்திருந்த கையை வெளியே கொண்டு வந்து விட்டேன்... போதுமா... இனிச் சாப்பிடு..."

மீரா வரிசைப் பற்கள் தெரிய சுபாங்கிணியைப் பார்த்து சிரித்தாள். அவளது சிரிப்பைக் கண்ட ரகுநந்தனுக்கு முல்லைப் பூக்களின் வரிசை நினைவில் வந்தது.

'சிரிக்கும் போது எவ்வளவு அழகாக இருக்கிறாள் என்று எண்ணமிடும் போதே... வந்ததில் இருந்து அவள் சிரிக்காதது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அவன்தான் அவளை சிரிக்க விடாமல் முறைத்துக் கொண்டே அலைந்தானே'

மதிய உணவிற்கு பின் எல்லோரும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். மீரா... வையாபுரியின் அருகில் அமர்ந்திருந்தாள்... மகளின் முகத்தைக் கவனித்த வையாபுரி... ஆவுடையம்மாளைப் பார்த்து

"அத்தை... என் மகளை உங்கள் எல்லோரின் பாதுகாப்பிலும் விட்டு விட்டுப் போகிறேன்... பார்த்துக் கொள்ளுங்கள்", என்று நாதளுதளுக்கக் கூறினார்.

ராமசாமி மனதில் வையாபுரியின் செயலை மெச்சிக் கொண்டார். வீட்டுக்கு பெரியவர்களிடம் அவர் இவ்விதமாய் கூறியது வையாபுரியின் மேல் ராமசாமி வைத்திருந்த மரியாதையை அதிகரித்தது.

"எதுக்குப்பா கண்கலங்குற. மீரா இங்கே வந்து எங்களுடன் தங்குவதில் எங்களுக்கெல்லாம் எவ்வளவு சந்தோசம் தெரியுமா? நீ கவலைப்படாம வெளிதேசம் போயிட்டு வா... மீராவை நாங்க பார்த்துக்கிறோம். எனக்கு



சுபா வேறு... மீரா வேறு இல்லை... போதுமா...", ஆவுடையம்மாள் மீராவைப் பரிவா பார்த்தபடி கூறினாள்.

அப்போது மட்டுமல்ல... இரவு உணவிற்கு பின்... கிளம்பும் போதும் வையாபுரி கண் கலங்கினார்.

"சுந்தரி... வாய்க்கு வாய் என்னை அண்ணான்னு நீ கூப்பிடும் நம்பிக்கையில்தான் நான் மீராவை இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன்... என்னால் அவளுக்கு பணத்தையும்... செல்வத்தையும் கொடுக்க முடிந்தது... அன்பையும் ஆதரவையும் தரும் பாசம் மிகுந்த சொந்தங்களைக் கொடுக்க முடியவில்லை. என் சொந்தமென்று நான் நினைப்பது, எனக்கு இருப்பது எல்லாமே நீங்கள்தான்... உங்கள் எல்லோரிடமும் மீராவை ஒப்படைத்து விட்டுச் செல்கிறேன்... பார்த்துக் கொள்ளுங்கள்..."

"ஏன் அண்ணா இப்படி மனம் கலங்கறீங்க... மீரா வேறு சுபா வேறு இல்லைன்னு அத்தையே சொன்ன பின்னாலும் இப்படி நீங்க மனம் கலங்கலாமா? மீராவை நாங்க பார்த்துக்கிறோம். நீங்க பத்திரமாய் போய் விட்டு வாங்கண்ணா..." சுந்தராம்பாள் கனிவுடன் கூறினாள்.

"சோமு..."

"ஏண்டா... என்னிடம் வேற தனியாய் சொல்லனுமா? நீ பத்திரமாய் போய்விட்டு வா... மீரா எங்களுடன் பத்திரமாய் இருப்பாள்..."

எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்ட வையாபுரி மீராவின் தலையை வருடினார். அவர் கண்ணில் மீண்டும் நீர் நிறைந்தது.

"மீரா... நீ அறிவான பெண்... இங்கேயிருக்கும் எல்லோரின் மனமும் கோணாதபடி நீ நடந்து கொள்ள வேண்டும்..."

வேண்டும்..."

"ஆகட்டும் அப்பா... என்னால் உங்களுக்கு மனச்சங்கடம் வராது..."

மீரா மெல்லிய குரலில் பதிலளித்தாள். ரகுநந்தன் ஆச்சரியப்பட்டான்... கோடிஸ்வரராக இருந்தும் குணத்தை பெரிதாக நினைக்கும் தந்தை... அவர் சொல்படி நடக்கும் மகள்... இவரின் வளர்ப்பில் வளர்ந்த பெண்ணிற்கு பண்பில்லாத எண்ணம் தோன்றுமா?

வையாபுரி கிளம்பிச் சென்று விட்டார்... மீராவின் மனதில் ஓர் தனிமை உணர்வு எழுந்தது... அதைப் புரிந்து கொண்ட சுபாங்கிணி

"அண்ணி... வாங்க...வாங்க... வீட்டுக்குள் போகலாம்..." என்று அவசரமாய் கூறினாள்.

"எதற்கு இத்தனை அவசரம் சுபா?"

"டிவியில் 'மானாட...மயிலாட...' புரோக்ராம் பார்க்கத்தான்.. ஆமாம் அண்ணி... தெரியாமல்தான் கேட்கிறேன்... இந்த ரியாலிட்டி ஷோவில் ஜட்ஜாக உட்காருகிறவர்கள்... லா காலேஜில் படித்துவிட்டு வந்தாங்களா... என்ன?" சுபாங்கினி வேடிக்கையாய் வினவினாள். அவள் எதிர்பார்த்தது போலவே மீரா வாய் விட்டுச் சிரித்தாள்.

"உன்னோடு... முடியாது சுபா... எப்படி இப்படிக் கேள்விகளையெல்லாம் யோசிக்கிறாய்?"

"வேறு வேலை என்ன அவளுக்கு... இந்த வீட்டின் ஆண்பிள்ளைகள் ஆளுக்கு ஒரு தொழிலைப் பார்க்கப் போய்விடுகிறோம். பாட்டியும் அம்மாவும் வீட்டைப் பார்த்துக் கொள்வாங்க... இவள் வேலையில்லாமல் இப்படி யோசித்துக் கொண்டிருப்பாள்..." ரகுநந்தன் குறும்பாகக் கூறினான்.



"அண்ணா...வேண்டாம்... என்னுடன் வம்புக்கு வராதே... நான் ஒன்றும் சும்மா இல்லை... படித்துக் கொண்டுதான் இருக்கிறேன்... இப்போது காலேஜ் லீவ்... அதனால் பாட்டிக்கும்... அம்மாவுக்கும் கம்பெனி கொடுத்துக் கொண்டு இருக்கிறேன்..."

"நீ கம்பெனி கொடுத்து அவங்க செய்கிற வேலையை ஒழுங்காகச் செய்ய விடாமல் கெடுத்துக் கொண்டிருக்கிறாய்ன்னு சொல்லு..."

ரகுநந்தனும்... சுபாங்கிணியும் விளையாட்டாய் செய்த சச்சரவில் மனம் லயித்த மீராவின் மனதிலிருந்த தனிமை உணர்வு விலகி ஓடியே விட்டது. ஜாடையாய் மீராவின் முகம் பார்த்த சுபாங்கினி மனம் குளிர்ந்தவளாய் ரகுநந்தனைப் பார்த்து

"அண்ணா... போதும்... உன் மனதில் என்னைப்பற்றி இவ்வளவு பொறாமை இருக்கிறதா? இனி உன் பேச்சுக் காய்..." என்று கூறி விட்டு மீராவோடு வீட்டுக்குள் சென்றாள்.

ரகுநந்தன் அமைதியாய் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டான். சோமசுந்தரமும் அவனருகில் அமர்ந்தார்.

"இந்த வையாபுரி மாமாவிற்கு அவருடைய மகள் மேல் நிறைய பாசம் போல..."

"இருக்காதாடா... அவன் காதல் கல்யாணம் பண்ணிக் கிட்டான். ஒரே இனம்தான்... கல்யாணம் பண்ணிக் கொள்கிற உறவு முறைதான்... ஆனால் இரண்டு குடும்பத்துக்கும் பகை... இவங்க கல்யாணத்தை இரண்டு பக்கமும் ஏற்றுக்கலை... தள்ளி வைச்சிட்டாங்க... வைராக்கியமாய் உழைத்து முன்னேறியவன் இந்த வையாபுரி... விதிவசத்தால் மீராவிற்கு ஆறு வயது

இருக்கும்போது வையாபுரியின் மனைவி இறந்து விட்டாள்...
அவன் இடிஞ்சு போயிட்டான்... ஆனால் மகளுக்காக
மனசைத் தேத்திக்கிட்டு வாழ்ந்துக்கிட்டு இருக்கான்... பண
வந்ததும் சொந்தம் வந்து ஒட்டிக் கொள்ளப் பார்த்தது... இவன்
சேர்த்துக்கலை... என் பெண்டாட்டி உயிரோடு இருந்தபோது
சேர்த்துக் கொள்ளாத சொந்தம் எனக்கு வேண்டாம்
னுட்டான்... மீரா பாவம்... தனிமையில் வளர்ந்த பெண்...
தகப்பனின் மனம் நோக ஒரு வார்த்தை கூடப் பேசாதவள்...
இப்படிப்பட்ட குணமுள்ள பெண்ணை எங்கே தேடினாலும்
கண்டுபிடிக்க முடியாதுடா ரகு..."

"ஏன் அப்பா... நம் சுபா இல்லையா?"

"சுபாவை வளர்க்க உன் பாட்டியும்... அம்மாவும் தகுந்த
பெண்களாக வீட்டில் இருந்தார்கள்... கண்டிப்பைக் காட்ட
உன் தாத்தாவும்... நானும்... நீயும் இருக்கிறோம்... அதனால்
சுபா பண்பான... குணமுள்ள பெண்ணாக இருப்பதில்
ஆச்சரியமில்லை. ஆனால் மீராவை நினைத்துப் பார்...
சொந்தங்களுக்கு முன்னால் அவர்களால் எட்ட முடியாத
அளவிற்கு வளர வேண்டுமென்ற வைராக்கித்துடன்
இருந்தான் வையாபுரி... தொழில் விசயமாய் அடிக்கடி
வெளிநாடு போய் விடுவான்... வேலையாள்கள் மத்தியில்
வளர்ந்த தாயில்லாத பெண்ணடா அவள்... அந்தப் பெண்
இவ்வளவு பண்போடு வளர்ந்திருப்பது ஆச்சரியமில்லையா?
வேறு எதுவும் வேண்டாம் ரகு... சென்னையிலேயே வளர்ந்த
பெண்... சேலை கட்டி பழக்கம் இருக்காது... இங்கே சேலை
கட்டி நிற்கிறதைக் கவனித்தாயா? இதுதான் மீரா..."

ரகுநந்தனின் மனதில் அன்று கல்லூரி வாசலில் நின்று
கொண்டிருந்த மீரா தோன்றினாள்.



'ஆமாம்... அன்று சுடிதார்தானே அணிந்திருந்தாள்'

"அது மட்டுமில்லை ரகு... காலையில் நீ ஊஞ்சலில் இருந்து அவளை கீழே தள்ளி விட்டாயாமே..."

"அப்பா... தெரியாமல் ... அது நடந்து விட்டது..."

"போனதைப் பற்றி இப்போது பேசி என்ன ஆகப் போகிறது? நான் சொல்ல வந்ததே வேறு... நெற்றியில் பட்ட காயத்தை மறைக்க முடியை கீழே இழுத்து சீவிக்கொண்டு இருந்ததைக் கவனித்தாயா...? உன்னையும் காட்டி கொடுக்கக் கூடாது... அவளுடைய தகப்பனின் மனமும் சங்கடப்படக்கூடாதுன்னு யோசிச்சு வேலை செய்திருக் கிறாள்... வையாபுரி மட்டும் அந்தக் காயத்தைக் கவனித்து இருந்தான்னு வை... நம்மைப் பற்றி அவன் என்ன நினைப்பான்? வந்து ஒரு நாள் கூட ஆகவில்லை... நம் பெண்ணின் மண்டையை உடைத்து விட்டார்கள்... இவர்களை நம்பி பெண்ணை எப்படி விட்டு விட்டுப் போவதுன்னு நினைக்க மாட்டானா?"

"ஸாரி... அப்பா..."

"இப்போது மன்னிப்புக் கேட்டு என்ன ஆகப்போகுது? அவன் மகளை அவன் பண்போடு வளர்த்திருக்கான்... உன்னை நான் அப்படி வளர்க்கவில்லையா?"

"அப்பா..."

"வீட்டுக்கு வந்த விருந்தாளியை கீழே தள்ளி விட்டுக் காயம் பண்ணுகிற அளவுக்கு நீ நடக்கலாமா? இப்போதும் கூட மீரா இந்த விசயத்தைச் சொல்லாமல் மறைத்திருக் கிறாள். சுபா சொல்லித்தான் சுந்தரிக்கும்... எனக்கும் தெரிந்தது. வேண்டாம் ரகு... மீரா இங்கே இருப்பதுதான் அவளுக்கு பாதுகாப்புன்னு நினைச்சுத்தான் வையாபுரி

என்மேல் வைத்த நம்பிக்கையை காப்பத்து...” சோமசுந்தரம் அதற்கு மேல் பேசாமல் எழுந்து வீட்டுக்குள் போய் விட்டார்.

ரகுநந்தன் வெகுநேரம் வெளித் திண்ணையிலேயே அமர்ந்து இருந்தான். அவன் மனம் வலித்தது. அவனுடைய தகப்பனார் இதற்கு முன்னால் இப்படிப்பட்ட வார்த்தைகளை அவனைப் பார்த்துக் கூறியதில்லை... கூறும்படி அவன் நடந்து கொண்டதும் இல்லை.

‘மீராவின் குணம் எப்படிப்பட்டதாய் இருந்தால் எனக்கு என்ன? தினேஷை அவள் ஏமாற்றியிருந்தால் அது அவளது சொந்த விசயம்... நான் ஏன் அவளிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும்...’ என்று யோசிக்கும்போதே அவனது அடி மனது அவனைப் பார்த்துச் சிரித்தது.

‘அடப் பைத்தியக்காரா... அவள் மேல் உனக்கு ஈர்ப்பு தோன்றி விட்டது... உன்னை அவள் வசீகரித்து விட்டாள்... நீ விரும்பும் பெண் குணக் கேடானவளாக இருப்பதை உன்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை... அவள் மீதிருக்கும் அதீதமான ஈடுபாட்டினால் அவளை நீ தண்டிக்க விழைகிறாய்... இதுதாண்டா விசயம்... புரிஞ்சுக்கோ...’

ரகுநந்தன் கண்களை மூடிக்கொண்டான்... மூடிய விழிகளுக்குள் மோகப் பார்வை பார்த்தபடி மீரா தோன்றினாள்.

‘நீயேன் இங்கு வந்தாய் மீரா...’ அவன் மனதிற்குள் வினவினான்.

‘என் நெஞ்சமெனும் குளத்தில் கல்லை விட்டெறிந்து என்னைச் சலனப்படுத்தவா வந்தாய்? உன்னைக் கண்ட விநாடியில் உன்னால் கவரப்பட்டேன்... உன் செயல்களைக் கேட்ட பின்னாலும் உன்னை மறக்க முடியாமல் தவித்தேன். இன்று என் கண்ணெதிரே நீ நிற்கும் போது காதல் கொழுந்து விட்டு எரிகிறதே... அதை மேலும் தூண்டுவது போல் நீ கள்ளப் பார்வை வேறு பார்க்கிறாயே... நான் என்ன செய்வேன்? உன்னை என்னிடமிருந்து தூர விலகி நிற்க வைக்க நான் பண்ணிய செயலால் என் குடும்பமே வருந்துகிறதே...’



ரகுநந்தன் துயரத்துடன் விழி மூடினான்.

## 17

ஆற்றோர நாணல்களை பிடுங்கி அதில் கண் பதித்துப் பார்த்தாள் மீரா... அதன் துளையில் சுபாங்கிணி தலைமேல் இரு கைகளின் நடுவிரலை மட்டும் கொம்பு போல் வைத்துச் சிரித்தபடி தெரிந்தாள்.

“என்ன அண்ணி... வியூ பார்க்கறீங்களா? சினிமா எடுக்கப் போறீங்களா? என்னை ஹீரோயினாக போடுங்கள் அண்ணி...”

“இப்படி கொம்பு முளைத்தது போல் போஸ் கொடுத்தால் யார்தான் உன்னை ஹீரோயினாகப் போடுவார்களாம்...”

மீரா சிரித்தபடி ஆற்றோரமாய் இறங்கி அதில் சேலை நனைய நடந்தாள். அவளது கால்களைத் தழுவிக் கொண்டு ஓடிய ஆறு அவளது உற்சாகத்தை அறிந்தது போல சிறு சிறு மலைகளாக எழும்பி... அவள் சேலை தொட்டுச் சென்றது.

“சுபா... இப்படியே ஆற்றில் இறங்கி குளிக்கலாமா?”

“ஓ... ஆனால் இதைவிட அருவிக்குளியல் பிரமாதமாய் இருக்குமே அண்ணி... நாம் அருவியைப் பார்க்கத்தானே போகிறோம் அங்கேயே குளியல் போடலாமே...”

"அருவியல் நீந்த முடியுமா ?"

"உங்களுக்கு நீந்தத் தெரியுமா ?"

"தெரியும் சுபா... அப்பா சிறுவயதிலேயே சொல்லிக் கொடுத்திருக்கிறார்... எங்கள் வீட்டில் நீச்சல் குளம் உண்டு."

"இன்ட்ரெஸ்டிங் அண்ணி... ஓர் நாள் நான் அதைப் பார்க்க வருவேன்.."

"வெறுமனே பார்த்து விட்டுத் திரும்பாமல் என்னோடு அங்கேயே தங்கிக் கொள்ள வேண்டும்..."

"என் படிப்பு என்ன ஆவது ?"

"சென்னையில் காலேஜ் இல்லையா ? என்னுடன் இருந்து படி... நானும் மேலே படிக்கத்தான் ஆசைப்படுகிறேன்..."

"ஆனால் பாட்டியை விட்டு விட்டு வரவேண்டுமே... இந்த ஊரை... வீட்டை... அண்ணா... அப்பாம்மாவை விட்டு வர வேண்டுமே... என்னால் அது எப்படி முடியும் அண்ணி...?"

மீரா சுபாங்கிணியை பிரியத்துடன் பார்த்தாள்.

'இவள் பிறந்த வீட்டின் மேல் மிகுந்த பற்றுக் கொண்டவள்.. பிறந்த மண்ணை நேசிப்பவள்...'

மீராவிற்கு கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்' நாவல் நினைவில் வந்தது. அதன் கதாநாயகி குந்தவை தேவியாரும் இப்படித்தான் பிறந்த நாட்டின் மீது அதிக பற்று வைத்திருப்பார்கள்.

"என்ன அண்ணி யோசிக்கறீங்க ?"

"நீ 'பொன்னியின் செல்வன்' கதை படித்திருக்கிறாயா ?"

"பாட்டிக்கு படித்துக் காட்டி இருக்கிறேன்..."

"அதில் குந்தவைதேவி பிறந்த வீட்டின் மேல் பாசமாய்



இருப்பது போல நீயும் இருக்கிறாய்... அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்"

"அப்போ...என்னைத்தேடி வந்திய தேவன் வருவான்னு சொல்லுங்கள்..."

"வருவார்... வருவார்... வராமலா இருப்பார்... ஆனால் சுபா... உன் அண்ணனிடம் எடுத்ததெற்கெல்லாம் 'காய்' விடுகிறாயே... அந்த அண்ணனைப் பிரிய மனமில்லையா உனக்கு... ?"

மீராவின் கேள்வியைக் கேட்ட சுபாங்கிணிக்கு உள்ளூர சிரிப்பு வந்தது... இப்போது இவளுக்கு ரகுநந்தனைப் பற்றிப் பேச வேண்டும்... அவனைப் பற்றிய எதையாவது காது கொடுத்துக் கேட்க வேண்டும்... அதற்காக சுபாங்கிணியின் வாயைக் கிண்டுகிறாள்.

"அண்ணன் கூட 'டு' விடுவதெல்லாம்... சும்மா... ஜுஜுபிக்கு... நிஜத்தில் அண்ணன் மேல் எனக்குப் பிரியம் அதிகம் அண்ணி..."

"அப்படியா... உன் அண்ணனுக்கு நீந்தத் தெரியுமா ?"

"நீந்தத் தெரிந்தால் என்ன கேட்க உத்தேசமாம், உன் அண்ணிக்கு என்னுடன் நீச்சல் போட்டி போட உத்தேசமா ?" என்ற ரகுநந்தனின் குரல் கேட்டு இருவரும் திரும்பினர்.

ரகுநந்தன் கால்களை அகலவிரித்து கைகளை மார்போடு கட்டிக் கொண்டு துளைக்கும் பார்வையோடு நின்றருந்தான். மீராவின் உடலில் 'ஜிம்'மென்ற ஓர் உணர்வு பொங்கி எழுந்தது. சுபாங்கிணியோ ஆச்சர்யத்தில் இருந்தாள்.

"ஹை... அண்ணா...! எங்கே இந்தப் பக்கம் வந்திருக்கிறாய்.. தலைக்கு மேல் வேலையிருந்தாலும் உன் ஸ்டோரை விட்டு நகர மாட்டாயே..."

மாட்டாயே..."

"ம்ம்... வீட்டுக்கு சாப்பிட வந்தேன்... வெயில் நேரத்தில் நீங்கள் இரண்டு பேரும் அருவிக்கரைக்கு போயிருப்பதாக அம்மா சொன்னாங்க... அதுதான் ஒரு அதட்டல் போட்டுக் கூப்பிட்டுப் போகலாம் என்று வந்தேன்... இங்கே வந்து பார்த்தால் இருவரும் அருவிக் கரைக்குப் போகாமல் ஆற்றங்கரையில் நின்று கொண்டு கதை பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்..."

"அருவிக்கரைக்குத்தான் கிளம்பினோம்... ஆற்றங்கரையோரமாய் நடக்க வேண்டுமென்று அண்ணி ஆசைப் பட்டாங்க... அதனால் நடந்தோம்... நடந்தோம்... நடந்து கொண்டே இருக்கிறோம்..."

"இது என்ன புதிதாய் நடை பயணம்?..."

"ஆற்றங்கரையில் கால்களை நனைய விட்டுக் கொண்டு கரையேற மாட்டேனென்று அடம் பிடித்தால் என்ன செய்வதாம்? இதில் வேறு இயற்கைக் காட்சிகளை ரசிக்கிறேன்னு... ஆற்றங்கரை நாணல்களை தொட்டு விளையாடிக் கொண்டிருந்தால் அருவிக் கரைக்கு போக இன்னும் எத்தனை நாள்களாகுமோ?"

சுபாங்கிணி கேலியாய் கூறிக்கொண்டு வர மீரா வெட்கப்பட்டுப் போனாள். கன்னம் சிவக்க சுபாங்கினியை அடக்க முயன்றாள்.

"ஷ்ஷ்... சுபா... இதைப் போயெல்லாம் அவரிடம் சொல்லாதே..."

"ஏன் சுபா என்னிடம் சொன்னால் என்ன? நான் என்ன அந்நியனா...?"

"ஆமாம் அண்ணி... அண்ணன் ஒன்றும் அந்நியனில்லை...



முடியைப் பாருங்கள் ... அந்நியன் மாதிரியா முடி வளர்த்திருக்கிறான்? சில சமயம் அந்நியன் போல அடாவடி பண்ணுவான்... உங்கள் தலையில் காயத்தை கண்ட பின்... அண்ணனின் கோபம்தான் அம்பேல் ஆகிவிட்டதே... முழு சரணாகதி ஆகிவிட்டானே... அப்புறம் என்ன...?"

"அவன்... இவனென்று ஏகவசனத்தில் பேசுவதெல்லாம் இங்கு வேண்டாம்..."

"அதெல்லாம் புதிதாய்... பழக்கத்தை மாற்றிக் கொள்ள முடியாது... நான் அப்படித்தான் கூப்பிடுவேன்... நீ மட்டும் அண்ணியை வா...போ என்று ஏன் கூப்பிடுகிறாய்...?"

"சுபா... ப்ளீஸ்"

"நீங்க சும்மாயிருங்க அண்ணி... இதுக்கு ஒரு நியாயம்... எனக்கு ஒரு நியாயமா? என் கேள்விக்கு பதில் சொல் அண்ணா..."

ரகுநந்தன் மீராவைப் பார்த்தான்... அவள் உதடுகடித்துக் கொண்டு ஆற்றுநீரைப் பார்த்தாள். ரகுநந்தனின் முகம் மென்மையானது.

"நான் வாங்க... போங்க என்று கூப்பிட வேண்டும் என்று உன் அண்ணியைச் சொல்லச் சொல்: நான் அப்படியே கூப்பிடுகிறேன்..."

"சொல்லுங்கள் அண்ணி..."

"சுபா... சும்மாயிரு... என்னை வாங்க போங்க... என்று கூப்பிட்டு மூன்றாம் மனுஷியாக்கத்தான் நீ விரும்புகிறாயா?"

மீராவின் பதிலில் ரகுநந்தனின் முகம் மலர்ந்து விட்டது. சுபாங்கிணியைப் பார்த்துச் சிரித்தான்.

"இதுசரி... நீங்கள் இருவரும் இப்போது கூட்டா...? நான்தான் தனியா...?" சுபாங்கிணி பொய்யாய் கோபம் காட்டினாள்.

"ஐயோ... சுபா... நீ காய் விடுவதை உன் அண்ணனோடு நிறுத்திக் கொள். என்னிடம் காய் விட்டு விடாதே... என்னால் தாங்கிக் கொள்ள முடியாது..." மீரா சுபாங்கிணியின் முகவாயைப் பிடித்துக் கெஞ்சினாள்.

"அண்ணி... சும்மா் விளையாட்டுக்குத்தான் அண்ணி சொன்னேன். பயந்து விட்டீங்களா... நீங்க ரொம்ப ஸாப்ட் அண்ணி..." சுபாங்கிணி மீராவின் தோள் மேல் கைபோட்டு அணைத்துக் கொண்டாள்.

"நானும் இந்த பதினைந்து நாள்களாக பார்க்கிறேன்... உங்கள் இருவரையும்... பிய்த்தாலும் பிய்க்க முடியாது போல் இருக்கிறதே... சுபா... இன்னும் ஐந்தரை மாதங்களில் மீரா சென்னைக்கு திரும்பி விடுவாள்... அதற்கப்புறம் இந்த அண்ணனிடம்தான் நீ தஞ்சமாக வேண்டும்."

"ஐந்தரை மாதம் கழித்து யார் அண்ணியை அனுப்பப் போகிறார்களாம்... நான் அண்ணியை போக விடாமல் என்னுடன் வைத்துக் கொள்வேன்... ஆமாம் அண்ணா... மதியத்தில் சாப்பிட வீட்டுக்கு வரமாட்டாயே... இப்போதெல்லாம் அடிக்கடி மதியச் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு விஜயம் செய்கிறாயே... என்ன விசயம்?"

"உன் அண்ணியின் தலைக் காயத்தை பார்க்க வேண்டும் என்ற அக்கறையில்தான் வருகிறேனென்று வைத்துக் கொள்ளேன்..."

"ஏய்ய்... சும்மா கப்ஸா விடாதே அண்ணா... அண்ணியின் காயம் ஆறி சின்னத்தழும்பே... நீ மாடியில் ஊஞ்சலாட்டிய ட்சணத்தின் நினைவுச் சின்னமாய்



வேளை அந்த நினைவுச் சின்னத்தைப் பார்க்கத்தான் வருகிறாயா?"

சுபாவின் கோபமான கேலிப் பேச்சைக் கேட்ட ரகுநந்தனின் பார்வை மீராவின் மேல் நெற்றியின் மீதிருந்த தழும்பின் மேல் விழுந்தது... மீரா லஜ்ஜையுடன் முகம் திருப்பிக் கொண்டாள்.

நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இந்தத் தழும்பு ஓர் நினைவு சின்னம்தான்... என்று மீரா... ரகுநந்தன் இருவருமே நினைத்துக் கொண்டார்கள்.

"நான் வரும்போது உன் அண்ணி என் நீச்சலைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தாளே... என்ன விசயமாம்..."

"அது... நான் சும்மா கேட்டேன் சுபா... வா... நாம் அருவிக் கரைக்குப் போகலாம்... நேரமாகிவிட்டது..."

"நேரமாகிவிட்டதுதான் தெரியுதில்லை... அப்புறமும் என்ன அருவிக்கரைக்கு போக வேண்டியிருக்கு? அருவிக் கரைக்கு இன்னொருநாள் போய் கொள்ளலாம்... இன்றைக்கு ஆற்றங்கரையை ரசித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பச் சொல்லு..."

"ஏன் அதை நீயே சொல்லு... விட்டால் இரண்டுபேரும் என்னை வைத்து இன்றைக்கு பூராவும் ஓட்டி விடுவீர்கள்... ஆமாம் தெரியாமல் தான் கேட்கிறேன்... அருவிக்கரைக்கு இன்னொருநாள் போகலாம் என்று நீயும் ஒட்டிக் கொள்கிறாயே... என்ன விசயம்?"

"உங்கள் இருவரையும் தனியே அனுப்பக் கூடாதென்பது தான் விசயம்... மீரா... இங்கே வாயேன்... இந்த ஆற்றங்கரை ஓரமாய் போனால் படித்துறை வரும்..."

"படித்துறை என்றால்...?"

"எல்லோரும் குளிக்க வசதியான ... இறங்குவதற்கு நீண்ட மாடிப் படிகள் போல் கட்டப்பட்டதுதான் படித்துறை. அங்கே போகலாம் வா..."

"நானும் வரலாமா... இல்லை என்னை இங்கேயே கழற்றி விட்டு விட்டு போகப் போகிறீர்களா ?"

சுபாங்கிணி குறும்பாய் வினவ... மீரா அவளது கையோடு கை கோர்த்துக் கொண்டாள். ரகுநந்தன் மறுபக்கம் அவளைத் தோள் தொட்டு அணைத்துக் கொண்டான்.

"போதும்... போதும்... இருவரையும் மன்னித்தேன்... தாஜா பண்ணுவதை நிறுத்துங்கள்..."

சுபாங்கிணியை நடுவில் விட்டு இருபுறமும் மீராவும்... ரகுநந்தனும் பேசியபடி படித்துறையை நோக்கி நடந்தார்கள். சற்று முன் இருந்ததைவிட ஆற்றங்கரை இப்போது மிக அழகாக இருப்பது போல் தோன்றியது மீராவிற்கு... படித்துறையை அடைந்ததும்...

"வாவ்... எவ்வளவு அழகாகவும் வசதியாகவும் இருக்கிறது..." என்று வியந்தபடி... மடமடவென்று படிகளில் இறங்கிய மீரா ஆற்றுக்குள் இடுப்பளவு இறங்கி விட்டாள்.

"அண்ணி... என்ன இது... மேலே ஏறிவாங்க... ஆற்றில் குளித்து உங்களுக்கு பழக்கமில்லையே..."

"ப்ளீஸ்... சுபா... நீதானே... ஆற்றில் குளிக்கலாம் என்று கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னாய்... ?"

"அருவியில் குளிக்கலாம் என்றும் சேர்த்துச் சொன்னேன் மறந்து விட்டதா ?"

"விடு சுபா... அவள் ஆசையை தடுப்பானேன்..."

"அண்ணா... தனியாய் எப்படி ஆற்றிற்குள் அவங்களை றங்க விடுவது... ?"



"தனியாய் விடுவானேன்... வா... நீயும் நானும் தண்ணீரில் குதிப்போம்... அவளுக்கு துணையாய் இருக்கும்..."

"வேறு வழி... ?" என்றபடி சுபாங்கிணி நீருக்குள் இறங்கி விர்ரென்று நீந்தினாள்.

"ஹேய்... சுபா... என்னைத் தண்ணீரில் இறங்காதேன்னு பயமுறுத்தி விட்டு நீ முதல் ஆளாய் நீந்துகிறாயே...", என்றபடி நீரைக் கிழித்துக் கொண்டு அவளருகே நெருங்கினாள் மீரா.

"நீச்சல் போட்டிக்கு நீங்கள் இருவரும் என்னுடன் வருகிறீர்களா ?" என்று கேட்டபடி அவர்களை முந்திக் கொண்டு நீந்தினான் ரகுநந்தன்.

மூவருமே... முழு உடையோடுதான் நீரில் பாய்ந்திருந் தார்கள். சுபாங்கிணி பாவாடை தாவணியில் இருந்தாள். மீரா சேலையில் இருந்தாள். ரகுநந்தன் பேண்ட் சர்ட்டில் நீந்த ஆரம்பித்தான்.

மூவருமே நீச்சலில் போட்டி போட ஆரம்பித்தார்கள்... வாளை மீனைப் போல் நீந்திக் கொண்டிருந்த மீராவைப் பார்த்தபடி அருகே நீந்திய ரகுநந்தன்... சுபாங்கிணி பின் தங்கி விட்டதை உணர்ந்தான்.

## 18

மறுகரையை இருவருமே ஒன்று போல் தொட்டார்கள்... மூச்சு வாங்க மீரா... மறுபக்கமிருந்த படித்துறையில் அமர்ந்தாள்... ஈரச் சேலை உடலோடு ஒட்டிக் கொண்டிருந்தது. அவளது மேனியில் நீர்த்திவலைகள் தென்பட்டது... நீர் சொட்டச் சொட்ட... கடல் கன்னிபோல் அமர்ந்திருந்தவளைக் கண்டதும் ரகுநந்தனின் மனதில் மோகத்தீ பற்றிக் கொண்டது.

திரும்பிப் பார்த்தான். சுபாங்கிணி தூரத்தில் நீந்தி வந்து கொண்டிருந்தாள்... அருகில் தங்கை இல்லாத தைரியத்துடன் மீராவை ஆசை தீரப் பார்த்தான்... அவனது பார்வையை உணராதவளாய் கால்களை தண்ணீருக்குள் விட்டு அலைந்து கொண்டிருந்த மீரா தற்செயலாய் நிமிர்ந்து பார்த்தவள் ரகுநந்தனின் பார்வையைக் கண்டாள்... உடல் கிளர்ச்சியுற அவளும் சுபாங்கிணியைத் திரும்பிப் பார்த்தாள்... அவள் நெருங்கி வந்து கொண்டிருந்தாள்.

."ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்...?" என்றாள் மீரா தடுமாற்றத்துடன்.

"பார்வைதானே... பார்க்கக்கூடக் கூடாதா?" ரகுநந்தனின் குரலில் இருந்த ஏதோ ஒன்று... அவளை எங்கோ அழைத்துச் சென்றது.

"உஷ்... அம்மா... என்னை டிரில் வாங்கவேண்டுமென்று நீங்கள் இருவரும் எத்தனை நாளாய் பிளான் போட்டீர்கள்..." என்றபடி சுபாங்கிணி கரையைத் தொட்டாள்.

"ஏய் ... நீச்சல் போட்டியில் தோற்று விட்டு மழுப்பப் பார்க்காதே..."

"நீ மட்டும் ஜெயித்தாயாக்கும்... அண்ணியுடன் சமமாய் தானே நீந்தி வந்தாய்..." சுபாங்கிணி படியில் அமர்ந்து கொண்டாள்.

"போகலாமா சுபா..." மீரா ரகுநந்தனின் பார்வையிலிருந்து தப்பிக்க விரும்பியவளாய் கூறினாள்.

"உடனேவா... நீங்க வேற அண்ணி... மூச்சு வாங்குது... அண்ணா எனக்கு உடனே இளநீருக்கு ஏற்பாடு பண்ணு..."

"சுபா... இங்கே எப்படி இளநீர் கிடைக்கும்..."



"என் அண்ணன் மனம் வைத்தால் நடுக்கடலில் கூட இளநீர் கிடைக்கும்..." பெருமையாய் கூறினாள் சுபாங்கிணி.

"அடேங்கப்பா... பெரிய சூப்பர்மேன் ரேஞ்சிற்கு உன் அண்ணனை உயர்த்துகிறாய்... பார்ப்போம்... அவர் எப்படி உனக்கு இந்த இடத்திற்கு இளநீரைக் கொண்டு வந்து தருவாரென்று..."

மீரா மிகவும் உற்சாகமான மனநிலையில் இருந்தாள்... ரகுநந்தனின் பார்வை... அவளுக்குள் ஓர் ரசாயண மாற்றத்தை உண்டு பண்ணியிருந்தது. அவனை வம்பிழுக்க வேண்டும் போல் தோன்றியது.

"உன் அண்ணிக்கு இன்னும் என்னைப் பற்றித் தெரியவில்லை போல சொல்லி விடு சுபா... சரியாய் பத்தே நிமிடத்தில் இங்கே இளநீர் வந்து இறங்கப் போகிறது பார்..." ரகுநந்தன் செல்போனில் யாருடனோ பேசி கொண்டே சுபாங்கிணியிடம் இதைக் கூறினான்.

சற்று நேரத்தில் சைக்கிளின் பின் கேரியரில் இளநீர் குலைகளைப் போட்டுக் கொண்டு ஒரு ஆள்வந்து இறங்கினான்...இடுப்பில் செருகியிருந்த அருவாளை எடுத்து இளநீரைச் சீவி ரகுநந்தனிடம் கொடுத்தான். அவன் அதை வாங்கி தங்கையிடம் கொடுத்து விட்டு "எப்படி...?" என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு மீராவை வெற்றிப் பார்வை பார்த்தான்.

உதட்டைச் சுழித்து அவனது வெற்றியை அங்கீகரித்த மீராவிடம் ரகுநந்தன் இளநியைக் கொடுக்க... அவள் திகைத்தாள்.

"இதை நீங்கள் குடிப்பது போல் எனக்கு குடிக்க வராதே..."

"ம்ம்... இங்கே ஸ்டராவிற்கு எங்கே போவது..." சுற்று

முற்றும் பார்த்த ரகுநந்தன்.

"ஐடியா..." என்று விரல் சொடுக்கிக் கொண்டான்.

"என்ன..." மீரா புரியாமல் விழிக்க...

"நீங்கள் கவலையே படாதீங்க அண்ணி... அண்ணன் மூளை அருமையாய் வேலை செய்யும் மூளை... ஏதாவது வழி செய்வார் பாருங்களேன்..." என்று சுபாங்கிணி கூறினாள்.

"இன்றைக்கென்ன சுபா... உன் அண்ணனின் பெருமையை அளந்து விடுகிறாய்..." மீரா கேலியாய் நகைத்தாள்.

"சிரிக்கவா செய்கிறாய்... ஒரு இளநியை ஒழுங்காய் குடிக்கத் தெரியவில்லை... என்னைக் கேலி செய்வதற்கு மட்டும் நன்றாகத் தெரிகின்றது..." என்று கூறியபடி ரகுநந்தன்... ஆற்றோரமாய் இருந்த நாணல்களில் ஒன்றைப் பிடுங்கி ஒடித்தான். அது துளையுடன் இருந்தது இளநிக்குள் போட்டு மீராவிடம் குடுத்து

"குடி..." என்றான்.

அவள் உறிஞ்சுக் குடிக்க ஆரம்பித்தாள்.

"என் அண்ணனின் அறிவைப் பற்றி இப்போது என்ன சொல்கிறீர்கள்?"

"ஆஹா... என்னே அறிவு... என்னே அறிவு..."

"சுபா... உன் அண்ணி என்னைப் பாராட்டுகிறாளா இல்லை பாராட்டுவது போல் கேலி செய்கிறாளா... ஆள் பார்க்க ஊமை போல் இருந்து கொண்டு வாயைத் திறந்தால் என்ன பேச்சு பேசுகிறாள் பார்..." ரகுநந்தன் மீராவை காதலாய் பார்த்துக் கொண்டே கூறினான்.

பதிலுக்கு மீரா உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள். இருவரையும் கவனித்த சுபாங்கிணி,



"பார்த்துக் கொண்டுதான் அண்ணா இருக்கிறேன்..." என்றாள்.

"சரிசரி... எழுந்திரு... வீட்டிற்குப் போய் யோசிக்கலாம்..." என்று தங்கைக்கு கை கொடுத்து எழுப்பி விட்டான் ரகுநந்தன்.

இளநி கொண்டு வந்தவன் சைக்கிளில் ஏறிப் போய்விட... மீரா "அவன் பணம் வாங்காமல் போகிறானே..." என்று அவசரமாய் கூறினாள்.

"எங்கள் தோப்பு இளநிக்கு எங்களிடமே பணம் வாங்குவானா?" சிரித்தான் ரகுநந்தன்.

"உங்களுக்கு தென்னந்தோப்பு இருக்கிறதா?"

"தென்னந்தோப்பும் இருக்கிறதா என்று கேள்..."

"வேறு என்ன தோப்பு இருக்கிறது?"

"வாழைத்தோப்பு... மாந்தோப்பு... கொய்யாத் தோப்பு..."

மீண்டும் இக்கரையில் இருந்து அக்கரைக்கு நிந்தினார்கள்... சுபாங்கிணி மெல்லப் பின் தங்கிவிட மீராவும்... ரகுநந்தனும் இம்முறையும் ஒன்று போல் கரையைத் தொட்டார்கள்... தண்ணீருக்குள் இருந்து மீரா படியேற முயன்றாள்... அவளது காலைச் சுற்றிக் கொண்டு ஈரச் சேலை அவளைக் கரையேற விடாமல் தடுக்க... தடுமாறி மீண்டும் தண்ணீருக்குள் விழப் போனாள். ரகுநந்தன் சரேலென்று அவளைத் தாவி தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

அவனது கைகளில் தொய்ந்து விழுந்த மீரா... நடப்பதை நம்ப முடியாமல் பிரமித்துப் போனாள்... அவனது முகம் பார்த்தபோது அதில் தென்பட்ட ஆயிரம் உணர்வுகள் அவளை அலை போல் அடித்துச் சென்றன.

'ஆற்றங்கரை அருகே அன்று ஒருநாள்
என்னை அணைத்து பலகதைகள் பேசியதெல்லாம்...'

பாரதியின் கவிதை மனதில் வந்தது... ஆற்றங்கரையினில் அவன் கைகளில் அவளிருக்க என்ன தவம் செய்தாளென்று அவளது உள்ளம் உருகியது.

மெல்ல அவன் கரத்திலிருந்து விலகி நின்றாள்... அவனது முகத்தைப் பார்க்க முடியாமல் குனிந்து ஈரச்சேலையை பிழிந்து விட்டுக் கொண்டாள்.

"அண்ணா... எனக்கு கைகொடு..." ஈரப் பாவாடை கனமாய் தண்ணீருக்குள் இருக்க சுபாங்கிணி கரம் நீட்டினாள்,

அவளுக்கு கரம் கொடுத்து தூக்கிவிட்ட ரகுநந்தன் மௌனமாக படியேறினான்... மீரா அவனை நன்றாகப் பார்த்தாள்... ஈரத்தலையிலிருந்து நீர்சொட்ட.... கலைந்திருந்த அவன் கேசம் அவள் மனதை கிளர்ச்சியுறச் செய்தது.

வீட்டுக்குத் திரும்பும் போது மூவருமே பேசவில்லை. ஆற்றில் நனைந்து வந்தவர்களைக் கண்டதும் சுந்தராம்பாள் கடிந்து கொண்டாள்.

"சின்னப் பிள்ளைகள் போல் ஆற்றில் ஆட்டம் போட்டு விட்டு வந்தீர்களா? ஏண்டா ரகு... பெரியவனாய்... லட்சணமாய் நீ இவர்களை அதட்டி அழைத்துக் கொண்டு வராமல் நீயும் சேர்ந்து லூட்டி அடித்து விட்டு வந்திருக்கிறாயே... நல்ல பிள்ளைடா நீ..."

அவர்கள் உடை மாற்றி தலை துவட்டிக் கொண்டு வந்த பின்னும் சுந்தராம்பாள் திட்டுவதை நிறுத்தவில்லை.

."சரி...விடு சுந்தரி... மீரா ஆற்றில் இறங்க ஆசைப்பட்டிருப்பாள்... இவங்களும் அவள் கூட சேர்ந்து



நனைந்திருப்பார்கள்... இளம் வயதுப் பிள்ளைகள்... இப்போது இதை அனுபவிக்காமல் எப்போது அனுபவிக்க போகிறார்கள்? நீயும்... நானும்... ஆற்றங்கரைக்கு போனதே இல்லையா?" என்று சோமசுந்தரம் வினவவும் அந்த நாள் நினைவில் ஆழ்ந்த சுந்தராம்பாள் பேச்சை நிறுத்தி விட்டாள்.

திருமணமான புதிதில் பலமுறை சோசுந்தரமும் சுந்தராம்பாளும் ஆற்றங்கரைக்கு போனதுண்டு நீந்தி விளையாடியது உண்டு.

'அதெல்லாம் ஓர் காலம்...' என்ற நினைவுடன் அவள் நிமிர்ந்த போது,

"ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே.." என்று பாடினாள் சுபாங்கிணி.

"ஏய்.. வாயாடி.... பாட்டுப் பாடாமல் சாப்பிடு..." முகம் சிவக்க மகளை அதட்டியபடி உள்ளே போனாள் சுந்தராம்பாள்.

அன்று இரவு தூக்கம் வராமல் புரண்டு... புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் மீரா... மனம் முழுவதும் ரகுநந்தன்... அருகில் சுபாங்கினி ஆழ்ந்த நித்திரையில் இருக்க சப்தம் செய்யாமல் அறையைத் திறந்து வெளியில் வந்தாள் மீரா... அவளுக்கு ஊஞ்சலைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது... ஊஞ்சலைத் தொட்டுக் கொண்டு அவள் நிற்கும் போது...

"உனக்கும் தூக்கம் வரவில்லையா...?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ரகுநந்தன் துளைக்கும் பார்வையோடு நின்றிருந்தான்...

"உனக்கும்... என்றால்... என்ன அர்த்தம்...?" மீரா தலை குனிந்து கொண்டு வினவினாள்.

"எனக்கும் தூக்கம் வரவில்லையென்று அர்த்தம்..." அவன் மெதுவாக அருகில் வந்தான்.

மீராவின் மனம் படபடத்தது. மாடி ஹாலில் மெல்லிய விடி விளக்கின் வெளிச்சம் இருக்க மாடி பால்கனியில் இருள் போர்வையாய் மூடியிருந்தது... இந்த இரவு நேரத்தில் இவனுடன் பேசிக் கொண்டிருப்பதை வீட்டுப் பெரியவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

ஒரு மனம் அவளைக் கடிந்து கொண்டு அறைக்குத் திரும்பச் சொன்னது. இன்னொரு மனம் வேண்டாம்... கொஞ்ச நேரம் இவனுடன் பேசு... இது போன்ற சந்தர்ப்பம் இனி எப்போது கிட்டுமோ என்று கூறியது... இருமனதாய் போராடிக் கொண்டிருந்தவளிடம் அருகே மிக நெருக்கமாய் நின்று அவள் காதோரம் கேட்டான் ரகுநந்தன்.

"ஏன் தூக்கம் வரவில்லை...?"

மீராவின் உடலில் சிலிர்ப்பு ஒடியது... பதிலுக்கு மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

"நீங்கள் ஏன் தூங்கவில்லை?"

"சொல்லவா...?"

"ம்ம்ம்..."

"இதை நினைத்துத்தான் தூக்கம் வரவில்லை..." அவள் எதிர்பாராத விதமாய் அவளது கைபிடித்து அருகில் இழுத்தான் ரகுநந்தன்.

ரகுநந்தனின் மார்பில் விழுந்தாள் மீரா... என்ன நடக்கிறது என்பதை அவள் உணரும் முன்னர் அவளது கன்னத்தில் இதழ் பதித்தான் அவன். அவள் பதறி விலக முயன்றாள்... அவனது கரம் அவளை விடாமல் இறுகத் தழுவியது... மெல்ல அவன் அணைப்பினில் அவள் அடங்க... அதை உணர்ந்த வனின் இதழ்களில் திருப்தி புன்முறுவல் உதித்தது... அவனை ஆரத்தழுவி உச்சி முகர்ந்தவனின் தோளில் தலை சாய்த்துக்



கொண்டாள் மீரா... எவ்வளவு நேரம் அப்படியே நின்றிருந்தார்களோ... ஹாலில் இருந்த சுவர்கடிகாரம் பதினொரு முறை அடிக்கவும்... சுயநினைவு வரப் பெற்று அவசரமாய் விலகி நின்றாள் மீரா.

"ஏன்...?" ரகுநந்தனின் கரம் நீண்டு அவளை அழைத்தது.

"வேண்டாம்... குட்நைட்..." இன்னும் சற்று நேரம் அங்கே நின்றால் தன் திடம் குலைந்து விடுமென்ற பயத்தில் அவள் ஏறக்குறைய அவளுடைய அறையை நோக்கி ஒடினாள்.

அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தவனின் மனதில் அவனது கைபிடிக்குள் அடங்கி நின்ற காட்சி விரிந்தது. ஒரு தொடுகையில் சிலிர்த்துப் போகும் இவளையா தினேஷ் பழி சொல்கிறான்?

'இல்லை... இவள் மாசில்லாதவள்... என்னைப் பார்க்கும் இந்தப் பார்வையில் தெரியும் காதல் பரிசுத்தமானது... இவள் எனக்குரியவள்... என் காதலி... என் வருங்கால மனைவி...'

மனதில் உறுதியான எண்ணம் எழுந்தது. ரகுநந்தன் தூங்கச் சென்றான்... மீராவின் உடல் தொட்ட நினைவில் அவன் உடல் சூடேறியது... அவளை அவனது நினைவு நாடியது.

ஊஹீம்... இது தாங்காது... வையாபுரி மாமா வந்தவுடன் அவரிடம் பேசச் சொல்லி அம்மா... அப்பாவிடம் சொல்லி விடவேண்டும் அவளில்லாமல் வாழ என்னால் முடியாது...

புரண்டு படுத்தவன் தன் செல்போனை பார்த்ததும் புதுயோசனையுடன் அதைக் கையில் எடுத்தான்... மீராவின் செல்போன் நம்பர்களை அழுத்தினான். மறுமுனையில்

"ஹலோ..." என்ற மீராவின் குரல் கேட்டது.

"நான்தான்..." என்றான்

"என்னது... ?" மீரா திகைத்துப் போனாள். அருகிலிருந்த சுபாங்கிணியைப் பார்த்தாள். அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் மீரா எழுந்து முன்னறைக்குச் சென்றாள்.

# 19

"என்ன வேண்டும்?" இந்த நேரத்தில் போன் பண்ணுகிறீர்களே..."

"இந்த நேரத்தில் வேறு என்ன வேண்டும்?" நீ தான் வேண்டும்..."

மீரா உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவள் உடல் சூடேறியது. எவ்வளவு தைரியமாய் பேசுகிறான் இவன்?

"இப்போதுதானே பாத்துக் கொண்டோம்..."

"பார்த்துக் கொண்டோம்... பேசிக் கொண்டோம்... சொல்லிக் கொள்ளவில்லையே... அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்"

"என்ன சொல்ல வேண்டும்?"

"ஐ லவ் யூ ... ஐ வான்ட் டு மேரி யூ..."

மீராவின் உடலெங்கும் புது ரத்தம் பாய்ந்தது. அவள் பிறப்பெடுத்ததின் அர்த்தத்தை அன்று உணர்ந்தாள். பேச்சிழந்து நின்றாள்.

"என்ன பேச்சையே காணோம்..."

"நான்... நான்... நந்து..." மீரா அழுது விட்டாள்.

ரகுநந்தன் அவசரமாய் அவனது படுக்கையில் எழுந்து அமர்ந்து கொண்டான்.



"ஏய்ய்... மீரா... அழுகிறாயா? ஏன் அழுகிறாய்?"

"இல்லை... என் மேல் உங்களுக்கு வெறுப்பு இருக்கிறது என்றுதான் இதுநாள் வரை நினைத்திருந்தேன்..."

"முட்டாள்... வெறுப்பவனா... உன்னைக் கட்டியணைத்து முத்தமிடுவான்?"

"அது...அது...வந்து..."

"ஆசையினால் செய்த செயல் என்று எண்ணி விட்டாய்... அப்படித்தானே"

மீரா மௌனம் சாதித்தாள்.

"காதலினால்தான் உன்னைத் தொட்டுத் தழுவினேன்... உன்னைப் பிரிந்து என்னால் உறங்க முடியவில்லை... அதனால்தான் கல்யாணம் செய்து கொள்ளும் என் விருப்பத்தை உன்னிடம் கூறினேன்... உனக்கு என்மேல் காதல் இல்லையா?"

"ஐயோ... நந்து... அப்படியெல்லாம் இல்லை... என் மனம் உங்களுக்கு தெரியாதா?"

"ஊரிலும் வீட்டிலும் என்னை ரகு என்றுதான் கூப்பிடுவார்கள் உனக்கு நான் உன்னுடைய நந்துவா?"

"பின்னே இல்லையா?"

"ஒன்றும் தெரியாத சாதுப் பெண் போல் இருந்து கொண்டு பேச்சில் பிளந்து கட்டுகிறாய்..."

"அங்கே மட்டும் என்னவாம்...? என்னை வளைக்கப் பார்க்கறீயா என்று என்னைக் கேட்டவர்தானே நீங்கள்..."

"அம்மிணி என்ன மறுமொழி சொன்னீர்களாம்... நீ என்ன பெரிய புளியங்கொம்பா என்று கேட்டவள்தானே நீ..."

"நீங்கள் சொன்னதற்குத்தானே பதில் சொன்னேன்..."

"நான் பொய்யா சொன்னேன் ?உன் மனதைத் தொட்டுச் சொல்லு... என் மேல் உனக்கு எண்ணமில்லையா ? நான் புளியம் கொம்பில்லையா... ?"

"புளியங்கொம்புதான்..." மயக்கத்துடன் கூறினாள் மீரா.

"ஆனால் வந்தவுடனே என் மேல் எண்ணம் வந்தது எப்படி ?"

"அது... அது... வந்து... ஒரு கனவு..."

"கனவா... ?"

"ம்ம்... கனவுதான்... இங்கு வருவதற்கு முதல் நாள் அந்தக் கனவு கண்டேன். அதில் வந்த ராஜகுமாரன் வேறு யாருமில்லை... நீங்கள் தான்..."

மீரா அந்தக் கனவை விவரித்தாள்... அவள் குரலில் இருந்த உண்மையும்... பரவசமும்... மீரா கண்ட கனவு மெய்யென்பதை ரகுந்தனுக்கு உணர்த்தியது... ஏன் அவள் அவனைப் பார்த்த முதல் பார்வையிலேயே ஆச்சரியத்தைக் காட்டினாள் என்பது இப்போது அவனுக்குப் புரிந்தது.

"நந்து... சொன்னால் நம்ப மாட்டீர்கள்"

"இல்லை மீரா... இப்போது நீ எது சொன்னாலும் நம்புவேன்..."

"தேங்க்ஸ் பார் திஸ்... என் கனவில் வந்த மாளிகை கூட அப்படியே இந்த வீடு போல்தான் இருந்தது நந்து..."

அவள் எதிர்பாராத ஆச்சர்யத்தை உணர்த்த விரும்பியிருக்கிறாள்... அவள் மேல் வெறுப்புடன் இருந்தவன் அவளைப் புரிந்து கொள்ளாமல் மண்டையை உடைத்திருக்கிறான்.

"ஐ ஆம் ஸாரிடா செல்லம்... அன்று தெரியாத்தனமாய் உன்னைக் காயப்படுத்தி விட்டேன்..."



"உடல் காயத்தை சொல்கிறீர்களா... இல்லை மனக்காயத்தைச் சொல்கிறீர்களா நந்து... உடல்காயத்தை விட மனதில் பட்ட காயம்தான் அதிகமாய் வலித்தது..."

ரகுநந்தன் குற்ற உணர்வுடன் பேச்சிழந்தான். இவள் குற்றமற்றவள் எனும் போது அவளை வார்த்தைகளில் வதைத்தது எந்த வகையில் நியாயமாகும் ? தான் செய்தது இமாலயத் தவறு என்பது அவனுக்குப் புரிந்தது.

"என்னை மன்னிக்க மாட்டாயா மீரா ?"

மீரா பதறிப் போனாள். நைந்து போன குரலில் அவன் பேசுவதா ? அவள் கேட்டுக் கொண்டிருப்பதா ?

"மன்னிப்பு என்பதெல்லாம் பெரிய வார்த்தை... நீங்கள் என்னை என்ன செய்தாலும் எனக்குச் சம்மதம்..."

போனில் ஒலித்த வார்த்தைகளில் ரகுநந்தனின் உடல் இன்னும் சூடேறியது... தங்கையின் அறையில் இருந்து கொண்டு இந்த வார்த்தைகளைக் கூறுகிறாளே...

"ஏய்... நீ சுபாவின் ரூமில் இருக்கிறாய் என்ற தைரியத்தில் இதைச் சொல்கிறாயா ?" அவன் குரலில் தாபம் இருந்தது.

"ஏன்... என்ன விசயம் ?" மீரா புரியாமல் வினவினாள்

"என் ரூமில் என் அருகே இருந்து கொண்டு இதைச் சொல்லியிருந்தால் நடப்பதே வேறு..."

ரகுநந்தன் கிசுகிசுப்பான குரலில் அவன் என்ன செய்திருப்பான் என்று கூற மீராவின் உணர்வுகள் அலையாய் பொங்கியெழுந்தன.

"ச்சீ... நீங்கள் மகா மோசம் நந்து... நான் ஒன்றும் இதைச் சொல்லவில்லை... நான் சொல்ல வந்ததே வேறு..."

"இதற்கே மகாமோசம் என்கிறாயே... இன்னும் எவ்வளவோ

இருக்கிறது...அதையெல்லாம் கேட்டால் என்ன சொல்வாயோ..."

ரகுநந்தன் தொடர்ந்து கூற மீரா உதட்டை அழுந்தக் கடித்து உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

"நந்து... ப்ளீஸ்... வேண்டாம்... நாம் வேறு பேசலாம்..."

"பேசலாம்... ஆனால் என் உடலும்... மனமும் உன்னைத் தேடுகிறதே... நீதான் வேண்டும் என்று சொல்கிறதே..."

"நம் வீட்டு பெரியவர்கள் நம்மீது நம்பிக்கை வைத்திருக் கிறார்கள்..."

"ம்ம்... அதனால்தான் அவர்களிடமே நம்பிரச்னையை கொண்டு செல்லலாம் என்று நினைக்கிறேன்..."

"கடவுளே... இதைப் போய் அவர்களிடம் சொல்லப் போகிறீர்களா?"

"சும்மா கடவுளை ஏன் தொந்தரவு செய்கிறாய்... அவராவது நிம்மதியாய் தூங்கட்டுமே... எனக்குத்தான் தூக்கம் கெட்டுவிட்டது என்றால் அவரும் தூங்க வேண்டாமா?" மீரா... நம் வீட்டில் நான் சொல்வதைக் கேட்டதும் சந்தோசம்தான் படுவார்கள்... என் தாத்தா பாட்டி முதல் சுபா வரை உன்னை இந்த வீட்டு மருமகளாகத்தான் நினைக்கிறார்கள். நடத்துகிறார்கள்... உன்னை நான் விரும்புகிறேன் என்று தெரிந்தால் சந்தோசப் படுவார்களா... மாட்டார்களா?"

"நீங்கள் இதைச் சொல்கிறீர்களா?"

"வேறு எதைச் சொல்வேன் என்று நினைத்தாய்...? உன்னிடம் நான் சொன்னவற்றையா?"

மீராவின் காதோரம் சூடேறியது.

"என்னடி... பேச்சைக் காணோம்... உன்னிடம் நான்



சொல்பவை உனக்கும்... எனக்கும் மட்டும் தெரியும் அந்தரங்கம்... 'அந்தரங்கம் புனிதமானது' என்று கவிஞர் கண்ணதாசன் கூறியிருக்கிறார் தெரியுமா"

"தெரியும்..."

"அப்புறமும் எதற்கு இந்த பயம்? ம்ம்? அந்தரங்கத்தை அம்பலப்படுதுபவன் மனிதன் ஆவானா? உன்னைக் கண்டால் எனக்கும்... என்னை கண்டால் உனக்கும் தோன்றும் உணர்வுகள் நமக்கு மட்டுமே சொந்தமானவை... அதில் இடம் பெற நம்மைப் பெற்றவர்களுக்கோ... இல்லை நாம் பெற்றுக் கொள்ளும் குழந்தைகளுக்கோ... கூட உரிமை கிடையாது... புரிந்ததா...?"

"புரிந்தது..." புதிய உலகம் ஒன்றைக் கண்டுவிட்ட சிலிர்ப்புடன் கூறினாள் மீரா.

"இப்போது சொல்லு... 'என்னை என்ன செய்தாலும் சம்மதம்' என்று எந்த அர்த்தத்தில் சொன்னாய்? நிச்சயம் நான் சொன்ன அர்த்தத்தில் சொல்லியிருக்க மாட்டாய்... ஏனென்றால் நீதான் இந்த விசயத்தில் மக்காக இருக்கிறாயே... உனக்கு அரிச்சுவடியில் இருந்து நான் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறதே... ரகுநந்தனின் குரலில் கேலி இருந்தது.

"போதும்... போதும்... நீங்கள்தான் அவற்றில் எல்லாம் பிஎச்டி பட்டம் வாங்கியிருக்கிறீர்களே... அது போதாதா?"

"பிஎச்டியா...? யுனிவர்சிட்டியே நான் தாண்டி... "

"நந்து ப்ளீஸ்... நான் சொல்ல வந்ததன் அர்த்தம் வேறு... நான் கண்ட கனவையும்... உண்மையில் அது போன்ற ஒரு வீட்டையும்... கனவில் வந்த ராஜகுமாரன் போன்ற உங்களையும் கண்டபின்... என் மனதில் என்னென்னவோ

தோன்றியது... நம் பாட்டி காலத்திற்கும் முந்தைய காலப் பாடல் ஒன்று... நான் 'தேன் கிண்ணம்' புரோக்ராமில் பார்த்திருக்கிறேன்... அந்தப் பாடலைத்தான் பாடத் தோன்றியது..."

"பாடேன்"

மீரா பாடினாள்... மெல்லிய குரலில் உணர்ந்து பாடினாள்..

"ஊரெங்கும் தேடினேன் ஒருவனைக் கண்டேன் – அந்த

ஒருவனிடம் தேடினேன் உள்ளத்தைக் கண்டேன்..."

ரகுநந்தன் மௌனமாய் பாடலின் வரிகளைக் கேட்டான்.. இது மீராவின் மனதை உணர்த்தும் பாடல் வரிகள்... அவள் தேடிய நாயகன் தான்தான் என்பதில் அவனுக்குள் பெருமிதம் எழுந்தது.

"கைகொடுத்த தெய்வம் இன்று எங்கு சென்றதோ...

என்னைக் கண்கலங்க வைத்து விட்டு எங்கே நின்றதோ...

என்று கண்கலங்கி ஏங்கி நின்றேன் சேதி வந்தது...

நான் கடந்து வந்த பாதையில் விடிவெள்ளி முளைத்தது.."

ஒரு கோடிஸ்வரியின் குரலில் ஏன் இத்தனை துயரம்? அவள் அவனது அன்பை யாசித்து நின்ற கதையை அவள் கூறுவதை உணர்ந்தான் ரகுநந்தன். அவனது கடைக்கண் பார்வைக்காக அவள் ஏங்கி நின்றாளா?

"வாழ வந்த மாளிகையின் கதவு திறந்தது..."

சென்னையில் மாளிகை போன்ற பல வீடுகளுக்கு சொந்தக்காரி அவனது புராதன காலத்து பளிங்கு வீட்டை மாளிகை என்கிறாள்.

"ஆற்று வெள்ளம் போல நெஞ்சில் அமைதி வந்தது...



அமரதீபம் போல எங்கும் ஒளி நிறைந்தது..."

அமைதியின்றி தவித்தவள்... அவனது கைகளில் கட்டுண்டு நின்றபோது அடைந்து விட்ட அமைதியை அவள் உணர்த்தினாள்.

மீராவின் குரலில் இப்போது தளுதளுப்பு சேர்ந்திருந்தது... ஏன்? புரியாதவனாய் பாடலைக் கவனித்தான் ரகுநந்தன்.

"வாழ்வதுவும்... தாழ்வதுவும் ... உங்கள் கையிலே...

என் சஞ்சலமும் நிம்மதியும் உங்கள் சொல்லிலே...

வாழ்கவென்று நீங்கள் சொன்னால் வாழும் என் மனம்...

இல்லை மறைகவென்று வரம் கொடுத்தால்

மறையச் சம்மதம்..."

மீரா விசித்தாள்... ரகுநந்தன் உடல் ஜில்லிட்டுப் போனது... என்ன வார்த்தை சொல்லி விட்டாள் இவள்...? இப்படி ஒரு காதலா அவன்மீது அவள் கொண்டிருக்கிறாள்?

"மீரா வெளியே வா..."

"வேண்டாம்..."

"வா என்று சொல்கிறேன் இல்லை..." அவன் அதட்டினான்.

அவள் அவனது கட்டளைக்கு அடி பணிந்தாள். எழுந்து அறைக் கதவைத் திறந்தாள். எதிர் அறை வாசலில் ரகுநந்தன் நின்றிருந்தான். மீரா விழிகளில் கண்ணீர் வழிய சத்தமின்றி பால்கனிக்கு விரைந்தாள். பின் தொடர்ந்த ரகுநந்தன்... பால்கனியின் இருள் மறைவில் நின்றிருந்தவளின் தோள் தொட்டு தன் பக்கம் திருப்பினான். மீரா கேவியபடி அவன் மார்பில் முகம் புதைத்தாள். அவளை ஆரத் தழுவி அவளது உச்சந்தலையில் முகம் புதைத்துக் கொண்டவனுக்குள்

இப்போது மோகம் எழவில்லை... கரையில்லாத காதல் உணர்வு பொங்கிஎழுந்தது.

'இவள் என்னுடையவள்... என் உயிரில் கலந்தவள்... நானின்றி இவள் வாழமாட்டாள்... என் ஒரு சொல்லில் உயிரையும் விடுவாள்.'

இதை உணர்ந்தவனின் நெஞ்சில் தாபம் எப்படி எழும்... அவள் கட்டழகிதான்... அவன் கைக்குள் அடங்கி நின்றவளை ஆள அவன் நினைத்தால் தடை சொல்லாமல் அவனிடம் அடைக்கலம் ஆகி விடுவாள்தான். ஆனால் அவனது உடல் இப்போது அவளின் அணைப்பினால் சூடேரவில்லை, அவளது பாடலில் கூறிய அமைதி அவன் நெஞ்சில் நிறைந்திருந்தது. அவளது முதுகை வருடியவாறு நின்றவனின் நெஞ்சில் அவள் மீது கொண்ட எல்லையற்ற நேசமே நிறைந்திருந்தது. மெல்லச் சரிந்து தரைமீது அமர்ந்தான். அவளை இழுத்து மடிமீது போட்டுக் கொண்டான். அவளது கேவல் நிற்கும் வரை தலைமுடி கோதிக் கொண்டிருந்தான்.. சற்றுநேரத்தில் இருவரும் பிரிந்து எல்லையற்ற மன அமைதியுடன் தூங்கச் சென்றனர்.

## 20

அடுத்து வந்த நாள்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன. வையாபுரி திரும்பி வந்த பின்னால் தங்கள் காதலை இருவீட்டாருக்கும் தெரியப் படுத்தலாமென்ற முடிவோடு ரகுநந்தனும்... மீராவும் தங்கள் காதலை ரகசியமாய் மனதிற்குள் பொக்கிஷமாய் பூட்டி வைத்துக் கொண்டார்கள். சுபாங்கிணிக்குக் கூட இந்த விசயம் தெரியாது... மனதளவில் ரகுநந்தனின் மனைவியாகவே தன்னை உணர்ந்தாள் மீரா...



ரகுநந்தனும் அப்படியேதான் என்பதை மற்றவர்கள் அறியாத உரிமைப் பார்வையால் அவளுக்கு உணர்த்தினான் ரகுநந்தன். அவனுடைய டிபார்ட்மென்டல் ஸ்டோருக்கு மீராவையும் சுபாங்கிணியையும் அழைத்துச் சென்றான்.

மூன்று தளங்களுடன்... ஏஸி ஹால்களுடன்... அட்டகாசமாய் இருந்தது அவனுடைய 'அருவி' டிபார்ட்மென்டல் ஸ்டோர். அருவிபோல் நிற்காமல் பொழியும் தன்மை கொண்டதாம் அவனுடைய ஸ்டோர். அதனால் அந்தப் பெயர் வைத்தானாம்...

கீழ்தளத்தில் மளிகை சாமான்கள்... ஒருபக்கம்... குழந்தைகளுக்கு வேண்டிய பேக்கரி அயிட்டங்கள் கொண்ட ஸ்டால் இன்னொரு பக்கம்... பழங்கள் கொண்ட பழமுதிர்சோலை பகுதி... இது போக அமைந்திருந்த அழகிய ரெஸ்டாரெண்ட்... காலை... மதியம்... மாலை... இரவு... என்று அந்தந்த நேரத்திற்கு தகுந்த உணவு வகைகள் அங்கு கிடைக்குமாம்... காபி... டீ... கூல்டிரிங்க்ஸ்... ஐஸ்கிரிம்... மட்டும் கொண்ட ஸ்டாலும் தனியே இருந்தது.

"நாம் மாடியில் உள்ள மற்ற இரண்டு ப்ளோரையும் பார்த்து விட்டு வந்து சாப்பிடலாமே...", ரெஸ்டாரெண்டுக்குள் போக முயன்ற சுபாங்கிணியைத் தடுத்த மீரா கூறினாள்.

"அண்ணி... இது அநியாயம்... படியேற தெம்பு வேண்டாமா?" சுபாங்கிணி வழக்கடித்தாள்

"உனக்கா தெம்பு இல்லை... உன்பெயர் சுபாங்கிணி இல்லை மான்குட்டியென்று பாட்டி சொல்வாங்களே... அது பொய்யா?" ரகுநந்தன் வம்புக்கு இழுத்தான்.

"நீ பாட்டிக்கும் எனக்கும் இருக்கிற அன்பைப் பார்த்து கண் வைக்கிறாயா? இரு பாட்டியிடம் உன்னைப் பற்றிச்

சொல்லிக் கொடுக்கிறேன்..."

"என்ன சொல்லிக் கொடுப்பாய்?"

"எவ்வளவோ சொல்லிக் கொடுப்பேன். உன் கள்ளத்தனம் எனக்கா தெரியாது"

ரகுநந்தனும்... மீராவும்... ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்... அவர்களது விழிகளில் சங்கேத பாஷை இருந்தது. அதைக் கவனியாதவள் போல் சுபாங்கினி இரண்டிரண்டு படிகளாய் தாவி மாடியேறினாள்.

"அவள் ஏறுவதைப் பார்... இவளுக்கு மாடியேற தெம்பு இல்லையாம்..." ரகுநந்தன் தங்கையைப் பற்றி ரசித்துக் கூறினான்.

மீரா சிரிப்புடன் ஆமோதிப்பாய் தலை அசைத்தாள்... இருவரும் இணைந்து பேசிக் கொண்டே படியேறுவதை மேல் படியில் நின்று கொண்டு பார்த்த சுபாங்கினியின் மனம் மகிழ்ந்தது. ஒரு கணம் அவர்கள் இவரும் மாலையும் கழுத்துமாய் வருவது போல் கற்பனை செய்து பார்த்தவளின் முகம் மலர்ந்தது.

'என்ன பொருத்தமான ஜோடி...'

முதல் மாடியில் ஏஸி ஹால்கள் அமைந்திருந்தன. ஒன்றில் பெண்களுக்கான சுடிதார்... சேலைகள்... உள்ளாடைகள்... இன்னொன்றில் ஆண்களுக்கான உடை வகைகள் மற்றொன்றில் குழந்தைகளுக்கான ரெடிமேட் ஆடைகள்...

இரண்டாம் மாடியில் இருந்து ஏஸி ஹாலில் இரண்டு. அதையடுத்து ஒரு பெரிய அறை இருந்தது. முதல் ஹாலில் சிறிய நகைகக்டை இருந்தது... வைரங்களை தவிர்த்து... தங்கத்தினால் ஆன அணிகலன்களைக் கொண்ட நகைக்கடைஅது.



"வாவ்... எத்தனை அற்புதமான டிசைன்கள்?" வியந்தாள் மீரா.

"அண்ணி... இவற்றையெல்லாம் வடிவமைத்த டிசைனர்கள் யார் யார் தெரியுமா?" பெருமையுடன் வினவினாள் சுபாங்கிணி.

"பேஷன்... டிஸைனிங் படித்தவர்களா?"

"அதுதான் இல்லை ... பாட்டி... அம்மா...நான்... அப்புறம் அண்ணா எங்களுக்கு தோன்றிய டிசைன்களை பேப்பரில் வரைந்து ஆல்பம் போடுவோம்... அதை வைத்து அண்ணன் நகை செய்யச் சொல்லுவான் அவைகள்தான் இவை..."

மீரா வியப்புடன் அவற்றைப் பார்த்தாள்... அந்தக் காலத்து நகைகளின் மாடல்கள்தான் இப்போதைய பேஷன். ஆவுடையம்மாளும்... சுந்தராம்பாளும் வடிவமைக்கும் நகைகள் கருத்தைக் கவராமல் எப்படி இருக்கும்? நினைத்ததை வாய் விட்டுச் சொன்னாள் அவள்.

"யு ஆர் கரெக்ட் ... பாட்டியும்... அம்மாவும் டிஸைன் செய்த நகைகள் உடனே விற்றுப் போகும்... நானும்... சுபாவும் டிஸைன் செய்வது லேட்டாய் விற்றாலும் அவைகளும் தேங்காது... என்றான் ரகுநந்தன்."

"இன்னொரு ஏஸி ஹாலில் பரிசுப் பொருள்களும்... வாழ்த்து அட்டைகளும்... பழங்காலக் கலைப் பொருள்களும்... சித்திரங்களும் அழகுற வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன."

"குற்றாலத்திற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் எல்லோரும் இங்கே வந்து கலைப்பொருள்களை அள்ளிக் கொண்டு சென்றுவிடுவார்கள். நகைகளையும் தான்... அவர்களுடைய பேவரைட் ப்ளோர் இரண்டாம் மாடிதான்" என்றாள் சுபாங்கிணி...

இரண்டு ஹால்களையும் அடுத்து இருந்த அறைக்குள் அவர்களை அழைத்துச் சென்றான் ரகுநந்தன். அறையும் ஏஸி வசதியுடன் இருந்தது. அழகான சோபா செட்டும்... பெரிய கட்டிலொன்று மெத்தை தலையணை போர்வை களுடன் இருந்தன. நீண்ட டீப்பாயொன்று அங்கே கிடக்க அதன் மேல் வார... மாத இதழ்களும்... நாவல்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"புத்தகப் புழு..." என்று அவற்றைச் சுட்டிக்காட்டி ரகுநந்தனைக் கேலி செய்தாள் சுபாங்கிணி.

"ஸோ... உன் அண்ணன் இந்த ரூமில் தனிக் குடித்தனம் செய்கிறார்..." மீரா குறும்பாக ரகுநந்தனைப் பார்த்துக் கொண்டே சுபாங்கிணியிடம் கூறினாள்.

"நீயும் வா... சேர்ந்து குடித்தனம் செய்யலாம்..." மீராவின் பக்கம் இயல்பாய் குனிந்து கிசுகிசுத்தான் ரகுநந்தன்.

மீராவின் முகம் சிவந்து விட்டது. சுபாங்கிணி அறியாமல் அவனது கைகைப்பற்றிக் கிள்ளினாள். அவன் சிரித்தான். விலகிச் சென்று சுபாங்கிணியின் அருகே அமர்ந்து கொண்டாள் மீரா.

அவர்களது சரஸத்தைக் கண்டும் காணாதவள் போல் சுபாங்கிணி ஒரு நாவலை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந் தாள்.

அறைக்கதவு தட்டப்பட்டது... இரண்டு பணியாளர்கள் உள்ளே வந்தனர்... ரகுநந்தன் சோபாவின் முன்னால் டீப்பாயை இழுத்துப் போட்டான்... அதிலிருந்து புத்தகங்களை டீபாயின் கீழ் அடுக்கில் வைத்தான். வந்த பணியாளர்கள் அவர்கள் கொண்டு வந்திருந்த தட்டுக்களை பரப்பி வைத்து விட்டு மினரல் தண்ணீர் பாட்டில்களையும் வைத்து விட்டுச்



சென்று விட்டனர். கதவை அடைத்த ரகுநந்தன்... கட்டிலில் அமர்ந்து கொண்டு

"சாப்பிடலாம் வாங்க..." என்றான்.

"அண்ணா... இது அநியாயம்... நான் வந்தால் ரெஸ்டாரெண்டில் சாப்பாடு... அண்ணி வந்தால் மட்டும் ரூமிலேயே சாப்பாடா? திஸ் இஸ் டூ மச்... நான் பாட்டியிடம் சொல்லத்தான் போகிறேன்..."

"மக்கு... நீ வரும் போது நான் உன்னுடன் உட்கார்ந்து இருப்பேன்... சாப்பிட மாட்டேன்... இன்றைக்கு எனக்கும் பசிக்கிறது. நாம் மூன்று பேரும் அரட்டை அடித்துக் கொண்டு ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டால் நன்றாக இருக்குமா? எல்லோரும் நம்மை வேடிக்கை பார்க்க மாட்டார்களா?" சமாதானம் கூறினான் ரகுநந்தன்.

"நம்பினேன்... பிழைத்துப்போ..." என்று கூறியபடியே ஒரு தட்டை எடுத்து மீராவிடம் கொடுத்தாள் சுபாங்கிணி.

"சாப்பிட்டுப் பாருங்கள் அண்ணி... இது பிரட் ஆம்லெட் புரோட்டா தொட்டுக் கொள்ள விரால் மீன் வறுவல்... டேஸ்டாக இருக்கும்..."

சுபாங்கிணியும்... ரகுநந்தனும் ஆளுக்கொரு தட்டை எடுத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தார்கள்.

"சுபா... இது செமடேஸ்டாய் இருக்கிறது சுபா... நீ சொல்லும் போது நான் நம்பவே இல்லை... என்ன ஒரு டேஸ்ட்... இதுபோல நான் ஸ்டார் ஹோட்டல்களில் கூட சாப்பிட்டது இல்லை..."

ரகுநந்தனும் சுபாங்கிணியும் பெருமையாய் சிரித்துக் கொண்டார்கள்... மீரா ரசித்துச் சாப்பிட்டாள். ஒரே

நிமிடத்தில் தட்டைக் காலி செய்துவிட்டாள்,

"இந்தாங்க அண்ணி... இது பிஷ் பிரைட் ரைஸ்... வஞ்சிர மீன் பொறித்தது இதற்கு சைட் டிஷ்... இதையும் சாப்பிடுங்கள்..."

மீரா ஆவலாய் வாங்கி அதையும் காலி செய்தாள்.

"சுபா... வார்த்தைகளில் சொல்ல முடியாத ருசி... என்ன ருசி... என்ன ருசி"

"இந்தாங்க அண்ணி..."

"இன்னுமா ? ... சாப்பிட ஆசையாகத்தான் இருக்கு... ஆனால் வயிறு நிறைந்து விட்டதே..."

"இது... இஞ்சி... வெங்காயம்... பச்சைமிளகாய்... மாங்காய்...எல்லாம் அரிந்து போட்டுத் தாளித்த தயிர்சாதம்... தொட்டுக் கொள்ள அயிரை மீன் வறுவல்... இதை விடலாமா ?"

மீரா விடவில்லை... கொஞ்சமாய் கால்வாசி தயிர்சாதமும் முக்கால் வாசி அயிரை மீன்களும் நிறைந்திருந்த தட்டைக் காலி செய்தாள். அவள் முகத்தில் ஆச்சர்யம் கலந்த திருப்தி தெரிந்தது.

"சுபா... இரண்டு தடவை உன் அண்ணனின் ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டோமென்று வை... நான் யானையைப் போல் குண்டாகி விடுவேன்... அப்பா... எவ்வளவு சாப்பிட்டு விட்டேன்..."

"சுபா... உன் அண்ணி யானையைப் போலென்ன... இந்தக் குற்றால மலையைப் போல் பெருத்தாலும் அழகாகத்தான் இருப்பாள்" ரகுநந்தன் மீராவை ரசித்துக் கொண்டே சுபாங்கிணியிடம் கூறினான். மீராவின் முகம் பரவசமானது



"அண்ணி... அண்ணனின் ரெஸ்டாரெண்டில் மீன் வெரைட்டி மட்டும்தான் கிடைக்கும், சிக்கன்... மட்டன்...வெஜிடபிள்... இது எதுவும் கிடைக்காது... இங்கு மீன் உணவு மட்டுதான் ஸ்பெசல்... அதனால் இங்கே எப்போதும் கூட்டம் அதிகம் இருக்கும். ஷாப்பிங் செய்கிறவர்கள்... சாப்பிட வந்தவர்கள்... ஷாப்பிங் செய்யாமல்... சாமான் வாங்காமல் போகமாட்டார்கள்..."

"பிஸினெஸ் மூளை... " மீரா பாராட்டினாள்.

"உன் அண்ணியே பாராட்டி விட்டாள் வேறு என்ன வேண்டும் எனக்கு...", ரகுநந்தன் கூற

"அண்ணி எப்போதும் சாதனையைக் கண்டால் பாராட்டுகிற இயல்புடையவங்கதான்... நீ தான் கொட்டுகிற தேளின் குணமுடையவன் கொஞ்நாளாய் உன் கொடுக்கைக் காணோமே... என்ன விசயம் ?" சுபாங்கிணி நேரடியாய் கேட்டுவிட்டாள்.

"உனக்கெதற்கு அது... நீயும் உன் அண்ணியும் தூங்கி முடித்து விட்டு குற்றால அருவியில் குளியல் போட்டு விட்டு சாப்பிட வாங்க... நைட் வீட்டுக்குப் போனால் போதும்... காலையிலேயே அம்மா அப்பாவிடம் சொல்லிவிட்டேன்... பயமில்லாமல் என்ஜாய் பண்ணுங்கள்... நீங்கள் அருவிக் குளியல் போட்டு முடித்ததும் காரில் இந்தப் பக்கத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்துப் போகிறேன்... இப்போது நான் வேலையைப் பார்க்கப் போகவா... கதவை மூடி தாழ் போட்டுக்க சுபா..."

"சும்மா இந்தக் கதையை எல்லாம் என்னிடம் சொல்லாதே. காலையில் கிளம்பும் போதே இந்தத் திட்டம் எனக்குத் தெரியுமே... நானும்... அண்ணியும்... மாற்றுத்துணிகளை எடுத்துக் கொண்டுதானே வந்திருக்கிறோம்... நீ...நான் கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லு..."

"என்ன கேட்டாய்... ?"

"அண்ணியிடம் முதலில் எல்லாம் முறைத்துக் கொண்டு இருப்பாய். இப்போது குழாவிக் கொண்டு இருக்கிறாய்... என்ன விசயம் ?"

"சுபா..." மீரா லஜ்ஜையுடன் தடுத்தாள்.

"அண்ணி... நான் குழந்தையில்லை... எனக்குத் தெரிய வேண்டும். நடு இரவினில் போன் வருகிறது... நீங்கள் முன் ரூமில் உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்கில் பேசுகிறீர்கள்... யாருடைய நம்பர் என்று நான் செக் பண்ணினால் இவனுடைய நம்பர் வருகிறது... ஐ ஆம் ஸாரி"... உங்கள் செல்போன்... உங்களது டைரிபோல... ஆனால் என்னுடன் என் ரூமில் நீங்கள் தங்கியிருக்கிறீர்கள். நாளைக்கு உங்க அப்பா வந்து கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டியது என் குடும்பமும்... நானும்... தான்... அதனால் எடுத்துப் பார்க்க வேண்டி வந்து விட்டது..."

மீரா தலை கவிழ்ந்து கொண்டாள். ரகுநந்தன் கட்டிலில் அமர்ந்து தங்கையைப் பார்த்தான்.

"சுபா... உன் அண்ணி உண்மையிலேயே உன் அண்ணி ஆகப் போகிறவள்... யெஸ்... ஐ லவ் ஹர்... அவளுடைய அப்பா வந்த பின்னால் எல்லோருக்கும் சொல்லலாம் என்று நினைத்திருந்தோம்..."

"அண்ணி..." சுபாங்கிணி மீராவைக் கட்டிக் கொண்டாள்.

"அண்ணா... இந்த வார்த்தையிலிருந்து மாற மாட்டாயே..."

"உன் அண்ணியைப் பிரியவே மாட்டேன்... போதுமா..."

ஆனால் அவன் ஒரு நாள் மீராவிடம் பிரிவைச் சொன்னான். அவள் 'சொன்னது நீதானா...' என்று மனம் உடைந்தாள்.



# 21

குற்றால மலைச்சாரலில் கொட்டும் அருவியில் குளித்த போது உடலோடு மனமும் பாரம் நீங்கி லேசானதைப் போல் உணர்ந்தாள் மீரா. அவள் சென்னைவாசி... சென்னைதான் அவளது ஊர் என்பது அவளுக்கு சுத்தமாக மறந்து விட்டது. பூஞ்சோலைவாசியாகவே அவள் மாறிப் போனாள். ராமசாமிக்கு மாலை நேரங்களில் விருப்பமாய் ராமாயணம் வாசித்துக் காண்பித்தாள்.

"வால்மீகி ராமாயணம் தான் உள்ளதை உள்ளபடி சொல்லும் ராமாயணம் அம்மா... துளசிதாஸரின் ராமாயணத் தில் பக்திரஸம் நிறைய கலந்திருக்கும்... கம்பராமாயணத்தில் தமிழின் சுவை நிறைந்திருக்கும். வால்மீகி ராமாயணம் அதன் கதை பிரகாரம் வால்மீகி வாழ்ந்த காலத்தில் நடந்த கதை அம்மா... அதனால் கண் முன் நிகழ்ந்த நிகழ்வுகளை அவர் கதை ஆக்கியிருக்கிறார் என்று சொல்வார்கள். வால்மீகி ராமாயணத்தை வரிக்கு வரி அப்படியே தமிழில் எழுதி நமக்குத் தந்தது ராஜாஜிதான் அம்மா... அவரது சக்கரவர்த்தித் திருமகன் கதை சொல்லும் ராமாயணம் தரும் சுவை... வேறு எதிலும் கிடைக்காதும்மா" ராமசாமி மனம் நெகிழச் சொல்லுவார்.

"வால்மீகி ஆரம்பத்தில் திருடராக இருந்தவர்தானே தாத்தா..." மீரா வினவுவாள்.

"ஆமாம் அம்மா... திருடரும் திருந்தி காவியம் படைக்க முடியும் என்பதற்கு அவரே சிறந்த உதாரணம் தாயி..."

புராணக் கதைகளைப் பற்றி அவருடன் மீரா விவாதிப்பாள். தனிமையில் ஆவுடையம்மாளிடம் மீராவைப் பற்றிப் பேசி

சிலாகிப்பார் ராமசாமி.

"இந்தக் காலத்துப் பொண்ணு... அதிலும் பட்டணத்துப் பொண்ணு...தாயில்லாமல் ... பெரியவர்கள் துணையில்லாமல் வளர்ந்த பொண்ணு அதுக்கு நம்ம புராணக் கதைகளிலும் இதிகாசங்களிலும் எவ்வளவு ஆர்வம் தெரியுமா ஆவுடை? ராஜாஜி எழுதிய ராமாயணம்... மகாபாரதம்... இளைய தலைமுறைப்பிள்ளைகளில் எத்தனை பேருக்குத் தெரியும்? இந்தப் பொண்ணுக்கு தெரிந்திருக்கு. சும்மாவும் தெரிய வில்லை... ராஜாஜி எழுதிய ராமாயணத்தின் பெயர் 'சக்கரவர்த்தித் திருமகன்' மகாபாரதத்தின் பெயர் 'வியாஸர் விருந்து'ன்னு தெரிஞ்சிருக்கு... மனசாரச் சொல்கிறேன் ஆவுடை... இப்படி ஒரு பொண்ணு நம்ம வீட்டுக்கு மருமகளா வந்தால் நன்றாக இருக்கும்... ம்ம்... யாருக்கு அந்தக் கொடுப்பினை இருக்கோ... "

ஆவுடையம்மாளின் மனதில் வேறு ஒன்று எதிரொலித்தது... அவர்களது குல தெய்வமான பெருமாள் கோவிலுக்கு தினமும் சென்று வரும் வழக்கமுடையவள் ஆவுடையம்மாள். நேரமிருந்தால் சுபாங்கிணி அவளுடன் துணைக்குச் செல்வாள்... இப்போதெல்லாம் மீரா தவறாமல் ஆவுடையம்மாளுடன் சேர்ந்து பெருமாள் கோவிலுக்குச் சென்று வந்தாள். அவளது பக்தியையும்... அழகையும்... பொறுமையையும் ஆவுடையம்மாள் வியக்காத நாளே இல்லை... கோவிலுக்கு வரும் மற்ற பெண்மணிகள் மீராவின் அழகையும் பதவிசையும் கண்டு கண்கள் விரியப் பார்க்கும் போது அவளுக்குக் கொள்ளைப் பெருமையாக இருக்கும் அப்படித்தான் ஒரு நாள் கோவில் அர்ச்சகர்...

"யாராச்சும் பெருமாள் பாசுரம் தெரிந்தால் பாடுங்கோ..." என்று கூற மீரா தயக்கமில்லாமல் பாட ஆரம்பித்தாள்.



"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நந்நாளாம்...
நீராடப் போகுவீர் போதுமீர் நேரிழையார்...
சீர்மிகும் ஆயர்பாடி செல்வச் சிறுமிகாள்...
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்த கோபன் குமரன் தன்...
ஏரார்ந்த கன்னி யசோதை இளஞ்சிங்கம்...
பாரோர் புகழ் படித்தேழோர் எம்பாவாய்... "

என்று பாட ஆரம்பித்தாள்... அவளது இனிய குரலில் அவள் பாடிய போது முறைப்படி அவள் சங்கீதப் பயிற்சி பெற்றவள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

"நன்னாப் பாடுதே இந்தப் பொண்ணு... திருப்பாவையை இவ்வளவு அழகா இனிமையா தெய்வ சந்நிதானத்தில் பாடுதே... இந்தப் பொண்ணு யாரும்மா..." அர்ச்சகர் வினவினார்.

"எங்க வீட்டுப் பொண்ணுதான் அர்ச்சகரே..."

ஆவுடையம்மாள் பெருமாள் முன்னிலையில் கூறிய இவ்வார்த்தைகள் மீராவை சொர்க்கத்திற்கே அழைத்துச் சென்றன. அதே மகிழ்வோடு மறுநாளும் அர்ச்சகர் பாடச் சொன்னபோது

" வாரணமாயிரம் சூழ வலம் வந்து
நாரணனை நம்பி நடக்கிறேன் – எழில்
பூரணமாய் பொற்குடமும் வந்து
தோரணமாட கனா கண்டேன்..." என்று மனமுருகிப் பாடினாள்.

அந்த நினைவுகளை ஆவுடையம்மாள் தன் கணவருடன் பகிர்ந்து கொண்டாள்.

"அதையேன் கேட்கறீங்க... ஊர்க்கார பொம்பளைக கண்ணில்தான் எம்புட்டுப் பொறாமைங்கறீங்க... கோடித் தெரு மங்களம் இன்னைக்கு வாய்விட்டே கேட்டு விட்டாள். பணம் காசு நிறைஞ்சிருந்தா... பவிசும்... பதவிசுமா...அழகான பொண்ணு தானாய் அமைஞ்சிடும்... உங்களுக்கென்ன... நீங்கள் எல்லாவகையிலும் கொடுத்து வைத்தவங்க என்கிறாள். வீட்டுக்கு வந்ததும் மீராவிற்கு சுற்றிப் போட்டேன்... நாம ஊரெல்லாம் வலை போட்டுத் தேடினாலும் இப்படி ஒரு பெண்... நம்ம பேரனுக்கு பெண்டாட்டியாக கிடைக்க மாட்டாள்... ஆனால் வையாபுரி மனசில் என்ன இருக்கோ..."

"நல்லதாவே இருக்கட்டும் ஆவுடையம்மாள்..."

வீட்டுப் பெரியவர்களை இந்த வகையில் வசீகரித்த மீரா சோமசுந்தரத்தையும்... சுந்தராம்பாளையும் வேறு வகையில் வசீகரித்தாள்.

"அத்தை... நீங்க நகர்ந்துக்கங்க... நான் பரிமாறுகிறேன்..."

"அத்தை... நீங்க துணிகளை அடுக்கா விட்டால் என்ன? நான் அடுக்கித் தர மாட்டேனா? ..."

"அத்தை... எனக்கும் பூக்கட்ட சொல்லிக் கொடுங்களேன்..."

"அத்தை... எனக்கு புள்ளி வைத்துக் கோலம் போட ஆசையாய் இருக்கிறது... கற்றுக் கொடுங்களேன்..."

"அத்தை எனக்கு சமைக்கத் தெரியாது... என்னதான் வீட்டில் சமைக்க ஆள் போட்டுக் கொண்டாலும் நாமாய் சமைக்கிறது எப்படி இருக்கும்... நீங்கள் அவசரத்திற்கு யாரையும் எதிர்பார்க்காமல் சமைக்க ஆரம்பித்து விடுவது போல் எனக்கும் சமாளிக்கத் தெரிய வேண்டாமா? எனக்குச்



சமைக்கக் கற்றுக் கொடுங்களேன்..."

சொன்னது மட்டுமல்லாமல் சிரத்தையாய் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டாள். கற்றுக் கொண்டவற்றை செய்தும் காண்பித்தாள். அதில் குருவான சுந்தராம்பாளுக்கு மிகவும் பெருமை.

"என்னங்க வாசலில் தேர்கோலம் போட்டிருக்கு பார்த்தீங்களா?"

"ஆமாம்... நீ போட்டதா... அழகாய் இருக்கே..."

"அது நம்ம மீரா போட்டதுங்க..."

"நம்ம மீராவா? ஆச்சர்யமாய் இருக்கே..."

கணவரிடம் மட்டுமில்லாமல் மாமனார்... மாமியார்... மகன்... மகள்... வேலையாள்கள்... வீட்டுக்கு வந்து போகிறவர்கள் அனைவரிடமும் அதைக் கூறிப் பெருமைபட்டுக் கொள்வாள் சுந்தராம்பாள். சுபாங்கிணி கூட விளையாட்டாக.

"ஏம்மா... நம்ம வீட்டு நாய் குட்டிகிட்ட அண்ணி கோலம் போட்ட விசயத்தை சொல்லிட்டிங்களா...?" என்று கேட்கும் அளவிற்கு சுந்தராம்பாள் பெருமைபட்டுக் கொள்வாள்.

"அத்தை... இந்த சிக்கன் பிரியாணி யார் செய்தது தெரியுமா?"

"நம்ம மீராவா?"

"எப்படியத்தை சரியாகச் சொன்னீங்க..."

"ஏம்மா... இதிலென்ன ஆச்சர்யம் வேண்டிக் கிடக்கு... நீங்க வாயைத் திறந்தாலே அண்ணியின் புகழ்தானே பாடுவீங்க... இதைச் சொல்வதற்கு ஜோஸியமா பார்க்கணும்..."

"போடி அரட்டை... நீ ஒருநாளாவது இப்படிக் கற்றுக் கொண்டு செய்து காண்பித்திருக்கிறாயா?"

"அதெல்லாம் நான் வாக்கப்பட்டுப் போகும் வீட்டில் மாமியாரிடம் கற்றுக் கொள்வேன்..."

மீராவைப் பார்த்துக் கண்சிமிட்டுவாள் சுபாங்கிணி.

"வாக்கப்பட்டு போகும் வீடா... என்ன அத்தை சொல்கிறாள் இவள்?"

"அவளைக் கட்டிக் கொடுத்து அனுப்புவோமில்ல... அந்த புருசன் வீட்டைச் சொல்கிறாள்...", புரியாமல் விழித்த மருமளுக்கு 'வாக்கப்பட்டுப் போகும் வீட்டிற்கு' அர்த்தம் சொன்னாள் மாமியார்.

மீராவிற்கு சிரிப்பு வந்து விட்டது.

"சுபா... நீயிருந்தாலும் ஓவர்... அத்தைக்கே அர்த்தம் தெரியாத வார்த்தையை சொல்லிவைக்கிறாயே..."

"நான் கரெக்டுதான் அண்ணி... இந்த அம்மா விழுந்து விழுந்து தமிழ் சினிமா பார்த்து என்ன புண்ணியம்? வாக்கப்பட்ட ஊர்ன்னு எத்தனை சினிமாவில் நானே கேட்டிருக்கிறேன். இவங்களுக்குத் தெரிய வேண்டாமா? உங்கள் குரு சுத்த ஜீரோ..."

சுந்தராம்பாளை குரு–சிஷ்யை உறவில் வளைத்துப் போட்டவள் சோமசுந்தரத்திடம் மரியாதையையும்... அக்கறையையும் காட்டி நல்ல பெயர் வாங்கினாள்.

"என்னம்மா மீரா... ஏன் சேரைவிட்டு எழுந்துட்டே... சும்மா உட்காரு..."

"இருக்கட்டும் மாமா... நீங்கள் முதலில் உட்காருங்கள்..."

"நான் உட்கார்ந்தால்தான் உட்காருவாயா? நல்ல பெண்ணம்மா நீ ... சரி... உன் அப்பா போன் பண்ணினானா? என்ன சொன்னான்... நீ நல்லாயிருக்காயான்னு விசாரித்தானா?"



"அப்பா... தினமும் போன் பண்ணுவார் மாமா... ஆனால் நான் சௌக்கியமாய் இருக்கேனான்னு ஒரு முறை கூட விசாரித்ததில்லை... பூஞ்சோலை வீட்டில் விட்டுவிட்டு நீ சௌக்கியமா என்று நான் விசாரிப்பது சூரியன் கிழக்கில் தான் உதிக்கிறதா என்று கேட்பது போலன்னு முதல் நாளே சொல்லி விட்டார் மாமா..."

சோமசுந்தரம் நெகிழ்ந்து போனார்... இன்னொரு நாள் அவர் சோர்வாய் தலையைப் பிடித்தபடி உள்ளே வந்து ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டு

"சுந்தரி..." என்று குரல் கொடுத்து வாயை மூடுமுன்னர்

" இந்தாங்க மாமா..." என்றபடி காபியையும் மாத்திரையையும் நீட்டியபடி எதிரே வந்து நின்றாள் மீரா.

சோமசுந்தரம் திகைத்து விட்டார்.

"எனக்கு தலைவலின்னு உனக்கு எப்படிம்மா தெரியும்?"

"தலையைப் பிடித்துக் கொண்டு வந்தீர்கள் மாமா... முகம் வேறு சோர்வாக இருந்தது... அதனால்தான் சீக்கிரமாய் காபி போட்டுக் கொண்டு மாத்திரையை எடுத்துக்கொண்டு வந்தேன்..."

இரவின் தனிமையில் மனைவியிடம் மனம் விட்டுப் பேசினார் சோமசுந்தரம்.

"சுந்தரி... நம்ம மீராவைப் பற்றி நீ என்ன நினைக்கிற?"

"நீங்கள் நினைப்பதைத்தான் நானும் நினைக்கிறேன்..."

"அன்றைக்கு அவள் நம் வீட்டை ஒரு பொக்கிஷம்ன்னு சொன்னாள். அன்றைக்கே நினைத்தேன். இவள் நம் வீட்டு மருமகளாய் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று... உனக்குப் பின்... இந்த வீட்டை உயிராய் நினைத்துப்

பராமரிக்கும் மருமகளாய் அவள் இருப்பாள் என்று எனக்குத் தோன்றுகிறது சுந்தரி..."

"நம் சுபாவின் மேல் வந்த முதல்நாளே அவ்வளவு பாசம் காட்டினாள். நம் காலத்திற்குப் பின்னாலும் நம் மகளைத் தாங்கக்கூடிய மனமும் பாசமும் அவளிடமிருக்கிறது... அவள் இந்த வீட்டுக்கு மருமகளாய் வந்தால் என்னைவிட சந்தோசப் படக்கூடியவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்..."

"வையாபுரி மனதில் என்ன இருக்கிறதோ..."

"ஒற்றைப் பெண்ணைப் பெற்றவர்... வீட்டோடு மாப்பிளையாக இருப்பவரைத்தான் தேடுவார்..."

"அவனுடைய தொழிலையும் கவனித்துக் கொள்ளக் கூடிய ஆளாகப் பார்ப்பான்..."

"நம் ரகு...ரோசக்காரன். இந்த வீட்டை விட்டும்... அவனுடைய தொழிலை விட்டும் போக மாட்டான்..."

"நாம்... நம் மனதிலிருப்பதை இப்போதைக்கு வெளியில் சொல்ல வேண்டாம்... சுந்தரி... எனக்கென்னவோ... மீராவிற்கு ரகுவின் மேல் ஈடுபாடு இருப்பது போல் தோன்றுகிறது..."

"இதே சந்தேகம் எனக்கும் உண்டு... அப்படியிருந்தால் அவர்களே நம்மிடம் வந்து சொல்லட்டும்... மீரா... அவளுடைய தகப்பனாருக்கு எடுத்துச் சொல்லி... நம்மோடு இருந்து விடுவாள்..."

"அதுதான் சரி... பொறுத்திருப்போம்..."

அவர்கள் பொறுத்திருந்தார்கள்... மீராவின் காதலும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது... அவள் பூஞ்சோலைக்கு வந்து ஐந்து மாதங்களும் ஆகிவிட்டன... ஐந்தாம் மாதம் முடிவடையும் நாளில் அவளுக்கு சோதனைகள் ஆரம்பமாயின.



## 22

கழுகுக்கு மூக்கு வேர்க்கும் என்பார்கள்... எப்படித்தான் அது சரியாக கண்டுபிடிக்குமோ... அதன் மூக்கு வேர்த்து விடும்... அனிதாவும் கழுகுபோல்தான். இரை தேடி அலையும் கழுகு. அவள் தேடும் இரை ரகுநந்தன். அவனைப் பார்த்ததில் இருந்து அவள் தூக்கத்தை தொலைத்தாள். அவனது பரம்பரைப் பெருமைகளையும் குடும்ப வைர நகைகளைப் பற்றியும் கேள்விப்பட்டதிலிருந்து அவள் தொண்டையில் அன்ன ஆகாரம் இறங்க மறந்தது.

"தினேஷ்... உண்மையாகவா சொல்கிறாய்? ரகுநந்தனின் குடும்பத்தில் அவ்வளவும் வைர நகைகளா? அதுவும் கிலோ கணக்கிலா எப்படிடா?"

"எல்லாம் பரம்பரையாய் வரும் குடும்ப நகைகள் அனிதா... வீட்டுக்கு வரும் மருமகளுக்கு போட என்றே எத்தனையோ கிலோ வைத்திருக்கிறார்களாம்..."

"இது போக கிராமத்தில் நில புலன்... டிபார்ட்மெண்டல் ஸ்டோர்... குடும்ப ஜவுளிக்கடை... இவ்வளவிற்கும் அவன் ஒருவனே வாரிசா?"

"இவனுக்கு ஒரு தங்கை இருப்பதாய் சொல்லியிருக்கிறான்..."

"நீ ஒரு முழு முட்டாள்டா... உன் சிநேகிதனின் தங்கையை வளைத்துப் போட்டு அந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாகி... என்னையும் அந்த வீட்டு மருமகள் ஆக்குவதை விட்டு விட்டு... இந்த ஆணவக்காரி மீராவின் பின்னால் அலைந் தாயே... உன்னை என்னவென்று சொல்வது..."

"அங்கே பாதிச் சொத்துதான் கிடைக்கும்... இங்கே முழுச்சொத்திற்கும் நான் அதிபதி ஆகிவிடலாமென்று

கணக்கு போட்டேன் அனிதா..."

"தப்புக் கணக்கு போட்டு விட்டாய்... மீரா அறிவாளி... உன்னை எளிதில் கண்டுபிடித்து விட்டாள் பார்... அங்கேயானால் ரகுநந்தனின் தங்கை கிராமத்துப் பெண்... உன்னைக் கண்டதும் ஆவென்று வாய் பிளந்து மயங்கி விடுவாள்... உன் அழகு அப்படி..."

"இப்போது என்ன செய்யலாம்?"

"அந்தக் கிராமத்திற்கு கிளம்பிப் போகலாம்..."

"நாம் இருவருமா...?"

"பின்னே... இந்த ஊரையே கூட்டிக் கொண்டு போகலாமா?"

"என்ன காரணம் சொல்லிக் கொண்டு போவது?"

"குற்றாலம் பக்கத்தில்தானே அந்தக் கிராமம்...? குற்றால அருவியைப் பார்க்க வந்தோமென்று சொல்லு..."

"முதலிலேயே போன் பண்ணி விடவா...?"

"வேண்டாம்... திடீரென்று போய் இறங்குவோம்... முதலிலேயே கேட்டால் அவன் பாட்டுக்கு நமக்கு ஹோட்டலில் ரூம் போட்டு வைத்து விடுவான்...அது சரிவராது... நமது நோக்கம் அவனுடைய வீட்டிற்குள் நுழைவது..."

அது என்னவோ... நல்லவர்கள் போடும் திட்டங்களை விட...இதைப் போன்ற சாமர்த்தியசாலிகள்... நல்லவர்கள் போல் நடிப்பவர்கள் போடும் திட்டங்கள் சரியாக நிறைவேறிவிடும். இப்போதும் அப்படித்தான்... அனிதாவும்... தினேஷும் போட்டு வைத்த திட்டத்தின்படி நேரே பூஞ்சோலைக்கே சென்று ரகுநந்தனின் வீட்டிற்குள் நுழைந்தே விட்டார்கள்.



கூறிக் கொண்டிருந்த ராமசாமி... வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்த காரைப் பார்த்து மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டார்.

யார் வருவது...?

காரிலிருந்து அழுக்கு ஜீன்ஸும்... டிசர்ட்டும் அணிந்த ஹிப்பி தலை இளைஞன் ஒருவனும்... இறுக்கமான சுடிதாரைப் போட்டுக் கொண்டு தலைமுடியை வெட்டிவிட்டு விரிய விட்டிருந்த பெண் ஒருத்தியும் இறங்கினர்.

"எலேய்... முனியா... அது யாருன்னு விசாரிலே..."

முனியன் போய் விசாரிக்கும் முன்னர் அந்த இளைஞன் அவர்களது பெட்டிகளை முனியனிடம் காட்டி

"எடுத்துக் கொண்டு வா..." என்று சொல்லி விட்டு ஸ்டைலாக ராமசாமியைத் தாண்டிச் செல்லப் போனான்.

அவன் நடந்து கொண்ட விதம் ராமசாமியை கடுப்பில் ஆழ்த்தியது.

"நில்லுப்பா... யாரு... நீ... யாரைப் பார்க்க வந்திருக்கிறாய்?"

"முதலில் நீ யாரு பெரிசு...? வீட்டுக்கு வருகிறவர்களிடம் எப்படிப் பேசவேண்டுமென்ற மேனர்ஸ் உனக்குத் தெரியாதா? கன்ட்ரி புரூட்..."

அப்போதுதான் தாத்தாவிற்கு காபி கொடுப்பதற்காக வாசல் பக்கம் வந்து கொண்டிருந்தாள் சுபாங்கிணி. தினேஷ் திட்டுவதைக் கேட்டதும் அவளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ஹலோ மிஸ்டர்... ஹூ ஆர் யு? எங்கள் வீட்டிற்குள்ளேயே வந்து எங்கள் தாத்தாவை கன்ட்ரி புரூட் என்கிறாயா?

விட்டதா ? ... அவ்வளவு மட்டமாக நினைக்கும் இந்தப் பட்டிக் காட்டிற்கு ஏன் நீ வந்தாய் ?”

“அப்படியாம்மா...இவன் என்னை பட்டிக்காடுன்னா திட்டினான் ?

“ஆமாம் தாத்தா... மேனர்ஸ் இல்லாமல் நம் வீட்டிற்குள் வந்து நின்று கொண்டு நம்மிடமே இது மேனர்ஸ் பற்றிப் பேசுகிறது.”

தினேஷ் மூக்குடைப்பட்டுப் போனான். அவனது அழகான தோற்றத்தை கண்டு மயங்கும் பெண்களையே பார்த்தவனுக்கு... இது இரண்டாவதாய் கிடைத்த தோல்வி.

‘இவளும் மீராவைப் போல் புத்திசாலியாய் இருந்து தொலைக்கிறாளே ’

அனிதா தினேஷை முறைத்தபடி முணுமுணுத்தாள்.

“உனக்கு அறிவே கிடையாதுடா... வந்தவுடனே உன் வேலையை ஆரம்பிக்கிறாயே. திண்ணையில் உட்கார்ந்திருந்தால் அது வீட்டு வேலைக்காரனாக இருக்கும் என்று உனக்கு எந்த மேதாவி சொல்லிக் கொடுத்தது ? இப்போது பார்... இந்தப் பெரிசுக்கும் உன்னைப்பற்றி நல்ல அபிப்ராயம் வராது... நீ கவிழ்க்க வேண்டும் என்று கிளம்பி வந்தாயே... இந்தப் பட்டிக்காட்டு தாவணிக்கும் உன்மேல் காதல் வராது...”

“அதெல்லாம் சும்மா... இப்போது பார்...” பதிலுக்கு முணுமுணுத்த தினேஷ் நெடுஞ்சாண் கிடையாக ராமசாமியின் காலில் விழுந்தான்.

“நீங்கள்தான் என் உயிர் நண்பன் ரகுவின் தாத்தாவா ? தெரியாமல் பேசிவிட்டேன் தாத்தா... ரகுவிற்கு தாத்தா என்றால் எனக்கும் தாத்தாதானே... இந்தச் சிறியவனின் ... மன்னித்து விடுங்கள்...”



ராமசாமி மிகப்பெரிய அறிவாளி என்று தினேஷிற்கு தெரியாமல் போனது. அவர் கூழைக் கும்பிடு போடுகிறவர்களை எப்போதுமே நம்ப மாட்டார். தினேஷ் பாட்டுக்கு ‘ஸாரி...’ என்று சொல்லிவிட்டு போயிருந்தால் கூடப் பரவாயில்லை... காலில் விழுந்து வைக்கவும் அவர் முகம் மாறிவிட்டது... அவனுடன் வந்த பெண் அவனைக் கடிந்து கொண்டதை அவர் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். அவனைவிட அந்தப் பெண் ‘கைகாரி...’ என்பது அவருடைய கணிப்பு. அதற்கு ஏற்றார்போல அவள் மிகுந்த பவ்யமாய் குனிந்து ஒரு கையில் அவரது காலைத் தொட்டு வணங்கினாள்.

“யாரும்மா...நீ... என்ன வேணும் உனக்கு ?”

“உங்க ஆசிர்வாதம் வேணும் தாத்தா...”

அந்தப் பெண்ணின் வார்த்தைகளில் போலி பணிவு தென்பட்டது. குனிந்து நிமிரும் போது அவளது இறக்கி வெட்டப்பட்ட சுடிதாரில் தெரிந்த உடலமைப்பு அவரைப் பல்லைக் கடிக்க வைத்தது. ஒருகணம் மீராவின் இயல்பான பணிவையும்... இவளது போலியான பணிவையும் ஒப்பிட்டுப் பார்த்தார். அடுத்த கணம் அவர் தன்னைத்தானே கடிந்து கொண்டார்.

‘போயும்...போயும்... இந்தப் பிடாரியுடனா மீராவை ஒப்பிட்டு நினைப்பது ?’

சுபாங்கிணியோ தாத்தா பாட்டியிடம் வளர்ந்த பெண்... மிகுந்த புத்திசாலி. ஒரே பார்வையிலேயே வந்திருந்தவர்களை எடைபோட்டு விட்டாள் அவள்.

“என்ன தாத்தா... இரண்டுமே இவ்வளவு பெரிய நாடகசாலையாக இருக்குதுகளே... எதுக்கு இங்கே வந்திருக்குதுக...” என்று ராமசாமியின் காதினில் முணுமுணுத்தாள்.

"யாருக்கும்மா தெரியும்? நம்ம ரகுவோட பெயரைச் சொல்லுதுக... நீ போய் நம்ம ரகுவை வரச்சொல்லு..." அவர் தாழ்ந்த குரலில் பேத்திக்கு ஆணையிட்டார்.

அவர் குடித்து விட்டுத் தந்த காலித் தம்ளரை வாங்கிக் கொண்ட சுபாங்கிணி விறுவிறுவென வீட்டுக்குள் போனாள்... தினேஷும்... அனிதாவும் அவளைப் பின் தொடர முற்படுகையில்... ராமசாமியின் குரல் அவர்களை தடுத்தது.

"அப்படித் திண்ணையிலே உட்காருப்பா... ரகுவை வரச் சொல்லி இருக்கிறேன்... எலே முனியா...பெட்டிகளை இவங்க காலடியில் போட்டு விட்டு வேலையைப் பார்க்கப்போ... வெட்டியாய் எதையாவது செய்யாதே..."

இவ்வளவு போதாதா முனியனுக்கு? அவன் பெட்டிகளை தினேஷின் காலடியில் போடுவதை விட்டு விட்டு தினேஷின் கால்மீதே போட்டான்... 'ஆ.ஆ' என்று அலறியபடி காலை நகர்த்திக் கொண்டான் தினேஷ்.

'நல்லவேளை ஷூ போட்டிருந்தேன்...இல்லாவிட்டால்...' அனிதாவிடம் பார்வையிலேயே கூறினான். அவள் 'பொறு...' என்பதாய் இமைகளை மூடித்திறந்து உணர்த்தினாள்.

இருவரும் வேறு வழியில்லாமல் திண்ணையில் அமர்ந்தனர். ராமசாமி விசாரணையை ஆரம்பித்தார்.

"ரகு உன் உயிர் நண்பன் என்கிறாயே... உன்னைப் பற்றி அவன் வீட்டில் பேசியதே இல்லையே..."

"அப்படியா... தாத்தா... அவன் வரட்டும் கேட்கிறேன்..." தினேஷ் பல்லைக் கடித்துக் கொண்டே பதில் கூறினான்.

"அவனை உனக்கு எப்படித் தெரியும்?"

"இரண்டு பேரும் ஒன்றாக எம்பிஏ படித்தோம் தாத்தா..."



"ஓஹோ... எம்பிஏ படித்து முடிவதற்குள் உயிர் நண்பன் ஆகிவிட்டாயாக்கும்..."

'கிழம் எப்பிடிக் கிண்டலாக கேட்கிறது...' மனதிற்குள் கடுப்புடன் நினைத்துக் கொண்ட தினேஷ் வெளியில்

"ஆமாம்... தாத்தா..." என்று வாயை ஈயென்று காட்டி வைத்தான்... சிரிக்கிறானாம்.

'இதற்கு இவன் சிரிக்க முயற்சி பண்ணாமலேயே இருந்திருக்கலாம்' அனிதா பெருமூச்சு விட்டாள்.

"இந்தப் பொண்ணு யாரு...?"

"என் தங்கை தாத்தா..."

"இவளுக்கு ரகுவைத் தெரியுமா?"

"நன்றாகத் தெரியும் தாத்தா"

"எப்படிப் பழக்கம்...?"

"சென்னைக்கு வந்தால் ரகு எங்கள் வீட்டிற்குத்தானே வருவான்... என் பேமிலியில் அவன் ஒருவன் தாத்தா..."

'இது எத்தனை நாளாய் நடக்குது?' ராமசாமியின் மனதில் எச்சரிக்கை மணி அடித்தது... இவனும் இவன் தங்கையும் சரியில்லாதவர்கள் என்பது முதல் பார்வையிலேயே தெரிகிறதே... இவர்களுடன் ரகுநந்தன் பழக்கம் வைத்திருக்கிறானா? அதுவும் அவர்கள் வீட்டில் ஒருவனாக மாறும் அளவிற்கு பழக்கம் வைத்திருக்கிறானா?

வீட்டுக்குள் போன சுபாங்கிணி நேராய் சமையல் கட்டுக்குப்போய் வாசலில் நடந்த விவரங்களை சுந்தராம்பாளிடம் கூறினாள்.

"அந்தப் பெண்ணின் பார்வையே சரியில்லைம்மா... இதுக எதுக்கு நம்ம வீட்டுக்கு வந்திருக்குகன்னு தெரியலை..."

தாத்தா அதுகளை வாசலிலேயே நிறுத்திவிட்டு அண்ணனை கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னார்... அதற்குத்தான் போகிறேன்..."

சுந்தராம்பாள் கைவேலையை அப்படியே நிறுத்தி விட்டு "அம்புஜம்... அடுப்பை பார்த்துக்க", என்று ஆணையிட்டு விட்டு வாசல்பக்கம் வந்து எட்டிப்பார்த்தாள்.

"என்னங்க..." என்று அழைத்து விசயத்தைக் கூறினாள்.

"அப்பாவை கன்ட்ரி புரூட் என்றானா ? எவன்... அவன் ?" அவர் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வாசல் பக்கம் விரைந்தார் . சுந்தராம்பாள் பின் தொடர்ந்தாள்... வழியில் தென்பட்ட ஆவுடையம்மாள் மகனின் வேகத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டவளாய்.

"ஏங்கண்ணு... இவ்வளவு வேகமாக போகிறாயே... என்ன விசயம் ?" என்று பிரியமாக விசாரித்தாள்.

"வாசலில் எவனோ ஒரு மாங்கா மடையன் நம் அப்பாவைப் பார்த்து கன்ட்ரி புரூட் என்றானாம்... அதை விசாரிக்கத்தான் போய் கொண்டிருக்கிறேன்."

"அப்படின்னா என்னய்யா அர்த்தம் ?"

"அப்பாவை பட்டிக்காடுன்னு திட்டியிருக்கான் அம்மா..."

"என்னது..." ஆவுடையம்மாளும் ஆவேசமாய் மகனைப் பின் தொடர்ந்தாள்.

வீட்டுக்குள்ளிருந்து ரகுநந்தன் வெளிப்படுவதற்கு பதில் ஒரு வயதான மூதாட்டியும் நடுத்தர வயதைக் கடந்த மனிதரும் வெளிப்படுவதைக் கண்ட அனிதாவின் புருவங்கள் மேலேறின...

'என்னடா இது... இதுதான் கிராமத்து வீடோ... ?'



# 23

அனிதாவிற்கு கிராமப்புறத்து பழக்க வழக்கங்கள் தெரியாது. சினிமாவில் பார்க்கும் கிராமங்களையே பார்த்துப் பழக்கப்பட்டவள் அவள். கிராமத்தில் இருப்பவர்கள் நாகரிகமாய் உடை அணிய மாட்டார்கள். அதிகம் படித்திருக்க மாட்டார்கள். வெளியுலகம் தெரியாதவர்கள் நகரத்து வாசிகளைப் பார்த்தால் விழியகலப் பார்ப்பார்கள் என்ற எண்ணத்துடன் பூஞ்சோலையில் காலடி வைத்தவள்.

இப்போதெல்லாம் கிராமத்து மக்கள் வீட்டுக்கு வீடு படித்தவர்களாக வெளியுலகம் தெரிந்தவர்களாக இருப்பது அவளுக்கு தெரியாது.

ஒரு கிராமத்து வீட்டிற்குள் நுழைவது என்பது அவ்வளவு எளிதான விசயமல்ல... விசாரணை இன்றி யாரும்... யாரையும் வீட்டிற்குள் சேர்க்கமாட்டார்கள் பழகி விட்டால் உயிரையும் கொடுப்பார்கள்... பழகுவதற்கு முன் தள்ளித்தான் நிறுத்துவார்கள்.

சுந்தராம்பாள் கதவுக்கு பின்னாலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க... ஆவுடையம்மாள் கண்ணாடியை துடைத்துப் போட்டுக் கொண்டு அனிதாவை மேலும் கீழும் பார்க்க... சோமசுந்தரம் தினேஷை முறைத்துப் பார்க்க... அந்தச் சூழ்நிலையே அனிதாவிற்கு தர்ம சங்கடத்தை உண்டு பண்ணியது. அவளைப் போன்ற பெண்களைக் கண்டவுடன் கண்டுபிடித்து விடும் ஆவுடையம்மாள்...

"ஏம்மா... நீயாரு... எந்த ஊரு... என்ன பேரு." என்று வினவினாள்.

'சுத்த கர்நாடகம்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே

எதற்கும் இருக்கட்டுமென்று அனிதா அவளது கால்களிலும் விழுகப் போனாள்.

"பொறும்மா... இதென்ன வேண்டுதல் மாதிரி படக்கு... படக்குன்னு நீ எல்லோர் கால்களிலும் விழுந்து வைக்கிற... உனக்கு என்னதாம்மா வேணும்?" அதட்டினாள் ஆவுடையம்மாள்.

"பெரியவர்களிடம் ... ஆசிர்வாதம் வாங்கலாமுன்னு..."

"மரியாதை மனசில் இருந்தாப் போதும்... ஆமாம் பெரியவங்கன்னு யாரைச் சொல்கிற... வயசில் பெரியவங்களையா... இல்லை பணத்தில் பெரியவங்களையா... வயசில் பெரியவங்களை உன் அண்ணன் கொஞ்சநேரத்துக்கு முன்னாலே ஏதோ ஒரு வார்த்தையைச் சொல்லித் திட்டினனாமே... பணத்தில் பெரியவங்கன்னு தெரிஞ்சவுடன் காலில் விழுந்தானாமே. இதுதான் பெரியவங்க கிட்ட நீயும் உன் அண்ணனும் காட்டுகிற மரியாதையா?"

ஆவுடையம்மாளின் கேள்விக் கணைகளில் அயர்ந்து விட்டாள் அனிதா. 'ஒரு வீட்டுக்கு வந்தால் வாசலிலேயே நிறுத்தி இத்தனை கேள்விகள் கேட்பார்களா?'

அந்த வீட்டில் கேட்பார்கள் என்பது அவளுக்கு தெரியாமல் போனது அவளுக்கு ஒரு சறுக்கல்தான். சோமசுந்தரமும்... வையாபுரியும் சிறுவயதிலிருந்தே நண்பர்கள்... சோமசுந்தரம் சென்னை சென்றால் வையாபுரியின் வீட்டில்தான் தங்குவார்... ஆனால் வையாபுரியின் மகள் மீராவை ஆறு மாதங்கள் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொள்ள தானாய் சம்மதம் சொல்லிவிடவில்லை சோமசுந்தரம்... வீட்டில் உள்ள அனைவரையும் கலந்து ஆலோசித்து விட்டுத்தான் சம்மதம் சொன்னார். வீட்டில் உள்ளவர்களும் உடனே ...



அனுமதித்து விடவில்லை... ஆயிரம் கேள்விகள் விளக்கம் கிடைத்த பின்னரே மீராவை வீட்டிற்குள் அனுமதித்தனர்.

திருமண வயதில் வீட்டில் ஆண்மகன் இருக்கும்போது வயதுப் பெண்ணை வீட்டில் தங்க விடக்கூடாது என்ற கொள்கையை உடைய ராமசாமி... வயதுப் பெண்ணாக அவர்கள் உயிரினும் மேலாக நேசிக்கும் பேத்தி இருக்கும் வீட்டில் தினேஷ் போன்ற 'தறுதலை'யை தங்க விடுவாரா?

சோமசுந்தரத்தின் அனுபவம் வாய்ந்த எடை போடும் விழிகள் தினேஷையும், அனிதாவையும் கூர்மையாக எடை போட்டன. அவர்களது காலடியில் இருந்த நான்கு பெட்டிகளும் அவரின் கவனத்தில் பட்டன.

"இந்தப் பெட்டிகள் யாருடையதுப்பா?" என்று அவர் வினவினார்.

"எங்களுடையதுதான் அங்கிள்... நான் ரகுவின் பெஸ்ட் பிரண்ட் இவள் என் தங்கை அனிதா..."

"ஒஹோ... இந்தக் கார் யாருடையது...?"

"என்னுடையதுதான் அங்கிள்... எங்களுக்கு பஸ்ஸில் டிராவல் பண்ணிப் பழக்கமில்லை... எங்கே போனாலும் கார்தான்"

இந்த வார்த்தைகளில் இருந்தே அவனது வசதியை எடைபோட்டு விட்டார் சோமசுந்தரம். கிராமத்தில் ஒரு பழக்கம் உண்டு... கொஞ்சம் வசதி குறைந்த மக்களிடம் 'இன்றைக்கு உங்கள் வீட்டில் என்ன சாப்பாடு?' என்று கேட்டால் 'நெல்லுச்சோறு...' என்று பெருமையாய் பதில் சொல்வார்கள்... தினமும் கம்பு... சோளம் என்று சாப்பிடுபவர்கள் என்றாவது ஒரு நாள் சாப்பிடும் நெல்லுச் ... வதாவது அரிசி சாதத்தைப் பெருமையாகக்

கூறுவார்கள்.

பிறந்ததில் இருந்து காரில் போய் வருபவன் காரைப் பற்றிப் பெருமையாகப் பேச மாட்டான்... பஸ்ஸில் போய் பழக்கமில்லாதவன் பஸ் பயணத்தைப் பற்றியே பேசமாட்டான்... இவன் வெறும் வாய் பந்தல் போடுகிறவன். வசதியில்லாமல் இருப்பதில் தவறில்லை... வசதி இருப்பது போல் நடிப்பது தவறு... அப்படிப்பட்டவனிடம் மெய் இருக்காது... பொய்தான் இருக்கும்... அவன் அபாயகரமானவன்... இயல்பானவன் அவனது ஏழ்மையை மறைக்க மாட்டான்.

"எங்கேயிருந்து வருகிறீர்கள் ?"

"சென்னையிலிருந்து... ரகு சொல்லவில்லையா ?"

"ரகுவிடம் நீ இன்று வரப் போவதை சொல்லியிருந்தாயா? முக்கியமாய் இந்தப் பெண்ணுடன் வரப் போவதை தெரியப்படுத்தியிருந்தாயா ?"

தினேஷ் பேந்தப் பேந்த விழித்தான்.

'இது என்ன இந்த ஆள் இப்படி ஒரு கேள்வியக் கேட்கிறான்...'

"இல்லை அங்கிள்... நாங்கள் கிளம்பி வருவது சஸ்பென்ஸாக இருக்கட்டும்... அவனுக்கு இன்ப அதிர்ச்சியை கொடுக்க வேண்டுமென்று நினைத்துச் சொல்லவில்லை..."

"இன்ப அதிர்ச்சியா ?" ஒரு மாதிரியான குரலில் வினவியபடி அனிதாவை பார்வையிட்டார் சோமசுந்தரம்.

அவரது பார்வையை அவள் கண்கள் கவனித்து விட்டது புரிய அவள் கெட்டிக்காரியென்று எண்ணிக் கொண்டார்... மிக இறக்கமாக வெட்டப்பட்ட இறுக்கமான சுடிதாரில் இருந்தாள். துப்பட்டாவை தோளின் ஒருபக்கமாய் போட்டிருந்தாள்.



அவளை முதல் பார்வையிலேயே ராமசாமி முதற் கொண்டு யாருக்குமே பிடிக்காமல் போயிற்று.

'இந்தப் பெண் சரியில்லாதவள்... இவள் ஏன் இங்கு வந்திருக்கிறாள்'

"இது உன் தங்கையாப்பா... ?"

"ஆமாம் அங்கிள்...அனிதா அங்கிளிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொள்..."

எழுந்திருக்கப் போன அனிதா ஆவுடையம்மாள் முறைத்த முறைப்பில் அடங்கிப் போய் அமர்ந்தாள்.

"நீங்க இரண்டு பேரும் என்ன விசயமாய் இந்தப் பக்கம் வந்தீங்க ?"

"குற்றாலம் பக்கம் என் ஊர்... நீ கட்டாயம் வரவேண்டும் என்று ரகு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான்... எனக்கு வரவேண்டுமென்ற மூடு வந்து விட்டது... அனிதா நானும் வருவேன் என்றாள்... கிளம்பி வந்து விட்டோம்"

"மூடு வந்தால் பெட்டி படுக்கையோடு வயசுப் பெண்ணைக் கூப்பிட்டுக் கொண்டு ஊர் விட்டு ஊர் வந்து விடுவாயா ? உன் வீட்டில் ஒன்றும் சொல்ல மாட்டார்களா ?"

"என்ன அங்கிள் இப்படிக் கேட்டு விட்டீங்க... அனிதா பக்கத்து வீட்டுக்குக் கூடப் போக மாட்டாள்... அளவாய்தான் யாருடனும் பழகுவாள். நீங்கள் என்ன, அந்நியமா... அசலா...? எங்க ரகுவின் சொந்தக்காரங்க எங்க சொந்தக்காரங்க... ரகுவின் வீடு எங்கள் வீடு..." தினேஷ்... பளிங்குக் கல்லால் கட்டப்பட்டிருந்த அந்த மாளிகையை ஆசையாய் பார்த்தபடி கூறினான்.

"விட்டால் ரகுவின் சொத்தெல்லாம் எங்க சொத்துன்னு சொல்லிருவ போல இருக்கே... பார்த்துப் பேசுப்பா... இது

பட்டினமில்லை... பட்டிக்காடு..." ஆவுடையம்மாள் கண்டிப்புடன் கூறினாள்.

அதே நேரம் மாடியில் சுபாங்கிணி ரகுநந்தனைத் தேடிச் சென்றபோது அவன் மீராவுடன் ஊஞ்சலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

"மீரா... நீ ஊஞ்சலில் உட்காரேன்... நான் ஆட்டி விடுகிறேன்."

"எதற்கு அண்ணியைப் பிடித்துக் கீழே தள்ளிவிட திட்டம் போட்டு இருக்கிறாயா? உன்னால் அவங்க நெற்றியில் ஏற்பட்டிருக்கும் ஒரு விழுப்புண் போதாதா... இன்னும் ஒன்று வேண்டுமா? " என்று கேட்டபடி சுபாங்கணி அவர்களின் அருகே சென்றாள்.

"ஏய்... வாலு... அன்றைக்கு நடந்ததை இவளே மறந்து விட்டாள்... நீ ஏன் அதையே பேசுகிறாய்?" கோபமாக கேட்டான் ரகுநந்தன்.

"என்னிடம் நீ கோபத்தை காட்டுவது இருக்கட்டும்... கீழே பாட்டி... அப்பா... அம்மா... எல்லோரும் உன்மேல் கோபமாய் இருக்கிறார்கள்... சீக்கிரம் கீழே போ..."

"ஏன் என்ன நடந்தது?"

"உன்னை யார் வீட்டில் கேட்காமல் உன் கூடப் படித்தவனையெல்லாம் வீட்டுக்கு அழைக்கச் சொன்னது?"

"நானா...? நான் யாரைக் கூப்பிட்டேன்...?"

"நீ கூப்பிடவே இல்லையா? நீ கூப்பிடாமலே அந்த



"என்ன விசயம் சுபா?"

"எவனோ ஒரு தடிமாடு வந்திருக்கிறான் அண்ணா... உன் கூடப் படித்தவனென்று சொல்லுகிறான்... கூட ஒரு பரட்டைத்தலைப் பெண்ணை அழைத்து வந்திருக்கிறான். ரெண்டும் காரில் பெட்டிகளோடு வந்து இறங்கி நம் முனியனை பெட்டிகளைக் தூக்கிக் கொண்டுவான்னு அதட்டி விட்டு நேராய் வீட்டுக்குள் வரப் பார்த்ததுகள்... தாத்தா நீயாருப்பான்னு விசாரித்தார்... அதற்கு அந்த தடிமாடு நீ யாரு பெரிசு... உனக்கு மேனர்ஸ் இருக்கிறதா... கன்ட்ரி புரூட்ன்னு தாத்தாவை திட்டிட்டான்..."

ரகுநந்தன் கொதித்து விட்டான்... ராமசாமி அந்த ஊருக்கு பெரிய மனிதர்... முதல் மரியாதை பெறும் தகுதியை உடையவர்... அவரைப் போய் ஒருவன் மரியாதையில்லாமல் பேசினானா?

"யார் அவன்?"

"என்னைக் கேட்டால்... எனக்கென்ன தெரியும்? அவன் உன் பெயரைத்தான் சொல்லுகிறான்..."

ரகுநந்தன் அவசரமாய் கீழே இறங்கிப் போக... சுபாங்கிணியும்... மீராவும் பின் தொடர்ந்தனர்.

ரகுநந்தன் திண்ணைக்கு விரைய... சுந்தராம்பாள் சுபாங்கிணியையும்... மீராவையும் கண்ணசைவில் தடுத்தாள்.

ராமசாமி... ஆவுடையம்மாள்... சோமசுந்தரம் ஆகியோரின் மும்முனை தாக்குதலில் இருந்து தப்பிக்க வழி தேடித் தவித்த

அவசரமாய் வீட்டுப் பக்கம் தாவியது... மீரா தென்படவில்லை. படபடப்புடன் தினேஷின் பக்கம் திரும்பி...

"என்ன விசயம் தினேஷ்... இந்தப் பக்கம் ஏதும் வேலையாய் வந்தாயா?" என்று வினவினான்.

தினேஷின் முகம் சுருங்கி விட்டது. பக்கத்தில் அடக்க ஒடுக்கமாய் நிற்க முயன்று கொண்டிருந்த அனிதாவின் பக்கம் பார்த்து விட்டு...

"உன் தங்கையும் வந்திருக்கிறார்கள் போல... பெட்டிகள் வேறு இருக்கின்றன. இந்தப் பக்கம் உங்களுடைய சொந்தக் காரர்கள் யாரும் இருக்கிறார்களா?" என்று கூடுதல் கேள்வி வேறு கேட்டான்.

சோமசுந்தரத்தின் முகத்தில் ஜீவன் வந்தது. தன் பிள்ளை வீட்டு வழக்கத்தை மீறவில்லை என்ற நிம்மதியுடன் தாய் தந்தையாரைப் பார்த்தார்... அவர்களும் அதே நினைவுடன் அவரைப் பார்த்தார்கள்.

"நீ தான் இவர்களை நம் ஊரைப் பார்க்க வரச் சொன்னதாக இந்தப் பையன் சொன்னானேப்பா..."

"இல்லையே அப்பா... அப்படி யாரையும் நான் அழைத்தது இல்லையே... அழைத்திருந்தால் உங்களிடம் சொல்லியிருப் பேனே..." ரகுநந்தன் தர்ம சங்கடத்துடன் தினேஷைப் பார்த்தான்.

இவன் எங்கே இங்கு வந்து தொலைத்தான்... கூட அவனுடைய தங்கையும் அழைத்துக் கொண்டு வந்திருக் கிறானே... வீட்டுப் பெரியவர்கள் ரகுநந்தனைப் பற்றி என்ன நினைப்பார்கள்... இதில் வேறு ரகுநந்தன்தான் இவனையும் இவன் தங்கையையும்...



வரச் சொன்னான் என்று மீரா நினைத்து விட்டால் என்ன செய்வது?

## 24

"தினேஷ்... நீ கிளம்பும் முன் எனக்கு ஒரு போன் பண்ணியிருக்கலாமே..."

"நமக்குள் எதற்கு போன் என்று நினைத்து விட்டேன் ரகு... குற்றாலம் பக்கம் என் ஊர் என்று சொன்னாய்... இயற்கையோடு கலந்து கொஞ்சநாள் இருந்து விட்டு வரலாமென்று ஆசை வந்தது..." தினேஷ் பேசிக் கொண்டிருக்க அவனது 'கொஞ்ச நாள்...' என்ற வார்த்தைக் கேட்டு ஆவுடையம்மாள் பல்லைக் கடித்தார்.

ஒருநாள்... இரண்டு நாள் கூட இல்லை... கொஞ்ச நாள்களாம்... பெட்டிகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் மாதக்கணக்கில் இருக்கும் போல...

"ஏன்ப்பா... நீதான் இயற்கையோடு கலக்க வந்தாய்... உன் தங்கை எதற்கு வந்தது?" குத்தலாய் வினவினாள் ஆவுடையம்மாள்.

"அவளுக்கும் குற்றால மலைச் சாரலைப் பார்க்க ஆசை பாட்டி... அதனால் கூட்டி வந்தேன்..." வெள்ளைச் சிரிப்புடன் கூறினான் தினேஷ்

ரகுநந்தன் பாடு திண்டாட்டமாகி விட்டது... இந்த ... அவன் தங்கை வேறு வந்திருக்கிறாள்...

dsc00255.jpg (3072x2304x24b jpeg)



“என்னப்பா யோசிக்கிறாய்?” இதமாக வினவினார் சோமசுந்தரம்.

“இல்லைப்பா... இவன் என்னுடன் படித்தவன் தான்... சொல்லாமல் கிளம்பி வந்து விட்டாலும் என்னை நம்பிக் கிளம்பி வந்து விட்டான்.” குழப்பத்துடன் கூறினான் ரகுநந்தன்.

“அதனால் என்னப்பா... குற்றாலத்தைப் பார்க்கத்தானே வந்திருக்காங்க. நம்ம சோணாசலம் வீட்டிற்கு போன் போடுகிறேன் ஆச்சியும் அவரும் தனியாகத்தானே இருக்கிறாங்க... இவங்க என்ன அதிக நாளா தங்கப் போகிறாங்க? விருந்தும் மருந்தும் மூன்று நாள்கள் தானே... அதனால் நாம் ஆகிய செலவை கொடுத்து விடலாம். அங்கே தங்க வைத்து விட்டுவா... சீக்கிரம் வந்து விடுப்பா...” தீர்வு கூறினார் சோமசுந்தரம்.

“சரிப்பா...” நிம்மதியுடன் கிளம்பினான் ரகுநந்தன்.

“வாடா தினேஷ் போகலாம்...”

“எங்கேடா...?” தினேஷ் திகைத்தான்.

“குற்றாலத்திற்குத்தான்...”

“குளித்துச் சாப்பிடாமலா...?”

“அதற்குத்தான் ஆச்சி வீட்டிக்கு அழைத்துக் கொண்டு போகிறேன்...”

“உன் வீடு இருக்க... அடுத்தவர் வீட்டில் நாங்கள் தங்கினால் உன் மரியாதை என்னவாகிறது?”

‘இவன் ஒருத்தன்... இடம் பொருள்... ஏவல் தெரியாமல் பேசுவான்’ எரிச்சல் பட்டான் தினேஷ்.

“வயசுப் பெண்கள் இருக்கிற வீட்டில்... வேற்று ஆளைத் தங்க வைத்தால்தான் இவன் மரியாதை குறையும்...” இடக்காகக் கூறினாள் ஆவுடையம்மாள்.



“வயசுப் பெண்களா... உனக்கு ஒரு தங்கை மட்டும்தான் இருக்கிறதாகத்தானே நீ சொன்னாய்...?” ஆவுடையம்மாளின் இடக்குப் பேச்சைத் துடைத்து விட்டுவிட்டு தினேஷ் ஆவலாய் வினவினான்.

“நாம் என்ன சொல்கிறோம்... உன் சிநேகிதன் புத்தி எங்கே புல் மேயப் போகிறதுன்னு பார்... ரகு... காலங்கார்த்தாலே கடுப்படிக்காமல் கிளம்பிப் போடா...” ஆவுடையம்மாள் அதட்டினாள்.

“டேய் வா... கிளம்பலாம்...”

“நான் எதுவும் தப்பாக கேட்டு விட்டேனா ரகு...?”

“அதெல்லாம் ஒன்றுமில்லை... இது பெரியவர்கள் இருக்கும் வீடு... நாம் பார்த்துப் பேச வேண்டும்...”

“பெரியவர்கள் கூட இருப்பது பாதுகாப்பு என்றுதானே அனிதா இங்கே வந்தாள்... அவளுக்கு அடுத்தவர்கள் வீட்டில் தங்கிப் பழக்கமில்லையேடா... பயப்படுவாளே...”

“ஏம்பா... முன்னே பின்னே தெரியாதவங்க வீட்டுக்கு அண்ணனோடு கிளம்பி வருகிற பெண்ணுக்கு என்ன பயம்?”

“பாட்டி... ப்ளீஸ்... தினேஷ்...உன்னையும்... உன் தங்கையையும் ஹோட்டலில் தங்க வைத்தால்தான நீங்கள் இரண்டுபேரும் பயப்படவேண்டும். எங்கள் சொந்தக்காரர்கள் வீட்டில்தானே தங்க வைக்கப் போகிறேன்... அவர்களும் பெரியவர்கள்தான்... கவலைப்படவேண்டாம்...”

எங்கே நின்றால் அவன் பேச்சை இன்னும் வளர்ப்பானோ... என்ற பயத்துடன் ரகுநந்தன் குனிந்து இரண்டு கைகளிலும் இரண்டு பெட்டிகளை எடுத்துக் கொண்டான். உடனே அவசரமாய் குனிந்து அவன் கைபிடித்து தடுத்த அனிதா.

"என் பெட்டியை நீங்கள் தூக்குவதா ? ...ஊஹூம்...என் மனம் தாங்காது..."என்றாள்.

ரகுநந்தன் சங்கடத்துடன் தனது கையை உறுவிக் கொண்டு காரை நோக்கி நடந்தான்.

"அனிதா... நீ பயப்படுவாய்... அதனால் ரகுவின் காரில் ஏறிக்கொள்... நான் பின்னால் தொடர்ந்து வருகிறேன்..." என்று தினேஷ் சொல்லி வாய் மூடு முன்னர்

"நானும் அதைத்தான் அண்ணா நினைத்தேன்", என்றபடி ரகுநந்தனின் காரின் முன்பக்க கதவைத் திறந்து அவனருகில் அமர்ந்து கொண்டாள் அனிதா.

செய்வதறியாமல்... ஆவுடையம்மாளின் அனல் பார்வையைச் சந்தித்த ரகுநந்தன் மேலும் தாமதித்தால் அவள் நெற்றிக் கண்ணையும் திறந்து சுட்டெரித்து விடுவாளென்ற பயத்துடன் காரைக் கிளப்பினான்.

தினேஷ் அவசரமாய்... பெட்டிகளைத் தூக்கி காரின் பின் சீட்டில் போட்டுக் கொண்டு காரைக் கிளப்பி ரகுநந்தனின் காரைப் பின் தொடர்ந்தான்.

"யாருடா இதுக...? எந்தக் காட்டுச் சிறுக்கியோ... என் பேரன் பக்கத்தில் இவ்வளவு உரிமையாய் உட்கார்ந்துக் கிட்டுப் போகிறாள்... நீயும் பார்த்துக் கிட்டு நிற்கிற...", சோமசுந்தரத்தின் முதுகில் ஒரு அடி போட்டாள் ஆவுடையம்மாள்.

"என்னை என்னம்மா பண்ணச் சொல்கிறீங்க... நம்ம பயல் அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்திருந்தால்... இல்லை என் பக்கத்தில் உட்காருன்னு அவளைப் பார்த்துச் சொல்லியிருந்தால் நாம் நம் வீட்டுப் பிள்ளையைக் கண்டிக்கலாம்... இங்கே கதையே வேறு... அவள்தானே நம் பிள்ளையின் பக்கத்தில்போய் உட்காருகிறாள்... நம்ம பிள்ளையை எப்படிக் குற்றம்



சொல்வது ?" சங்கடத்துடன் கூறினார் சோமசுந்தரம்.

ராமசாமிக்கு அந்தப் பெண் குனிந்து நிமிர்ந்த போது தெரிந்த உடல் வளைவுகள் நினைவுக்கு வந்தன.

"சோமு... அந்தப் பெண்ணின் குணம் சரியில்லைடா... அவள் நம் ரகுவுடன் பழகுவது நல்லதற்கு இல்லை..." யோசனையுடன் தந்தை கூறியதை உணர்ந்துதான் இருந்தார் சோமசுந்தரம்.

ராமசாமி பெருமூச்சுடன் எழுந்து வீட்டிற்குள் செல்ல... மற்றவர்கள் பின் தொடர்ந்தனர்... கதவு மறைவில் நின்ற சுந்தராம்பாள் உள்ளே வந்தாள்... ஹாலில் அனைவரும் அமர்ந்தனர்.

"யாரும்மா... அந்த கிராக்கிகள் ?" என்று சுபாங்கிணி விசாரித்தாள்.

"அவன் யாரோ... உன் அண்ணன் கூடப் படித்தவனாம்..."

"அந்த மேக்கப் சுந்தரி...?"

"அவனுடைய தங்கையாம்..."

"இரண்டு பேரும் இங்கே எதற்கு வந்தாங்களாம் ?"

"ஊரைச் சுற்றிப் பார்க்க வந்தார்களாம்..."

"இரண்டு பேரையும் எங்கே பார்சல் பண்ணி விட்டிங்க ?"

"குற்றலாத்து ஆச்சி வீட்டிற்கு..."

"சரியான இடத்திற்குத்தான் அனுப்பியிருக்கிறீர்கள்..."

சுபாங்கிணி வீட்டுப் பெரியவர்களின் சாமர்த்தியத்தை எண்ணி மெச்சிக் கொண்டாள். சோனாசலமும்... காந்திமதி ஆச்சியும் காரைக்குடியிலிருந்து குற்றலாம் வந்து ஓட்டல் வைத்து நடத்தியவர்கள்... ஹோட்டலில் நன்றாக சம்பாதித்து சொந்தமாய் பங்களா ஒன்றை விலைக்கு வாங்கி...

மகனையும்... மகளையும் நல்ல முறையில் வளர்த்து படிக்க வைத்து திருமணமும் பண்ணி வைத்து விட்டார்கள்... மகனும்...மகளும் வெளிநாட்டில் செட்டிலாகி விட வாழ்ந்த ஊரை விட்டுப் போக மனதில்லாத இருவரும் ஹோட்டலை நல்ல விலைக்கு விற்று விட்டு நிம்மதியாய் குடும்பம் நடத்துகிறார்கள். ஆனாலும் தனிமை அவர்களை சூழ்ந்து கொள்ளவும் அதை விரட்டுவதற்காக... வீட்டில் 'பேயிங் கெஸ்டுகள்' எனப்படும் மாத வாடகை கொடுக்கும் பெண்கள் இருவரை தங்க வைத்து சமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் ஆச்சி... சென்ற மாதம்தான் அந்த இருபெண்களும் அவர்களது சொந்த ஊர்களுக்கு வேலை மாறுதல் வாங்கிக் கொண்டு போனார்கள்... இப்போது... தெரிந்தவர்கள் யாரேனும் வந்தால் ஆச்சியின் வீட்டில் தங்கிச் செல்வார்கள். ஆச்சிக்கு புத்தி கூர்மை அதிகம்... கண்டிப்பு அதைவிட அதிகம்... கூர்மையான பேச்சில் ஆயிரம் ஆவுடையம்மாள்களுக்கு அவள் சமம்.

அதை அறியாமல் ரகுநந்தனிடம் ஒன்றும் தெரியாத சின்னக் குழந்தை போல் கொஞ்சிப் பேசிக் கொண்டே சென்றாள் அனிதா...

"இது என்ன செடி...?"

"அது என்ன பூ...?"

"இந்த ஆற்றுக்கு என்ன பெயர்?"

"இந்த ஆறு எங்கிருந்து வருகிறது..."

பொறுமையாய் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டே காரை ஓட்டினான் ரகுநந்தன். அவனது தோளோடு தோள் உராய அவள் அமர்ந்திருந்தது அவனை சங்கடத்திற்கு உள்ளாக்கியது.



'இவள் கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்தால் என்ன...'

முடியை கைவிரல்களால் ஸ்டைலாகத் தள்ளியபடி அவனது முகத்தைப் பார்த்து மோகனமாய் புன்னகைத்தாள் அனிதா.

"யு ஆர் வெரி ஹேண்ட்சம் ரகு..."

ரகுநந்தன் மௌனமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு அனிதாவின் செய்கைகள் எதுவுமே பிடிக்க வில்லை... அவனையும் அறியாமல் மீராவின் நாணப்பார்வை அவளது கண்முன் தோன்றியது... நீண்ட கூந்தலை விரித்து விட்டுக் கொண்டு தேவதை போல் அவள் முடிகோதி நின்ற காட்சி கண்முன் விரிந்தது...

ரகுநந்தனின் பார்வையைக் கண்டும்... பேச்சைக் கேட்டும் அவள் புரியும் வெட்கப் புன்முறுவல் நினைவில் வந்தது...

"ரகு..." அவனின் தோளைத் தொட்டு அசைத்து செல்லமாய் சிணுங்கினாள் அனிதா.

"என்ன...?". ரகுநந்தன் நகர்ந்து அமர்ந்தான்.

"நான் கேட்கக் கேட்க பதில் சொல்லாமல் அப்படி என்ன யோசனை பண்ணுகிறீர்கள்..." அவனது விலகலைக் கவனிக்காதவள் போல் அவனருகே மீண்டும் ஒட்டி அமர்ந்தபடி அவள் வினவினாள்.

"கொஞ்சம் தள்ளி உட்காருகிறீர்களா... ஐ பீல் அன் ஈஸி..." பட்டென்று முகத்தில் அடித்தது போல் கூறினான் ரகுநந்தன்.

அனிதாவிற்கு முகத்தில் அறைந்தது போல் ஆகிவிட்டது... இது வரையில் அவளது இந்த முயற்சி தோற்றதில்லை... முதன் முதலாய் ஒரு ஆண் அவளை விலகி அமரச் சொல்கிறான்... அவள் அவனது உதாசீனத்தால் பாதிக்கப் படாதவள் போல் லேசாய் நகர்ந்து அமர்ந்து கொண்டு

"இதை முதலிலேயே சொல்லியிருக்கலாமே ரகு... நான் புது இடத்தில் வந்த உற்சாகத்தில் இருப்பதால் உங்களுக்கு காரோட்ட இடைஞ்சலை ஏற்படுத்துகிறேன் என்பதை உணரவே இல்லை..." என்று கூறினாள்.

'இவள் உண்மையிலேயே அறியாதவள்தானா...' ரகுநந்தன் ஆக்ஸிலேட்டரை அழுத்த கார் பறந்தது.

"எதற்கு இத்தனை அவசரம் ரகு..."

"காலாகாலத்தில் உங்களை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விடவேண்டுமென்றுதான்..."

"எனக்கு இன்னும் கொஞ்நேரம் உங்களுடன் இப்படியே காரில் போய் கொண்டு இருக்க வேண்டும் போல் இருக்கிறது... இப்படியே...நான் மட்டும் தனியே... யாருமில்லாத ஓர் உலகத்திற்கு போய் விட்டால் எப்படியிருக்கும்..." அவள் கண்மூடி ரசித்துச் சொன்னாள்.

ஊஹும்... இவள் அறியாப் பெண் இல்லை...

கார் சரக்கென்று பிரேக் போட்டு நின்றது, உடல் குலுங்க நிமிர்ந்து பார்த்தாள் அவள்... பிரம்மாண்டமான அழகான பங்களா ஒன்றின் முன் கார் நின்று கொண்டிருந்தது.

"வாவ்... இதுவும் உங்களுடைய வீடா...?"

"இல்லை... அவர்களுடைய வீடு..."

வாசலில் நின்று கொண்டிருந்த காந்திமதியைக் காட்டிக் கூறினான். அனிதா ஏமாற்றத்துடன் இறங்கினாள்.

"வாப்பா...ரகு... சௌக்கியமா? இப்பத்தான் உங்க அப்பாவோட போன் வந்தது... வாசலுக்கு வந்தேன்... நீயும் வந்துட்ட... இதுதான் அந்தப்பெண்ணா... ஏண்டியம்மா... உன் அண்ணன் கூட வராமல் வேற்று ஆண்பிள்ளை கூட பக்கத்தில் உட்கார்ந்துகிட்டு வரலாமோ? காலம் கெட்டுக்



கிடக்கு... பொம்பளைகள் எப்பவும் ஜாக்கிரதையாய் இருக்கணும்."

காந்திமதி நிதானமாக கூறினாள். அனிதாவை காந்திமதிக்கும் காந்திமதியை அனிதாவிற்கும் முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போய் விட்டது.

"அண்ணன் கூட வர பயந்து கொண்டுதான் இவர்கூட வந்தேன்..." அனிதா ரகுநந்தனை ஒட்டிக் கொண்டு நிற்க முயல அவன் நகர்ந்து கொண்டான். காந்திமதியின் கூரிய பார்வை அதைக் கண்டு கொண்டது.

"அண்ணன் கூட வர பயமா? வெளியில் சொல்லாதே சிரிப்பார்கள். அது யார்...? அதுதான் நீ கூட வரப் பயந்த அண்ணனா? சரிசரி... பெட்டிகளைத் தூக்கிக்கிட்டு உள்ளே வாங்க... ரகு நீ கிளம்புப்பா..."

"வெயிட்... வெயிட்... ரகு... புது இடத்தில் எங்களை விட்டு விட்டு உடனே போக வேண்டுமா?" அனிதா கொஞ்சும் குரலில் கூறிக் கொண்டு அவனருகே போக முயல காந்திமதி ஆச்சி அவளை நகர விடாமல் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"அந்தப் பிள்ளைக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும்மா... உன்னையும்... உன் அண்ணனையும் போல நினைத்து விட்டாயா? நீ ஊர் சுற்றத்தானே வந்தாய்? வா... சாப்பிடு... ஊரைச் சுற்றிப்பார் அதை விட்டு விட்டு அந்தப் பிள்ளையை சுற்ற நினைக்காதே..."

"அவர்தானே எங்களுக்கு ஊர்சுற்றிக் காட்ட வேண்டும்?"

"அதுக்கு என் வீட்டுக்காரர் வருவார்... நீ போப்பா..."

'என்னது... இந்தக் கிழவியின் புருசன் அவளுக்கு ஊர் சுற்றிக் காட்டுவானா? என்ன தைரியம் பார் இந்தக் கிழவிக்கு...'

அனிதா மனதிற்குள் பொறுமிக் கொண்டிருக்கும்போதே... ரகுநந்தன், "பை... தினேஷ்... கிளம்பும் போது போன் பண்ணிவிட்டு கிளம்பு... ஆச்சியின் பில்லை நான் செட்டில் பண்ணிக் கொள்கிறேன்..." என்றபடி கிளம்பிப் போய் விட்டான்.

தினேஷூம்... அனிதாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றார்கள். அவர்கள் நினைப்பதென்ன... இங்கு நடப்பதென்ன ?

"என்னம்மா... அண்ணன் தங்கச்சி ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொள்ளாதது மாதிரி இந்தப் பார்வை பார்த்துக் கிட்டு நிற்கறீங்க... ம்ம்... பெட்டிகளைத் தூக்கிக் கிட்டு என் பின்னால் வாங்க..." என்று அதட்டினாள் காந்திமதி.

அனிதா அவளை முறைத்தாள்.

## 25

"என்னது பெட்டிகளை நாங்கள் தூக்கணுமா ?"

"உங்கள் பெட்டிகளை நீங்கள்தானே தூக்கணும் ?"

"நீங்க ஹோட்டல்தானே நடத்துகிறீர்கள்... பெட்டிகளை நீங்களே தூக்கிக்கிட்டு வாங்க..."



"அம்மா... ஆட்டக்காரி வார்த்தைகளை அளந்து பேசு... இது உன் ஊரில்லை... குற்றாலம்... இங்கு ஆச்சின்னு சொன்னால் அத்தனை பேருக்கும் தெரியும்... நான் 'ஊம்'ன்னு ஒரு வார்த்தை சொன்னேன்னுவை... உன்னையும்... உன் அண்ணனையும் தூக்கிக் கொண்டு போய் குற்றால மலை உச்சியிலிருந்து அருவியோடு அருவியாய் தள்ளி விட ஆள் படையெல்லாம் என் கைவசமிருக்கு... இப்பச் சொல்லு... பெட்டிகளை நீ தூக்குகிறாயா ? இல்லை நான் தூக்கட்டுமா ?"

அவசரமாய் அண்ணனும் தங்கையும் பெட்டிகளை தூக்கிக் கொண்டனர். காந்திமதி அலட்சியமாய் மாடியேறினாள்... அவர்களுக்கான அறைகளை திறந்து விட்டாள். ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டல் ரூம் போல் சகல வசதிகளுடன் இருந்தன அறைகள். பால்கனியில் இருந்து பார்த்தால் அருவி கொட்டுவது நன்றாகத் தெரிகிறது.

"ரூமில் ஏஸி வசதி இருக்கு... பாத்ரூமில் ஹீட்டர் வசதி இருக்கு... பால்கனியில் இருந்து பார்த்தால் குற்றால மலைச்சாரல் கண்ணுக்கு குளுமையாய் தெரியும்... வேளாவேளைக்கு கீழே வந்து வேண்டியதை கேட்டு வாங்கிச் சாப்பிடலாம்... ஊர் சுற்றிப் பார்ப்பது மட்டும் உங்க நோக்கம்ன்னா... அதுக்கு என் வீட்டுக்காரர் துணைக்கு வருவார்... இப்ப... ஒழுங்காய் குளித்து விட்டு வருகிற வழியைப் பார்க்கறீர்களா ?"

காந்திமதி ஆச்சி படியிறங்கிப் போய் விட்டாள். அருகருகே இருந்த அறைகளைப் பார்த்த தினேஷ்...

"ரூமெல்லாம் அட்டகாசமாகத்தான் இருக்கு... அந்தப் பட்டிக்காட்டு வீட்டுக்கு இது கோடி மடங்கு பெட்டர்..." என்றான்.

"நீ சொகுசை அனுபவிப்பதிலேயே குறியாய் இரு... நம்மை வீட்டுக்குள் விடாமல் வாசலோடு நிறுத்தி திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்... உனக்கு அது அவமானமாய் படவில்லையா ?" முறைத்தாள் அனிதா...

"இதோபார் அனிதா... ரகுவின் தங்கை விவரமானவளாக இருக்கிறாள்... அவளுடைய தாத்தா...பாட்டியை நினைத்தால் இப்போதும் எனக்கு குளிர்காய்ச்சல் வருவதுபோல் இருக்கிறது. எனக்கு அவள் சரிபட்டு வரமாட்டாள்..."

சீச்சீ... இந்தப்பழம் புளிக்கும் என்று கூறிவிட்டான் தினேஷ். அனிதாவினால் அப்படிக் கூறமுடிவில்லை... ரகுநந்தனின் கம்பீரமும் ... செல்வமும் அவளைக் காந்தமாய் இழுத்தன.

"ஆசை இருக்கு தாசில் பண்ண... அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்கன்னு சொன்னாங்களாம். அந்தக் கதை மாதிரி இந்தக் கதை இருக்கு", என்றாள் காந்திமதி ஆச்சி.

குளித்து உடை மாற்றி டிபன் சாப்பிட கீழே இறங்கி வந்த தினேஷையும், அனிதாவையும் கண்டதும் அவள் வாயில் வந்த பொன்மொழி இது.

"எந்தக்கதை... ?" அனிதா பல்லைக்கடித்துக் கொண்டு வினவினாள்.



"இது வேறொருத்தரோட சொந்தக் கதைம்மா... நீ வந்த வேலையைப் பாரு... ஏம்மா... அந்தக் கல்லைத்தூக்கிப் போடு... நீ ஏம்மா அரண்டு போய் பார்க்கிற... நான் தோசைக் கல்லைச் சொன்னேன்..."

அவர்கள் சாப்பிட்டதும் காரில் ஏறிக் கொள்ளச் செல்ல... ஒரு பெரியவர் அவர்களுடன் காரில் ஏறினார்.

"யார் நீங்க ?"

"இந்த வீட்டுக்குச் சொந்தக்காரன்... உங்களுடன் ஊர் சுற்ற வந்திருக்கிறேன்... போகலாமா ?"

தினேஷ் மறுத்துப் பேச வாயெடுக்க அனிதா கண்களால் அவனை அடக்கினாள்.

"அண்ணா சும்மாயிரு... எப்படியும் நாம் இன்று ஒரு நாள் ஊர் சுற்றித்தான் ஆக வேண்டும்... இன்று விட்டு நாளைதான் ரகுநந்தனைப் பிடிக்க வேண்டும்... தனியாய் ஊர் சுற்றுவதை விட ஒரு கைடோடு சுற்றுவது பெட்டர் இல்லையா ?" தினேஷின் காதோரம் கிசுகிசுத்தாள் அனிதா...

அவளுடைய கணக்கே வேறு... எப்போதும் வாய்தாட்டியாய் இருக்கும் பெண்களின் கணவர்கள் யதார்த்தமானவர்களாக இருப்பார்கள். அவளுடைய மதிப்பீடு சரியாகத்தான் இருந்தது சோணாச்சலம் புத்திசாலியாக இருந்தாலும் ... யதர்த்தமானவராக இருந்தார் மெல்ல... மெல்ல... அனிதா பேச்சுக் கொடுக்கவும் ... இயல்பாக பேச ஆரம்பித்து விட்டார். அவருடைய ஊரைப்பற்றி... வீட்டைப்பற்றி... ஹோட்டல் தொழிலைக் பற்றிக் கேட்டுக் கொண்டே வந்த அனிதா

சோணாசலம் புரிந்து கொள்ளாத வகையில் பேச்சின் போக்கை மாற்றினாள்... ரகுநந்தனின் குடும்பத்தைப் பற்றி பட்டும் படாமலும் விசாரிக்க ஆரம்பித்தாள். அப்போதுதான் அவளுக்கு எதிர்பாராத வகையில் மீராவின் வரவு பற்றி தெரிய வந்தது. சோமசுந்தரத்தின் குடும்பத்துடன் நல்லுறவு வைத்திருந்த சோணாசலம்... அவர்கள் குடும்பத்தைப் பற்றி போலி மரியாதையுடன் பேசினார்.

"அந்தப் பாட்டியும் தாத்தாவும் ரொம்பவே கிரேட் அங்கிள்..." தினேஷின் முறைப்பை லட்சியம் பண்ணாமல் மழலையாய் கொஞ்சும் குரலில் கூறினாள் அனிதா.

அவள் எதிர்பார்த்தது போலவே சோணாசலத்தின் முகம் மலர்ந்து விட்டது. தங்கு தடையின்றி பேச ஆரம்பித்து விட்டார் அவர்.

"பெரிய மனுசங்கன்னா... அவங்கதான் பெரிய மனுசங்கம்மா... ஒரு மண்டைக்கனம் கிடையாது... துளியளவு கூட கர்வம் கிடையாது... தோப்பும்...வயலுமாய்... ஆற்றுப் பாசன நிலம் பூராவும் இவங்களுக்குத்தான் சொந்தம்... சோமசுந்தரமோ... குற்றாலத்தில் ஜவுளிக்கடை வியாபாரத்தில் கொடிகட்டி பறக்கிறார். ரகுநந்தனோ... அவனுடைய சாதனையாய் புதுமையான டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வைத்து சாதித்துக் கொண்டிருக்கிறான். நீ அவனுடைய ஸ்டோரைப் பார்த்தது இல்லையே... தரைத்தளம் பூராவும் ரெஸ்டாரெண்ட்... ஸ்டோர் சாமான்கள்... காய்கறி ... பழங்கள்... ஜூஸ்... ஐஸ்கிரிம்... டீ ஸ்டால்... முதல் மாடி முழுவதும் ரெடிமேட்டும்...



...யும்தான்... அவனுடைய அப்பா பட்டுப்புடவைகளுக்கு பெயர் போனவர் என்றால் ரகு... லேட்டஸ்ட் மாடல்களுக்கு பெயர் பெற்றவன்... இரண்டாம் மாடியில் நகைக்கடை... பணம் வழிகிறது... பார்க்க அவ்வளவு அடக்கமாய் இருப்பான்..."

அனிதாவின் மனம் அவனும்... அவனது பணமும் கிடைக்க வேண்டுமே என்று பறந்தது. சோணாச்சலம் தொடர்ந்து கூறினார்.

"கல்யாண வயது... எங்கே... எப்பேற்பட்ட பொண்ணு அமையுமோன்னு இந்த வட்டாரத்திலேயே எல்லோரும் எதிர்பார்த்தோம்... நாங்கள் எதிர்பார்த்தது போலவே... இவங்களை விட கோடிஸ்வரரான வையாபுரி என்பவரின் மகள் மீராவைப் பார்த்திருக்கிறார்கள்... அந்தப் பெண் ரகுவின் ஸ்டோருக்கு வரும் போது நான் பார்த்திருக்கிறேன்... என்ன ஒரு அழகு... ஒரு அடக்கம்... பெண்ணுன்னா அதுதான் பெண்..."

'நானென்ன மண்ணா?' என்று கேட்கத்துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டு தினேஷை பார்த்தாள் அனிதா... அவன் முகம் பேயறைந்தது போல் இருந்தது...

அன்று இரவு... அண்ணனின் அறைக்குள் சென்றவள் அவனிடம் உறுதியாகக் கூறினாள்.

"தினேஷ்... நாம் கிளம்பி வந்தது ஒருவகையில் நல்லதாகப் போயிற்று. எனக்குக் கிடைக்காத ரகுவும்... உனக்கு கிடைக்காத மீராவும் வாழ்க்கையில் ஒன்று சேரவே கூடாது..."

"அது எப்படி முடியும்... அனிதா... ?"

"என்னால் முடியும் ... நடப்பதைப் பார்..."

மறுநாள் சோணாச்சலத்தை அழைத்துக்கொண்டு அவரையே வழி காட்ட வைத்து ரகுநந்தனின் டிபார்ட்மென்ட்ல் ஸ்டோருக்குப் போனார்கள். இவர்களைக் கண்ட ரகுநந்தன் முகமாறினாலும்... உபசரித்தான்...அவனது டிபார்ட்மென்டல் ஸ்டோரை சுற்றிப் பார்த்த அனிதாவின் வயிறு எரிந்தது.

'இது அத்தனையும் கை நழுவிப் போவதா...'

இரண்டாம் மாடியில் ரகுநந்தனின் அறை இருக்கிறது என்பதை சோணாச்சலம் மூலம் அறிந்தே தான் இருந்தாள் அனிதா... அவர்கள் போட்டுக்கொண்ட திட்டப்படி தினேஷ் சோணாச்சலத்திடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே நகர... ரகுநந்தனை நெருங்கினாள் அனிதா.

"நான் உங்களிடம் தனியாகப் பேசவேண்டும்..."

"எதைப்பற்றி..."

"மீராவைப் பற்றி..."

அவசரமாய் சுற்றுப்புறத்தை ஆராய்ந்த ரகுநந்தன் படக்கென்று அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். அனிதா தன் திட்டம் பலிப்பதைக் கண்டு ஆனந்தமாய் பின் தொடர்ந்தாள்.

"என்ன விசயம்... சொல்..." ரகுநந்தனின் குரலில் கடுமை இருந்தது.

"மீராவின் நினைவாகவே என் அண்ணன் இருக்கிறான்.



...ரா உங்கள் வீட்டில் இருப்பது தெரிந்துதான் நாங்கள் கிளம்பி ...ந்தோம்... நீங்கள்தான் அவர்கள் இருவரையும் சேர்த்து ...வைக்க வேண்டும்..."

ரகுநந்தன் தவித்துப் போனான்... மீரா தினேஷை விரும்பி இருப்பாள் என்பதில் அவனுக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை.

"அனிதா...நீ மீராவை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய்..."

"நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்களாக்கும்... ?"

"ஆமாம்... உன்னிடம் சொல்வதற்கு என்ன? நாளைக்கு ...எல்லோருக்கும் தெரிய வரும்போது உங்களுக்கும் தெரியத் ...தானே போகிறது? அதனால் முன்கூட்டியே உங்களுக்கு ...விஷயம் தெரிவது நல்லதுதான்... நீதான் இதை தினேஷிற்கு ...புரிய வைக்கவேண்டும்..."

"என்னவென்று ?"

"நானும்... மீராவும் ஒருவருக்கொருவர் உயிருக்குயிராய் காதலிக்கிறோம்".

"ரகு... இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை... உங்கள் நண்பனைக் காதலித்து ஏமாற்றி அவனை ...விசத்தைக் குடிக்கவும் வைத்திருக்கிறாள் அந்த மீரா... அவளைப் போய் நீங்கள் காதலிக்கிறீர்களா? உங்களுக்கு ...ஊரில் வேறு பெண்ணா கிடைக்கவில்லை... போயும்... போயும்... என் அண்ணனின் காதலிதான் உங்களுக்கு கிடைத்தாளா ?"

ரகுநந்தன் நொறுங்கிப் போனான்... இதற்கு ஒரு தீர்வு கிடைக்காமல் மீராவை நெருங்குவது எவ்வகையிலும் சாத்தியப்படாது என்று அவனுக்கு தோன்றிவிட்டது.

"அனிதா... மீரா தினேஷை அறிய மாட்டாள்... அவள் என்னைத்தான் காதலிக்கிறாள்..."

"அப்படியா... அது இல்லை... மீராவிற்கு தினேஷை தெரியும் என்பதை நான் நிரூபித்து விட்டால்... என்ன செய்வீர்கள்?"

"முதலில் நீ நிரூபி..."

ரகுநந்தன் நம்பிக்கையுடன் சொன்னான். அவனது மீராவின் காதலில் பொய் இருக்காது.

"அப்படியானால் உடனே இங்கே கிளம்பி வரும்படி அவளிடம் சொல்லுங்கள்... அவள் தனியே வரமாட்டாள் என்றால் நீங்கள் போய் கூப்பிட்டுக் கொண்டு வரலாமே..."

மீராவை அவன் அழைத்துக் கொண்டு வந்தான். இங்கிதமாய் சுபாங்கிணி வீட்டிலேயே இருந்து கொள்ள... குடும்பத்தார் கண்டும் காணாதது போல் இருக்க... மீரா மகிழ்ச்சியுடன் அவனருகே அமர்ந்து பேசிக் கொண்டே வந்தாள்.

"ஹேய்... என்ன நந்து... திடீர்னு உம்மனாம் மூஞ்சி ஆகிட்டிங்க..."

"ஒன்றுமில்லை... வா..."

ரகுநந்தன் அவனது அறைக்கு அழைத்துக் கொண்டு போகவும் மீரா வெட்கினாள்.



'நந்து...இது என்ன கள்ளத்தனம்...?"

ரகுநந்தனின் மனம் வலித்தது. இவள் வெட்குவது போல் உண்மையிலேயே அவளைக் கள்ளத்தனமாய் சந்திக்க அவன் அழைத்து வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்... அறைக்கதவை திறந்தவுடன் அங்கே நின்று கொண்டிருந்த தினேஷைக் கண்டதும் மீராவின் முகம் மாறியது.

'இவனா... இவன் எப்படி இங்கு வந்தான்...?'

அதே நேரம் மீராவின் முகமாற்றத்தை ஆராய்ந்து கொண்டிருந்த ரகுநந்தனின் முகம் சுருங்கியது...

'இவளுக்கு ஏனிந்த அதிர்ச்சி? அப்படியென்றால் இவளுக்கு தினேஷை தெரியும் தானே...'

மீரா சட்டென்று திரும்பினாள்... தினேஷ் அவசரமாய் வழி மறித்தான்.

"நில் மீரா... உன்மேல் உயிரையே வைத்திருக்கிறேன் என்று பலமுறை சொல்லி விட்டேன்... ஏன் என்னை இப்போதெல்லாம் வெறுத்து ஒதுக்குகிறாய்... நான் என்ன தவறு செய்தேன்?"

"சட்... என்னைத் துரத்தாதே என்று பலமுறை உன்னிடம் சொல்லி விட்டேன்... நீ திருந்தவே மாட்டாயா?"

"திடிரென்று விலகிப்போ என்று சொன்னால் நான் என்ன செய்வேன்... நீதானே என் உலகம் மீரா... நீயில்லாவிட்டால் நான் செத்து விடுவேன்..."

"செத்துப் போ..." என்றாள் மீரா ஆத்திரத்துடன்

"உன் ஒருவன் மறைவால் உலகம் ஸ்தம்பித்துவிடாது... செத்துப் போ..."

கதவைத் திறந்து கொண்டு ஆவேசமாய் படியிரங்கி கீழே வந்தாள். பின்னாலேயே வந்த ரகுநந்தன் கார் கதவை திறந்து விட்டான்.

அதில் அவள் ஏறி கண்மூடி சரிந்து அமர்ந்து கொள்ள கார் கிளம்பியது... காரைச் செலுத்திக் கொண்டே ரகுநந்தன் மெதுவாக அவளிடம் வினவினான்.

"ஏன் அவனைச் செத்துப் போகச் சொன்னாய் மீரா? எனக்கும் உனக்கும் இடையில் உன் முந்நாள் காதலனான அவன் தடையாக வந்து விட்டான் என்பதாலா?"

மீரா விழி விரிய அவனை நோக்கினாள் அவளது நெஞ்சம் உடைந்து சிதறியது.

## 26

என்ன வார்த்தை சொல்லி விட்டான்? இவளைப் பார்த்து இப்படிப் பட்ட வார்த்தைகளை இவன் சொல்லலாமா? இந்த வார்த்தைகளைச் சொல்ல எப்படி இவனுக்கு மனம் வந்தது? நினைக்கும் போதே இவன் அறைக்குள் அந்த தினேஷ் எப்படி வந்தான்? என்ற சந்தேகம் தோன்றியது. அவன் ஏதாவது சொல்லியிருக்க வேண்டும்... அதை நம்பித்தான் இவன் இவளை அங்கு அழைத்துப் போயிருக்க வேண்டும்...

ஊர் ஆயிரம் சொல்லும்... இவன் அதை நம்பலாமா? ஊரே



சொன்னாலும் இவன் அதைச் சொல்லலாமா? இதைக் கேட்கவா இவள் அவனை ஊனுருக... உயிர் உருக காதலித்தாள்...

"காரை நிறுத்துங்கள்..." என்றாள் மீரா வெறுமையான குரலுடன்.

"நிறுத்தத்தான் போகிறேன்... உனக்கும்... எனக்குமிடையே இருந்த காதலை நிறுத்தத்தான் போகிறேன்..." கோபமான குரலில் அவன் கூறினான்.

"இப்போது காரை நிறுத்தப் போகிறீர்களா? இல்லை நான் ஓடும் காரிலிருந்து குதித்து விடவா?" மீரா கார் கதவை திறக்கப் போனாள்.

ரகுநந்தன் சரேலென காரை நிறுத்தினான். மீரா கதவைத் திறந்து இறங்கி மலைப் பாதையில் நடக்க ஆரம்பித்தாள் ரகுநந்தன் ஒரே எட்டில் அவளது வழியை மறித்தான்.

"இதோ பார்– உனக்கு எப்படி தினேஷ் என்ன ஆனாலும் கவலையில்லையோ... அதுபோல எனக்கும் நீ என்ன ஆனாலும் கவலையில்லை. ஆனால்... உன்னை என் வீட்டாரை நம்பி ஒப்படைத்து விட்டுப் போயிருக்கிறார் உன் அப்பா... என் வீட்டினரின் கண் முன்னால் நான் உன்னை அழைத்து வந்திருக்கிறேன். நான் என் வீட்டில் உன்னை ஒப்படைத்து விடுகிறேன். அதன் பின்னால் நீ என்ன செய்தாலும் எனக்குக் கவலையில்லை..."

"உங்களது அக்கறைக்கு மிகவும் நன்றி... என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும்... நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்... நீங்கள் உங்கள் வழியைப்

பார்த்துக் கொண்டு போங்க... நான் என் வழியைப் பார்த்துக் கொண்டு போகிறேன்..."

"இப்படித்தானே தினேஷையும் காதலித்து விட்டு அவனது வழியைப் பார்த்துக் கொண்டு போகச் சொல்லியிருப்பாய்..."

"ஷட்அப் மிஸ்டர் ரகுநந்தன்... மீரா ஒன்றும் கேடு கெட்டவளில்லை... நான் இந்த உலகத்திலேயே பார்த்து மயங்கிய முதல் ஆண்மகன் நீங்கள் தான்... நான் மனதாரக் காதல் சொன்னதும் உங்களிடம் மட்டும்தான்... நான் மனதாரக் காதலித்ததும் உங்களை மட்டும்தான்...வேறு எவர் முகத்தையும் நான் நிமிர்ந்து கூடப் பார்த்தது இல்லை... இன்று இப்படிப்பட்ட வார்த்தைகளை நீங்கள் சொன்ன பின்னால் உங்கள் முகத்தில் விழிக்கக்கூட எனக்கு விருப்பம் இல்லை... என் அப்பா...உங்கள் குடும்பத்தை நம்பி என்னை விட்டு விட்டு போயிருக்கிறார்... நான் உடனே கிளம்பி சென்னைக்கு போய் விடத்தான் துடிக்கிறேன்... அப்பா வந்து கூப்பிடாமல் நான் அப்படிக் கிளம்பிப் போய் விட்டால்... என் அப்பாவிற்கும் உங்களது அப்பாவிற்குமான நட்பு முறிந்து விடும்... உங்கள் குடும்பத்தின் மீது என் அப்பா வைத்திருந்த நம்பிக்கை சிதைந்து விடும்... அந்த ஒரே காரணத்திற்காகத்தான் நான் இன்னும் இந்த மண்ணில் நின்று பேசிக் கொண்டிருக்கிறேன்... தயவு செய்து நான் சென்னைக்கு கிளம்பிப் போகும்வரை நீங்கள் என் கண் முன்னால் வராதீர்கள்...", மீரா முகத்தை வெறுப்புடன் திருப்பிக் கொண்டு இதைக் கூறினாள்.

அப்போது அவர்களைக் கடந்து சென்ற கார் நின்றது...



சோமசுந்தரம் எட்டிப் பார்த்தார்.

"மீரா... ரகு... நடுக்காட்டில் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? ரகு உன் கார் எங்கேடா?"

அவரைக் கண்டதும் அடக்கி வைத்திருந்த துக்கம் பொங்கியெழ "மாமா...", என்று மீரா விசும்பினாள். சோமசுந்தரம் பதறிப்போனார்.

"என்னம்மா... என்ன மீரா?"

"ஒன்றுமில்லை மாமா... என்னை வீட்டில் விட்டு விடுகிறீர்களா?"

"காரில் ஏறிக் கொள்ளம்மா..."

மீரா காரின் பின் பக்கக் கதவைத் திறந்து ஏறிக் கொள்ள... அசையாமல் நின்ற மகனைப் பார்த்த சோமசுந்தரத்திற்கு எதுவோ புரிந்தது போல் இருந்தது. மீரா கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வழி முழுவதும் விசித்துக்கொண்டே வந்தாள்... சோமசுந்தரம் ஏனென்று கேட்கவில்லை. வீட்டில் கார் நின்றதும் மீரா இறங்கியோடி மாடியேறினாள். வாசலில் நின்றிருந்த சுபாங்கிணி அதிர்ச்சியுடன்

"என்னப்பா...?" என்று வினவினாள்.

மீரா அறைக்குள் ஒடி கட்டிலில் குப்புற விழுந்து அழுதுகொண்டு இருக்கும்போது அறைக்கதவை தாழிட்டு விட்டு சப்தம் எழுப்பாமல் அவள் அருகே வந்து அமர்ந்து அவளது முதுகைத் தொட்ட சுபாங்கிணி.

"அண்ணீ..." என்று அழைத்தாள்.

அந்த அழைப்பில் மேலும் மனம் உடைந்த மீரா சுபாங்கிணியைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"நான் உன் அண்ணியில்லை சுபா... என்றுமே நான் உன் அண்ணியாக முடியாது... சொல்லக் கூடாத வார்த்தைகளை உன் அண்ணன் சொன்ன பின்னால் நான் ஏன் இன்னும் உயிரோடு இருக்கிறேன் தெரியுமா? என் அப்பாவிற்காக... "

சுபாங்கிணி விக்கித்துப் போய் விட்டாள். இந்த அளவு விரக்தியின் விளிம்புக்கு போய் மீரா பேசவேண்டுமானால் ரகுநந்தன் எப்படிப்பட்ட கொடிய வார்த்தைகளைப் பேசியிருப்பான்?

"என்ன நடந்திருந்தாலும் என்னிடம் சொல்லுங்கள் அண்ணி..."

"சுபா... அனிதான்னு என் கிளாஸ் மேட் ஒருத்தி இருக்கிறாள்.." என்று ஆரம்பித்து நடந்தது அத்தனையையும் சுபாங்கிணியிடம் விவரித்தாள் மீரா.

"அவன் உன் அண்ணனின் ரூமிற்குள் எப்படி வந்தான் சுபா...?"

"எப்படி வந்தானா? அவனும்... நீங்கள் சொன்ன உங்களின் எடுபட்ட கிளாஸ்மேட்டும் நேற்றுக் காலையில் இங்கே வந்திருந்தார்களே... நம் வீட்டார் வீட்டுக்குளேயே விடாமல் துரத்தி விட்ட இருவரும் வேறு யாருமில்லை அண்ணி... இந்த இரண்டு ஜென்மங்களும்தான்... இப்போதுதானே தெரிகிறது... அவர்களுடைய நோக்கம் குற்றாலத்தை சுற்றிப் பார்ப்பதில்லை... அண்ணனின் மனதைக் கலைக்கும் திட்டத்தோடு



தான் இங்கே வந்திருக்கிறார்கள்."

"யார் வேண்டுமானாலும் மனதை கலைக்கலாம் என்கிற அளவுக்கு திடமில்லாத மனதுடையவரா உன் அண்ணன்... நான் வந்த முதல் நாளில் இருந்தே என்னை அவமானப்படுத்துவதுபோல் பேசினார். அது ஏன் என்று இப்போதல்லவா புரிகிறது..."

"நீங்கள் சொல்வது சரிதான் அண்ணி... நீங்கள் வரப்போகிறீர்கள் என்று அப்பா சொல்லியவுடன் அண்ணன் உங்கள் பெயர் என்ன என்று யதார்த்தமாய் கேட்டது... அப்பா உங்கள் பெயரைச் சொன்னவுடன் அதன் முகமே மாறிப் போய் விட்டது... அவசரமாய் நீங்கள் படிக்கும் காலேஜை கேட்டுத் தெரிந்து கொண்டதும்... உங்களை இங்கு வரவிடக் கூடாதுன்னு பட்டுன்னு சொல்லிவிட்டது... உங்களைப் பார்ப்பதற்கு முன்னாலேயே வெறுப்பதாக இருந்தால் ... அந்த தினேஷ் நாய் முதலிலேயே உங்களைப் பற்றிக் கதை பிணைந்து அண்ணனிடம் சொல்லியிருக்க வேண்டும்... உங்களை பார்த்தது முதல் அண்ணன் உங்கள் மேல் பைத்தியமாக ஆகிப் போனது... அதைக் கட்டுப்படுத்த முடியாமல் தான் அந்தக் கோபத்தை உங்கள் மேல் காட்டி மண்டையை உடைத்திருக்க வேண்டும்..."

"இருக்கலாம்... எது வேண்டுமானாலும் நடந்திருக்கட்டும்... இனி அதைப் பற்றிய ஆராய்ச்சி எனக்கு எதற்கு? இப்படிப்பட்ட வார்த்தைகளை உன் அண்ணன் சொல்லி நான் என் காதால் கேட்ட பின்னால் உன் அண்ணனின் முகத்தைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை சுபா..."

சுபாங்கிணி மீராவை தனிமையில் விட்டுவிட்டு கீழே இறங்கினாள். ராமசாமியின் அறையில் காத்திருந்த தாத்தா பாட்டி... தாய் தந்தையிடம் நடந்ததைக் கூறினாள்.

"வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாய் ஆகிப் போச்சே... எல்லாம் கூடி வந்த வேளையில் ரகு இப்படிப் பேசிவிட்டானே..." வேதனைப்பட்டார் ராமசாமி.

"அணில் தன் வாயால் கெட்டுச்சாம்... ஆளைப் பாத்த வுடன் அந்த நாய்களின் தரம் நமக்கு விளங்கி விட்டது. ரகுவிற்கு விளங்காமல் போய் விட்டதே... நாம் வளர்த்த பிள்ளைக்கு புத்திசாலித்தனம் பத்தாது..." ஆவுடையம்மாள் அங்கலாய்த்துக் கொண்டாள்.

"நடுக்காட்டில் மீரா... நடந்து வந்து கொண்டிருந்தாள்... ரகு பக்கத்தில் கோபமாய் நின்று கொண்டிருந்தான்... என்னைப் பார்த்ததும் எதுவும் சொல்லாமல் 'மாமா என்னைக் கூப்பிட்டுப் போயிடுங்க...' ன்னு மீரா அழுதாள்... நான் காரில் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்... அவன் அசையாமல் நிற்கிறான். இந்தப் பெண்ணுக்கு துடைக்கத்துடைக்க கண்ணீர் பெருகிக் கொண்டே இருந்தது. என் மனம் வேதனைப்பட்டுப் போச்சு அப்பா... வையாபுரி அவனுடைய மகள் நம் வீட்டில் இருந்தாள் சந்தோஷமாய் இருப்பாள்ன்னு நினைச்சுத்தானே நம்மை நம்பி அவனுடைய மகளை விட்டுவிட்டுப் போனான்... இப்போது அவள் மனம் உடைந்து நிற்கிறாளே... " சோமசுந்தரம் அவரது கவலையைக் கூறினார்.



சுந்தராம்பாள் எதுவுமே பேசாமல் யோசனையாய் இருந்தாள்... பின் கணவனை ஏறிட்டுப் பார்த்து தீர்மானமாய் கூறினாள்.

"நானும்... சுபாவும் ரகுவைப் பார்க்க போய் விட்டு வருகிறோம்..."

"வேண்டாம் சுந்தரி... இப்போதிருக்கும் நிலைமையில் அவனிடம் பேசுவது சரி வராது... அவனாக உணர்ந்து வரட்டும்... அப்போது பேசிக் கொள்ளலாம்... விசயத்தை ஆறப்போடு..."

"ஆறப்போடும் விசயத்தைத்தான் ஆறப்போட வேண்டும்... சூட்டோடு சூட்டாக முடிக்க வேண்டிய விசயத்தை சூட்டோடு முடிக்க வேண்டும்... நீங்கள் மீராவைப் பற்றியே கவலைப்படுகிறீர்கள். என் மகனும் அங்கே மனம் உடைந்துதானே நிற்கிறான்?"

"அடுத்தவர்கள் பேச்சை ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே நம்பி மீராவின் மனதை நோகடித்தானில்லையா? அவனும் மனம் வேதனைப் பட்டுத்தானே ஆகவேண்டும்..."

"நான் அவனைப் பெற்றவள்... எது நடந்திருந்தாலும் மன்னிக்க வேண்டியது தாயின் கடமை.. நடந்ததை சரி பண்ணி சின்னஞ்சிறுசுகளை சேர்த்து வைக்கப் பார்ப்போம். வையாபுரி அண்ணன் மீராவின் முகத்தில் எந்த சந்தோஷத்தை எதிர்பார்த்தாரோ... அந்த சந்தோசம் மீராவின் முகத்தில் உண்மையிலேயே இருக்க வேண்டுமானால்... ரகுவும் மீராவும் ஒன்று சேரவேண்டும்..."

சுந்தராம்பாள் பிடிவாதமாய் சுபாங்கிணியுடன் சோமசுந்தரத்தின் காரில் ஏறிக்கொண்டாள். சோமசுந்தரம் ராமசாமியை பார்த்தார்.

"என் மருமகள் எது சொன்னாலும்...எதைச் செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும்... நீ கவலைப்படாமல் போய் விட்டுவா..."என்றார் ராமசாமி.

சோமசுந்தரத்தின் குடும்பத்தார் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோருக்கு தேடிப் போக வேண்டிய அவசியமே இல்லாமல் மீரா எந்த இடத்தில் காரிலிருந்து இறங்கினாளோ... அந்த இடத்திலேயே காருக்குள் ஸ்டியரிங்கில் முகத்தை கவிழ்த்துக் கொண்டு ரகுநந்தன் அமர்ந்திருந்தான்.

"நடுக்காட்டிலேயே உட்கார்ந்து விட்டான் சுந்தரி...", சோமசுந்தரத்தின் குரல் மகனின் நிலையைக் கண்டதும் நடுங்கியது.

"நான் சொல்லவில்லையா... என் மகனைப் பற்றி எனக்குத் தெரியாதா ?"

சுந்தராம்பாள் கணவனிடம் குற்றம் சாட்டும் பாவனை யில் கூறினாள்.

சுந்தராம்பாளையும்... சுபாங்கிணியையும் இறக்கி விட்டு விட்டு சோமசுந்தரத்தின் கார் பறந்து விட்டது. தாய்... தங்கையின் வரவைக்கூட உணராமல் அமர்ந்திருந்தவனின் முடிகோதி,

"ரகு..." என்று அழைத்தாள் சுந்தராம்பாள்.



"அம்மா..." என்று தலை நிமிர்ந்தான் மகன்... காருக்குள் ஏறி அமர்ந்த சுந்தராம்பாளும்... சுபாங்கிணியும் மீரா கூறியவற்றை கூறினார்கள்.

"ஆனால்... அவர்கள் வேறு மாதிரி சொல்கிறார்களே அம்மா..."

ரகுநந்தன்...ஆதியிலிருந்து ஆரம்பித்து எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்... சுந்தராம்பாளின் முகத்தில் கோபம் தெரிந்தது.

"ரகு... யார் எதைச் சொன்னாலும் நம்பி விடலாமா ? கண்ணால் பார்ப்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய் என்று பெரியவர்கள் எதற்காக சொல்லியிருக்கிறார்கள் ? நான் ஒன்று கேட்கிறேன். இதற்கு யோசித்து பதில் சொல்லு... மீராவும்... அந்த தினேஷூம் காதல் பேசிக் கொண்டதை நீ நேரில் பார்த்தாயா... இல்லை உன் காதால் கேட்டாயா... மற்றவர்கள் சொல்லிக் கொண்டது தானே... உண்மை என்ன என்பதை நாம் கண்டுபிடிக்கலாம் வா..."

சுந்தராம்பாள் காந்திமதி ஆச்சியிடம் போனில் பேசிவிட்டு மகனிடம் ஆச்சியின் வீட்டுக்கு காரை விடச் சொன்னாள். காந்திமதி ஆச்சி வீட்டு வாசலில் காத்திருந்தாள்.

"அதுக ரெண்டும் வந்துக்கிட்டு இருக்குதுக... நீங்க மூணுபேரும் மறைந்து நின்று கொள்ள வசதியாய் அந்த தினேஷ் தங்கியிருக்கும் ரூமில் நீண்ட கனமான ஜன்னல் திரைகளை தொங்க விட்டிருக்கிறேன்... வாங்க...", என்று

அழைத்துக் கொண்டு போனாள்.

சற்றுநேரத்தில் வந்த சோணாச்சலத்திடம் கண் சமிக்கை செய்தவாறு, "அனிதா... உன் ரூமில் இருக்கிற ஏஸியை ரிப்பேர் பண்ணிக் கொண்டு இருப்பதால்... மெக்கானிக் கதவை அடைத்து உள்தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வேலை செய்கிறார்ம்மா... நீ ஒரு மூன்று மணிநேரம் உன் அண்ணனின் ரூமில் இரு" என்று கூறினாள்.

முகம் களித்தபடி இருவரும் மாடியேறிப் போனார்கள்.

தினேஷின் அறைக்குள் நுழைந்து கதவை தாழிட்டுக் கொண்டதும் அனிதா... "அப்பாடா... நினைத்ததை சாதித்து விட்டோம்... இப்போதுதான் எனக்கு உயிரே வந்தது... எங்கே நீ சொதப்பி விடுவாயோ என்று பயந்து கொண்டே இருந்தேன்..." என்றாள்

"நீ தான் வசனமெல்லாம் எழுதிக்கொடுத்து என்னை ரெடி பண்ணி வைத்திருந்தாயே... எங்கே மீரா... நான்தான் அவளைச் சுற்றிச்சுற்றி வந்து டார்ச்சர் பண்ணினேன் என்பதை சொல்லி விடுவாளோ என்று பயந்து விட்டேன். ஆனால் அவள் என்மேல் கொலைவெறி வந்தவளாய் 'செத்துப்போ' என்று சொல்லி விட்டாள்... அதை ரகுநந்தனும் கேட்டு விட்டான்..."

"உன்னைச் சாகச் சொல்லும் அளவிற்கு அவளை நீ மனரீதியாய் துன்புறுத்தி இருக்கிறாய்... அவளுக்கு இது வேண்டும்... என்னிடமெல்லாம் பேசுவதே கௌரக் குறைவு என்பது போல் ஒதுங்கிப் போய் விடுவாள்... உத்தமி வேடம் போடுவாள்... இன்று ரகு அவளை கீழ்த்தரமாய் நினைக்கும்



அளவிற்கு பண்ணி விட்டோம். இனி ரகு எனக்குத்தான்... அவளைத் திரும்பிக் கூட பார்க்கமாட்டார்..."

"அதுவும் உன் ஐடியாதானே அனிதா... அன்று சும்மாயிருக்க மாட்டாமல் மீராவைக் காண்பித்து என் காதலின்னு பொய் சொல்லி வைத்தேன்..அவன் உடனே அவளைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்துன்னு சொல்லி விட்டான்... எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நீயானால் எதை எதையோ கதை சொல்லி என்னைக் காப்பாற்றி விட்டாய். யு ஆர் ஸோ கிரேட் அனிதா..."

"அந்தப் பொய்தான் இப்போதும் நம்மை காப்பாற்றி இருக்கிறது... நீ திரும்பவும் மீராவை அப்ரோச் பண்ணு... நான் ரகுநந்தனிடம் என் காதலைச் சொல்கிறேன்... "

"நீ அவனைக் காதலிக்கிறாயா? குட்ஜோக் ... அவனது பணத்தைக் காதலிக்கிறாய் என்று சொல்... அவன் அன்னக்காவடியாய் நின்றால் நீ திரும்பிக் கூட பார்ப்பாயா?" தினேஷ் சிரித்த அதே நேரம் திரைமறைவிலிருந்து வெளிப்பட்ட ரகுநந்தன்.

"ஆனால் நான் அன்னக்காவடியாய் இருந்தாலும் என் மீரா எனக்காகவே என்னைக் காதலிப்பாள்", என்றான். அவனைத் தொடர்ந்து சுந்தராம்பாளும் சுபாங்கிணியும் திரை மறைவிலிருந்து வெளியே வந்தனர்.

அடுத்த ஒரு மணிநேரத்தில் அனிதாவும் தினேஷும் துண்டைக் காணோம் துணியைக் காணோமென்று குற்றாலத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர். சோணாச்சலம்... காந்திமதி ஆச்சிக்கு நன்றி கூறிவிட்டு வீட்டுக்கு

விரைந்தார்கள் அவர்கள்.

அழுது அழுது ஓய்ந்திருந்த மீராவின் முதுகைத் தடவிக் கொடுத்த கையின் ஸ்பரிஸம் அது யார் என்பதை உணர்த்த மீரா துள்ளி எழுந்தாள்.

"என் முகத்தில் விழிக்காதீர்கள்... என்று சொன்னேனா இல்லையா ?"

"அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொன்னது நீதானா மீரா ? உன்னைப் பார்க்கா விட்டால் நான் செத்துப் போவேன்... பரவாயில்லையா ?" ரகுநந்தன் குரல் உடைந்தான். அவசரமாய் அவனது வாய் பொத்திய மீரா அவனது மார்பில் முகம் புதைத்து விசித்தாள்.

"மன்னித்து விடு என்று கேட்கும் தகுதி எனக்கில்லை... ஆனால் உரிமை இருக்கிறது..."

"என்னை இன்னொருவனுடன் சம்பந்தப்படுத்தி நீங்கள் சொல்லலாமா ?"

"தப்புத்தான்...தண்டனை கொடு ஏற்றுக் கொள்கிறேன்... பிரிவை மட்டும் சொல்லாதே..."

வையாபுரி வந்தவுடன் சோமசுந்தரம் குடும்பத்தினர் ரகுநந்தனுக்கு மீராவை முறைப்படி பெண் கேட்டனர்... அதை எதிர்பார்த்து காத்திருந்த வையாபுரி ஆனந்தமாய் மீராவை ரகுநந்தனுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

சொன்ன சொல் எவ்வளவு கொடியதாக இருந்தாலும் காதல் அதை மன்னித்தது.

* * * * *

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.